www.padippakam.com

# சமூக விஞ்ஞானம்

காலாண்டு ஆய்விதழ்

மலர் : 1 இதழ் : 4 ஜூன் - 2004

தமிழக வரலாற்றில் நாடு எனும் பிரிவு

நான்கு வருணப் பகுப்பு

பிரஞ்சு சிந்தனையும் தமிழ் இயக்கமும்

காடுகளின் மீட்சி

வேளாண்மை நெருக்கடி

ஆடையிழந்த அரசர்கள்

ம. சிங்காரவேலர்

பூங்குன்றன்

ந. முருகேச பாண்டியன்

ஃபிராட் மக்டாஃப்

தி.சு. நடராசன்

கி.ரா. சங்கரன்

இரவிசந்திரன்

எஸ். சக்குபாய்

யுர்யோ ஹெகானென்

மைக்கெல் ஏ. லெபோவிட்ஸ்

பெ. அரங்க ராமானுஜம்

படிப்பகம்

www.padippakam.com

# சமூக விஞ்ஞானம்

காலாண்டு ஆய்விதழ்

ஜூன், 2004

மலர் : 1 இதழ்: 4

நிர்வாக ஆசிரியர் : தேவ. பேரின்பன்

ஆசிரியர் குழு : முனைவர் தி.சு. நடராசன்
பேராசிரியர் எஸ். தோதாத்திரி
ஆர். பார்த்தசாரதி
ஏ.எஸ். மணி

வெளியிடுபவர் : A. சுப்பிரமணியன்,
அறங்காவலர்,
தென்னக ஆய்வு மையம்

அச்சிடுபவர் : G. துரைராஜ்
பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,
17 (ப.எண். 142)
ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

தனி இதழ் : ரூ. 30/-

ஆண்டு சந்தா : ரூ. 100/-

ஆயுள் சந்தா : ரூ. 1000/-

வெளிநாடு ஓராண்டு
சந்தா : $25

சந்தாத் தொகையைப் பணவிடை அல்லது கேட்பு வரைவோலை மூலம் அனுப்பலாம்.

தொடர்புகளுக்கு : தென்னக ஆய்வு மையம்
எண். 17 (ப. எண். 142)
ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
☎ : 28482441, 28482973

தென்னக ஆய்வு மைய நிறுவனர்:
சி.எஸ். சுப்பிரமணியம்

## இதழில் ...

பக்கம்

1. தலையங்கம் — 1
2. வேந்தர் மரபுக்கு முன் நாடு — 3
3. மொழிபெயர்ப்புகள் வழியாக மாறிய தமிழினப் போக்குகள்: பிரெஞ்சு நூல்களை முன்வைத்து விவாதம் — 10
4. பழந்தமிழகத்தின் நான்கு வருணப் பகுப்பும் பார்ப்பனரும் — 15
5. உலக வேளாண் நெருக்கடி : வளரும் பேராபத்து — 22
6. காரல் மார்க்ஸ் — 28
7. காடுகளின் மீட்சி : செய்ய வேண்டியது என்ன? — 33
8. புதுக்கோட்டை வட்டாரத்தில் நீர்ப்பாசனமும் சமூகத் தொடர்பும் — 38
9. இன்றைய சோசலிசம் - எதிர்நோக்கும் சவால்கள் — 49
10. பத்தாயிரம் ஆண்டுக்கான ஒரு தொலைநோக்கு — 52
11. கருத்தியலும் பொருளாதார வளர்ச்சியும் — 57
12. தத்துவ உலகின் ''ஆடை இழந்த அரசர்கள்'' — 63

படிப்பகம்

www.padippakam.com



# சவால் நிறைந்த, ஆரோக்கியமான துவக்கம்

இந்திய நாடாளுமன்றத்தின் 14-வது மக்களவைக்கான பொதுத் தேர்தல் முடிவு இந்தியாவின் அரசியல் வரலாற்றில் ஒரு புதிய கட்டத்தைத் துவக்கி வைத்துள்ளது. சந்தையைப் புரிந்தவர்கள்தான் ஆள வேண்டும் என்ற தாராளமய கெடுபிடிகள் மக்கள் தீர்ப்பால் தவிடுபொடியாகி மக்களைப் புரிந்தவர்களின் ஆட்சியே மலர வேண்டும் என்ற ஜனநாயக நெறி பாதுகாக்கப்பட்டுள்ளது; மதவெறி பாசிசம் ஆட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டு தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும் தீய முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது; மதச்சார்பற்ற ஜனநாயகம் என்ற அரசியல் சாசனத்தின் அடிப்படையை பாதுகாப் பதற்கான ஆட்சி முறையின் அவசியம் வெற்றி பெற்றிருக்கிறது.

இவை இந்திய மக்களாட்சியின் மாண்புகளாகும். இந்த மாண்புகள் போற்றப்பட்டுப் பாதுகாக்கப் பட்டு முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

1989 தொடங்கியே இந்திய அரசியலில் கூட்டணி ஆட்சிகளின் சகாப்தம் தொடங்கிவிட்டது. ஐக்கிய முன்னணி, தேசிய ஜனநாயக அணி என்ற இரண்டு கூட்டணி ஆட்சிகளின் பரிசோதனைக்குப் பின் ஐக்கிய முற்போக்கு அணியின் ஆட்சிப் பரிசோதனை துவங்கியுள்ளது. இது முற்றிலும் புதிய வகைப்பட்ட அரசியல் சக்திகளின் அணிவகுப்பை அடையாளம் காட்டியுள்ளது. காங்கிரஸ் உள்ளிட்ட மதசார்பற்ற கட்சிகள், மதவெறி பாசிஸ்டு சக்திகள், இடதுசாரிகள், மாநில நலன் காக்கும் கட்சிகள் என்ற வரிசையில் தேசிய அரசியல் சக்திகள் உருப்பெற்றுள்ளன. இந்த உருவாக்கம் மேலைய நாடுகள் சிலவற்றில் அமைந்துள்ளது போல இரு கட்சி ஆட்சி முறை அல்லது இரு அணி ஆட்சி முறை இந்தியாவிலும் கொண்டுவரப்பட வேண்டும் என்ற அரசியல் சிந்தனையை வீழ்த்திவிட்டது. இந்தியாவின் பன்முகத்தன்மை பாதுகாக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற வரலாற்றில் இடதுசாரிகள் பெரும் எண்ணிக்கையில் வெற்றிபெற்று இருப்பதும், இடதுசாரிகளின் ஆதரவோடு ஐக்கிய முற்போக்கு அணியின் ஆட்சி அமைந்திருப்பதும் இந்திய அரசியலில் புதிய வாய்ப்பாடுகளை உருவாக்க வல்லது. இந்திய இடதுசாரிகள் மேலும் ஒன்றுபட்டு பலம்பெற்று ஜனநாயக சக்திகளை அணி திரட்டும் சக்தி வாய்ந்தவர்களாக வளர்ச்சி பெறுவதன் மூலம் இந்திய ஜனநாயகத் தில் மேலான முன்னேற்றத்தை எட்ட முடியும். இந்திய ஆட்சி முறையில் இடதுசாரிகளின் தலையீடு தவிர்க்க முடியாததாகி விட்டது என்ற உண்மை உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்தது. உலகின் மிகப்பெரிய ஜனநாயகத்தில் இடதுசாரிகள் தற்போது வகிக்கும் பாத்திரம் ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கத்துக்கும், பொதுவுடைமை இயக்கத்தின் பொதுவான வளர்ச்சிக்கும் அளப்பரிய முக்கியத்துவம் வாய்ந்தது. குறிப்பாக, வளர்முக நாடுகளின் மக்கள் இயக்கங்களுக்கு இது ஒரு புதிய திசைவழியைக் காட்டுகிறது. இடதுசாரி ஜனநாயக தேசிய மாற்று என்ற நோக்கிலான பயணத்தில் நிச்சயமாக ஒரு புதிய மைல் கல் எட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய முற்போக்கு அணியின் சார்பாக தேசிய காங்கிரசால் முன்மொழியப்பட்டு இடதுசாரிகளின் பரிசீலனைக்கும், ஆலோசனைகளுக்கும் பிறகு ஏற்கப்பட்ட குறைந்தபட்ச வேலைதிட்டம் திட்டவட்டமான அரசியல் திசைவழியைப் புதிய அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது. அது காங்கிரஸ் கட்சியின் திட்டமுமல்ல; இடதுசாரிகளின் திட்டமுமல்ல. தற்போதைய நிலையில் மதசார்பற்ற ஜனநாயக ஏற்பாட்டை பாதுகாத்து பலப்படுத்தவும், மக்கள் நலனைப் பாதுகாக்கவும் ஆன செயல் திட்டம் அது.

இதற்குத் தடையாய் இருக்கும் சக்திகள் என்ன? உலகமய தாராளவாதத்தின் சந்தை விதிகளுக்கு கட்டுப்பட்டு கடந்த ஆறு ஆண்டுகளில் தடையற்ற பொருளாதார சீர்திருத்தத்தை மேற்கொண்ட அரசியல் சக்திகளும் - இத்தகைய சீர்திருத்தத்தால் பலனடைந்த பகாசுர மூலதன சக்திகளும் ஓய்ந்துவிடப் போவ தில்லை; இந்திய மக்களை பிளவுபடுத்தி மத அடிப்படைவாத தேசிய வெறி மூலம் பாசிச ஏற்பாட்டை உருவாக்கி வளர்த்த அபாயகரமான தீய சக்திகள் வலுவான நிலையிலேயே இன்னமும் உள்ளன. இவை இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்து ஒருங்கிணைந்து இந்திய பிற்போக்கின் கூர்மையாக உருவெடுத் துள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

மக்களவைத் தேர்தலில் இவை தோற்கடிக்கப்பட்டனவே தவிர - முற்றாக வீழ்த்தப்படவில்லை.

பொருளாதாரத் துறையிலும், சமூக வாழ்விலும், அறிவுத் துறையிலும் கடந்த ஆறு ஆண்டுகளில் இத் தீய சக்திகள் நமது ஜனநாயக நிறுவனங்களிலும், அமைப்புகளிலும் ஏற்படுத்திய சேதாரங்களை சரிசெய்து அவற்றை மீட்க வேண்டும். அறிவுத் துறையில் அறிவியல் தேடலுக்கு பதிலாக காலாவதியான பத்தாம் பசலி நம்பிக்கைகள் மீதான 'புனிதங்களாக' புகுத்தப்பட்டவைகள் உடனடியாக நீக்கப்பட்டு அறிவியல் ஆய்வு முறைக்குக் கதவுகள் திறந்துவிடப்பட வேண்டும். மதவாத அடிப்படையில் வரலாறு கொச்சைப்படுத்தப்பட்டு திருத்தப்பட்டவையும், வேத கணிதம் - சோதிடக்கல்வி போன்ற மடமைகள் கல்வித் துறையில் திணிக்கப் பட்டதையும் காலதாமதமின்றி களைந்தெறியப்பட வேண்டும். இளைய தலைமுறையின் உணர்வு நிலையில் மானுட மேன்மையைப் போற்றும் அறிவியல் சமூக உணர்வு மேலோங்கும் நிலை உருவாக்கப்பட வேண்டும். மத அடிப்படையில் வெறுப்பை உமிழும் கலவரமும், பயங்கரவாதமும் மீண்டும் தலையெடுத்து விடாமல் தடுக்கும் அரசியல் உறுதிப்பாடு பலப்படுத்தப்பட வேண்டும். இந்தியா மதவெறி பூமியாக்கப் பட்ட அவமானம் போக்கப்பட வேண்டும்.

முந்தைய ஆட்சியாளர்கள் பெருவீத மூலதனத்தின் நலன் சார்ந்த வல்லரசாக இந்தியாவை மாற்றிட பெரும்பான்மையோரின் நல்வாழ்வை நாசமாக்கிய ''சீர்திருத்தங்களை'' மேற்கொண்டனர். மூலதனத்தின் இந்த ''வல்லரசுக் கனவு'' முற்றாக உடைக்கப்பட வேண்டும். ஒரு நாடு வல்லமை பெறுவ தென்பது அந்நாட்டு மக்களின் மனிதவள மேம்பாட்டில் அடங்கியுள்ளது. மக்கள் தொகையில் முப்பது கோடிக்கும் மேல் எழுத்தறிவு பெறாதோர், பசியோடு படுக்கைக்குச் செல்வோர், நோயோடு அன்றாடம் மடிவோர் என வாடிக் கிடக்கையில் இந்த ''வல்லரசுக் கனவு'' மோசடியே என்பதை மக்கள் தெளிவுபடுத்தி விட்டனர்.

கல்லாமையும், பின்தங்கிய வாழ்நிலையும், சமூக அநீதியும், பெண்ணடிமைத்தனமும் மேலோங்கி யுள்ள ஒரு நாட்டில் வல்லரசுக் கனவை மேட்டுக்குடிகள் சார்பாக வளர்த்தெடுப்பது இளைய தலைமுறையை குருட்டாட்டம் காட்டி ஏமாற்றவே. கல்லாமையும், சமூக அநீதியும், பெண்ணடிமை முறையும் போக்கப் படுவதற்கான 'மறுமலர்ச்சி' ஏற்பட வேண்டும். முதலில் 'அனைவருக்கும் கல்வி' என்ற லட்சியம் நிறைவேற்றப்பட வேண்டும். கல்வி தான் அனைத்து சமூக மாறுதலுக்குமான ஆதார சக்தி என்பதை அமர்த்தியா சென் போன்ற அறிஞர்கள் வலியுறுத்தி வந்துள்ளனர். மக்களின் விழிப்புணர்வு 'அறிவியல் கல்வி வளர்ச்சி - அனைவருக்கும்' என்றவாறு நிறைவெய்தும்போதுதான் ஜனநாயகம் பிழையின்றியும், பழுதின்றியும் வளரும். இதற்கு ஜனநாயகப் பாதையே சிறந்த பாதை.

பாசிசத்துக்கும் - ஜனநாயகத்துக்குமான தேர்வில் எதைத் தேர்ந்தெடுப்பது என்ற கேள்விக்கு ஜனநாயகப் பாதையையே அரசியல் ரீதியாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. இது மக்களின் தேர்வு.

இந்தத் தேர்வுக்கான அடிப்படைக் காரணியாக விளங்குவது இந்தியா முழுவதும் மதவெறி எதிர்ப்பு சக்திகள் ஓரணியில் திரட்டப்பட்டதே ஆகும். இத்தகைய ஐக்கிய முன்னணி, அறிவிக்கப்பட்ட 'குறைந்தபட்ச திட்டத்தின்' அடிப்படையில் பலப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். இதனை உறுதிப்படுத்த வேண்டியது சமதர்மத்துக்காகவும், சமூகநீதிக்காகவும் போராடும் மக்களியக்கங்களின் வரலாற்றுக் கடமையாகும்.

இத்தகைய வரலாற்றுக் கடமையை நிறைவேற்றிட இந்த இயக்கங்களின் ஒற்றுமையும், ஒருங் கிணைந்த செயல்பாடும் காலத் தேவையாகிவிட்டன. அவ்வப்போது வெளிப்படும் பிரச்சனைகள் மீதான ஒற்றுமையாக மட்டும் இது இருந்துவிடாமல் சமூக-பொருளாதார, பண்பாட்டு மாற்றங்களை நோக்கமாகக் கொண்ட திட்டவட்டமான தொலைநோக்கான ஒற்றுமையாக இது மலர வேண்டும்.

மிகவும் சிக்கலான - மாற்றங்களும், சவால்களும் நிறைந்த இந்த நிகழ்வுப் போக்கின் முன்னேற்றம் வெற்றியைத் தேடித் தந்த ஐக்கிய முன்னணியை புதிய உயர் மட்டத்துக்கு உயர்த்துவதைச்சார்ந்திருக்கிற

பாசிசத்தை வீழ்த்துவது - புதிய ஏகாதிபத்திய தாக்குதலை முறியடிப்பதும் ஒரு தேர்தல் முடிவை மட்டும் சார்ந்தது அல்ல. அது மக்களை வென்றெடுப்பதைச் சார்ந்தே உள்ளது. புதிய நிலைக்கு மாறிச் செல் வதற்கான மாறுதல் கட்டத்தை பொதுத் தேர்தல் துவக்கி வைத்துள்ளது.

இத்தகைய ஆரோக்கியமான துவக்கத்துக்கான புதிய அறிதல்களும் - புதிய தேடல்களும் வளர வேண்டும்.

★★★



படிப்பகம்

www.padippakam.com

**தமிழ்நாட்டில் அதனுடைய வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்தில், முதலில் சிறுசிறு நாடுகள் என்ற பிரிவினைகள் தோன்றின. அரசுகளும் சிறு சிறு அரசுகளாக அமைந்தன. தமிழக வரலாறு எழுதுவதற்கு நாடு, அரசு பற்றிய ஆய்வுகள் அடிப்படையானவை. இதுகாறும் இந்த ஆராய்ச்சி யில் அதிகம் கவனமில்லை. ஆனால் அந்தக் குறையை நிவர்த்திக்கும் வகையில் தொல்லியல் ஆய்வறிஞர் பூங்குன்றன், நாடு பற்றிய தோற்றத்தையும் அமைப்பையும் இந்தக் கட்டுரையில் ஆராய்கிறார். நாடு என்பது ஒரு புவியியல் - அரசியல் பாகுபாடு. அதன் எல்லைக்குள்தான் அரசியல் முதலிய செயல்பாடுகள் நிகழ்ந்தன. இதன் வளர்ச்சி, படிப்படியாகப், பல நாடுகள் ஒன்றிணைப்பு, அரசு-ஆட்சி விரிவு என்ற நிலைகளுக்குச் செல்கிறது. மொழி, இலக்கியம், தொல் மானிடவியல் முதலிய துறைகளிலும் சான்றுகளைக் காட்டி ஆழமாகத் தமிழக வரலாறு பற்றிப் பேசுகிறது, கட்டுரை.**

**பூங்குன்றன்**

# வேந்தர் மரபுக்கு முன் "நாடு"

சங்க காலத்திற்கு முன் பின் காலங்களில் நாடு என்ற அரசியல் புவியியல் பிரிவு உருவாகிப் பயன்படுத்தப்பட்டு வந்தது. நாடு என்பது சங்க காலத்திலேயே பல்வேறு பொருள் மாற்றங்களைப் பெற்றுவிட்டது. கிரேக்க நில நூல் வல்லுநர் தாலமி தன் நில நூலில் தமிழகத்தில் நிலை பெற்றிருந்த நாடு என்ற நிலப் பிரிவு பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவர் சதநோயி, ஆய்நோயி, பாண்டிநோயி, அருவ நோயி என்று கூறுவது குறிப்பிட்ட குடியின் அரசியல் புவியியல் பிரிவு என்று குறிக்கவே, நாடு என்ப தற்கு 'நோயி' என்ற சொல்லினைப் பயன்படுத்தி யிருக்கிறார். அவருக்கு முன்பு ஸ்ட்ரபோ என்ற அறிஞர் பிரநாய் என்று கூறுவது பூழி நாட்டினை யாகலாம். அதனால், நாடு என்ற அரசியல் புவி யியல் பிரிவு பற்றிய செய்தி கிரேக்க நாடு வரையில் பரவியிருந்தது என்று கொள்ள முடியும். சங்க காலத் தில் நாடு என்ற அரசியல் பிரிவு பல்வேறு பொருள் களில் ஆளப்பட்டிருந்தாலும் அது தொடக்கத்தில் குறிஞ்சி, முல்லை திணைகளில் நிலை பெற்றிருந்த தொடக்க கால அரசியல் புவியியல் பிரிவினையே குறித்து வந்தது.

குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகிய திணை களில் மக்கள் வாழ்விடம் சிறுகுடி என்று அழைக்கப் பெற்றது. ஒரு சிறுகுடியில் ஒரு குடி அல்லது சில குடிகள் வாழ்ந்திருக்க வேண்டும். சில பெயர்கள் மரப்பெயர்களுடன் அழைக்கப்பெற்றன. இதற்கு, மாங்குடி என்ற பெயரே சிறந்த சான்று. குறிஞ்சி, முல்லை ஆகிய திணைகளில் நாடு என்ற அரசியல் புவியியல் பிரிவு முதலில் தோன்றிவிட்டது. கால அடைவில், நாடு என்ற அரசியல் புவியியல் பிரிவு பிற திணைகளுக்கும் பரவியிருக்க வேண்டும்.

நாடு என்பது தொடக்கத்தில் எந்த அடிப்படை யில் தோன்றியது என்று ஆய்வு செய்யப் பெற வேண்டும். இச்சொல் பெரும்பாலான திராவிட மொழிகளில் பயின்று வருகின்றது. ஆனால், அவற் றின் பயன்பாடு காலத்தாலும் தேசத்தாலும் மாறுபட் டுள்ளது. தொடக்க காலத்தில் இச்சொல் தென் திராவிட மொழிகளில் பயன்படுத்தப்பட்டது. அம் மொழிகளிலும் இச்சொல் முல்லை, குறிஞ்சித் திணை களில் மட்டுமே பயன்பட்டிருக்க வேண்டும். நாடு என்ற சொல் நடு என்ற சொல்லிலிருந்து வந்திருக்க வேண்டும் என்று இரா. நாகசாமி உள்ளிட்ட ஒரு சாரார் கருதுகின்றனர். அது மட்டும் அல்லாமல் இதனை வடமொழி ஜனபதம் என்ற அரசியல் பூகோளப் பிரிவுடன் ஒப்பிடத்தக்கது என்றும் செனி வரத்னே போன்றோர் கூறுகின்றனர். வடமொழியில் ஜனபதம் என்பதை ஜன+பதம் என்று பிரித்துப் பொருள் கொள்கின்றனர். ஜன என்பது குடி என்றும் பதம் என்பது காலடி என்றும் பொருள் கொண்டு ஜனபதம் என்பதை குடி கால் ஊன்றிய இடம் என்றும் பொருள் கொண்டு, நாடு என்பதும் குடி கால் ஊன்றிய இடம் என்று பொருள் கொண்டு முதன் முதலில் பழங்குடி தங்கிய இடமே நாடு என்று பொருள் கொள்ளப் பெற்றது என்பர்.

செனிவரத்னே, நாடு என்பது நட என்ற வேர்ச் சொல்லிலிருந்து உருவாகியிருக்க வேண்டும் என்று கொள்கின்றார். இவர், நட என்பது குறிப்பிட்ட பகுதியில் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்ட நிலையைக் குறிப்பதாகவும், அதன் மூலம் நட என்பது நாடு என்ற சொல்லை குறிக்கின்றது என்பார். ஒரு சாரார், நடு என்ற வேர்ச்சொல் வேளாண்மை யோடு தொடர்புடைய சொல் என்றும் அதனால் நட்வு நட்டு வேளாண்மை செய்த இடமே நாடு



படிப்பகம்

www.padippakam.com

என்று பெயர் பெற்றது என்றும் சொல்வர். இவ் இருகருத்துகளும் ஆய்வுக்குரியவை. நாடு என்பது தோதவர் மொழியில் நோர் என்ற ஒப்புமைச் சொல்லைப் பெற்றுள்ளது. இச்சொல்லுக்குத் தெய்வம் உறையும் இடம் என்றும் வழிபாடு செய்யும் புண்ணிய இடம் என்றும் பொருள் காணப்படு கின்றது. தொடக்கத்தில், நாடு என்ற சொல் தெய்வ வழிபாடு செய்த இடமாக வழங்கப் பெற்றிருக்க வேண்டும். குறிப்பிட்ட இடத்தினைச் சேர்ந்த குருதி உறவு கொண்ட மக்கள் வழிபட்ட புண்ணிய இடமே நாடு என்ற பெயரில் கூறப்பெற்றுப், பின்னாளில் அக்குடிகள் வாழ்ந்த நிலப் பகுதியையும் இது குறித்து வந்திருக்க வேண்டும். தோதவர் மொழிச் சொல் மூலத் திராவிடச் சொல்லாகக் கொள்ளத் தக்கது. பிற திராவிட மொழிகளில் இச்சொல் வேளாண்மை உற்பத்தி பெருகிய பின் பயன்பாட் டிற்கு வந்தமையால் வேளாண்மையொடு தொடர் புடையற சொல்லாகிவிட்டது.

சங்க இலக்கியத்தைப் பொறுத்த வரையில் நாடு, ஊர், சேர்ப்பு ஆகிய புவியியல் பிரிவுகளே வேந்தர் தோன்றுவதற்கு முன்பிருந்தவை. இதனை அடிப்படையாகக் கொண்டு, அவற்றின் ஆட்சித் தலைவர்களை நாடன், ஊரன், சேர்ப்பன் என்று பெயரிட்டு அழைத்தனர். இதற்குச் சான்றாகப் புற நானூற்றில் பயின்று வரும் பாடல் ஒன்றினை எடுத்துக்காட்டலாம்.

**''நாடன் என்கோ ஊரன் என்கோ**
**பாடிமிழ் பனிக்கடல் சேர்ப்பன் என்கோ**
**யாங்கனம் மொழிகோ ஓங்குவாட் கோதையை**
**புனவர் தட்டை புடைப்பின் அயலது**
**இறங்குகதிர் அலமருகழனியும்**
**பிறங்கு நீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங்கு**
**எழுமே''**
(புறம் : 49)

இப்பாடலுக்குப் பொருள் எழுதிய பழைய உரைகாரர், நாடன் என்பதற்குக் குறிஞ்சி நிலத்தில் நிலை பெற்றிருந்த நாடு என்ற புவியியல் பிரிவினை ஆண்ட தலைவன் என்று பொருள் கொள்கிறார். மேலும் இவர் 'புனவர் தட்டை புடைப்பின்' என்ற தொடரைக் கொண்டு, முல்லைத் திணையில் நிலை பெற்றிருந்த நாடு என்ற புவியியல் பிரிவினை ஆண்டவர்களுக்கும் இப்பெயர் பொருந்தும் என்றும் பொருள் கொள்கிறார். ஆகையால், அரசியல் புவி யியல் பிரிவின் தொடக்க நிலையில் உருவான தலைவர்கள் நாடன், ஊரன், சேர்ப்பன் எனலாம். முல்லை, குறிஞ்சிப் பகுதிகளில் உருவான தலைவர் கள் 'நாடன்' என்று அழைக்கப் பெற்றனர். சங்க இலக்கியத்தில் நாடு என்ற சொல் நான்கு திணை களிலும் பயின்று வரக் காணலாம். ஆனால், ஒவ்வொரு திணையிலும் அரசியல் தலைவர்கள் வேறு பெயரில் அழைக்கப் பெற்றனர். அதாவது, அரசியல் தலைவர் மட்டும் பண்டைய நிலை யிலேயே பெயர் பெற்றிருந்தனர் எனலாம்.

நாடு என்பது தொடக்க காலம் முதலே சில குடியிருப்புகளை உள்ளடக்கிய அரசியல் புவியியல் பிரிவாகவே விளங்கியது. இது, குறிஞ்சி நிலத்தில் சிறுகுடிகளை உள்ளடக்கிய புவியியல் பிரிவாகவே வழங்கப் பெற்றது. சிறுகுடியில் வாழ்ந்த மக்களுக் கும் நாடன் என்ற தலைவனுக்குமிடையில் நிலை பெற்றிருந்த அரசியல் உறவு பற்றி ஏதும் அறிந்து கொள்ள இயலவில்லை. சிறுகுடி, சீறூர் ஆகிய குடி யிருப்புகளை உள்ளடக்கிய பகுதியே நாடு என்று அழைக்கப் பெற்றது. நெய்தல் நிலத்தில் உள்ள சிறு குடிகள் சேர்ந்த பகுதியும் நாடு என்று அழைக்கப் பெற்றது. குறிஞ்சி, முல்லை நிலங்களில் நிலை பெற்றிருந்த நாட்டின் தலைவனுக்கு நாடன் என்று பெயர். மாறாக, கடற்பகுதி நாட்டிற்குத் தலைவன் சேர்ப்பன் என்று பெயர் குறிக்கப்பெறுகின்றது. மருத நிலத்திலும் நாடு பயன்படுத்தப் பெற்றது. ஆனால், அங்கு அரசியல் தலைவன் ஊரன். இதனால், அரசியல் புவியியல் பிரிவான நாடு என்பது முதன் முதலில் குறிஞ்சி, முல்லை திணைகளில் தான் தோன்றியது என்பது உறுதிப்படுகின்றது.

நாடு என்ற அரசியல் புவியியல் பற்றி ஆய்வு செய்பவர் நாடன் என்ற அரசியல் தலைவன் பற்றியும் ஆய்வு செய்ய வேண்டும். நாடன் என்ற அரசியல் தலைவன் குறிஞ்சி, முல்லை நிலங் களுக்குரியவன். அவன் மன்னன், வேள் ஆகிய படி நிலைகளில் இருந்தவன்; பல குடிகளின் (**Settlements**) நிலப் பரப்பிற்குத் தலைவன். குடிகள் ஒன்றொடு ஒன்று மோதிக் கொண்டிருந்த கூறாக்கக் குடிகள்.[7] இவ்வியல்பு பற்றிச் சங்க இலக்கியத் தில் இடைப் பிறவரலாகக் குறிக்கப் பெறுகின்றது. ஆனால், கூறாக்கக் குடிகள் வேளின் தலைமை யினை ஏற்றுக் கொண்டவை.

நாடன் என்ற ஆட்சித் தலைவன் கான்கெழு நாடன் என்றும், வளமலை நாடன் என்றும், நல்மலை நாடன் என்றும், பெருமலை நாடன் என்றும் கானத் தோடும், மலையொடும் தொடர்பு படுத்திப் பேசப் பெறுவதைக் காணலாம். ஆகையால், நாடன்



படிப்பகம்

www.padippakam.com

என்பவன் மலை சார்ந்த குறிஞ்சி நிலத்திற்கும் காடு சார்ந்த முல்லை நிலத்திற்கும் உரியவன் என்பது புலப்படும். கான நாடன் ஆளும் மலைப் பகுதியில் யானைத் தந்தத்தைக் கானவர் எடுக்கின்ற செய்தி பின்வரும் பாடல் அடிகளால் விளங்கும்.

**''புலியொடு பொருந்த புண்கூர் யானை**
**நற்கோடு நயந்த அன்பில் கானவர்**
**விற்சுழிபட்ட நாமப்பூசல்**
**உருமிடைக் கடியிடி கரையும்**
**பெருமலை நாடன் ........''** (நற் : 65)

யானைத் தந்தம் மட்டுமன்றி, மணிக்கல் பொன் தந்த முத்து ஆகியவற்றையும் பெறுவதற்கான இயற்கை வளத்தினைப் பெற்றது நாடன் ஆளும் மலைப் பகுதி. இந்தச் செய்தியைப் பின்வரும் அகப் பாடல் விவரிக்கின்றது.

**''பெருமலைச் சிலம்பில் வேட்டம் போகிய**
**செறிமடை அம்பின் வல்வில் கானவன்**
**பொருதுதொலை யானை வெண்கோடு கொண்டு**
**நீர்திகழ்சிலம்பின் நன்பொன் அகழ்வோன்**
**கண்பொருது இமைக்கும் திண்மணி கிளர்ப்பப்**
**வைந்நுதி வான்மருப்பு ஒடிய உக்க**
**தெண்ணீர் ஆலிகடுக்கும் முத்தமொடு**
**மூவேறுதாரமும் ஒருங்குடன் கொண்டு''**

மலையில் சிறுகுடிகளை உருவாக்கி உணவு தேடும் வாழ்க்கையிலிருந்து, உணவு உற்பத்தி செய் யும் வாழ்க்கைக்கு மாறியதைப் பின்வரும் பாடல் வலியுறுத்தும்.

**''இருங்கல் அடுக்கத்து என்னையர் உழுத**
**கருங்காற் செந்திணை கடியு முண்டன''**
**(நற் : 122)**

**''கிழங்குகீழ் வீழ்ந்து தேன்மேல் தூங்கி**
**சிற்சில வித்திப் பற்பல விளைந்து**
**திணை கிளிகடியும் பெருங்கல் நாடன்''**

நாடன் ஆளுகைக்குட்பட்ட மலைப் பகுதியில் திணை விளைவித்த செய்தி இதனால் அறியப் பெறுகின்றது. நாடன் ஆளுகைக்குட்பட்ட பகுதி யில் திணை, வரகு, மிளகு, கொள்ளு, இஞ்சி, துவரை ஆகியவை பயிரிடப்பட்டன என்பதற்கு சங்க இலக்கியத்தில் பலசான்றுகள் உள்ளன. இவை மட்டுமின்றி, தேக்கு, அகில் போன்ற மரங்களும் நாடன் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் விளைந்தன. தேக்கு நிறைந்த பகுதியைத் தேக்கமல் என்று கூறுவர். தேக்கு, அகில், மிளகு, மணிக் கல், பொன், யானைத்தந்தம் ஆகியவை வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்யும் நிலை ஏற்பட்ட பின் அவற்றின் பொருளியல் சிறப்பு உணரப் பெற்றது. கால்நடை வளர்ப்பு சமூக ஆக்கத்திற்குப் பயன் பட்டது. யானைத் தந்தம், கல் மணி, பொன் ஆகியன மூவேறுதாரங்கள் என்று குறிக்கப்பெற்றன. நாடன் ஆட்சிக்குட்பட்ட பகுதி, வெளிநாடுகளுக்கு ஏற்று மதி செய்யப் பெறும் தகுதி வாய்ந்த பண்டங்களே உற்பத்தியாகும் பகுதியாக விளங்கியது.

குறிப்பிட்ட பகுதியில் (முல்லை, குறிஞ்சி) பல நாடுகள் இருந்தன. ஒவ்வொரு நாட்டிற்குள் ஒரு நாடன் தலைவனாக விளங்கினான். நாடன் என்ற அரசியல் தலைவனைப் பற்றி நற்றிணையிலும் குறுந் தொகையிலும் குறிப்புகள் குறைவாகவே கிடைக் கின்றன. புறநானூற்றில் வேளிர், மன்னர் ஆகியோர் நாடன் என்று குறிக்கப் பெறுகின்றார்கள். வேந்தரில் கிள்ளிவளவன் மட்டுமே நாடன் என்று குறிக்கப் பெறுகிறான் (புறம் : 397).

பதிற்றுப்பத்தில் நாடன் என்ற சொல் பயன் படுத்தப் பெறவில்லை. அதனால், நாடன் என்ற சொல் குறிஞ்சி, முல்லைப் பகுதிகளிலிருந்த வேளி ரையும் குறுநில மன்னர்களையும் குறித்து வந்தது எனலாம். வேளிரில் ஆய், பேகன், பாரி ஆகியோர் நாடன் என்று அழைக்கப் பெறுகின்றனர். (புறம் 135, 374, 337, 155) மேலும் புல்லி, நள்ளி, பிட்டன், இவயன், அதிகன் ஆகிய குறுநில மன்னர் களும் நாடன் என்று குறிக்கப் பெறுகின்றனர். இச்சான்றுகளிலிருந்து குறிஞ்சி, முல்லைப் பகுதி களில் நாடு என்ற அரசியல் புவியியல் பகுதி தோன்றிய தன்மையும் கால அடைவில் அப்பிரிவு மருதம் நெய்தல் பகுதிகளில் குறுநிலப் பகுதிகளை யும் குறிக்கப் பெற்ற தன்மையும் புலப்படும்.

குறிஞ்சி, முல்லைப் பகுதிகளில் நாடு உருவான தன்மைக்குச் சான்றுகள் பல கிடைத்துள்ளன.

''.......... சாரல்
அகில் சுடு கானவன் உவல் சுடு கமழ்புகை
ஆடு மழை மங்குலின் மறைக்கும்
நாடு கெழு வெற்பன் .........'' (நற் : 282)

பாரியின் பறம்பு நாட்டினைப் பாடிய கபிலர், குறிஞ்சி நில நாட்டுப் பகுதியின் தன்மையை விவரிக் கின்றார்.



படிப்பகம்

www.padippakam.com

''அளிதோதானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவரும் முற்றினும்
உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே
ஒன்றே சிறியிலை வெதிரின் நெல்
விளையும்மே
இரண்டே தீம்சுளைப் பலவின் பழ
மூழ்க்கும்மே
மூன்றே கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு
வீழ்க்கும்மே
நான்கே அணிநில ஒரி பாய்தலின் மீது
அழிந்து
திணி நெடுங்குன்றம்தேன் சொரியும்மே''
(புறம் : 109)

பாரியைப் பற்றிய மற்றொரு பாடலிலும் குறிஞ்சி சான்ற நாட்டின் வளப்பம் வருணிக்கப் பெறுகின்றது. (புறம் 120)

பறம்பினைப் பற்றிக் கபிலர் பாடிய பாடல்களில் 'ஆய்தொடி அரிவையர் தந்தை நாடே' (புறம் : 117) 'பாரி தண்பறம்பு நாடே' (புறம் : 118) வள்ளியோன் நாடே' (புறம் : 11) என்று கூறுவார்.

## பாலைத் திணை நாடு

அகநானூற்றுக் குறிஞ்சித் திணையிலும் நாடன், நாடு ஆகிய சொற்கள் பயின்று வருகின்றன. மருதத் திணையில் நாடு என்ற சொல் அருகியே காணப் பெறுகின்றது. முல்லைத் திணையில் நாடு என்பது குறைவாகப் பயின்று வருகின்றது. ஆனால், பாலைத் திணையில் நாடு என்ற சொல் நூற்றுக்கும் மேல் பயின்று வரக் காணலாம். பாலை என்பது முல்லையும் குறிஞ்சியும் திரிந்து வந்தது என்று கொள்ளலாம்.

அகநானூற்றுப் பாலைத் திணைப் பாடல்களில் எருமை நாடு, கட்டி நாடு, பாணன் நாடு, பாழ் நாடு, மிளை நாடு ஆகிய நாடுகள் குறிக்கப் பெறுகின்றன. இவை அனைத்தும் முல்லைத் திணையில் எழுச்சி பெற்ற நாடுகள். சான்றுக்கு, எருமை நாடு பற்றிய பாட்டினை மட்டும் எடுத்துக் காட்டுவோம்.

''.........வடாஅது
ஆர்இருள் நடுநாள் ஏர்ஆ உய்ய
பகை முனை அறுத்துப் பல்இனும் சாஅய்
கணம் சால்கோவலர் நெடுவிளிப்பயிரா அறிந்
தினம் தலைத் தருஉம் துளங்கிமில் நல்லேறு
ஏற்றுத்
தழூஉப் பிணர் எருத்தம் தாழப்பூட்டிய
அம்தூம்பு வகல அமைக் கமஞ் செலப் பெய்த
துறுகாழ் வல்சியர் தொழுவறை வௌவிக்
கன்றுடைப் பெருநிரை மன்று நிறைதரூஉம்
நேரா வன்தோள் வடுகர் பெருமகன்
பேரிசை எருமை நன்னாட்டு'' (அகம் : 253)

எருமை நாட்டு மறவர்கள் பிற நாட்டுத் தொழுவறையில் தங்கியிருக்கும் மாட்டு மந்தைகளைக் கவர்ந்து வந்து, தம் பகுதியிலிருந்த மன்றங்களில் நிறைப்பர்.

## பல்நாடு

சங்க இலக்கியத்தில் அடிக் குறிப்பில் பன்னாடு தந்த பூதப் பாண்டியன் என்று ஒரு பாண்டிய மன்னன் குறிக்கப் பெறுகின்றான்; அவனே அகநானூற்றில் நாடு பல தந்த பசும் பூட்பாண்டியன் என்று குறிக்கப் பெறுகின்றான்.

''வாடாப்பூவின் கொங்கர் ஒட்டி
நாடு பலதந்த பசும்பூட் பாண்டியன்''
(அகம் : 253)

இங்கு நாடு பல தந்த என்று கூறுவது எடுத்துக் காட்டத்தக்கது. முல்லைத் திணையில் சிறு பகுதிகள் நாடாகக் கருதப் பெற்றன. அவை சீறூர் நாடு என்று குறிக்கப் பெறுகின்றன.

''குன்றகச் சிறுகுடி மறுகுதொறும் மறுகும்
சீறூர் நாடு பல பிறக்கு ஒழிய
சென்றோர் அன்பு இலர்'' (அகம் : 331)

மேலே காட்டப் பெற்ற முந்தைய பாடலும், இப்பாடலும் முல்லைத் திணையிலும், குறிஞ்சித் திணையிலும் சீறூர் நாடுகள் பல இருந்தன என்பதை வலியுறுத்தும். ஒரு குடியிருப்பே நாடு என்று அழைக்கப் பெற்றிருக்க வாய்ப்பு உண்டு என்றும் கருதலாம். தமிழகத்தில் வேளிரும் அவர்களை அடுத்து வேந்தரும் தோன்றிப் பரந்த அளவில் நாடுகளை உருவாக்கிய பின்னரும் சீறூர் நாடுகள் பல இருந்தன. மதுரைக் காஞ்சியிலும் குறிஞ்சி, முல்லைப் பகுதிகளில் பல நாடுகள் இருந்தமை பற்றிக் குறிக்கப் பெறுகின்றது.

பெரும்பாணாற்றுப் படையில் பெரும்பாணன், தான் போகும் வழியில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய திணைகளைக் கடந்து செல்வான்



படிப்பகம்

www.padippakam.com

என்று கூறும் போது 'வாடா வள்ளியின் வளம் பல தரும் நாடு பல கண்ட பின்'[17] கச்சியை அடைவான் என்று கூறப் பெறுவதைப் பார்க்கின்றோம். சிலம்பிலும், தொல்காப்பியத்திலும் வெட்சித் திணையில் ஒரு துறையாக வள்ளிக் கூத்து கூறப் பெறுகின்றது (தொல், பொருள், புறத்). புறப்பொருள் வெண்பா மாலையிலும் வள்ளிக் கூத்தைப் பற்றிக் கூறப் பெறுகின்றது. வள்ளிக் கூத்து சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் பயின்று வருவதாகக் கூறுவர். அதனால், வள்ளிக் கூத்து வேட்டுவர் மரபில் அல்லது வெட்சி மறவர் மரபில் ஆடிய கூத்து என்பது புலப்படும். வள்ளிக் கூத்தினை உருத்திரங் கண்ணனார் 'வாடா வள்ளி' என்றும் அதனால் வளம் பெறும் நாடுகள் என்றும் கூறுகின்றார். இந்த நாடுகள் கச்சி மூதூர் செல்லும் வழியில் உள்ளன. இவை குறிஞ்சி, முல்லை ஆகிய பகுதிகளில் நிலை பெற்றிருந்தன எனலாம்.

வள்ளிக் கூத்து வெற்றி கருதி நிகழ்த்தப் பெற்றது. ஆனால் பெரும் பாணாற்றுப்படையில் வளம் பற்றி நிகழ்த்துவதாக குறிப்பர். குறிஞ்சி, முல்லை நிலங்களில் வளமைச் சடங்காக இக்கூத்து நிகழ்த்தப் பெற்றதோ என்று கருத வேண்டியுள்ளது.

இவ் இரு நிலப் பகுதிகளிலும் மழை பெய்து, அதனால் புன்செய் வேளாண்மை செய்யப் பெற்றது. புன்செய் வேளாண்மை நீர்ப்பாசன வாய்ப்பு இல்லாத நிலையில் இயற்கை வளத்தையே நம்பியிருக்க வேண்டிய நிலை இருந்தது. அதனால், பண்டைய மனிதன் மந்திரச் சடங்கினை நம்ப வேண்டியிருந்தது. அதற்காகவே அவன் வளமைச் சடங்கினை மேற்கொண்டான். வள்ளிக் கூத்தில் பழங்குடி வாழ்க்கையில் நிலை பெற்றிருந்த இணை விழைச்சு சடங்கு இடம் பெற்றிருக்க வாய்ப்பு உண்டு.[20] அதனால்தான் நச்சினார்க்கினியர் அதனை இழிந்தோர் காணும் கூத்து என்று வெறுத்துக் கூறினார் போலும்.

## நெய்தல் திணை நாடு

நெய்தல் திணையிலும் நாடு இருந்தது என்பதற்கு நற்றிணையிலும், அகநானூற்றிலும் சான்றுகள் கிடைக்கின்றன.

''கண்டல் வேலிக் கழிசூழ் படப்பைத்
தெண்கடல் நாட்டுச் செல்வென் யான்''
(நற் : 363)

நெய்தல் திணையில் நாடு என்ற அரசியல் புவியியல் தோன்றிவிட்டதை இப்பாடல் அடிகள் சுட்டுகின்றன.

மருதத் திணைப் பாடல்களில் நாடு என்ற அரசியல் புவியியல் பற்றிய குறிப்பு காணப் பெறுகின்றது.

''தண்பனை தழீகிய தளரா விருக்கை
நன்பல்லூர நாட்டொடு நன்பல்''
(பொருந : 170-71)

''மருதஞ் சான்ற மருதத் தண்பணை''
(சிற : 78)

''இழிபறியாப் பெருந்தண்பணை
குருஉக் கொடிய வெரிமேய
நாடெனும் பேர் காடாக'' (மதுரை : 154, 56)

இப்பாடல் அடிகளில் 'தண்பணை' என்ற சொல்லே மருதத்திணையைக் குறிக்கப் பயன்பட்ட தன்மை புலப்படும். அதனால், மருதத் திணையிலும் நாடு என்ற அரசியல் புவியியல் பயின்று வந்த தன்மை புலப்படும்.

பொருநராற்றுப்படையில் நான்கு திணைகளிலும் நாடு இருந்தமை பற்றிய குறிப்பு காணப் பெறுகின்றது. ''தண்வைப்பின் நால்நாடு குழிஇ'' என்ற அடிக்கு நச்சினார்க்கினியர் பொருள் கூறும் போது, நான்கு திணைகளிலும் உள்ள குளிர்ந்த ஊர்களைக் கொண்ட நாடுகள் என்று பொருள் கொண்டார்.[22] இச்சான்று, நான்கு திணைகளிலும் நாடு என்ற அரசியல் புவியியல் தோன்றிவிட்டதையே சுட்டுகின்றது. மேலும் தண்வைப்பு என்று கூறுவதால் நான்கு திணைகளிலும் காடுகொன்று நாடாக்கி விட்ட செய்தியும் பெறப்பெறுகின்றது.

## வேணாடு

சங்க இலக்கியத்தில் வேளிர் பற்றிய குறிப்புகள் குறைவாகவே கிடைக்கின்றன; அவற்றிலும் வேளிர் நாடு பற்றி மிகக் குறைவாகவே கிடைக்கின்றன. ஆய நாடு, பாரியின் பறம்பு நாடு, ஆவியரின் பெருங்கல் நாடு, நன்னனின் கொங்கானம் நாடு, நன்னன் சேய் நன்னனின் வேணாடு, புலிகடி மாலின் நாடு, விச்சிக்கோவின் மிழலைக் கூற்றம், முத்தூற்றுக் கூற்றம் (இவை நாடு என்பதன் வேறுபட்ட வடிவம்) ஆகியவை வேளிர் நாடுகள்.[23]



படிப்பகம்

www.padippakam.com

சோழநாட்டு உள்பகுதியில் ஒரு வேணாடு இருந்தது; இது தேவாரத்தில் குறிக்கப் பெறுவது. பறம்பு நாடு பற்றிக் கபிலர் விரிவாகப் பேசியுள்ளார். அவர் கூற்றுப்படி, பறம்பு நாடு முன்னூறு ஊர்களைக் கொண்டது. முன்னூறு ஊர் என்பது ஒரு முழுமை பெற்ற எண்ணாக இருப்பினும், கபிலர் காலத்தில் முன்னூறு ஊர் இருந்திருக்க வேண்டும் என்று கொள்ளமுடியாது. பறம்பு நாடு பற்றி விவரிக்கும்போது அது குறிஞ்சி நிலப் பகுதி யாகவே கூறப் பெறுகின்றது. அதனால், ஊர் என்பது சிறு குடியைக் குறித்ததாகவே கொள்ள முடியும். ஒவ்வொரு சிறு குடியிலும் ஒரு குருதி உறவுள்ள குடியினர் மட்டுமே வாழ்ந்திருக்க வாய்ப்பு உண்டு. கபிலர் செய்யுள் வழக்கினைக் கருத்தில் கொண்டு, சிறுகுடி என்பதற்கு ஊர் என்று குறிப்பிட்டிருக்க லாம்; அல்லது கபிலர் காலத்தில் சிறுகுடி ஊர், சேரி ஆகியவை ஒன்றற்கொன்று மாற்றிப் பயன் படுத்தும் வகையில் சொல்லாட்சிகள் மாறியிருக்க வேண்டும். எது எப்படி இருந்தபோதிலும் இங்கு முன்னூறு என்ற எண் குறிப்பிடத்தக்கது.

முந்நூறு ஊர் என்பது திறை வாங்கும் நிருவாகக் காரணத்திற்காக உருவாக்கப் பெற்றதா அல்லது கிரேக்கத்திலிருந்ததைப் போல சமயம் சம்பந்தப்பட்ட அமைப்பா என்பதை விளங்கிக் கொள்ள மாட்டிலோ வேறு வகையிலோ சான்று ஏதும் கிடைக்கவில்லை. தூண்டிய நாட்டைப் பற்றி மெகஸ்தனிஸ் குறிப்பிடும்போது அந்நாட்டில் 365 ஊர்கள் இருந்ததாகவும் ஒவ்வொரு ஊரும் ஒரு நாளுக்கு அரண்மனைக்குக் காணிக்கை செலுத்த வேண்டும் என்ற நடைமுறை இருந்ததாகவும் கூறுவார். இது உண்மையாயின் பாரி நாட்டி லிருந்த முந்நூறு ஊர்களும் திறை செலுத்தும் வகையில் வைக்கப் பெற்றிருந்ததா என்ற கேள்வியும் எழுகின்றது.

பாரி நாட்டின் இருப்பிடம் பற்றி அறிஞர் களிடையில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இன்றைய குன்றக்குடியை அடுத்துள்ள பிரான் மலையே பறம்பு என்று தமிழ்நாட்டு அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் கேரளத்து வரலாற்ற றிஞர் இளங்குளம் குஞ்சன் பிள்ளை பாரியின் பறம்பு' பாலக்காட்டுப் பகுதியில் நிலைபெற்றி ருந்தது என்று கருதுகின்றார்.

பாரி நாட்டின் மீது மூவேந்தர் படையெடுத்தது பற்றிச் சமூக மானிடவியல் கண்ணோட்டத்தில் அணுகியுள்ளார் செனிவிரதனே. இவர் கருத்துப் படி பாரியின் பறம்பு நாடு இன்றைய பிரான்மலைப் பகுதியே என்றும், அந்தப் பகுதி சோழ நாட்டிற் கும் பாண்டிய நாட்டிற்கும் இடையில் இடைப் புலப் பெருவழிகள் நிறைந்திருந்த பகுதியாக விளங்கியமையால் அந்நாட்டின் வாணிகப் பெரு வழிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள மூவேந்தரும் படையெடுத்தனர் என்றும் கருதப் பெறுகின்றது. சோழ நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் இடையில் பிடவூர், ஒல்லையூர் நாடு ஆகிய வாணிகப் பெருவழிகள் இருந்துள்ளன என்பது உண்மையே. ஆனால், பறம்பு நாட்டைப் பற்றிய கபிலர் பாடல்களில் பெருவழிகள், வாணிகம் ஆகியவை பற்றிய குறிப்பு ஏதும் கிடைக்கவில்லை. மேலும், கனிம வளங்கள் பற்றிய சான்றும் கிடைக்க வில்லை. அதனால், மூவேந்தரின் பறம்பு நாட்டு முற்றுகை வேறு காரணத்திற்காக நடைபெற்றிருக்க வேண்டும் என்று கருதலாம்.

விச்சிக்கோவின் மிழலைக் கூற்றம், முத்தூற்றுக் கூற்றம் ஆகியவை நீர்வளம் மிக்க மருத நிலம் மிகுந்த பகுதி. அதனால், பாண்டியன் நெடுஞ்செழி யனும் அகுதை வேளும் இக் கூற்றங்களின் மீது படையெடுத்தனர். இதனையடுத்த நெடுஞ்செழியன் இப் பகுதியை தன் ஆதிக்கத்தில் கொண்டு வந்தான்.

அண்டிரன் நாடு பொதுமீக்கூற்றம் என்று பெயர் கூறப்பெறுகின்றது. அண்டிரனைப் பற்றிய பாடல்கள் சிலவற்றில் 'நாடு' என்று கூறப் பெறு கின்றது.[30] ஆய்நாட்டைப் பற்றி தாலமி என்ற யவன நூல் வல்லுநர் குறிப்பிட்டுள்ளார்.

ஆய்நாடு மலைகள் நிறைந்த குறிஞ்சி நில மாகும். அவன் நாட்டில் களிற்று வளம் மிகுந் திருந்த தன்மை மற்றொரு பாடலில் குறிக்கப் பெறு கின்றது. ''விளங்கு மணிக் கொடும் பூண் ஆய் நின்நாட்டு இளம்பிடி ஒரு சூல் பத்து ஈனுமோ'' (புறம் : 129) என்று ஒரு புலவர் கேட்கிறார்.

மற்றொரு பாடலில், ஆய் அண்டிரனுக்குத் திறையாக வந்த பொருள்கள் குறிக்கப் பெறுகின் றன. ஆய்நாட்டைப் போலவே ஆவியர் பகுதியும் பெருங்கல் நாடு (மலை : 246) (புறம் : 158) என்று



படிப்பகம்

www.padippakam.com

அழைக்கப் பெற்றது. அரிசில் கிழார், வன்புல வைப்பின் நல்நாடு என்று ஆவியர் நாட்டினைக் குறிப்பிட்டுள்ளார். நன்னன் சேய் நன்னன் நாட்டினை 'குன்று சூழிருக்கை நாடு' (மலை : 583) என்று கூறுவதைக் காணலாம். வேள் நாடு என்பது வேணாடு என்று அழைக்கப் பெற்றது.

வேளிர்களில் பலர் சிறந்த வாணிக மையங்களைத் தலைமையிடமாகக் கொண்டிருந்தனர். அவை வேளூர் என்று அழைக்கப் பெற்றன. வேளிர் ஆண்ட பகுதிகளிலிருந்த ஊர் எண்ணிக்கை, குடிகளின் எண்ணிக்கை ஆகியவை பற்றிச் செய்தி ஏதும் கிடைக்கவில்லை. பறம்பு நாட்டு ஊர்களைப் பற்றிக் கபிலர் கூறியுள்ளார். ஆனால், இருங்கோவேள், நன்னன் சேய் நன்னன், கொங்கானம் கிழான் நன்னன், ஆய் ஆகிய வேளிர் நாடுகளில் நிலைபெற்றிருந்த ஊர்களின் எண்ணிக்கை பற்றி குறிப்பு ஏதுமில்லை. ஆய் மன்னனைப் பற்றிக் குறிப்பிடும் போது நாடும் ஊரும் பரிசிலர்க்கு அளித்தான் என்று கூறும் இருங்கோவேள் நாட்டில் அரையம் என்று ஓர் ஊர் (புறம் : 202) கூறப் பெறுகின்றது. ஏழில் குன்றம், குன்றூர், வாகைப் பெருந்துறை, கடம்பின் பெருவாயில் ஆகியவை கொங்கானத்தில் நிலைபெற்றிருந்தன. (அகம் : 3-45, பதிற் : 4, நற் : 280)

நள்ளியின் நாடு காட்டு நாடு என்று அழைக்கப் பெற்றது. அகப்பாடல்களில் பலர் கானக நாடன், கான நாடன், கான் கெழுநாடன் என்று கூறப் பெறுகின்றனர். இவர்கள் ஆண்ட பகுதி முறையே கானக நாடு, கான நாடு, கான்கெழுநாடு என்று பெயர் பெற்றிருக்க வேண்டும். அதனால், சங்க காலத்தில் கானிடையிட்ட நாடுகள் மிகுதியும் இருந்தன என்பது புலப்படும். சங்க காலத்தில் பிற நாடுகளைப் பற்றிய குறிப்பு வரும்போது சேய் நாடு, பிற நாடு, வேறு பல நாடு என்று குறிக்கப் பெறுகின்றது. இவற்றுள், சேய் நாடு என்ற சொல்லாட்சியே மிகுதியும் காணப் பெறுகின்றது. 'அந்த நாடு' என்று கூறப் பெறுவது பெருவழியில் அமைந்திருந்த நாடு என்று கருதலாம். வாணிகத்தின் பொருட்டு தமிழர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றனர். அதனால் அந்நாடுகளைப் பற்றிக் குறிப்பிட்டனர்.

''................ ஆனா அது
வேறுபல் நாட்டில் கால் தர வந்த
பல உறு பண்ணியம் இழிதரு நிலவுமணல்''
(நற் : 31)

''................ எந்தை
வேறுபல நாட்டுக் கால்தர வந்த
பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறை
கலிமடைக் கள்ளின் சாடி'' (நற் : 295)

இரண்டாவதாகத் தரப் பெற்ற பாடல் அடிகள் யவன நாட்டையே குறித்தது எனலாம். யவனர்கள் கொண்டு வந்த கள் பற்றிப் பிறவிடங்களில் குறிப்பிடும்போது அவர்கள் கொண்டு வந்த மது சாடிகளைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.[31]

### வேளிர் - குடிகள் உறவு

வேளிர், மன்னர் ஆகியோர் ஆட்சியில் நிலைபெற்றிருந்த நாடுகளில் வாழ்ந்த குடிகள் வேளிருடன் அல்லது மன்னருடன் வைத்திருந்த தொடர்பு பற்றிச் சங்க இலக்கியம் ஏதும் குறிப்பிடவில்லை. நாண் மகிழிருக்கை என்று கூறப்பெறும் அமைப்பு குடிமக்கள் கூடிப் பேசும் அமைப்பு என்பது பாடல்கள் மூலம் விளங்கவில்லை. வட நாட்டில் நிலைபெற்றிருந்த கணசங்க அமைப்பு தமிழக வேளிர் அமைப்புடன் ஒப்பிடத்தக்கதாய் உள்ளது. கண சங்க அமைப்பிலும் பல வேறுபாடுகள் இருந்தன.[32]

வேளிர் நாடுகளில் இருந்த குடிகள் வேளிர் நாளவையில் கூடிப் பேசியது பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. வேளிர், 'குடி' மக்களின் மதிப்புமிக்க தலைவர்களாக விளங்கினார்கள். வேளிர், 'குடி' மக்களால் கடவுளின் பேராளர்களாகக் கருதப் பெற்றனர்; குடிகளின் கூட்டமைப்பிற்குத் தலைவர்களாக விளங்கினார்கள். கண சங்க அமைப்பின் இறுதிக் கட்டத்தை வேளிர் ஆட்சி சுட்டுகின்றது. அந்நிலையில் ராஜா வழி வழியாக வந்தவனாக ஏற்றுக்கொள்ளப்பட்டான்; தேர்ந்தெடுக்கும் மரபு கால வெள்ளத்தில் போய் மறைந்தது; இதனால் வேளிரும் வழிவழியாக வரும் மரபார்ந்த நிலை தோன்றிவிட்டது எனலாம்.

★★★



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்நாட்டின் அரசியல் - பண்பாட்டு இயக்கங்களுக்குத் தொடக்கத்தில், ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு சிந்தனைகள் பெரிதும் உற்சாகம் தருவனவாகவும் வழிகாட்டிகளாகவும் இருந்தன. ஆனால் ஆராய்ச்சியாளர்கள் இதுவரை, ஆங்கிலச் சிந்தனையின் ஆதிக்கங்களையே காட்டி வந்துள்ளனர். ந. முருகேச பாண்டியன், பிரெஞ்சு சிந்தனையின் தாக்கத்தை எவ்வாறு தமிழ் அரசியல், பண்பாட்டுத் தலைவர்கள் பிரக்ஞையோடு வரித்துக் கொண்டார்கள் - முன்னெடுத்துச் சென்றார்கள் என்பதை ஆராய்கிறார். முக்கியமாக, திராவிட இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் பிரெஞ்சு இலக்கியம் / வரலாறு முதலியவற்றை விரிவாகப் பேசினார்கள்; எழுதினார்கள்; பிரச்சாரம் செய்தார்கள். இந்த வகையான முயற்சிகளில் அரசியலும் இருக்கிறது. முன்முயற்சியாக அமைந்த இந்தக் கட்டுரையையொட்டி, இதே தளத்தில், விரிவாக ஆய்வு செய்ய நிறைய இடமிருக்கிறது.

ந. முருகேச பாண்டியன்

# மொழிபெயர்ப்புகள் வழியாக மாறிய தமிழினப் போக்குகள்: பிரெஞ்சு நூல்களை முன்வைத்து விவாதம்

மொழியின் வழியாகப் பாரிமாற்றமாகும் கருத்தியல், பெறுமொழி வாசகரின் வாழ்வியல் போக்குகளில் பெரும் ஆளுமை செலுத்துகின்றது. இனம், சமயம், நிறம், மொழி அடிப்படையில் பிளவுண்டுள்ள மக்களிடையே ஒருங்கிணைந்த சமூகத் தொடர்புகளை ஏற்படுத்துவதில் மொழி பெயர்ப்பு முக்கிய வினையாற்றுகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், சங்க காலம் முதலாகவே தமிழர்கள் உலகமெங்கும் வணிகம், அரசியல், பண்பாட்டுத் தொடர்புகள் கொண்டிருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. பாலி, பிராகிருதம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலிருந்து படைப்புகள் தமிழில் தழுவியெழுதப்பட்டன. தொடர்ந்து மொழிபெயர்க்கப்பட்ட பல்வேறு துறை நூற்களின் கருத்தியல் தாக்கம் காரணமாகத் தமிழரின் சிந்தனைப் போக்குகள் மாற்றமடைந்து வருகின்றன. நவீனத் தமிழ் இலக்கியப் படைப்புகள் தோன்றுவதற்கான களத்தினை மொழிபெயர்ப்புகள் வடிவமைத்துத் தந்துள்ளன.

மனித வாழ்க்கையில் அரசியல் என்பது ஆதாரமானது. அது எல்லா நிலைகளிலும் ஆழமாக ஊடுருவிப் பாய்ந்திடும் வலுவுடையது. இந்நிலையில் அரசியல், மொழிபெயர்ப்பிலும் பாதிப்பினை ஏற்படுத்துகிறது. தமிழில் எதை மொழிபெயர்க்க வேண்டும் அல்லது எதை மொழிபெயர்க்கக் கூடாது என்ற தேர்விலிருந்தே அரசியல் தொடங்குகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கில மொழியிலிருந்து தமிழாக்கப்பட்ட நூல்களின் வெளியீட்டில் காலத்துவச் செயற்பாட்டினை அவதானிக்கலாம். இந்தியாவைக் காலனியாக்கி அரசாண்ட ஆங்கிலேயரின் கருத்து மேலாண்மையின் வெளிப்பாடாகவும் மொழிபெயர்ப்பு நூற்களைக் கருத இடமுண்டு. இத்தகைய கருத்தியல் அடக்குமுறை நுண் தளத்தில் செயற்படுவதால், பரந்துபட்ட மக்களிடையே, மொழிபெயர்ப்பு நூற்கள் குறித்து விழிப்புணர்வு பெரிய அளவில் இல்லை.

## I

இருபதாம் நூற்றாண்டில் பல்வேறு மூட நம்பிக்கைகள், அடக்குமுறைகள், சாதிய உயர்வு தாழ்வுகள், தீண்டாமை, பொருளியல் சுரண்டல்... போன்ற சமூகக் கொடுமைகளினால் சீரழிந்து கொண்டிருந்த தமிழகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தப் பலர், அமைப்பு ரீதியிலும் தனிப்பட்ட முறையிலும் போராடிக் கொண்டிருந்தனர். திராவிட இயக்கம் வலுவடைந்தது. 1940-களில் பார்ப்பனிய எதிர்ப்பு, வருணாசிரம எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, சாதி ஒழிப்பு, விதவை மறுமணம், சமய மறுப்பு போன்ற சீர்திருத்தக் கருத்துகள் திராவிட இயக்கத்தினரால் முன்னிலைப்படுத்தப்பட்டன. பண்பாட்டு



படிப்பகம்

www.padippakam.com

ரீதியில் மாற்றங்களைக் கோருவதன் மூலம் ஏற்க னவே நிலவும் நிலமான்ய மதிப்பீடுகளைச் சிதைத் தனர். திராவிட இயக்கத்தினர் இதழ்கள், புத்த கங்கள், மேடைப் பேச்சுகள் மூலம் சமூக சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பினர். அப்பொழுது பெருமள வில் பிரெஞ்சு சிந்தனையாளர்களின் கருத்துகள், பிரெஞ்சு இலக்கியப் படைப்புகளைத் தமிழாக்கிப் பயன்படுத்தினர். திராவிட இயக்கத்தாரின் கருத்தியல் பிரச்சாரத்திற்குப் பிரெஞ்சு நூல்கள் மூலமாக விளங்கின. மாறிவரும் புதிய போக்குகளை வெளிப் படுத்த பிரெஞ்சு நூல்கள் பயன்பட்டன என்பது தமிழக வரலாற்றில் முக்கியமான பதிவாகும்.

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சி உலக வரலாற்றில் முக்கியமான திருப்புமுனை. அரச குடும்பத்தினர், சீமான்கள், புரோகிதர்கள் கூட்டாகச் சேர்ந்து அதிகமாக வரிகள் விதித்து, ஏழை எளியவர் களைக் கசக்கிப் பிழிந்தனர். பிரான்ஸ் நாடெங்கும் கொடிய ஒடுக்குமுறையும் ஏதேச்சதிகாரமும் மக்களை நசுங்கின. அடக்குமுறைகளுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த புரட்சியாளர்களுக்கும் பொதுமக்க ளுக்கும் ரூஸோ எழுதிய 'சமுதாய ஒப்பந்தம்' மறைநூலாக விளங்கியது. பிரெஞ்சு சிந்தனையாளர் களான வால்டேர், மாண்டெயின், மொந்தெஸ் கியோ, திதெரோ, ஒல்பாக், மப்லி, ரெய்னால், மெர்சியோ, நியெட்ஸே, ரூஸோ போன்றோரின் சிந்தனைகள் உலகமெங்கும் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. அடக்கியொடுக்கப்பட்ட மக்களுக்குக் கருத்தியல் ரீதியில் விடுவிப்பாகப் பிரெஞ்சு சிந்தனையாளர்களின் கருத்துகள் பயன் பட்டன. பிரெஞ்சு சிந்தனையாளர்களின் கருத்து களைத் தமிழில் மொழிபெயர்ப்பதன் மூலம், தாங்கள் ஏற்கனவே செய்து வரும் சமூக சீர்திருத்தப் போராட்டங்களை வலுவாக்கிடவியலும் என்று திராவிட இயக்கத்தினர் நம்பினர். கடந்த நூற் றாண்டில் தமிழக அரசியலில் மாற்றத்தினையும் பண்பாட்டு ரீதியில் மாற்றங்களையும் ஏற்படுத்திய திராவிட இயக்கத்தினரின் கருத்தியல் பிரச்சாரத் திற்குப் பயன்பட்ட பிரெஞ்சு நூல்களின் மொழி பெயர்ப்புகளில் சில இங்கு ஆய்விற்குட்படுத்தப் பட்டுள்ளன.

திராவிட இயக்கத்தினர், சங்க காலத் தமிழரின் பழம் பெருமையினையும், தமிழரின் வரலாற்றுச் சிறப்புகளையும் முன்னிறுத்தி, வருணாசிரமச் சுழ லுக்குள் சிக்கிக் கிடந்த தமிழரிடையே விழிப்பு ணர்வை ஏற்படுத்த முயன்றனர். இன்னொரு நிலை யில் பிரான்ஸ் நாட்டில் மக்களிடையே பெருமதிப்புப் பெற்ற புரட்சிகரமான தத்துவங்களையும், புரட்சி கரமான சிந்தனையாளர்களின் வாழ்க்கை வரலாற்று களையும் தமிழாக்கிப் பரப்பியதன் மூலம், சோம்பிக் கிடக்கும் தமிழரிடையே அதிர்வுகளை உண்டாக்கி விட முயன்றனர். பிரான்ஸ் நாடு சுதந்திரம், சமத் துவம், சகோதரத்துவம் ஆகிய மும் முழக்கங்களை உலகுக்கு அறிவித்தது என்ற பிம்பம், தமிழகத்தில் தொடர்ந்து செல்வாக்குடன் விளங்கியது. 1945-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பாரதிதாசன் படத்தினைத் திறந்து வைத்து சி.என். அண்ணாதுரை ஆற்றிய உரையில், "... புதுவை பிரான்சு நாட்டைச் சேர்ந்தது. பிரான்சு சுதந்திரத்தின் பிறப்பிடம். நாம் எல்லாம் ராஜாதிராஜர்களைப் போற்றிய காலத்திலே அங்கு அரசர்களைச் சிறை யிலடைத்த காலம், ஆண்டான், அடிமை என்ற வார்த்தைகள் இங்கு உலாவிய நேரத்திலெல்லாம் அங்கு சுதந்திரம், விடுதலை என்ற கோஷங்கள் விண்ணைக் கிழித்த நேரம்..."[1] என்று குறிப்பிட் டுள்ளார். பிரான்ஸின் தென்றல் புதுவையில் வீசு வதால் பாரதிதாசன் பாடல்கள் புரட்சிகரமாக உள்ளன என்றும் பாரதிதாசன் புரட்சிகவி என்று அழைக்கப்படுவதற்கு முக்கியக் காரணம் அவர் வாழும் புதுவையே என்றும் உரையாற்றியுள்ளார். திராவிட இயக்கத்தின் முன்னணித் தலைவரான சி.என். அண்ணாதுரை, இதழ்களில் எழுதிய சில கட்டுரைகளும் பிரான்ஸ் நாட்டை விடுதலைக்கான மையப் புள்ளியாகத் தமிழர்களுக்கு அறிமுகப் படுத்தியுள்ளன. தி.மு.க.வின் மைய முழக்கமான 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்பது பிரெஞ்சு அரசியல் தாக்கம் காரணமாக சி.என். அண்ணா துரையினால் தமிழில் வடிவமைக்கப்பட்டதாகும்.

திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவ ரான சி.பி. சிற்றரசு 'எமிலிஜோலா' வாழ்க்கை வரலாற்று நூலினை ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்து இரு பாகங்களாக 1952-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். நூலின் முன்பின் அட்டை களில் எமிலிஜோலாவின் வண்ணப்படம் உள்ளது. நூலின் முதல் பாகத்தில் 'தெரிந்து கொள்க' என்ற



படிப்பகம்

www.padippakam.com

தலைப்பில் ''உலக மக்களுக்குப் புரட்சிக் கருத்துகளை அளித்துள்ள பிரான்சு நாட்டின் பெருமைக்கு அந்நாட்டின் பேனா வீரர்களும் - வாள் வீரர்களுமே காரணமாவார்கள் என்றால் மிகையாகாது''[2] என்ற குறிப்பு உள்ளது. மேலும் ''... நீதிக் கோட்பாட்டிலிருந்து விலகி அநீதி என்னும் படுகுழியில் விழ இருந்த தனது தாய்நாட்டைத் தட்டியெழுப்பிச் சரியான பாதையில் செல்லுமளவு செய்த எமிலி ஜோலா...''[3] என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறார். பிரெஞ்சு இலக்கியப் படைப்பாளியான எமிலி ஜோலாவைச் சமூகப் போராளியாகத் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் நுண் அரசியல் பொதிந்துள்ளது. பேனா வீரருடன் வாள் வீரரையும் ஒப்பிட்டுச் சித்திரிப்பது, அரசியல் ரீதியில் தமிழரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகும். எனினும், அன்றைய காலகட்டத்தில் ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் மூலம் புரட்சியை ஏற்படுத்த முயன்று கொண்டிருந்த பொதுவுடைமை இயக்கத்தினரின் செயற்பாடுகளுக்கு மறுதலையாகப் 'பேனா'வை முன்னிறுத்திய திராவிட இயக்க அரசியலுக்கு 'எமிலிஜோலா'வின் வாழ்க்கை வரலாறு பயன்பட்டுள்ளது.

எமிலிஜோலா, அரசின் அடக்குமுறைக்கு எதிராகப் போராடித் தண்டனை பெற்றவர்; ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக அதிகாரத்தினை எதிர்த்துக் குரல் கொடுத்தவர்; சமூகப் போராளி. 'திராவிட நாடு' பற்றிய கனவில், பேனாவின் துணையுடன் ஆட்சியமைக்கப் போவதாக நம்பிக் கொண்டிருந்த சி.என். அண்ணாதுரை 1959-இல் 'ஏழை பங்காளன்' என்ற தலைப்பில் எமிலிஜோலா பற்றி உணர்ச்சிமயமாக எழுதியுள்ளார். ''ஜோலா, ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்ட மக்களுக்காக எழுதினார். எழுதினார் என்றால் போராடினார் என்றே பொருள். அவருடைய எழுத்து வீரன் கைவாளை விட வலிமையானது. உள்ளத்தை உலுக்கக் கூடியது. உலகே எதிர்த்தாலும் போரிடும் எழுத்துகள்.. மமதைக் கோட்டையைத் தூளாக்கும் வெடிகுண்டுகள்... மந்திரிசபைகளை அவருடைய பேனா முனை மாற்றியமைத்தது...''[4] திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான சி.என். அண்ணாதுரை, அன்று ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அரசினைப் பேனாவின் மூலம் அகற்ற முடியும் என்ற கருத்தினைத் தொண்டர்களிடம் பரப்பிட 'எமிலிஜோலா'வினைப் பயன்படுத்தியதை அறிய முடிகிறது. ஒரு நிலையில் வாளின் முனையை விடப் பேனாமுனை உயர்வானது என்ற கருத்து வலுப்பெறுவதற்குப் பிரெஞ்சு சிந்தனையாளர்களின் வாழ்க்கை வரலாறுகள் பெரிதும் உதவியுள்ளன.

பிரெஞ்சு சிந்தனையாளர்கள் பெரிய அளவில் தமிழில் தாக்கம் ஏற்படுத்தியுள்ளனர். 1946-ஆம் ஆண்டில் 'புரட்சி செய்த பேனா வீரர்' என்ற பெயரில் ப. கோதண்டராமன் வெளியிட்டுள்ள நூல் முக்கியமானதாகும். அதில் 'பிரெஞ்சுப் புரட்சி' என்ற தலைப்பில் வோல்தெர், மொந்தெஸ்கியோ, திதெரோ, ஒல்பாக், மப்லி, ரெய்னால், மெர்சியே, ரூஸோ ஆகியோரின் புரட்சிகரமான செயற்பாடுகளும் சிந்தனைகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. நூலின் முன்னுரையில், ''எழுத்து வாளினும் வலிமையுடையது. எங்ஙனம்? வாள் குறித்த பொருள் ஒன்றன் மீது செலுத்தப்பட்ட பிறகே தன் அழிவு வேலையைச் செய்யும்; அது முடிந்ததும் தன் ஆற்றலை இழக்கும். ஆனால், நம் உள்ளத்தில் உதிக்கும் கருத்துகளின் புற வடிவேயாகிய எழுத்து, அழிக்கவும்; ஆக்கவும் செய்யும்... அதன் ஆற்றலுக்கு அழிவேயில்லை...''[5] என்று குறிப்பு உள்ளது. கருத்துப் புரட்சிக்குப் பிரான்ஸ் நாட்டு அறிஞர்களை முன்மாதிரியாகக் கொள்ளும் போக்கினை அறிய முடிகின்றது.

'அஞ்சா நெஞ்சன் வால்டேர்' என்ற நூலினை மா. இளஞ்செழியன் 1958-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இந்நூலின் பதிப்புரையில், ''அஞ்சா நெஞ்சன் வால்டேர்... தன் எழுத்துத் திறமையால் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நிலைத்திருந்த மூடநம்பிக்கைகளைத் தூள் தூளாக்கிய தீரர்... வேந்தனின் போர், வாள், மதகுருவின் ஜபமாலை, பாமரரின் அறியாமை - மூன்றுக்கும் அஞ்சாமல் தன் உள்ளத்தில் பட்டதைப் பட்டாங்கு உரைத்த எழுத்தின் செல்வர்''[6] என்று வால்டேரைத் தமிழருக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். மேலும் அவரது வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் போது அக்கிரமத்தினை எதிர்க்கப் ''பலம் பொருந்திய பேனா என் கைவசமிருக்கு'' என்ற மேற்கோளினையும் தந்துள்ளார். வால்டேர் இறக்கும் தருவாயிலும் மதகுருவின் சடங்குகளை ஏற்கவில்லை என்ற சம்பவத்தினை விளக்குவதன் மூலம், தமிழர்களும்



படிப்பகம்

www.padippakam.com

மூடநம்பிக்கைக்கு எதிராகச் சமரசமற்றுப் போராட வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நூற்கள், ஐம்பதுகளில் அதிகமாக வெளியாயின. தமிழரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திடப் பிரெஞ்சு நூல்களின் மொழிபெயர்ப்புகள் பயன்பட்டுள்ளன.

இவை தவிர பிரேமா பிரசுரம் சிந்தனையாளர் வரிசையில் வெளியிட்டுள்ள நூல்கள், பிரெஞ்சு சிந்தனையாளரின் வாழ்க்கை வரலாறு, சிந்தனைகள் என இரு பெரும் பிரிவுகளுடன் எளிய தமிழில் தரமுடன் உள்ளன. ரூஸோ (1954), வால்டேர் (1960), மாண்டெயின் (1962), மாக்கியவல்லி (1964), நியெட்ஸெ (1965) ஆகிய நூல்கள் இன்று வரை பல பதிப்புகள் தமிழில் வெளியாகியுள்ளன.

திராவிட இயக்க இதழ்களான திராவிட நாடு, மன்றம், காஞ்சி, தென்றல் எண்ணம் போன்ற பல்வேறு இதழ்களில் பிரெஞ்சு சிந்தனையாளர்கள் பற்றிய கட்டுரைகளும், பிரெஞ்சு இலக்கியப் படைப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன.

1940-ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திடத், தமிழாக்கப்பட்ட பிரெஞ்சு நூல்கள் அடிப்படையாக விளங்கின. இன்னொரு நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர், ஆட்சியைக் கைப்பற்றிட, கருத்தியல் பிரச்சாரத்திற்கு ஆதரவாகப் பிரெஞ்சு சிந்தனைகளின் தமிழ் வடிவங்களைப் பயன்படுத்தியதையும் அறிய முடிகிறது.

## II

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இலக்கியப் படைப்புகள், பிற நாட்டு மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. எனினும் ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷியன் ஆகிய மொழிகளில் வெளியான இலக்கியப் படைப்புகள் தமிழ் மொழிபெயர்ப்பில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒப்பீட்டு நிலையில் பண்பாட்டு ரீதியில் பிரெஞ்சு, ரஷிய இலக்கியப் படைப்புகள் தமிழர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. அதாவது தமிழ் மனோபாவத்திற்கு நெருங்கிய நிலையில் ரஷிய, பிரெஞ்சு இலக்கியப் படைப்புகள் உள்ளன. அவை சித்திரிக்கும் உலகு, வாசகரிடையே அழுத்தமான கேள்விகளை எழுப்புவதாக உள்ளது.

பிரெஞ்சிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட படைப்புகளின் எண்ணிக்கை சுமார் 110 ஆகும். பெரும்பாலான பிரெஞ்சு இலக்கியப் படைப்புகள் ஆங்கிலம் வழியாகவே தமிழாக்கப்பட்டுள்ளன. வெ. ஸ்ரீராம், மதன கல்யாணி மொழிபெயர்ப்பில் வெளியான நூல்கள் மட்டும் பிரெஞ்சினை மூலமாகக் கொண்டுள்ளன. அலெக்ஸாண்டர் டூமாஸ் எழுதிய 'மாண்டி கிறிஸ்டோ' நாவல் 'அமர சிம்ஹன்' என்ற பெயரில் என்.சி. கோபால கிருஷ்ணபிள்ளை மொழிபெயர்ப்பில் 1914-ஆம் ஆண்டில் வெளியாகியுள்ளது. இதுவே பிரெஞ்சிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட முதல் இலக்கியப் படைப்பாகும். எமிலிஜோலா, அலெக்ஸாண்டர் துய்மா, மாப்பஸான், பால்சாக், மோலியர், விக்தர் ஹியூகோ முதலியோரின் படைப்புகள் அதிக அளவில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சில படைப்பாளிகளின் குறிப்பிடத்தக்க படைப்புகளை வெவ்வேறு கால கட்டங்களில் பல்வேறு மொழிபெயர்ப்பாளிகள் மொழிபெயர்த்துள்ளனர்.

சமுதாயப் பண்பாட்டுச் சூழலுடன் வாழ்கின்ற மனிதனுடைய வெளிப்பாட்டு வடிவங்களில் இலக்கியம் நுட்பமானது. மனித இருப்பின் சாரத்தினைக் கலையழகுடன் பதிவு செய்ய முயலுகின்ற படைப்பு, ஒரு வகையில் சமூக ஆன்மாவாக விளங்குகிறது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற பின்புலத்தில் எழுதப்பட்ட பிரெஞ்சு இலக்கியம், கல்வியறிவு பெற்றுக் கொண்டிருக்கும் தமிழ்ச் சூழலில் மெல்ல அதிர்வுகளை உருவாக்கியது; பரந்துபட்ட வாழ்க்கையின் பன்முகத் தன்மைகள் குறித்து அழுத்தமான விசாரணையைக் கோருகின்றது.

அலெக்சாண்டர் துய்மாவின் படைப்புகள் வெகுஜனத் தன்மையுடையன. அவை தனி மனிதச் சாகசங்களையும், கேளிக்கைகளையும் புனைவியல் ரீதியில் முதன்மைப்படுத்துகின்றன. மேலும் வாசகனைக் கிளர்ந்து போகச் செய்வதுடன், கனவுலகில் ஆழ்த்திப் போலியான மதிப்பீடுகளை உருவாக்குகின்றன. துய்மாவின் பாதிப்பைக் கல்கி,



படிப்பகம்

www.padippakam.com

தேவன், சாண்டில்யன் போன்றோரின் படைப்புகளில் காணலாம்.

எமிலி ஜோலா, பால்சாக், மாப்பசான் ஆகியோர்தம் படைப்புகளில் சமூகச் சீரழிவுகள், பகட்டு, ஆரவாரம், அதிகாரச் செருக்கு, பலவீனம், விபச்சாரம், மேட்டுக்குடியினரின் போலி வாழ்க்கை சுரண்டல் போன்றவற்றை அம்பலப்படுத்தினர். குடும்ப நிறுவனச் சிதைவில் சீரழியும் மதிப்பீடுகள் பற்றிய சித்தரிப்புகள் பண்பாட்டு நிலையில் தமிழுக்கு நெருக்கமானவை. யதார்த்த கதை சொல்லல் முறையில் வெளிப்பட்ட வாழ்வின் நெருக்கடிகள், தமிழ்ப் படைப்பாளர்களுக்கு உந்து சக்தியாக விளங்கின. புதுமைப்பித்தன், கு. அழகிரிசாமி, சுந்தர ராமசாமி, வண்ணநிலவன், பூமணி, பிரபஞ்சன் போன்றே படைப்பாளர்களின் ஆக்கங்களில் பிரெஞ்சு இலக்கியத் தாக்கம் நுண்ணிய அளவில் உள்ளது. ''பிறமொழி ஆக்கங்கள் வரும் போதெல்லாம், தமிழ்ப் படைப்பிலக்கியம் தரமாக இருந்தது என்பது என் கணிப்பு. டால்ஸ்டாயும் டாஸ்டாவ்ஸ்கியும் அந்தோன் செகாவும் மாப்பசானும் ஸெல்மா லகர்லட்பும் ஆந்திரே ஜீடும் விக்தர் ஹீயூகோவும் காரந்தும் அதீன் பந்தோபாத்யாவும் பஷீரும் தகழியும் அறிமுகம் செய்யப்பட்ட (1950-1965) காலகட்டத்தில் தமிழ்ப் படைப்புலகம் ஆரோக்கியமாக இருந்தது என்பது தற்செயல் என்று எனக்குத் தோன்றவில்லை''[7] என்ற பிரபஞ்சனின் கூற்று ஆழ்ந்த பரிசீலனைக்குரியது. நவீனத் தமிழிலக்கியம் வளர்ச்சியடைய, மொழிபெயர்ப்புப் படைப்புகள் அவசியம் என்று அறிய முடிகின்றது.

ஆல்பெர்ட் காம்யூவின் 'ல ட்ரன்ஞர்' என்ற பிரெஞ்சு நாவல், 'அந்நியன்' என்ற பெயரில் வெ. ஸ்ரீராமின் தமிழ் மொழிபெயர்ப்பில் 1980-ஆம் ஆண்டு வெளியானது. அந்நியன் நாவலின் மொழிநடையும் கதை சொல்லும் முறையும் தமிழுக்குப் புதிய போக்குகளை அறிமுகப்படுத்தியது; தமிழில் இதுவரை சொல்லப்பட்டு வந்த கதை சொல்லலில் மாற்றமேற்பட்டது. குறிப்பாகச் சிறு பத்திரிக்கைச் சூழலில் அந்நாவல் குறித்த விவாதங்கள் அதிர்வுகளை ஏற்படுத்தின. வாழ்வின் மீது அக்கறையின்மை, வெறுமை, நம்பிக்கை வறட்சி, சலிப்பு, சோர்வு, எரிச்சல் குறித்த சொல்லாடல்களைத் தோற்றுவிப்பதில் நாவலின் பங்கு முக்கியமானது.

சிறு பத்திரிக்கைச் சூழலில் பிரெஞ்சு இலக்கியப் படைப்புகள் எழுபதுகள் தொடங்கி தொடர்ந்து தமிழாக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

இன்று வரை சிறு பத்திரிக்கைகளில் பிரெஞ்சு இலக்கியப் படைப்புகள் நேரடியாகவோ ஆங்கிலம் வழியாகவோ தமிழில் வெளியிடப்பட்டு வருகின்றன.

மூல் ரோமென், ஆல்பெர்ட் சாம்யூ, அன்துவான் தெசெந்த்-எக்ஸ்பெரி, ரசினின் பிரிட்டானிக்குயிஸ், சார்த்தர், ஜுல்ஸ் வெர்ன் போன்றோரின் படைப்புகள் அண்மையில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தமிழில் பிரெஞ்சு இலக்கியத் தாக்கம் பற்றிய ஆய்வு, விரிவாகவும் ஆழமாகவும் செய்யப்பட வேண்டியுள்ளது.

**சான்றாதாரம்**


1. அண்ணாதுரை, சி.என்., ஏ, தாழ்ந்த தமிழகமே, (சென்னை: முத்தமிழ் நிலையம், 1971) பக். 32-33
2. சிற்றரசு, சி.பி., எமிலி ஜோலா (திருச்சி: தமிழ் மாற்றம், 1952) பக். 3-4.
3. மேலது பக். 5
4. அண்ணாதுரை, சி.என்., ஏழை பங்காளன்: அன்பு வாழ்க்கை (சென்னை: கே.ஆர். நாராயணன், 1959) ப. 82.
5. கோதண்டராமன், ப., புரட்சி செய்த பேனா வீரர் (சென்னை: தி மெட்ராஸ் பிரிமியர் அன் கோ, 1946) முன்னுரை: ப. v.
6. இளஞ்செழியன், மா., அஞ்சா நெஞ்சன் வால்டேர் (சென்னை: மக்கள் மன்றம், 1958) பதிப்புரை, ப. 5.
7. பிரபஞ்சன், என்னுடைய வாழ்வில் புத்தகங்கள், நேஷனல் புக் டிரஸ்ட் செய்தி மடல், எண்: 5-1, ஏப்ரல்-ஜூன் 1996, பக். 3.




படிப்பகம்

www.padippakam.com

தமிழகத்தில் பார்ப்பனர் என்ற சென்ற இதழ்க் கட்டுரையின் தொடர்ச்சியாக, இந்தக் கட்டுரை, நான்குவருணப் பகுப்பு, தமிழகத்தில் எவ்வாறு ஒரு கருத்து நிலையாக வைக்கப்பட்டது என்றும், பார்ப்பனர் நிலையிலுள்ள சில வளர்ச்சிப் போக்குகள் குறித்து ஆராய்கிறது. தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்டுவிட்ட மேலோர்-கீழோர் என்ற பகுப்புக்கு அந்தணர் பற்றிய ஆராய்ச்சி அடிப்படையானது. வைதீக சமயமும், அந்தணர் நிலையும், தமிழக சமூகத்தில் இரண்டறக் கலந்த ஒரு வடிவமாக உள்ளன என்ற எடுகோளை மையமிட்ட இந்த ஆய்வு, தமிழக வரலாற்றின் ஒரு முக்கியமான பகுதியை அகழ்ந்து எடுத்துக் காட்டுகிறது.

தி.சு. நடராசன்

# பழந்தமிழகத்தில் நான்கு வருணப் பகுப்பும் பார்ப்பனரும்

பொருளாதார உற்பத்தி முறைகளிலும், பொருளாதார நலன்களை ஆதாயங்களாகப் பெற்றுத் துய்க்கின்ற முறைகளிலும் சமச்சீரற்ற ஒரு நிலையைப் பெற்றிருந்த சங்ககாலச் சமுதாயத்தில், மேலும், உழைப்புக்கும் சிந்தனைக்கும் / கைக்கும் மூளைக்கும் இடையே தூரங்களை உருவாக்கிக் கொண்டிருந்த அந்தச் சமுதாயத்தில், அறிவார்த்தமாகப் பகுத்துக் காணக்கூடிய முறையிலும், பின் வருங்காலத்தில் சாதிகளாகவும் வகுப்புக்களாகவும் அறியக்கூடிய வகையிலும், தனித்தகுதிகளையும் தனியடையாளங்களையும் கொண்டனவாக இயங்கவும் பிரத்தியேகமான நிலைப்பாடுகளைப் பெறவும் கூடியனவாகக் குடிகள் அல்லது குழுக்களின் பகுப்புக்கள் அமையவும் வளரவும் தொடங்கின.

தொழில் முறைகளுக்கும் வேலைப் பங்கீடுகளுக்கும் நிலப்பாகுபாடுகளுக்கும் இடையே அரும்பிய அன்றைய நடைமுறையாகக் காணப்பட்ட பிரிவுகள் ஒருநிலை. இரண்டு - ஒரு சிந்தனை வடிவம் என்ற நிலையில், கற்பிதமாக ஆக்கப்பட்ட (Fictional) இன்னொரு பகுப்பு முறை ஒரு நிலை.

முதலாவதாக - நடப்பாக அன்றிருந்த வாழ்முறையில் இருந்து அறியப்படும் பகுப்பு : இதிலும் ஒரு மூன்று போக்குகளை நம்மால் காணமுடிகிறது.

i) முல்லை, குறிஞ்சி முதலிய வாழிடங்களாகிய நிலப்பகுப்பும், முந்தியே இருந்து வந்த இனக்குழு முறையும், மற்றும் வளர்ந்து வந்த தொழில் முறையும் சேர்ந்து அறியக்கூடும் பெயர்கள்: ஆயர், வேட்டுவர், குறவர், எயினர், பரதவர் மற்றும் ஊரன், மகிழ்நன்.

ii) தொடர்ந்து வந்த தொழில் பிரிவினைகள் மூலம் அறியக்கூடும் பெயர்கள்: வேளாளர், வணிகர், சாத்தன், கொல்லர், தச்சர், உமணர், மறவர், இடையர், வலைஞர், மள்ளர், மருத்துவர், பறையர், துடியர், கடம்பர், பாணர், புலையர், கூத்தர், பொருநர், கொற்றன், கள்ளன், கீரன், வள்ளுவர், ஓவியர், கணக்காயர், வண்ணக்கர், இயவர்.

iii) உடைமையும் அதிகாரமும் கொண்ட நிலையில் அறியக்கூடும் சில குழுக்களின் பெயர்கள்: கிழார், வேளிர், கிள்ளி, குட்டுவர், குடவர், சேரல், செழியன், செம்பியன், ஆதன், மழவர், பழையர், வளவன் என்று அறியப்பட்டன.

மேற்கூறிய இந்த மூன்று நிலைகளும், சங்க காலச் சமுதாயத்தில் முக்கியமாகத் தொழில் அடிப்படையில் குடிகளாகச் சமுதாயப் பிரிவுகளாகக் காணப்பட்டன. இந்தப் பகுப்புக்கள் ஒவ்வொன்றும் தனித்தனியானவை. இவற்றுள் ஒன்றும் மற்றொன்றும் சேர்ந்து அல்லது சிலவும் சிலவும் சேர்ந்து தொகுதிகளாகப், பெரும்பகுப்புகளாகப் படிநிலைகள் (hieratchy) காட்டும் வகுப்புக்களாக அமையவில்லை. இது குறிப்பிடத்தக்கது. மேலும் இவற்றுள் பல, பண்புப் பெயர்களேயன்றிப் பிறப்பினடிப் படையிலமைந்த சாதிப் பெயர்களல்ல. இந்தப் பெயர்கள் - இந்தப் பகுப்புகள் - தொல்காப்பியத்திலும் மற்றும் சங்க இலக்கியப் பாடல்களில் பல்வேறு வாழ்நிலைகளிலும் பார்க்கக்கூடியவை.

இனி, இரண்டு - கற்பிதமானதும் ஆக்கப்பட்டதுமான பகுப்புமுறை. வைதிகசமயம் மற்றும் பிராமணீய சார்பு அரசியல் என்பவற்றை ஒட்டி மனு என்னும் வடமொழியாளரால் வடிவமைக்கப்பட்டது. நான்கு வருணம் (பஞ்சமர் எனும் ஐந்தாவது பிரிவும் உண்டு. ஆனால் மையச் சுற்று வளைவாகிய நான்கிற்குள் இது அடங்காது; வைதிகம் எனும் அமைப்புக்கு வெளியே - புறமாக-இருப்பது, இது). அகம், புறம் எனும் மரபுக்குள்ளிருந்து வாழ்நிலைகளைச் சித்திரிக்கும் சங்க



படிப்பகம்

www.padippakam.com

இலக்கியம் இந்த நான்கைப் பேசவில்லை. (ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனின் புறப்பாடல் ஒன்றில் ஒரு குறிப்பு உண்டு.) தொல்காப்பியம் வழியேதான் நான்கு வருணம் சொல்லப்படுகிறது. மேலோர், கீழோர் என்ற வழக்காறுகளோடு இது தரப்படுகிறது. ஆனால் மனுவை அப்படியே பின்பற்றிச் செல்லவில்லை, தொல்காப்பியர். வருணம் என்ற சொல்லை அவர் பயன்படுத்தவில்லை என்பதுபோல், அந்நியப் பொருளைத் தன்வயப்படுத்துகிற நிலையே - முயற்சியே - தலைதூக்கி நிற்கிறது. வடசொற்களைத் தமிழில் கொண்டு வருவதற்குரிய இலக்கண மரபுகளைப் பேசுபவரல்லவா அவர்! மேலும், தமிழ் மரபில் வந்த அளவு ஒழுக்கத்தை, வடமொழி மரபில் உள்ள காந்தருவம் முதற் கொண்ட எண்வகைத் திருமணம் என்ற கருத்து நிலையோடு (ஒற்றுமை, மிகமிகக் குறைவு என்றாலும் கூட). பொருத்திக் காட்ட முயன்றவராயிற்றே, அவர்! போகட்டும். தமிழ், ஆரியம் ஆகிய இரு பெருந்தேசிய இனங்களிடையே ஓர் ஒத்திசைவை ஏற்படுத்திடும் ஒரு முயற்சியாக இது இருக்கலாம். இருக்கட்டும்.

நான்கு வருணம் என்ற கருத்து நிலையைத் தமிழில் கொண்டுவர முயலுகிறபோது, தொல்காப்பியர் தருகிற பகுப்பு, இது: அந்தணர், அரசர், வைசிகர், வேளாளர். இதற்கு மூலவராகிய மனு தருகிற பகுப்பு இது: அந்தணர் (பிராமணர்), சத்திரியர், வைசியர், சூத்திரர். இதனைத் தமிழில் பதியம் போடுகிற போதுதான், குழப்பமும், முரண்பாடும், பொருந்தாமையும்... எல்லாமும். அப்படி என்ன, ஏன்?

தொல்காப்பியம் மட்டுமே தரும் இந்த நான்கு வகுப்பு (வருணம்) எனும் கருத்தாக்கம் அல்லது சொல்லாடல், (சங்க) இலக்கியத்தில் இல்லாதது.

*ஆனால், ஒரு இடத்தில் இந்த நான்கு வருணம் என்ற 'கருத்து நிலை' வருகிறது. நான்கு குடி என்ற சொல்லாக்கத்தோடு. ஆனால் என்ன நோக்கத்தில்? மனுவின் வழியிலா? தொல்காப்பியர் வழியிலா? இல்லை. மாங்குடி (மாறுகுடி) கிழாரின் புறப்பாடல் (335), வித்தியாசமான ஒரு 'கலகப் பாடல்'. பின்னை நவீனத்துவம் சொல்லுகிற மாதிரி, பெருங் கதையாடல், புனிதம், அங்கீகரிக்கப்பட்ட மரபு என்பவற்றிற்கெதிராகக் கலகம் செய்கிறது. முக்கியமாகப் பெருந்தெய்வ வைதிக - வழிபாட்டுக்கெதிராக எதிர்வினை செய்கிறது. நாட்டுப்புற மரபுவழியிலான வழிபாட்டை முன்னிறுத்துகிறது. பகைவர் செருக்கழித்து, ஊருக்காக வீழ்ந்த வீரனே தெய்வம்; நடுகல்லே வழிபாடு என்று சொல்லும் அப்பாடல்,*

*ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி*
*ஒளிறேந்து மருப்பில் களிறெறிந்து வீழ்ந்தெனக்*
*கல்லே பரவின்அல்லது*
*நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே.*

*என்று பிரகடனம் செய்கிறது. இந்த நிலைப்பாடு கொண்டு, நான்கு வருணம் என்று வருணிக்கப்படும் 'உயர்ந்தோர் வழக்கையும் எண்ணி, ஏளனம் (Parody) செய்து, இவர்கள் ஆதிக்க குடிகளாகிய அந்தணரையும் அரசரையும் வேளாளரையும் தானே 'நான்குக்குள் சொல்லி மாளுகிறார்கள். எனவே, நான்கு வருணம் அல்லது குடி அந்தணர் வகையரா அல்லது வேளாளர் வகையரா அல்ல. அவை ஆதிக்க குடிகள். எனவே, இவர்களால் இழிசினர் (பஞ்சமர்) என்று புறக்கணிக்கப்படுவோரே தொன்மையான - உயர்ந்த - குடிகள் என்று சொன்னால் என்ன தவறாம்? கலகம் மட்டுமல்ல; ஒரு 'மாற்றுச் சொல்லாடல்' (Alternate-discourse) இது. மேலே காட்டிய நாலு வரிகளுக்கு முன்னால் அந்த இரண்டு வரிகள்:*

*'துடியன் பாணன் பறையன் கடம்பனென்று*
*இந்நான் கல்லது குடியுமில்லை'*

தொல்காப்பியம் கூட நான்கு வருணம் பற்றிய நூற்பாக்களை 'இடைச்செருகல்' என்று கருத இடம் தருகிற விதத்தில் அகத்திணையியலில் சில நூற்பாக்களிலும், மரபியலில் 'அலாக்காகச்' சில நூற்பாக்களிலும் கூறியுள்ளது. பிறவற்றோடு இசைவுபடுத்தாமல், அது, எவ்வாறாயினும் இருக்கட்டும். இங்கே, அவ்விலக்கண நூல் இந்த நான்கு வகுப்புப் பற்றிப் பேசுவதில், நமக்குப் பரிசீலிக்கக்கூடியவற்றை மட்டும் மிகச் சுருக்கமாகத் தருவோம்:

i) பிராமணன் முதற் கொண்ட நான்கு வருணத்தவரும் பிறக்க, இடமாக இருந்தவன் பிரமன் என்று கதை கூறும் மனு, புனிதமும் தீட்டும் பற்றிப் பிரலாபிக்கிறார். தொல்காப்பியத்தில் இது சற்றும் இல்லை; குறிப்பாகவும் இல்லை.

ii) மனு முதலியோர் கூறும் பிராமணர், வைசியர் என்ற இரு சொல்களும் இருக்கின்றனவே யன்றி, சத்திரியன், சூத்திரன் என்ற இரண்டு சொற்களும் தொல்காப்பியத்தில் இல்லை. அந்த விளக்



படிப்பகம்

www.padippakam.com

கங்களும் இல்லை. சத்திரியன் இடத்தில் அரசன் என்பதும் சூத்திரர் இடத்தில் வேளாளர் என்பதும் தொல்காப்பியத்தின் வைப்புமுறை.

iii) 'வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை' இது தொல்காப்பியம். வாணிகம் மட்டுமே வைசிய னுக்கு ஒதுக்கப்படுகிறது. ஆனால், மனு, மூன்று முக்கிய பெருந்தொழில்களை வைசியனுக்கு ஒதுக்கு கிறார். வேளாண்மை செய்தல், ஆநிரை காத்தோம்பு தல், வாணிகம் செய்தல் ஆகியவை அவை. தொல் காப்பியர் - வேளாண்மையை, நாலாவது இடத்தில் வரும் வேளாளருக்கு ஒதுக்குகிறார். ஏற்கெனவே ஆநிரை காத்தல், முல்லை - நிலத்து ஆயர்க்கு ஒதுக்கிவிடப்பட்டுள்ளது. புதிதாகத் தோன்றி வளர்ந்துவந்த வாணிகம் மட்டும், வைசியர் என்ற (புதிய) பகுப்புக்கு இங்கே ஒதுக்கப்படுகிறது.

iv) சூத்திரனுக்கு நாலாவது இடம், மனுவில் சூத்திரன் என்ற சொல்லை விடுத்து அதே இடத் தில் வேளாளரை வைக்கிறது, தொல்காப்பியம். இதனால், மறைமலையடிகள் போன்ற வேளாளரிய அறிஞர்கள் சினந்து சீறுவது ஒரு பக்கம் இருக் கட்டும் - பகுப்பிலுள்ள கோளாறும் இங்கேதான் அதிகம். மனு போதிக்கிற படிக், குற்றேவல் செய் பவர்கள், அடித்தளத்திலுள்ளவர்கள் சூத்திரர்கள். மேற்படியிலிருக்கும் பிராமணர்க்கும் பிறருக்கும் அடிமைத் தொழில் செய்வதற்காகப் பிரம்மனால் படைக்கப்பட்டவர்கள். இவர்களுள், விவசாயக் கூலி வேலை செய்வோரும் அடங்குவர். கைக்கோ ளர் (செங்குந்தர்) முதல் கொல்லர், தச்சர், பாணர், கூத்தர், மறவர், கொற்றர் முதலிய பல வகையினரும் அடங்குவர். இவர்களுக்கும் 'கீழே', பஞ்சமர்; புலையர். இப்படி உழைக்கும் வர்க்கத்தவரை அப்படியே இருத்தி - அமுத்தி - வைக்கிற காரி யத்தை வைதீக தருமத்தின் பெயர் சொல்லிச் செய் கிறார், மனு. புனிதம், தீட்டு என்ற விழுமியங்கள் / சொல்லாடல்கள், சூத்திரர் - பஞ்சமர் என்ற பிரி வினைகளுள் உண்டு. வேளாளர்கள், சூத்திரர்களா?

v) பழந்தமிழில் கொல்லரும் மறவரும் உமணரும் பரதவரும் என்று பல குடிகள் இருக்க, மனுவின் சட்டம் கொண்டு இவர்களையெல்லாம் ஒரே சூத்திரப் பெட்டிக்குள் போடவில்லையே, தொல்காப்பியம்!

vi) 'வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.' என்று அறுதியிட்டுக் கூறுகிறது. தொல்காப்பியம். மேலும், சங்க இலக்கியம் காட்டும் நடைமுறையில் வேளாளர், ஆதிக்க குடிகளாகவே விளங்குகின் றனர். மேலும், அரசர்க்குரிய சில அதிகாரங்களும் இலச்சினைகளும் (படை, கண்ணி) வணிகர்க்கும் வேளாளர்க்கும் உண்டு என்று தொல்காப்பியமே கூறுகிறது. சூத்திரர்க்கு மனு தருமப்படி, அந்த உரிமைகள் எதுவும் இல்லை. ஆதிக்க இனத்தவர், அடித்தள மக்கட் பிரிவில் அடங்கமாட்டார். அப்பு றம் ஏன், அந்த நாலாவது இடம், வேளாளர்க்கு? ஒருவேளை, உழுதுண்ணும் (உழவன்) வேளா ளர்க்கு அந்த நாலாவது இடம்; உழுவித்துண்ணும் (அதாவது நிலத்தில் உழைக்காமல் - ஆனால், நிலங்களை உரிமையாக்கிக் கொண்டு பிறரை வைத்துப் பயிர் செய்யும்) வேளாளர்க்கு அந்த இடம் இல்லையோ? அப்படியானால் உழுவித் துண்ணும் இவர்களுக்கு உரிய இடம் என்ன? பகுப்பில் ஒரு இடைவெளி அல்லது குழப்பம் இருக்கிறது.

vii) மனு கூறுவது சத்திரியர் என்ற பிரிவு. அந்த இடத்தில் தொல்காப்பியர் கூறுவது அரசர் என்ற பிரிவு. உடல் வலிமையும் சண்டைகள் செய்யும் திறனும் கொண்டு பிராமணர்களைக் காப் பதும், வைசிகர், சூத்திரர் ஆகிய வகுப்பினரை அடக்கியாள்வதும் சத்திரியரின் கடமை என்கிறது மனு. ஆனால் சத்திரியர்கள் எல்லோரும் அரச குடியினர் அல்லர். அரசர் என்பது ஒரு பதவி; ஆட்சியதிகாரத்தின் பெயர். உடல் வலிமையை ஒரு தொழிலாகக் கொண்டு பிறர்க்குத் துணையாகவும், அரசர்க்கும் சிற்றரசர்க்கும் அழைக்கிறபோது போய் அவர்களுக்காக உழன்று போர் செய்கிற தொழில் காரர்களாகவும் இருக்கிறவர்கள். பிராமணர், அரசர், வேளாளர் போன்ற ஆதிக்க குடிகளாக 'நிகழ்ச்சி அவர் கட்டாகலான' என்பது போன்ற நிலைகளில் சத்திரியர் இருக்க முடியாது. எனவே தொல்காப்பியம், திட்டவட்டமாக, சத்திரியர் என்ற சொல்லை / வகுப்பைப் புறந்தள்ளிவிட்டு 'அரசர்' என்ற சொல்லை ஆதிக்க குடிகள் வரிசையில் வைக்கிறார்.

viii) ஏற்கனவே நிலப்பகுப்பு அடிப்படையில் சில குடிப்பெயர்களைச் சொல்லியிருப்பவும், வேறு இடங்களிலும் வேறு சில குடிப்பெயர்களைச் சொல்லியிருப்பவும், மேலும், சங்க இலக்கியப் பாடல்கள் வழியாகப் பல குடிகள் / குழுக்கள் சொல்லியிருக்கவும் - ஆனால், தமிழில் அன்று நடைமுறையில் வழங்கிய பல குடிகளையும் அத்தகைய பகுப்புக்களில் உள்ளடக்கிச் சொல்ல



படிப்பகம்

www.padippakam.com

முயலாமல் - அவ்வாறு தனியே, நான்கு எனும் பகுப்பு செய்யவேண்டுவதன் அவசியம் என்ன என்ற பொதுவான ஒரு கேள்வியும் எழாமலில்லை.

மேலே தொட்டுக் காட்டிய கருத்துக்கள் / கேள்விகள், பின்னால் தமிழகத்தில் சாதிய அமைப்பு முறையின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக் கும் பூர்வாங்கமாகச் சில பரிசீலனைகளைத் தரு கின்றன; எனினும் இங்கே எடுபொருளாகக் கவ னத்திற்குரியது - வைதீக நெறியின் ஒட்டுணியாக வந்த நான்கு வருணப் பகுப்பு, தமிழில் திணிக்கப் பட்டதன் தன்மையையும் தடயத்தையும் காட்டு வனவாக இவை உள்ளன என்பதுதான். மேலும் - ஏற்கனவே பல குடிகள், தொழில் முறை இனப் பெயர்கள் இருக்க, இன்னொரு வருணப்பகுப்பு முறையை 'வேறுபட்டுவந்த ஓர் ஒத்திசைவாகக் காட்ட வேண்டுவதன் 'அவசியம்' அன்று இருந்தது. ஏன்? வைதீக சமயத்தின் நுழைவும் பரவலும் சங்க காலச் சமுதாயத்திலே ஏற்படத் தொடங்கிவிட்டது. அதன் தாக்கம் உணரப்பட்டுவிட்டது. எனவே வைதீக சமயத்தின் ஒரு பகுதியாக நான்கு வருணம் என்ற பகுப்பு - அப்படியே இல்லாவிட்டாலும் அதனை 'மாதிரியாகக்' கொண்ட ஒரு பகுப்பு - செய்யப்பட்டது. அதுபோலவே அந்தணர் என்ற ஒரு பிரிவினர்க்கு இடமும், வெறும் இடம் என்றில் லாமல் - உயர்ந்த முதன்மை இடமும் தரப்பட்டது. தமிழ்ச் சமூகத்தில் சங்ககாலத்திலேயே இதற்குத் தளம் அமைக்கப்பட்டுவிட்டது.

வைதீக சமய நெறி - தனது பல பரிமாணங் களோடு - நுழைந்து பரவத் தொடங்கிய அதே காலப் பகுதியில், அந்தச் சங்ககாலத் தமிழ்ச் சமுதாயத்தில், நிலவுடைமைச் சமூக அமைப்பை மையமாகக் கொண்ட வர்க்கப் பிரிவினைகளும், ஏற்படத் தொடங்கியிருந்தன. உணவு உற்பத்தி, சில முறைமைகளுக்குட்பட்டு வளர்ச்சி பெற்ற போது, உற்பத்திக் கருவிகளும் திறன்களும் அறி வியல் பூர்வமாக நவீனப்படுகிற நிலையில், உடல் உழைப்பின் தேவை குறைகிறது; முக்கியத்துவம் குன்றுகிறது. நேரமும், வருமானமும் மிஞ்சுகின்ற போது, ஓய்வு வர்க்கம், தோன்றி வளர்கின்றது. கை-செயல்-உழைப்பு ஒரு பக்கம் ஆக, மூளை-சிந்தனை-கருத்து இன்னொரு பக்கம் ஆக முரண் நிலையில் பிரிவினை ஏற்படுகிறது. வர்க்கப் பிரி வினையின் ஓர் அம்சமாகவும் அதன் உடன் விளைவாகவும், உடல் உழைப்பு, உற்பத்தி ஆகிய வற்றில் நேரடியாக ஈடுபட்டோரை இழிசினர் என்று கருதுகிற நிலையும் ஏற்பட்டது. தொழில் உற்பத்தி யின் வளர்ச்சிக்கு மையமாக இருக்கின்ற கொல்லர், 'கருங்கைக் கொல்லர்' என்ற அடைமொழியில் திரும்பத் திரும்ப அழைக்கப்படுவதோடு 'இழி சினர்' என்றும் பெயர் சூட்டப்படுகின்றனர். அது போல விரைந்து கட்டில் நிணக்கும் (பின்னும்) திறனுடையவனும் இழிசினன் ஆக்கப்படுகிறான். பயிர் நடவு, திருவிழா, போர், மரபுவழித் தகவல் தொடர்பு, சடங்குகள் முதலிய காரியங்களில் பறை யொலிக்கும் மக்கள் புலையர் என்றும் இழிசினர் என்றும் ஆகின்றனர்.

மேலோர் X கீழோர், உயர்ந்தோர் X இழிசினர் என்ற சொல்லாடல்கள் எந்தச் சூழ்நிலையில் கேட்கப்படுகின்றன. வர்க்கப் பிரிவினைகளோடு நிலவுடையமைப்பு இறுக்கம் பெற்று வளர்கிற போது; அந்தணர் வரவும் அவர்தம் திடமான முன்னோக்கிய நகர்வும் நிகழ்ந்தபோது; வைதீக சமயம் தனது பல பரிமாணங்களோடும் உள் நுழைந்து பரவுகிறபோது.

இந்தப் பின்னணியோடும் வரலாற்றுச் சூழமை வோடும் பார்த்தால் - அந்தணர் என்பது (அல்லது பிராமணர் என்பது) வெறுமனே ஒரு சாதிப் பெயர் அல்லது வருணத்தின் பெயர் மட்டுமல்ல; அது ஒரு வர்க்கத்தின் பெயர்; வைதீகம் என்பதன் ஒரு பெயர்; சமூக மேலாதிக்கம் என்பதன் ஒரு பெயர்.

இதனை, இன்னொரு திசையிலிருந்தும் புரிந்து கொள்ளவேண்டும். சமூக மேலாதிக்கம் என்ற கருத்து நிலையும் வைதீக சமயங்களும், அவற்றின் படிமங்களும் பன்முகமான சடங்குகளும் மற்றும் இவற்றையொட்டிய அரசியல்களும் முக்கியத்துவம் பெறுகிறபோதெல்லாம், அந்தணர் நிலையும் முக்கி யத்துவம் பெறுகின்றது. இதற்கு எதிர்நிலையாக - சமூக மேலாதிக்கம் மற்றும் வைதீக சமயம் ஆகி யவை சச்சரவுகளுக்கும் அதிர்வுகளுக்கும் ஆளாகிற போதெல்லாம், அந்தணர் நிலையும் சச்சரவுகளுக் கும் அதிர்வுகளுக்கும் ஆளாகின்றது. இது, இரு பதாம் நூற்றாண்டு நிகழ்வுகளையும் சமூக அரசியல் போக்குகளையும் மட்டும் கொண்ட கணிப்பல்ல, சங்க காலத்தின் இறுதிக் கட்டங்களிலும், தொடர்ந்து பல்லவர், சோழர், நாயக்கர் முதலிய பல ஆட்சிக் காலங்களின் காலப் பகுதிகளிலும் காணக் கூடிய ஒன்றுதான்.

## 2

பழந்தமிழகத்தில் பார்ப்பனர் வாழ்க்கை பற்றிய பதிவுகள் அல்லது வரைவுகள் எல்லாம்



படிப்பகம்

www.padippakam.com

இதற்குப் பிறகு இது இது என்று ஒரு கால வரிசைப் படுத்திக் கிடைப்பன அல்ல. காரணம் - சங்ககால இலக்கியத்தில் ஒரே தொகைக்குள் கிடைக்கும் பாடல்கள் எல்லாம் - சிலவற்றின் கால வரிசை, அகச் சான்றுகள், செய்திகள், மொழிநடை முதலிய வற்றின் அடிப்படையில் தோராயமாகக் கணிக்கப் பட்டுள்ளன என்றாலும் - அவை, குறிப்பிட்ட கால வரிசைக்குட்பட்டவையல்ல; ஒரே காலத்தினது மல்ல. எனவே, பார்ப்பனர் வாழ்நிலைகளை (அல்லது இவர் போன்ற எந்தப் பிரிவினரின் வாழ் நிலைகளையும்) சங்ககாலம் என்ற ஒரு சூழலில் வைத்துப் பார்க்கிறோம் என்றால், சங்ககாலம் என்ற பொதுவான காலப் பகுப்பாகிய கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முடிய என்ற ஒரு பொதுவான தளத்துக்குரியதாகத் தான் சொல்ல முடியும். ஆனாலும், வளர்நிலை களுக்குரிய தருக்கரீதியான வரிசை முறைகள், புறக் கணிக்க முடியாதவை.

புலம்பெயர்ந்து வந்த இனத்தவராக, வைதீக சமய நெறியாளராக, வேதம் ஓதுபவராக வேள்வி கள் செய்பவராக, அரசர்க்கு நெருக்கமானவராக இருந்தார்கள் என்பது ஒரு நிலை (சென்ற இதழ்க் கட்டுரையில் பேசினோம்). மேலும், இவர்கள் பற்றி ஒரு பொதுவான படிமம் இவர்களின் தொழில் புனிதமானது என்றும் இவர்கள் புனிதமானவர்கள் என்றும் - கட்டமைக்கப்பட்டுள்ளது. அதுபோல் 'அறம் புரிகொள்கை நான் மறை முதல்வர்' (புறம் 93) என்றும், 'விழுச்சீரெய் திய ஒழுக்கம்' (மதுரைக் காஞ்சி) இவர்களின் ஒழுக்கம் என்றும் பசுப் போன்று மென்மையானவர்கள் (ஆனியற்பார்ப் பனர்); பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்றும் படிமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இருக்கட்டும். ஆனால், முக்கியம், இலக்கியம் கல்வெட்டு போன்ற னவும் ஊடகங்களும் தயார் செய்யும் / பரப்பும் கற்பிதங்கள் அப்படியே உண்மையாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. (இது இவர் களுக்கு மட்டுமில்லை; எல்லோருக்கும்தான்).

அந்தணர்கள், பொதுவாக அறுதொழில் அந்தணர் என்று கூறப்படுகின்றனர். இவற்றுள் முதல் நான்கு; வேதம் ஓதுதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல்,, வேள்வி செய்வித்தல். இவற்றைத் தொழில் என்று ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இறுதி இரண்டு ஈதலும், ஏற்றலும் - இவை எப்படித் தொழில் களாகும் என்று கேள்வி எழும். 'ஏற்பது இகழ்ச்சி' என்று அவ்வையார் சென்னது ஒருபக்கம் இருக் கட்டும். இந்த இரண்டையும் தொழிலாக ஏற்றுக் கொண்டால், பின்னணியில் உள்ள மதிப்பு / சமூகவிழுமியம், தனிப்பட்ட ...... - கவுரவம் - இவை வித்தியாசமான கோணங்களில் குறுக்கிடும். ....... நான்கும் வைதீக சமயச் செயற்பாடுகள். சமயச் செயற்பாடுகளே, ஒரு இனத்தவர்க்கு வயிறு கழுவும் தொழில்களாகின்றன.

வேள்வி என்பது தீவளர்த்து, பலிகொடுத்து, நெய் சொரிந்து செய்யப்படும் யாகம் அல்லது யக்ஞம் ஆகும். பெரும்பாலும் அரசர்க்காகச் செய்யப்படுவது. அவர்களின் மேலாண்மையைக் காட்டிக் கொள்ளவும் போர்களில் பலரைக் கொன்றதற்கு ஒரு அமைதி / கழுவாடல் தேடிக் கொள்ளவும் மேலுலகம் இருப்பதாக எண்ணி அங்கே போவதற்கு ஒரு வழி தேடவும் தம் மொத்த பிறரைச் சீண்டவும், பணிய வைக்கவும் - அரசர்கள் செய்யும் வேள்விகள்; அந்தணர்கள் நடத்துவன. இவற்றின் பலன், உடனடியாக - அந்தணர்களுக்கு வருகின்றது. இப்படி ஒரு தொழிலை அவர்களுக் காக ஆக்கி, அதனால் நன்மை பெறுக என்று புனித நூல்கள் 'சட்டங்களியற்றித் தந்துள்ளன. பகவத் கீதை (3-வது அத்தியாயம்) கூறுகிறது,' பிரம்மா, யக்ஞத்தோடு கூடிய ஜனங் களை யாதிகாலத்திற் சிருஷ்டித்து, இந்த யக்ஞத் தினாலே நீங்கள் விருத்தி யடையுங்கள். இந்த யக்ஞம், உங்கட்கு விரும்பிய போகத்தைத் தரக் கூடியதாக என்று கூறினார்.''

வேள்விகள் (யக்ஞங்கள்) கடவுளர்களைத் திருப்திப்படுத்தவா? அந்தணர்களுக்குப் பிழைப்புத் தரவா? கடவுளர்கள் நிரூபிக்கப்படாதவர்கள்; அந்தணர்கள் 'பிரதிட்சியமான' (காட்சியளவை யில்) உண்மைகள். இந்த யக்ஞங்கள், கீதை சொன்னதன்படி, அந்தணர்கள் விருத்தியடையவும் விரும்பிய போகங்கள் பெறவும் உதவின. ஒரு உதாரணம், சங்ககாலத்திலே காட்சிதரும் விண்ணந் தாயன்.

'சோணாட்டு பூஞ்சாற்றுப் பார்ப்பான் கவுணி யன் விண்ணந்தாயன்' என்ற பார்ப்பனனைக் கண்டு அறிந்து சொல்கிறார், ஆவூர் மூலங்கிழார் என்று ஒரு புலவர், புற நானூற்றுப் பாடல் ஒன்றில். (166). இந்த விண்ணந்தாயன், வைதீக சமயம் ஏற்படுத்திக் கொடுத்த செல்வாக்கு மற்றும் வாய்ப்புக்களினாலும், சடங்குகளினாலும் பெருஞ் செல்வத்தையும் சுகபோகத்தையும் அனுபவிக் கிறான். ஆவூர் மூலங்கிழாரின் இந்தப்பாடல் வித்தியாசமானது. இதன் பாட்டுடைத் தலைவன், இந்த விண்ணந்தாயன். அந்தணர் ஒருவரைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்ட ஒரே பாடல்,



படிப்பகம்

www.padippakam.com

இதுதான். இதில் இடம்பெறும் செய்திகள் கூட சுவாரசியமானவை:

i) நீள்நிமிர் சடைமுடி கொண்ட முதுமுதல்வன் (சிவன்) வாயிலிருந்து நீங்காதது, நான்கு வேதம். அதாவது சிவன் வாயில் எப்போதும் இருப்பது வடமொழி வேதம். (சிவனை ஈர்ஞ்சடை அந்தணன் என்று கலித்தொகை (38) சொல்ல, ஆதியந் தணன் என்றும் பைங்கட் பார்ப்பான் என்றும் பரி பாடல் (5) கூற, அருமறை அந்தணாளன், மறை யவன் என்று பின்னால் வந்த ஞான சம்பந்தரும் பிறரும் பன்முறை அழைப்பர்.) ii) வேத நூல் களை மறுத்தவர்களை, மறுத்து விவாதித்தவன், விண்ணந்தாயன் சமய விவாதங்கள் சங்க காலத் தினிறுதியிலேயே வந்துவிட்டன என்பதை இது குறிக்கின்றது. iii) வேள்வி செய்கிறபோது தோளிலே மான் தோல், மார்பிலே பூணூல் அணி வது. வேள்விகள் இருபத்தொரு வகையின; செய்த வன், விண்ணந்தாயன். வேள்விகள் செய்வது, நல்ல வருமானமுடைய ஒரு தொழில். மறை நீங்காத வாய்மொழி கொண்ட கடவுளை நினைந்து செய் வது. இதன் பயனை எப்படி இந்தப் பார்ப்பனன் விண்ணந்தாயன் அனுபவித்தான்? iv) சிறு நுதல். பெரிய அகன்ற அல்குல், சில சொல், பலவாகத் திரண்ட கூந்தல் இவற்றோடு மறங்கடிந்த அருங் கற்பு. இத்தகைய பெண், ஒருத்தியோடு அல்ல, பலரோடு - அவனுடைய நிலைக்கு ஒத்த துணைத் துணைவியரோடு இருந்து அனுபவிக்கிறான். v) காட்டுப் பசு நாட்டுப்பசு என்று பதினான்கு வகைப் பசுக்கள். அவற்றிலிருந்து கிடைத்த நெய். தண்ணீரே காணும்படியாக அளவின்றி நெய்யை வழங்கு கிறான், விண்ணந்தாயன். vi) இறுதியாக - இவ னுடைய 'நின்று - இருந்து - ஏந்து நிலையை' மூலங் கிழாரும் அவருடைய ஆட்களும், தங்கள் ஊரில் கிடைப்பதைத் தின்று ஆடிப்பாடிப் போற்ற விண்ணந்தாயன் (அந்தப் பக்கம்) செல்ல வேண்டாது நீடிய நெடுவரை இமயம் போல் நிலைபெற்று வாழ வேண்டும். புலவர் வாழ்த்துகிறார்.

விண்ணந்தாயன், அரசனுக்குரிய சுகபோகத் துடன் வாழ்கிறான். எப்படி வந்தது, இந்தச் செல்வம்? வேள்விகள் செய்து, இப்படிச் செல்வம் தேட முடிந்திருக்கிறது. சமய காரியங்கள் மூலம் இப்படி வளம் கொழித்து அனுபவிக்க முடிந்திருக் கிறது. இது, சமயம் தொடர்பான வாத - பிரதி வாதங்கள் நிகழ்ந்த சங்ககாலத்தின் இறுதியில் நடந்திருக்கிறது. இந்த அந்தணன், சிறுநுதல் பேரகல் அல்குல் மகளிர் பலருடன் வாழ்கிறான் என்றவுடன், இது என்ன அந்தணர் ஒழுக்கமா என்று கேட்பது நியாயமில்லை. மிதமிஞ்சிய செல்வம் தந்த ஒழுக்கம் இது. கலித்தொகை (65) ஒரு சுவை யான காட்சியை, ஒரு பார்ப்பானை மையமாக வைத்துச் சித்திரிக்கின்றது பாடியவர், கபிலர், அந்தணர்.

இரவு நேரம், ஊரெல்லாம் தூங்கியது. தலைவன் சொல்லிச் சென்றது மாதிரி வருவான் எனக் காத்திருக்கிறாள், இளங்கன்னி போர்வை போர்த்தி மறைந்து நிற்கிறாள். வந்தவனோ. தீரத் தறைந்த தலையுடன் கரைப்பட்டு வந்த முது முதிர் பார்ப்பான். பையென வருகிறான். கிழட்டு மாடு போல், பக்கம் வந்து, யார் இவள் இங்கு நின்றீர் எனச் சொல்லிப் பெண்ணே, இதோ தம்பலம் தின்கிறாயோ எனக் கொடுக்கிறான். அவள் பேசாம லிருப்பதுகண்டு வேறு வகையாகப் புரிந்துகொண்டு அவள் கையைப் பற்றுகிறான். 'சிறுமீ, நீ கைப் படுக்கப்பட்டாய்' என்கிறான். பட்டென்று அவளுக் கொரு யோசனை, ஏய் பிசாசே, நான் ஒரு பெரும் பிசாசு. என்னை நலிதரின் உனக்கு இந்த ஊர்ப் பலிகிடைக்காமற் செய்வேன் என்று அரற்றுகிறாள். முதுபார்ப்பான் அஞ்சி ஒதுங்குகிறான். இவள் உடனே குனிந்து மணல் கொண்டு மேலே தூவிப் பூசல் செய்கிறாள். அரண்டு ஓடுகிறான், அவ்வந்த ணன். இது - என்றுந், தன் வாழ்க்கையதுவாகக் கொண்ட முதுபார்ப்பான் வாழ்க்கைப் பெருங் கருங்கூத்து. அவள் முடிக்கிறாள்.

விண்ணந்தாயன் ஒரு பக்கம். இந்த முது பார்ப்பான் ஒரு பக்கம். சங்க காலத்தின் இறுதி யில், அந்தணர் வாழ்க்கையின் ஒரு நிலை, இது.

மேலும், ஓதல், வேட்டல் முதலிய ஆறு தொழில்களை மட்டுமே இவர்கள் செய்தனர் என்பது இல்லை. காதலுக்குத் தூது போதல், நாடு சுற்றி மக்களைச் சந்தித்தல், அரசர்ப் புகழ்தல் முதலிய காரியங்களையும் செய்தனர் என்ற குறிப்புக் களன்றி வேள்வி செய்யாத பார்ப்பனர் என்ற ஒரு பிரிவு அல்லது ஒரு வாழ் நிலையுமுண்டு. வேள்வி கள் செய்து செல்வம் சேர்த்த விண்ணந்தாயனைப் புகழும் அதே ஆவூர் மூலங்கிழார் தான் 'வேளாப் பார்ப்பான்' என்ற ஒரு தொடரையும் அறிமுகப் படுத்துகிறார். (அகநானூறு, 24) (வேளா - வேள்வி செய்யாத) பகன்றையின் அரும்புகளுக்கு உவமம் கூறும்போது, சொல்கிறார்:

*வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த*
*வளை களைந்து ஒழிந்த கொழுந்து.*



படிப்பகம்

www.padippakam.com

வேள்வியைத் தொழிலாகக் கொண்டிராத பார்ப்பான், சங்குகளைக், கூரிய அரம் கொண்டு அறுத்து வளைகள் செய்கிறான். வேள்வித் தொழிலுக்குப் பஞ்சமா? அந்தணர் தொகை அதிகமானதால் போட்டியா? இதுபோல் வேறு தொழில்களுக்கும் போனார்களா? போனார்கள்; உதாரணமாக யானைப் பாகனாக. முல்லைப் பாட்டு சொல்கிறது.

*கவை முட் கருவியின் வடமொழி பயிற்றிக்*
*கல்லா இளைஞர் கவளங் கைப்பக்*
*கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்*
*முக்கோல் அசைநிலை கடுப்ப...*

(வரி. 35-38)

14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நச்சினார்க்கினியர் எனும் (பார்ப்பன) உரையாசிரியர் உரை கூறுகிறார்: 'வடமொழியை அடியிலே கல்லாத இளைஞர், யானைப் பேச்சான வடமொழிகளைக் கற்றுப் பலகால் சொல்லிக் குறைத்த முள்ளையுடைய பரிக்கோலாலே கவளத்தைத் தின்னும்படி (யானையைக்) குத்த, ...., துகிலைத் காவிக் கல்லைத் தோய்த்துடுத்த விரதங்களையுடைய முக்கோல் அந்தணன், அம்முக்கோலிலே அந்த உடையினை இட்டுவைத்த தன்மையை ஒக்க....''

இதிலே கவனிக்க வேண்டியவை: வேள்வித் தொழில் பஞ்சம். பார்ப்பன இளைஞர், வடமொழியை (வேதத்தை) கற்கவில்லை. யானையைக் கட்டுப்படுத்த வடசொற்கள் சிலவற்றை அவன் அறிந்திருக்கிறான். அதை வைத்துக் கொண்டு யானைப் பாகனாய்த் தொழில் புரிகிறான். இருந்தாலும் அவனுடைய பரம்பரைத் தொழிலாகிய வேள்வி செய்தலுக்குரிய கருவியாகிய முக்கோல் அவனிடம் இருக்கிறது. விரதமும் இருக்கிறது. ஆனால் இப்போது முக்கோலுக்கு வேலை என்ன? கல்லிலே தன்னுடைய துகிலைத் தோய்த்து உலர்த்துவதற்கு அந்த முக்கோலிலே அதனைப் படர்த்தி வைக்கிறான்.

தொழில் மாற்றம் ஏற்பட்டு வேள்விகள் செய்யாவிடினும், தம்முடைய அடையாளங்களையும் இலக்கணங்களையும், அந்தணர்கள் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டார்கள். மறைநூல், கரகம் (கமண்டலம்), முக்கோல், மணை (இருக்கைப் பலகை) என்பவை, குறைந்த அளவு எச்சங்களாகவாயினும் - இவர்களால் தக்கவைத்துக் கொள்ளப்பட்டன. அது போல், நோன்புகள் (படிவ உண்டி) மேற்கொள்ளப் பட்டுவந்தன. யானைப் பாகர்களாக இருந்தாலும் காதல் பங்கர்களாக இருந்தாலும், இந்த அடையாளங்கள், அந்தணர் தம் அடையாளங்கள் ஆகும்.

காதலியிடத்துத் தூது செல்ல / சந்து செய்விக்கக் காதல்தலைவனுக்குப் பாங்கனாயப் போய் வருவது, பாணர்கள் செய்த பணி. படிப்படியாகப் பார்ப்பனர்கள் அவர்களின் இடத்தைப் பிடிக்கிறார்கள். பின்னாளில் - சிலம்பில், மாதவிக்காக கோவலனிடம் தூது வருகிறான் மாங்காட்டு மறையவன் எனும் அந்தணன். அதற்கு முன்னால் - குறுந்தொகையில் (156) ஒரு காட்சி :

*பார்ப்பன மகனே! பார்ப்பன மகனே!*
*செம்பூ முருக்கின் நன்னார் களைந்து*
*தண்டொடு பிடித்த தாழ் கமண்டலத்துப்*
*படிவ வுண்டிப் பார்ப்பன மகனே!*
*எழுதாக் கற்பின் நின்செய லுள்ளும்*
*பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்*
*மருந்து முண்டோ? மயலோ இதுவே!*

பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனின் பாடல், இது. ஊடலில் பிரிந்தோரை மீண்டும் ஒன்று சேர்க்க வந்த பார்ப்பனனைப் பார்த்துத் தலைவன் கேட்கிறான், மயக்கத்திற்கு மருந்துண்டா என்று. இந்தப் பாங்கனுடைய அடையாளங்கள், தண்டொடு பிடித்த தாழ்கமண்டலமும், படிவ உணவும். அது போல குடுமித்தலையும் ஒரு அடையாளம்; கபிலர் சொல்லுகிறார், ஐங்குறு நூற்றில் (202).

பழந்தமிழ்ச் சமுதாயக் கட்டமைப்பில், பார்ப்பனர், ஒரு பகுதியாக இணைந்துபோயினர். பிற சமூகப் பிரிவினர்கள் மீதான மேலாதிக்கங்களோடும், கருத்தியல் ரீதியான ஆதிக்கங்களோடும், ஓய்வு வர்க்கத்தின் சலுகைகள் மற்றும் சுகங்களோடும், தமக்கென வாதித்துக் கொண்ட சுய அடையாளங்களோடும், இது நிகழ்ந்தது. வைதீக சமய மரபு இவர்களுக்கு வலுவானதொரு தளமாகவும் ஆயுதமாகவும் அமைய தொடர்ந்து வந்த காலங்களில் தமிழ்ச் சமூக வெளியில் இவர்களின் மூச்சுக் காற்றின் வெம்மை நிரம்பிக் கிடந்தது.

★★★



படிப்பகம்

www.padippakam.com

''கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் உள்ள உலகமயம், வளர்முக நாடுகளின் விவசாயத்தை நாசப்படுத்திவிட்டது. சந்தை விதிகள் என்ற பெயரால் உலக வேளாண் நெருக்கடியை உருவாக்கிவிட்டது. பொருளாதார சீர்திருத்தங்களின் இந்த தீய அம்சங்களை இக்கட்டுரை விளக்குகிறது. இந்த கட்டுரை Monthly Review - October 2003 இதழில் சமீர் அமின் எழுதிய 'உலக வறுமை : மூலதனக் குவியலின் விளைவு' என்ற கட்டுரையின் தொடர்ச்சியாகவும், அதனை ஒட்டிய விவாதமாகவும் 2004-பிப்ரவரி Monthly Review இதழில் வெளியிடப்பட்டது. சமீர் அமின் கட்டுரையின் தமிழாக்கம் சமூக விஞ்ஞானம் - டிசம்பர் 2003-இல் வெளியிடப்பட்டது.''

ஃபிரெட் மக்டாஃப்

# உலக வேளாண் நெருக்கடி : வளரும் பேராபத்து

உலகின் பல நாடுகளில் பசியோடும், பட்டினியோடும் வாழுகின்ற மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து பெருகி வருகிறது. சுமார் 600 கோடியாக உள்ள உலக மக்களில் பாதிப்பேர் நகர்ப்புறங்களிலும், மீதிப்பேர் கிராமப்புறங்களிலும் வசித்து வருகின்றனர். உலக மக்கள் தொகையில் பெரும் பகுதியாக உள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஏழை மக்களின் வாழ்க்கை நிலை மிகவும் கடினமானதாக உள்ளது. உலக மக்கள் தொகையில் சரி பாதிப்பேர் தினம் ஒன்றுக்கு இரண்டு டாலருக்கும் குறைவான வருவாயில் அடுத்த வேளை உணவு எங்கிருந்து பெறுவது என்ற கவலையினால் பீடிக்கப்பட்டுள்ளனர். நூறு கோடி பேருக்கு சுகாதாரமான குடிநீர் இல்லை. இருநூறு கோடி பேருக்கு மின்சார வசதி இல்லை. 250 கோடி பேருக்குக் கழிப்பிட வசதி இல்லை என்ற நிலை உள்ளது.

சமீபத்தில் ஐ.நா. ஆய்வறிக்கையின்படி, நகர்ப்புறங்களில் வாழும் 300 கோடிப்பேரில் 100 கோடிப்பேர் குடிசைகளில் வசித்து வருகின்றனர். 'பாய்ச்சல் காலம்' எனச் சொல்லப்பட்ட 1990களில் இந்த எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்தது. அடுத்த ஐம்பது ஆண்டுகளில் குடிசைகளில் வாழுவோர் எண்ணிக்கை 300 சதவீதம் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (குடிசைகள் ஒரு சவால் - மனித குடியிருப்புகள் குறித்த அறிக்கை 2003, ஐ.நா. மனிதக் குடியிருப்புத் திட்டம்).

உலக மக்கள் தொகையில் மீதிப்பாதியாக உள்ள - 300 கோடிப் பேர் - கிராமப்புறங்களில் வசித்து வருகின்றனர். அவர்களில் பெரும்பாலோர் தங்கள் உணவுக்காகவோ அல்லது பிறருக்கு விற்பனை செய்வதற்காகவோ உணவு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். பெரும்பாலான கிராமப்புற மக்கள் கடினமான நிலைமைகளில் வசித்து வருகின்றனர். ஆனால், நிலம் வைத்திருப்போர் பொதுவாக தங்கள் குடும்பங்களுக்கான உணவை உற்பத்தி செய்துகொள்ள முடிகிறது.

கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு செல்வது மூன்றாம் உலக நாடுகளில் அதிகரித்து வருகிறது. ஆண்டுதோறும் 2 முதல் 3 கோடிப் பேர் கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கி குடி பெயர்ந்து செல்கின்றனர். இதனால் நகர மக்கள் தொகை பெருத்து வருகிறது. கிராமங்களில் கடினமான நிலைமைகளில் வாழ முடியாமல், நகர்ப்புறங்களில் நன்றாக வாழ முடியும் என நினைத்து அங்குச் செல்லுகின்றனர். முதலாளித்துவ பண்ணை விரிவாக்கம் அல்லது எந்திரமயமான உற்பத்திக்காக நிலங்கள் அபகரிக்கப்படுவதால் விவசாயிகள் தங்கள் பண்ணைகளை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படுகிறது.

குடியானவர்களும், விவசாயிகளும் குடிபெயர்வதானது 16-ஆம் நூற்றாண்டில் துவங்கி 19, 20-ஆம் நூற்றாண்டிலும் தொடர்கிறது. நகர்ப்புறங்களை நோக்கி மக்கள் குடிபெயர்வதைத் தொடர்ந்து தொழில்மயமாக்கம் மூலமாக புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. அதே சமயம் விவசாயத்தை எந்திரமயமாக்கி உற்பத்தித் திறனை பெருக்கும் பொழுது, நிலத்தை பராமரிப்பதற்குரிய தொழிலாளர்களின் தேவை குறைந்து விடுகிறது. நகர்ப்புறங்களில் போதுமான வேலைவாய்ப்பு இல்லாத போதும் மக்கள் நிலங்களிலிருந்து வெளி



படிப்பகம்

www.padippakam.com

யேற்றப்படும் நிகழ்வுப் போக்கு ஐரோப்பாவில் நடைபெற்று வருகிறது. இவ்வாறு இலட்சக்கணக் கானோர் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற முன்னாள் காலனி நாடுகளுக்கும், பிற காலனி நாடுகளுக்கும் குடிபெயர்ந்தனர். அங்கிருந்த பூர்வகுடி மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலம் இவர்களுக்குச் சிலகாலம் பயன்பட்டது.

20-ஆம் நூற்றாண்டின் இறுதியில், மூன்றாம் உலக நாடுகளில் முற்றிலும் ஒரு மாறுபட்ட நிகழ்வுப் போக்கு நடைபெற்று வருகிறது. புதிதாக வருபவர் களை உள்வாங்கிக்கொள்ளும் போதிய வேலை வாய்ப்பு இல்லாத நிலைமையிலும் கூட விவசாயி களும், நிலமற்ற கிராமப்புற குடும்பங்களும் நகரங் களை நோக்கிக் குடிபெயர்வது நிகழ்ந்து வரு கிறது. இதன் விளைவாக மூன்றாம் உலக நாடு களில் தங்களுக்கு தேவையான உணவுப் பயிர்களை உற்பத்தி செய்து கொள்ள நிலமில்லாமல் வறுமை யிலும், பசியிலும் வாழும் குடிசைப் பகுதிகள் அதிகரித்து வருகின்றன.

வறட்சி, வெள்ளம் அல்லது போர்க்காலங் களில் உணவு உற்பத்தி மற்றும் விநியோகம் பாதிக்கப்படுவதால் பஞ்சம் ஏற்படும் என்றே பொதுவாக நம்பப்படுகிறது. இருப்பினும், பட்டினி யும், உணவுப் பாதுகாப்பற்ற நிலைமையும் மனித குலத்தின் பெரும்பகுதியில் மற்ற நேரங்களிலும் காணப்படுகிறது. கண்ணால் காணுகின்ற கோரமான பஞ்சங்கள் மட்டுமல்லாமல், சத்துணவு பற்றாக் குறையினால் குழந்தைகளின் உடல்நிலை மற்றும் மனநிலையில் பாதிப்பு ஏற்படுவதும், படிப்பதில் கடினமான நிலையும், எளிதில் நோய்க்கு ஆளா தலும் போன்ற பல பிரச்சினைகள் காணப்படு கின்றன. ஐ.நா. மதிப்பீட்டின்படி, 84 கோடி மக்கள் - முன்னணி தொழில் வள நாடுகளில் 1 கோடிப் பேர் உட்பட - 1999- 2001 காலகட்டத்தில் ஊட்டச் சத்து இன்மையால் பாதிக்கப்படுவதாக விவரங்கள் தெரிவிக்கின்றன. இவற்றில், 1995-1997-லிருந்து 1999-2001- காலத்தில் 10 லட்சம் பேர் அதிகரித் துள்ளதாக ஐ.நா. விவரங்கள் கூறுகின்றன. இருப் பினும் ஐ.நா. மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதலான மக்கள், உணவுப் பாதுகாப்பற்ற நிலைமையிலும், பஞ்சத்தின் பிடியிலும் - அவ்வாறு 300 கோடிப் பேர் இருக்கலாம் - வாழ்ந்து வருகின்றனர். இந்த எண்ணிக்கை 'வெறும்' 84 கோடி என்ற போதிலும் அதிர்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றே ஆகும்.

கிராமப்புறங்களில் பெருமளவில் பஞ்சம் இருப்பினும், நகர்ப்புறங்களிலும் இது ஒரு பெரும் சவாலான பிரச்சினையாக இருந்து வருகிறது. நிலங் களிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் தங்கள் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்துகொள்ள முடியாதபோது, வேறு ஆதாரங்களைத் தேட வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்படுகின்றனர். இதனால் நகர்ப்புறங்களை நோக்கி வரும் மக்களுக்கு பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் மூலம் போது மான வேலைவாய்ப்பை உருவாக்க முடியாதபோது, குறுக்கு வழியில் பொருட்களை வாங்கி விற்பது அல்லது பல்வேறு குற்ற நடவடிக்கைகளில் ஈடு படுவது போன்ற வழிகளில் பொருளீட்டும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

அடிப்படைத் தேவையான உணவு உற்பத்தி, உலகம் முழுவதும் போதுமான அளவுக்கு மேற் கொள்ளப்பட்டு வருகிறது. சத்துணவு இன்மையும், உணவு பாதுகாப்பற்ற தன்மையும் வறுமையின் விளைவாக ஏற்படுகின்றனவே ஒழிய உணவு உற்பத்திக் குறைவினால் அல்ல. ஒருபுறம் மக்களின் தேவைக்கு மிஞ்சிய உணவு உற்பத்தியும், மறுபுறம் வறுமையும் இருப்பதற்கு அமெரிக்காவே சிறந்த உதாரணமாகும். 1.2 கோடி குடும்பங்கள் அமெ ரிக்காவில் உணவுப் பாதுகாப்பற்ற நிலையிலும், 40 லட்சம் குடும்பங்கள் தினமும் மூன்று வேளை உணவுக்கு வழியின்றியும் உள்ளனர்.

அபரித உணவு உற்பத்தியும், பட்டினியும் ஒருங்கிணைந்திருப்பதை மூன்றாம் உலக நாடு களிலும் காணலாம். பல வகையான மேம்படுத்தப் பட்ட நவீன ரகங்கள் மற்றும் எண்ணற்ற விவசாய தொழில் நுட்பங்கள் மூலம் உணவு உற்பத்தியைக் குவித்த இந்தியாவின் 'பசுமைப் புரட்சியின்' வெற்றிக்கதை இவற்றில் ஒன்றாகும். ஒரு புறம் மிகையான உணவு உற்பத்தி, மறுபுறம் பரந்துபட்ட வறுமை என்பதே இன்றைய இந்தியாவில் நாம் காணும் காட்சியாகும். 'உபரியான கோதுமை அழுகிக்கிடக்க, ஏழை இந்தியன் பட்டினியால் சாகிறான்' என (நியூயார்க் டைம்ஸ், டிச. 12, 2002) பத்திரிக்கையின் தலைப்புச் செய்தி கூறுகிறது. இவ் வாறு அழுகிக்கிடக்கும் தானியங்களை, ஒன்று, எலி கள் சாப்பிடுகின்றன. அல்லது இந்திய மக்கள் பட் டினி கிடக்க மலிவான விலையில் வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பொதுவாக மக்களிடம் உணவுப் பொருட் களை வாங்குவதற்குப் போதுமான பணம் இல்லாத தாலேயே இத்தகைய நீடித்த பட்டினி நிலவுகிறது. இதற்கான காரணம் மிக எளிதானது. முதலாளித்



படிப்பகம்

www.padippakam.com

துவத்தின் கீழ் தொலைக்காட்சி அல்லது ஒரு ஆட்டோமொபைல் போல உணவுப் பொருளும் ஒரு சரக்கே. உணவுப் பண்டங்களின் மீது பிரத்தியேகமான கூடுதல் சட்ட உரிமை எதுவும் இல்லை.

முன்னணி முதலாளித்துவ நாடுகளின் அரசாங்கங்களும், சர்வதேச நிதிநிறுவனம், உலக வங்கி போன்ற பல்வேறு அமைப்புகளும், வறுமை மற்றும் பட்டினி உள்ளிட்ட அனைத்து வளர்ச்சி பிரச்சினைகளுக்கும் ஒரே தாரக மந்திரத்தையே தீர்வாகக் குறிப்பிட்டு வருகின்றன. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு நாட்டினுடைய மக்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களை கணக்கில் கொள்ளாமல் வரிகள் மற்றும் பொருட்களின் மீதான வர்த்தகத் தடைகளை நீக்குவது, நாடுகளுக்கு உள்ளேயும், வெளியேயும் தாராளமாக மூலதனத்தை நடமாட அனுமதிப்பது ஆகியவையே இவர்களின் தீர்வாகும்.

இந்த நவீன தாராளமயமாக்கல் கொள்கை பின்வருமாறு செல்கிறது. பொருட்களின் மீதான வர்த்தகத் தடைகளை நீக்குவது, நாடுகளுக்கு உள்ளேயும், வெளியேயும் தாராளமாக மூலதனத்தை நடமாட அனுமதிப்பது ஆகியவை முன்வைக்கப்படுகின்றன.

பொருட்கள் மற்றும் மூலதனத்திற்கான தடையை நீக்குவதன் மூலம் ஒரு குறிப்பிட்ட நாடு ஒப்பீட்டளவில் மேம்பாடாக உள்ள துறைகளை மையப்படுத்தி வளர்க்க முடியும். அதாவது சுரங்கத் தொழில், தட்பவெப்ப நிலைமைக்கேற்ற பொருட்களை உற்பத்தி செய்வது, இயற்கை வளங்கள், மேம்பட்ட உழைப்பு சக்தி அல்லது பிற அம்சங்களை அந்தநாடு ஆதாரப்பட்டு நிற்க வேண்டும். பிறகு இத்தகைய பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு தமக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொள்ள இயலும். மேலும், ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியம் உள்ள தொழிற்சாலைகள் அமைப்பதற்கான மூலதன பற்றாக்குறை, தொலைத் தொடர்பு வசதிகள், சாலைகள் மற்றும் துறைமுகங்கள் போன்ற பிரச்சினைகளை தாண்டிச் செல்ல இந்த நடைமுறை உதவும் என இத்தத்துவம் கூறுகிறது. நவீன தாராளமயக் கொள்கையின் அடிப்படையில், அந்நிய மூலதன கம்பெனிகளைக் கவர, கூடுதல் ஆதரவு அளிப்பதன்மூலம் அவர்கள் கூடுதலாக முதலீடு செய்யவும், சிறந்த பொருளாதார வளர்ச்சிக்கும், வளத்திற்கும் இட்டுச் செல்லும் என்கின்றனர். பொருட்கள் மற்றும் மூலதனத்திற்கான சந்தை, அரசுக் கட்டுப்பாடுகளை நீக்குதல் போன்றவை அனைவருக்கும் பிரம்மாண்டமான வாய்ப்புகளை வழங்கும். இதில் யாருக்கும் நஷ்டம் இல்லை. அனைவருக்கும் வெற்றியே என்கின்றனர்.

ஏழை நாடுகள் பொருட்கள், சேவைகள் மற்றும் மூலதனங்களை தாராளமாக இறக்குமதி செய்ய அனுமதிப்பதும், ஏழ்மை நிலையிலுள்ள மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய வசதி வாய்ப்புகளைக் குறைப்பதும் ஆபத்தானதாகும். இது போன்ற கொள்கைகள் ஏழைகளை எவ்வாறு பாதிப்படையச் செய்துள்ளன என்பதற்கு ஏராளமான சமீபத்திய உதாரணங்கள் உள்ளன. உலக வங்கி மற்றும் பல்வேறு நிதியுதவி அமைப்புகளின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டதால், நாணய மதிப்பு குறைந்து, இறக்குமதி செய்யப்படும் உரங்களுக்கான விலை ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது. பெரும்பாலான விவசாயிகளுக்கு இத்தகைய விவசாய இடுபொருட்கள் எட்டாக்கனியாகி விட்டன. (நியூயார்க் டைம்ஸ், ஜூலை 13, 2003). கானா மேற்கத்திய உதவியாளர்களின் கட்டளைக்கு அடிபணிந்து நிதி நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதாகக் கூறி, உர மானியங்கள், விவசாய விளைபொருட்களுக்கான ஆதரவு விலை அல்லது அவற்றிற்கு இணையான வேறு எவ்வித நிதி உதவியும் வழங்குவதில்லை (வால்ஸ்டிரீட் இதழ், டிச. 3, 2002). இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் உரங்களுக்கு அதிகபட்ச விலை கொடுக்க வேண்டி இருப்பதால், மானியம் இல்லாததன் விளைவாக விவசாயிகள் மிகக் குறைந்த அளவு உரமோ அல்லது உரமே பயன்படுத்த முடியாத நிலையோ ஏற்படுகிறது. இதனால் உணவு உற்பத்தி மற்றும் கூடுதல் வருமானத்திற்கான வாய்ப்புகள் தேவைக்கும் மிகக் குறைவாகப் போய்விடுகின்றன.

'தாராள சந்தை', 'தாராள வர்த்தகம்' மற்றும் உணவு உற்பத்திக்கான அரசு ஆதரவு குறைக்கப்பட்டு வருவது போன்ற மாற்றங்களின் விளைவாக எத்தியோப்பியாவில் மிகப்பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அந்த அரசு, நிதியுதவி செய்யும் நிறுவனங்களின் ஆலோசனையின் அடிப்படையில் அரசின் 'தலையீட்டைக்' குறைப்பது என்ற தாராள சந்தை அணுகுமுறையில் விவசாய உற்பத்தியை ஊக்குவித்த பிறகு, அரசின் உதவியைக் குறைப்பது எனத் தீர்மானித்தது. தரமான விதைகள் மற்றும் உரங்கள் எளிதில் விவசாயிகளுக்கு கிடைத்ததன் விளைவாக உற்பத்தி பெருகியது. சந்தையில் தேக்கம் காரணமாக விவசாயிகளுக்கு விலை வீழ்ச்சி



படிப்பகம்

www.padippakam.com

ஏற்பட்டது. விலை அதிகரிக்கும் வரை சேமித்து வைத்திருக்க சேமிப்புக் கிடங்குகள் மிகக் குறை வாகவே இருந்தன. உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்குகள் கட்ட நினைப்பவர்களுக்கு போதுமான நிதியுதவி கிடைப்பதில்லை. இதன் விளைவாக, மொத்தத்தில் விவசாயிகள் தமது தானியங்களை 2001-ஆம் ஆண்டில் மிகக் குறைந்த விலைக்கு விற்கும் நிலை ஏற்பட்டது. இதனால் அடுத்த ஆண்டு தமது சாகுபடிப் பரப்பைக் குறைத்தனர். இதனாலும், பருவ நிலை பாதிப்பாலும் பரவலான பஞ்சமும் 2002-இல் ஏற்பட்டது. 2003-இல் பட்டினிச் சாவும் கூட ஏற்படும் சூழ்நிலை உருவனாது.

உலக வர்த்தக அமைப்பின் வரிகள் மற்றும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு புதிய தாராளமயக் கொள்கைகளை பிலிப்பைன்ஸ் நடைமுறைப்படுத் தியது. இதனால் அந்நாட்டு விவசாயமும், விவ சாயிகளின் வாழ்க்கை நிலைமைகளும் மிகவும் மோசமாயின. பலரும் எதிர்பார்த்தபடி, அரிசி மற்றும் தானியங்களின் இறக்குமதியும், விவசாயி கள் மத்தியில் பரவலான பஞ்சமும் உருவாகத் தொடங்கியது. விவசாயிகள் ஏற்றுமதி சார்ந்த லாபம் தரும் பயிர்களை சாகுபடி செய்ய ஊக்குவிக்கப் பட்டனர். எவ்வாறு இருப்பினும், பெருமளவில் மானிய உதவியுடன் மேற்கொள்ளப்படும் அமெ ரிக்க விவசாய பண்ணைகள் மட்டுமல்லாமல் சீனா, தைவான், தாய்லாந்து, வியட்நாம் போன்ற நாடு களைக் காட்டிலும் பிலிப்பைன்ஸ் விவசாயம் பலவீனமான நிலையில் இருந்தது. பிலிப்பைன்ஸ் விவசாயிகள் காய்கறிகள், கோழி மற்றும் மாட் டிறைச்சி போன்ற ஏற்றுமதியில் லாபம் தருபன வற்றை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்பட்டனர். ஆனால், அவர்களால் சர்வதேச போட்டியில் ஈடு கொடுக்க முடியவில்லை. அது மட்டுமல்லாமல், தாராள இறக்குமதியினால் அவர்களின் உள்நாட்டுச் சந்தையும் நெருக்கடிக்கு உள்ளானது.

இருபதாண்டுக் கால விவசாய தாராளமய மாக்கலால் மெக்சிகோவில் வறுமை அதிகரித்தது. வட அமெரிக்க தாராள வர்த்தக ஒப்பந்தம் (NAFTA) காரணமாக ஏற்பட்ட பெரும் பாதிப்பு களை மெக்சிகோவிலிருந்து அமெரிக்காவுக்கு குடியேறியவர்களும், அவர்கள் தாய்நாட்டுக்கு அனுப்பிய பணமும் ஓரளவே குறைத்தன. மெக்சிகோவிலிருந்து மக்கள் வெளியேறுவது நீண்டகாலமாக நடந்து வருகிறது. பெரும்பாலும் மோசமான மண்வளமும், பாரம்பரியமாக குடி பெயரும் பழக்கமும் உடைய மாநிலங்களிலிருந்து இத்தகைய குடிபெயர்ச்சி நிகழும். ஆனால், இப் போதோ நாப்தாவின் காரணமாக நல்ல மண் வளமும், விவசாயமும் உடைய பகுதிகளிலிருந்தும் குடிபெயர்ச்சி நடைபெற்று வருகிறது.

ஏற்றுமதி சார்ந்த உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்று கூறுபவர்கள் காபி பயிர்க்கு நேர்ந்ததை எண்ணிப் பார்க்க வேண்டும். அது சிறு விவசாயிகளுக்கு குறைந்தபட்ச வருமானத்தைக் கொடுத்து வந்தது. 2.5 கோடி மக்கள் அதன் மூலம் வேலை வாய்ப்பு பெற்று வந்தனர். குறுகிய காலத் திலேயே வியட்நாமும், பிரேசிலும் தங்களது காபி பயிரிடும் பரப்பை வேகமாக அதிகரித்தனர். அதே சமயம் உற்பத்தி மிக வேகமாக ஏற்பட்டதால் விலைகள் பாதியாகக் குறைந்தன. இது உலகிலுள்ள காபி உற்பத்தியாளர்களுக்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. ஆனால் பெரும் வர்த்தக நிறுவனங் களுக்கு கொழுத்த லாபம் கொடுத்தது. ஏனெனில் விவசாய பொருளின் உற்பத்தி குறைவதனால், பொதுவாக அவற்றிலிருந்து உற்பத்தி செய்யப் படும் பொருட்களின் விலை குறைவதில்லை.

அமெரிக்காவில் 25 ஆயிரம் பருத்தி விவ சாயிகள் சுமார் 300 கோடி டாலர் மானியமாக பெறுகின்றனர். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பருத்தியை வாங்க அமெரிக்க கம்பெனிகளுக்கு ஆண்டொன்றுக்கு 170 கோடி டாலர் மானியம் அளிக்கப்படுகிறது. அமெரிக்காவில் எத்தகைய வரைமுறையும் இன்றி மானியம் அளித்து தானிய உற்பத்தியை ஊக்குவித்து, அவற்றை பன்னாட்டு நிறுவனங்கள் சந்தையில் வேகமாக விற்பதால் மெக்சிகோ மற்றும் பிலிப்பைன்ஸ் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஐரோப்பாவில் அந்நாட்டு சர்க்கரை உற்பத்தி விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதாலும், அமெரிக்க சர்க்கரை கோட்டாவினாலும் ஆப்பிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க கரும்பு உற்பத்தியாளர்கள் பெருமள வில் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

கான்குன் மாநாட்டின் தோல்வி ஏழை மற்றும் பணக்கார நாடுகளுக்கிடையிலான உறவில் ஒரு முக்கிய திருப்புமுனையாகும். இதனால் உலக வர்த்தகம் முழுவதையும் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொள்வது மிகவும் கடினமாகி விட்டது. வளர்ந்த நாடுகள் தங்கள் நாட்டு விவசாயிகளுக்குப் பெருமளவில் மானியம்



படிப்பகம்

www.padippakam.com

அளிப்பதை, 20 நாடுகள் கூட்டமைப்பு தங்கள் நாட்டு விவசாய வளர்ச்சிக்கு மிக முக்கிய தடைக் கல்லாக இருப்பதாக கருதுகிறது. மானியங்களை ஒழித்து, தாராள சந்தையை அனுமதித்ததன் மூலம் ஏழை நாடுகளில் எதிர்பார்த்த சாதகமான விளைவு கள் கிட்டாமல் போனதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவதாக, விவசாயிகள், பொருளாதார நிபுணர்கள் எதிர்பார்ப்பதைப்போல செயல்படுவது இல்லை. இரண்டாவதாக, மானியங்களைக் காட்டிலும் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்த வேறு அம்சங்கள் பல உள்ளன.

சர்வதேசப் போட்டிக்காக, ஏழை நாடுகளில் விவசாய உற்பத்தியை எந்திரமயமாக்குவது மூன்றாம் உலக மக்களின் உணவுத் தேவைக்குப் பெரும் பாதிப்பாக அமையக்கூடும். ஏனெனில், விவசாயத்தை எந்திரமயமாக்குவது தொழிலாளர் களின் உற்பத்தித் திறனை அதிகரித்தாலும், அது உற்பத்தி அளவை அதிகரிக்கும் எனக் கூற முடியாது. மேலும் பிற துறைகளில் வேலையில்லாதபோது எந்திரமயமாக்கலினால் வேலையின்மையும், பட்டினியும் ஏற்படுகின்றன. கிராமப்புறங்களில் வாழ்க்கை நிலைமை எவ்வளவு கடுமையாக இருந் தாலும், சிறிது நிலம் வைத்திருப்பது என்பது பட்டினிக்கு எதிரான ஒரு தற்காப்பாகும். சமீர் அமீன் மதிப்பீட்டின்படி, 2 கோடி விவசாயிகள் அதாவது பெரிய, அதிநவீனமயமாக்கப்பட்ட முதலாளித்துவ விவசாயிகள் உலக மக்களுக்கு தேவையான அனைத்து உணவுப் பண்டங்களையும் உற்பத்தி செய்ய முடியும். இதனால் வெளியேற்றப் படுகின்ற பல கோடிக்கணக்கான மக்களுக்கு வேறு துறைகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தருவது என்பது சாத்தியமல்ல. இத்தகைய நிலை ஏற்படு மானால், தேவைப்படாத பல கோடிக்கணக்கான மக்களின் கதி என்னவாகும்?

பணக்கார நாட்டு விவசாயிகளுக்குத் தருகின்ற மானியம் பற்றிய விவாதத்தில் ஏழை நாடுகளிலுள்ள விவசாயத்தையும், ஏழைகளையும் பாதிக்கக்கூடிய மற்ற முக்கியமான பிரச்சினைகள் புறக்கணிக்கப் பட்டன. உதாரணமாக, ஏழை நாடுகளுக்கிடையே ஏற்படுகின்ற போட்டி என்பது பணக்கார நாட்டு விவசாயிகளின் மானியத்தைப் போல ஒரு முக்கிய மான பிரச்சினையே ஆகும்.

பிரேசில் மற்றும் வியட்நாமில் காபி உற்பத்தி அதிகரிப்பு, லத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசிய நாடுகளிலுள்ள காபி உற்பத்தியாளர்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியது. தனது கையிருப்பில் உள்ள தானியங்களைக் குறைப்பதற் காக இந்தியா குறைந்த விலையில் அரிசியை ஏற்று மதி செய்தது பிற நாட்டு விவசாயிகளை பாதித்தது. சீனா, தைவான், தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து விலை உயர்ந்த தானியங்களை இறக்குமதி செய்தது பிலிப்பைன்ஸ் நாட்டு விவசாயி களை பெரிதும் பாதித்தது. அரசுத் துறையில் உள்ள விவசாய கூட்டமைப்பை தனியார்மயமாக்குவதும், அரசாங்க பட்ஜெட்டைக் குறைப்பதும் பிரச்சினை யின் ஒரு பகுதியாகுமே ஒழிய, தீர்வாகாது. விவசாயிகளுக்கு பருத்தி விதையை விற்று, அவர் களிடம் மீண்டும் பருத்தியை வாங்கி, அவற்றி லிருந்து சமையல் எண்ணெய் எடுத்து வந்த ஆப்பி ரிக்காவிலிருந்த அரசுத் துறை, பருத்தி நிறுவனங் களை தனியார்மயமாக்கியது அதற்குரிய பிரச்சினை களை உண்டு பண்ணியது. இப்பொழுது ஆப்பி ரிக்காவின் பெரும்பகுதி பருத்திக்கொட்டை விலங்கு களுக்கு தீவனமாக பயன்படுத்த அய்ரோப்பா விற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் ஆப்பி ரிக்காவில் உள்ள பருத்தி எண்ணெய் தொழிற்சாலை கள் கால் பகுதி அளவிற்கே செயல்பட முடிகிறது. முன்பே கூறியபடி, ஆப்பிரிக்காவில் உரங்களுக்கு தருகின்ற மானியங்கள் குறைக்கப்பட்டதால் உணவு உற்பத்தியும், கிராமப்புற வருமானமும் குறைந்தது.

உண்மையில், உலக உணவு தானிய விநியோ கத்தில் ஏற்பட்டுவரும் பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம்தான் ஏழை நாடுகளின் விவசாயிகளுக்கு மிகப்பெரிய ஆபத்தாகும். 'தாராள சந்தை' மற்றும் 'தாராள வர்த்தகம்' என்பதன் பெயரால் இத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. கோதுமை, தானி யங்கள், அரிசி, பருத்தி அல்லது ஆப்பிள் போன்ற பண்டங்களை உற்பத்தி செய்வதால் விவசாயத் தில் உண்மையில் லாபம் கிடைப்பதில்லை. பயிர்ச் சாகுபடிக்கு முன்பும் பின்பும் நடைபெறும் விவசாய வர்த்தகத்தின் மூலமே பெரும் லாபம் கிடைக் கிறது. 20ம் நூற்றாண்டின் துவக்கத்தில் அமெரிக் காவில் உணவுப் பண்டங்களை வாங்க செலவான தொகையில் 40 சதவீதம் விவசாயிகளுக்கு சென்று சேர்ந்தது. ஆனால், நூற்றாண்டின் இறுதியிலோ அவர்கள் வெறும் 10 சதவீதம் மட்டுமே பெற்றனர். மீதமுள்ள பணம் இடுபொருள் (25 சதவீதம்), போக்குவரத்து, பதப்படுத்துதல் மற்றும் வர்த்தகம் (65 சதவீதம்) போன்றவற்றிற்காக போய்ச் சேர்ந்தது.

முதலாளித்துவ நாடுகளிலுள்ள பன்னாட்டு பகாசுர கம்பெனிகளுக்கு சாதகமான வகையிலேயே உலக பொருளாதாரம் நடைபோட்டு வருகிறது. இதே



படிப்பகம்

www.padippakam.com

திசைவழியில் நிலைமைகள் செல்லுமானால், தற்பொழுது அமெரிக்காவில் மேலாதிக்கம் செய்யக் கூடிய தொழில் சார்ந்த விவசாயம் உலகின் பிற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும்பொழுது, உலக மக்களின் வாழ்க்கை நிலை உண்மையில் தரித்திர நிலைக்கு உள்ளாக நேரிடும். ஒரு காலத்தில் உலக வர்த்தக அமைப்பிற்காக பரிந்து பேசி, அதில் சேர ஆர்வம் காட்டிய பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் அதிபர் பிடல் ராமோஸ், இப்பிரச்சினைக்கு உண்மையான மாற்றுச் சொல்லாத போதிலும் பெருமளவிலான மக்கள் இந்த விஷச் சூழலில் சிக்கி வருவது குறித்து பெரும் கவலையை வெளிப்படுத்தி உள்ளார். 'ஏழை நாடுகள் இந்த ஒப்பந்தத்தின்கீழ் வெகுகாலம் இருக்க முடியாது' ஏனெனில், 'மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உண்மையான தேவை இருக்கிறது' என்கிறார் (நியூயார்க் டைம்ஸ், ஜுலை 21, 2003).

முதலாளித்துவத்தின் அடிப்படையான செயல்பாடு ஒருபுறம் செல்வச் செழிப்புள்ள பணக்கார நாடுகளையும், மறுபுறம் மிகவும் வறிய நிலையிலுள்ள ஏழை நாடுகளையும் உருவாக்கி விடுகிறது. மேலும் இது நிரந்தரமாக வேலை வாய்ப்பில்லாத அடித்தட்டு உழைக்கும் வர்க்கத்தையும் ஏற்படுத்தி விடுகிறது. பொருளாதார நடவடிக்கைகளில் கடைக் கோடியிலுள்ள இத்தகையோரும் முதலாளி, தொழிலாளி, அரசு ஊழியர் போல ஒரு முக்கிய இடத்தை முதலாளித்துவ அமைப்பில் பெறுகின்றனர்.

உணவு உற்பத்தியைப் பெருக்கிப் பசியையும், பஞ்சத்தையும் போக்கிட, உலகம் முழுமைக்கும் பொதுவான எளிய தாரக மந்திரம் ஏதுமில்லை. வரலாறு, கலாச்சாரம், இயற்கை வளம் மற்றும் மனித வளங்களில் ஏராளமான வேறுபாடுகள் உள்ளன. இருப்பினும் செல்வ வள நாடுகளுக்கு ஆதரவாக ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதும், மூலதன முதலீட்டைக் கவரும் நடவடிக்கைகளை ஒரு நாடு மேற்கொள்வதும், மரபணு மாற்றப்பட்ட தானியங்கள் போன்ற தொழில்நுட்பங்களை நாடுவதும் இதற்கு ஒரு மாற்று அல்ல. இத்தகைய அணுகுமுறைகள் பல விஷயங்களில் தவறாகப் போயுள்ளன. பல்வேறு வளர்ச்சி அமைப்புகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து நாடுகள் பெறும் உதவிகள் அந்நாட்டு அரசாங்கக் கொள்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன. 'நாங்கள் மானியங்கள் பற்றிக் குறிப்பிடுகையில், வளர்ச்சிக்கு உதவும் எங்கள் நண்பர்கள் தங்களின் கைவண்ணத்தைக் காட்ட ஆரம்பித்தார்கள். எங்கள் மென்னியைப் பிடித்து விழுங்க ஆரம்பித்தனர்' (வால் ஸ்டிரீட் ஜர்னல், டிச. 2, 2002) என்கிறார் கானா அமைச்சரவையின் உணவு மற்றும் விவசாயத்துறை உயர் அதிகாரி ஒருவர்.

இந்த மோசமான நிலைமைகளிலிருந்து ஏழை நாடுகள் விடுபட வேறு வழி ஏதாவது உண்டா? சில பொதுவான அணுகுமுறைகள் குறித்து கவனத்தில் கொள்ள வேண்டும். பலரும் புரிந்து கொண்டிருக்கின்ற 'தாராள வர்த்தகத்திற்கு' மேலான வர்த்தக ஏற்பாடுகள் மூலம் ஏழை நாடுகளில் உள்ள அடித்தட்டு விவசாயிகளைப் பாதுகாக்க முடியும். ஆனால் மேம்பட்ட 'தாராள வர்த்தக' ஒப்பந்தம் இதற்குத் தீர்வாகாது. ஏழை நாட்டு அரசாங்கங்கள் விவசாயத்தை மாற்றி அமைப்பதற்கு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மட்டும் மேற்கொண்டால் போதாது. பெருமளவிலான விவசாயிகளுக்கு உதவி செய்வதில் சிறப்பான பங்கு வகிக்க வேண்டும். ஏழை நாடுகளில் நகரங்களில் போதிய வேலைவாய்ப்பு கிடைக்கும் வரை, நிலங்களில் மக்களுக்கு வேலை அளிப்பதும், ஏழ்மையையும், பசியையும் போக்கிட அடிப்படை உணவு உற்பத்திக்கு மானியம் அளிப்பதும் முதற் கடமை ஆகும். இதற்கு, சுற்றுச்சூழலுக்கு ஆபத்தில்லாத விவசாய உற்பத்தி, சிறந்த போக்குவரத்து வசதி, சேமிப்பு வசதி போன்றவற்றை ஏற்படுத்தித் தர வேண்டும். லத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் தீவிர நிலச் சீர்திருத்தத்தை அமுலாக்க வேண்டியது அவசியமாகும். தேவை இருக்குமிடத்திலேயே உற்பத்தியும் செய்வதற்கு பதிலாக பல ஆயிரக்கணக்கான மைல்கள் ஏற்றிச் செல்வதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சினை இவ்வுலகில் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. உள்நாட்டிலேயே உணவு உற்பத்தி மற்றும் நுகர்வுக்கான விவசாய முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்விஷயத்தில் சோவியத் யூனியன் வீழ்ச்சிக்குப் பிந்தைய கியூபாவின் அனுபவங்களிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் நலனில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கும் தானிய உற்பத்தியைப் பெருக்க, பெருமளவிலான விவசாய வளர்ச்சிக்கு இது வழிவகுக்கும்.

- தமிழாக்கம்: **இரா. சிசுபாலன்**



படிப்பகம்

www.padippakam.com

**காரல் மார்க்ஸ் பற்றிய இந்த கட்டுரை 1928-ஆம் ஆண்டு எழுதப்பட்டது. 1968 ஆம் ஆண்டு கட்சி வாழ்க்கை - மாத இதழில் முதன் முதலான வெளியிடப்பட்டது. அந்நாளைய மார்க்சிய விளக்கங்கள் தமிழில் எவ்வாறு எழுதப்பட்டன என்பதை அறிய இக்கட்டுரை உதவும். கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முதல் தலைமுறைத் தலைவரான ம. சிங்காரவேலரின் ஆழமான தத்துவ ஞானம் இக்கட்டுரை வழியே பிரகாசமாக வெளிப்படுகிறது.**

**ம. சிங்காரவேலர்**

# கார்ல் மார்க்ஸ்

பொதுவுடமை சித்தாந்தத்திற்கு ஆதிகுரு ஜெர்மன் தேசத்துப் பெரியோனாகிய கார்ல் மார்க்ஸ் என்று சொல்லுவார்கள். இவரை, பொதுவுடமையை மெஞ்ஞானத்திற்குப் பொருந்த சித்தாந்தப்படுத்திக் காட்டியவர் என்றும் சொல்லுவதுண்டு. இவருக்கு முன் சில பொருளாதார ஞானிகள் பொதுவுடமை விஷயமாக வெவ்வேறு அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர். ஆனால் கார்ல் மார்க்ஸ் ஒருவர்தான் பொருளாதார ஞானத்தை மெஞ்ஞான வழிக்குட்படுத்தி சிறந்ததோர் செய்யுளை வெளிப் படுத்தியுள்ளார் என்று சொல்லப்படுகிறது; இவருடைய செய்யுளை தொழிலாளர் வேதமென்றும் கூறுவர். இவர் செய்துள்ள அரிய நூலை ஈங்கு வரைவதற்கு முந்தி, இவரது ஜீவ சரித்திரத்தை சுருக்கமாக இவ்விடம் எடுத்துரைப்போம்.

பொதுவுடமை சித்தாந்த சரித்திரத்தில், கார்ல் மார்க்ஸ் விசேஷ பிரக்யாதி பெற்றவர். கோடானு கோடி தொழிலாளர் உள்ளத்தில் ஓர் சிறந்த பெரியோராக நன்கு மதிக்கத்தகுந்தவர். இவரும் இவருக்கு ஆப்த துணைவராகயிருந்த எங்கெல்சும் பொதுவுடமைக் கட்சிக்கு ஒப்பற்ற தலைவர்கள் எனலாம். நாகரிகம் படைத்த உலகமெங்கும் இவர்களுடைய சீடர்கள் இல்லாமல் இல்லை. உலகமெங்கும் இவ்விருவருடைய சித்தாந்தம் மிக்க வலிமை மிக்கது. இவ்விதமாக ஒரு பொதுவுடமை சரித்திரவாதி எழுதுகின்றார். கார்ல் மார்க்ஸ் யூதர் வம்சத்தில் பிறந்தார். பிறந்த தேதி 5-5-1818 இவருடைய தாய் தந்தையர் இருவரும் கல்வி கேள்வியில் மிகுந்த ஞானம் பெற்றவர்கள். செல்வாக்கில் வளர்ந்தனர். ஆதலால் அந்தக் காலத்து ஜெர்மனியில் எவ்வளவு கல்வி கேள்வி நிரம்பப் பெறமுடியுமோ அவ்வளவும் சிறு வயதிலேயே பெற்றுள்ளார். தந்தையின் கருத்திற்கிணங்க நீதி சட்டங்களைப் படித்துவந்தார். ஆனால், இவருடைய இயற்கைப்படி, சரித்திரத்திலும், தத்துவ ஆராய்ச்சியிலும் தனது மனம் நாட்டம் கொண்டமையால் அதில் மிகவும் ஊக்கம் கொண்டார். 1841-ல் கலாசாலையில் கல்வி முடிந்த பிறகு, தத்துவ வித்துவானாக எண்ணங் கொண்டிருந்தபோதிலும், தாய் நாட்டின் நிலைமை அதற்கு இடங்கொடாமையால், அவ்வழியில் செல்ல சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அந்தக் காலத்தில், தனது மன நோக்கப்படி புரட்சி சம்பந்தமான இயக்கத்தில் சேர முடியாமையாய் இருந்தபோதிலும், ராஜாங்க எதிர்க்கட்சியில் சேர்த்து வேலைசெய்ய ''ரீனிஷ் கெஜட்'' என்ற பத்திரிகையை சேர்த்து அதற்குப் பத்திராதிபராக இருந்தார். அந்தப் பத்திரிகை சம்பந்தமாக உழைத்து வருகையில், ஜெர்மன் அரசாங்க பிற்போக்கு நிலைமையைப் பலமாகக் கண்டித்து வந்த நிமித்தமாக, அந்த அரசாங்கத்தார் அந்தப் பத்திரிகையை அடக்குகின்றனர். அதனை விட்டுவிட நேரிட்டது. 1840-ம் வருஷம் கார்ல் மார்க்ஸ், செல்வாக்குள்ள குடும்பத்தில் ஜென்னி என்ற மாதை மணம் புரிந்தார். இருவரும் நீண்ட வாழ்நாள் முழுதும் இன்பத்திலும் துன்பத்திலும் மனமொத்து உழைத்து வந்தார்கள். மார்க்சினுடைய புரட்சிப் போக்கின் காலமெல்லாம் தனது மனைவிக் கூட இருந்து அவருக்கு நேர்ந்த வறுமையிலும் கஷ்டங்களிலும் மனோதாயத்துடனும் விடாமுயற்சியுடனும் இடைவிடாது இல்லறத்தை நடத்தி வந்தனர்.

பிரெஞ்சு தேசத்து முக்கிய பட்டணமான பாரிஸ் நகரில் வசிக்கையில் ஆங்கு தனது குருவாகிய எகல் என்ற பிரக்கியாதி பெற்ற தத்துவ ஞானியின் சித்தாந்தங்களைக் கண்டிக்கத் துவங்கினார். ஓர் ஜெர்மன் பத்திரிகையில் பல வியாசங்களை எழுதினார். இவ்வித முயற்சியில் ஆழ்ந்த கருத்துக் கொண்டு பத்திரிகைகளுக்கு எழுதி வருகையிலும் ஜெர்மன் அரசியலைக் கண்டித்தும் வந்தார். கண்டனைபைத் தங்கள் நன்மைக்கெனக் கருதாது அரசாங்கத்தார் வெகுண்டு, மார்க்சை பரதேசத்திற்கு விரட்டிவிட்டனர். தனது தாய்நாட்டை விட்டு,



படிப்பகம்

www.padippakam.com

பெல்ஜிய தேசப் பிரதான நகரமாகிய பிரசல்ஸில் சென்று அங்கு தனது குடும்பத்துடன் வசித்து வந்தார். அவ்விடத்தில் 1846-ம் வருஷத்தில் ''சுதந்திர வர்த்தகத்தைப் பற்றியும்'' ''தத்துவ ஞானத்தின் வறுமை'' யைப் பற்றியும் இரண்டு நூல்களை இயற்றினார்.

நூல் இயற்றுதல் மாத்திரம் போதாது. அரசினர் விவகாரத்திலும் புகத்தலைப்பட்டார். பிரசல்ஸ் பட்டணத்தில் தொழிலாளர் சங்கமொன்றை ஸ்தாபித்தார். பிறகு பொதுவுடமை சங்கத்திலும் அங்கத்தினராகி அதிலும் ஊக்கத்துடன் உழைத்து வந்தார். இந்த சங்கம் முதலில் ரகசியமாக சதியாலோசனையை அனுசரித்து வந்ததாகத் தெரிகிறது. எங்கெங்கு ஜெர்மனியில் தொழிலாளர்கள் உண்டானரோ அங்கெல்லாம் பொதுவுடமை சித்தாந்தம் பரவ ஆரம்பித்தது. இந்தப் பொதுவுடமைச் சங்கத்தில் ஆங்கிலம், பெல்ஜியம், பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து முதலிய பிரதேசங்களிலுள்ள தொழிலாளர்கள் கலந்து வேலை செய்துவந்தனர். இந்த பொதுவுடமைக் கூட்டம் ஜெர்மன் தேசத்து தொழிலாளர் இயக்கத்திற்கு பெருத்த ஆதரவாக இருந்து வந்தது. ஆதி முதலில் இந்த பொதுவுடமை கூட்டந்தான் அகில தொழிலாளர் சம்பந்தத்தை வற்புறுத்தியது. இதுதான் இங்கிலீஷ்காரரையும், பெல்ஜிய தேசத்தவர், அங்கேரியர், போலீஷ்காரர் முதலிய தொழிலாளரை அகில தொழிற்சங்க அமைப்பில் சிரத்தை எடுக்கச் செய்தது. முதலில் இந்தச் சங்கமொன்றுதான் அகில தொழிலாளர் சங்கமொன்றை லண்டன் பட்டணத்தில் முதல் முதலில் கூடச் செய்தது.

இந்த பொதுவுடமைக் கூட்டத்தின் ஆதரவில் கூடிய இரண்டு காங்கிரசில் இந்தக் கூட்டத்தின் சித்தாந்தங்களை ஒழுங்குபடுத்தி பிரக்கிபாதி பெற்ற பொதுவுடமை அறிக்கை (கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ) தயாரிக்கப்பட்டது. இதுதான் நாளைக்கும் சிறப்புற்றோங்கும் தொழிலாளர் வேதமென்று வழங்கும் பொதுவுடமை அறிக்கை. இந்த சித்தாந்த நூல் வாயிலாகத்தான் மார்க்சும், அவர் தோழருமாகிய ஏங்கல்ஸும் கலந்து நல்வழி காட்டினர். இந்த அறிக்கை உலகிலுள்ள பல பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அகில தொழிலாளர்க்குரிய சுதந்திரத்தை செவ்வனே தெரிவிக்கும் நூல் இதுவே.

பெல்ஜியத்தின் பிரதான நகரில் ஒரு பத்திரிகையில் வெளிவந்த இவ்வியாசங்களில் ஜெர்மானிய அரசியல் நடவடிக்கைகளை முக்கியமாக போலீசார் அட்டூழியங்கள் கண்டிக்கப்பட்டன. முக்கியமாக மார்க்ஸ் தான் இந்த வாசகங்களுக்கு அதிகாரி. இதனை உணர்ந்த ஜெர்மன் கவர்ன்மெண்டார் பெல்ஜியம் அரசாங்கத்தார், மார்க்ஸை அந்த ஊரை விட்டுத் துரத்தும்படி தூண்டுகோலிட்டனர். ஆனால் அந்த ஊரிலேயே புரட்சி ஒன்று தோன்ற நெருங்கியபடியால், பெல்ஜியம் கவர்ன்மெண்டாரே மார்க்ஸை ஊரைவிட்டுத் துரத்திவிட்டார்கள். அந்த சமயத்தில் பாரிஸ் பட்டணத்தில் எழுந்த தொழிலாளர் குழப்பத்தில், இவருக்கு பாரிசுக்குப் போக இடம் கொடுத்தது. அந்த ஊர் புரட்சிக்காரர் மார்க்சைதங்களிடம் வரவழைத்துக் கொண்டார்கள்.

பாரிஸ் பட்டணத்தில் அந்தக் காலத்தில் ஜெர்மன்காரர்கள் தங்கள் ஊரைக் குடியரசு ஆக்க வேண்டுமென்று சதியாலோசனை செய்து வந்தார்கள். அந்த சமயத்தில் அவர்கள் செய்துவந்த சதியாலோசனையின் பிரயோசனமின்மையும், பிரெஞ்சு ஊரிலிருந்து ஜெர்மனியில் புரட்சி உண்டாக்குவது பயித்தியக்காரத்தனமென்றும், புரட்சி செய்யவேண்டுமானால் ஜெர்மனியிலேயே செய்ய வேண்டுமென்றும், அப்படிக்கில்லாமல் பிரெஞ்சு ஊரிலிருந்து ஜெர்மனியில் புரட்சி செய்யும்பட்சத்தில் அந்தச் சமயத்தில் உண்டாகும் அரசர் அரசுதங்களை அழித்துவிடுமென்றும் குறிப்பிட்டு வந்தார், மார்ச்சு மாதப் புரட்சிக்குப் பிறகு ஜெர்மன் ஊரின் முக்கிய பட்டணங்களில் ஒன்றாகிய கோலோனுக்குச் சென்றார். அவ்விடத்தில் புதிய பத்திரிகை ஒன்றை ஸ்தாபித்தார். இதன் பெயர் புதிய ரைன் பத்திரிகை. இது 1848 வருஷம் ஜூன் மாதம் முதல் தேதி வெளிவந்தது. அந்தக்காலத்தில் தொழிலாளர்களைக் குறித்து ஜனநாயக சம்பந்தமாக பேசவல்ல பத்திரிகை இது ஒன்றே. இந்தப் பத்திரிகையின் தைரியமே தைரியம்! இந்தப் பத்திரிகை முக்கியமாக 1848-ம் வருஷம் பாரிசில் நடந்த புரட்சியை ஆதரித்துப் பேசியது. இதன் கொள்கைகளை பத்திரிகை சொந்தக்காரர்கள் கண்டித்து வந்தும் அரசன் முதல் சேவகன் வரை உள்ள அரசியல் உத்தியோகஸ்தர்களைக் கண்டித்துக் கொண்டே இருந்தது. அந்த நகரமோ 8000 போர் வீரர்களால் காபந்து செய்யப்பட்டது. அதிலுள்ள மிதவாதக் கட்சியினர் இதனை வீணே ஆட்சேபித்தனர். கலோனிலுள்ள அதிகாரிகளும் வீணே இந்த நகரத்தை ராணுவ காபந்தில் வைத்தார்கள். அநேக நாளாக இந்தப் பத்திரிகையை நிறுத்தியும் வைத்தார்கள். அடுத்த நகர அதிகாரிகள் கவர்ன்மெண்டு



படிப்பகம்

www.padippakam.com

நீதிமன்ற அதிகாரிகளைக் கொண்டு இந்த பத்திரி காசிரியர்களின் பேரில் நடவடிக்கை நடத்தவும், கட்டளையிட்டார்கள். இப்படியெல்லாம் இருந்தும் இந்தப் பத்திரிகை விடாது வெளி வந்துகொண்டே இருந்தது. கவர்ன்மெண்டாரையும், முதலாளிகளையும் கண்டிக்க கண்டிக்க அதனைப் படிக்கின்றவர்கள் அதிகப்பட்டுக்கொண்டே வந்தார்கள். 1848-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் ஜெர்மனியில் புரட்சி உண்டானபோது வரி கொடாதிருக்கும்படியும், பலவந்தத்திற்கு பலவந்தத்தை உபயோகப்படுத்தும் படியும் மக்களைத் தூண்டுதல் செய்து வந்தது. 1849-ம் வருஷம் இருமுறை இதனை பிராசிகியூஷன் செய்தார்கள். இந்த இரு முறையிலும் ஜூரிகள் குற்றமில்லை என்று தள்ளிவிட்டார்கள். கடைசியில் ஜெர்மன் புரட்சி அடக்கப்பட்டதும் அளவிருந்த போர் வீரர்களால் காபந்து செய்யப்பட்டதும் அரசாங்கம் தைர்யம் கொண்டு இந்தப் பத்திரிகையை நிறுத்திவிட்டது. இதன் கடைசி பிரசுரம் சிகப்பு மையில் அச்சிட்டு வெளிவந்தது.

மார்க்ஸ் திரும்பவும் பாரிஸ் நகருக்கு வந்தார். வந்த இரண்டொரு வாரத்திற்கெல்லாம் 1849ம் வருஷம் ஜூன் மாதம் 13-ம் தேதி ஒரு புரட்சி நடந்தது. உடனே பிரஞ்சு கவர்மெண்டார் ஊரை விட்டுப் போகும்படி உத்தரவிடவே மார்க்ஸ் பிரான்சை விட்டு லண்டன் பட்டணத்தில் வந்து சேர்ந்தார். அது முதல் தனது அந்தம் வரையில் அங்கே வசித்து வந்தார். 1850ம் வருஷத்தில் தான் ஸ்தாபித்த ''புது ரைன் பத்திரிகை' ஆம்பர்க் பட்டணத்தில் பிரசுரம் செய்ய எத்தனிக்கையில், பிற்போக்கான அரசாங்கத்தார் கெடுபிடியால் அது கைவிடப்பட்டது. 1851ம் வருஷத்தில் இரண்டு சிறு புத்தகங்களை மார்க்ஸ் வெளயிட்டார், இதில் முக்கியமானது பிரஞ்சு தேசத்தில் 1851-ம் வருஷம் நிகழ்ந்த அரசியல் புரட்சியைப் பற்றியது. இந்தப் பிரபல நூலில் மார்க்சின் சித்தாந்தத்தை முதலில் விளக்கிக் காட்டியுள்ளார். இந்தப் புத்தகத்தின் கருத்தை பிறகு எழுதிய உலகப் பிரசித்தி பெற்ற ''மூலதனம்'' என்ற நூலில் விவரித்துக் காட்டியுள்ளார்.

இதன் பிறகு 10 வருஷம் வரை ஆங்கில நாட்டின் பிரதான பட்டணத்திலுள்ள காட்சி சாலையில் அமைந்துள்ள நூல் நிலையத்தில் பொருளாதார விஷயமாக நிறைந்துள்ள நூல்களை இடைவிடாது படித்து வந்தார். அதன் பயனாகத்தான் தொழிலாளர்க்கு அந்த பிரபல நூலாகிய ''மூலதனம்'' என்ற நூல் இயற்றினார். இது மூன்றுபாகங்களாக அமைந்துள்ளது. முதல் பாகம் 1867-ல் வெளிவந்தது. இதன் மத்தியில் இயக்க வேலையிலும் இவர் உற்சாகத்துடன் உழைத்து வந்தார். இவருடைய நூல்களின் கருத்து தொழிலாளர் மனதில் நுழைய ஆரம்பித்தது. எங்கும் தொழிலாளருடைய இயக்கம் பரவிவரத் தலைப்பட்டது தொழிலாளர்பால் தான் வைத்துள்ள எண்ணமும் நிறைவேறும் சந்தர்ப்பம் நேரிட்டது. தன்னுடைய சகாக்களுடன் சேர்ந்து முதல் அகில தொழிலாளர் சங்கமொன்று ஸ்தாபித்தார். இந்த அகில தொழிலாளர் முதற்சங்கம் பிறந்த முதல முற்போக்குள்ள தேசங்கள் யாவும் தொழிலாளர்க்குரிய உரிமையும், அவ்வுரிமைகளைப் பெறாவண்ணம் எதிர்த்து வரும் முதலாளிகளின் மனப்பான்மையும் தெரியவந்தது. இந்தச் சங்கத்தில் மார்க்ஸ் அதிக சிரத்தையுடன் உழைத்து வந்தார். முக்கிய தீர்மானங்கள் யாவும் அவரால் முதல் எழுதப்பட்டது. இதனால் அவருடைய திருநாமம் உலகத் தொழிலாளர் சரித்திரத்தில் இன்றும் என்றைக்கும் நிலைபெற்றுள்ளது.

முதல் அகில தொழிலாளர் சங்கம் ஸ்தாபித்து பிறகு பல இடங்களில் சிறு சிறு சங்கங்கள் ஏற்பட்டன. இதன்றியும் இது புதியதோர் சங்கமாதலால் பல அநாமதேயப் பேர்வழிகள் இந்த சங்கத்தின் நோக்கங்களைத் தெரிந்து கொள்ளாமலே தங்களுடைய சுய நலத்திற்காக இந்த சங்கத்தில் சேர்ந்து கொண்டு கிளர்ச்சி செய்யத் துவங்கினர். கடைசியாக இதற்கு ஆதரவாயிருந்த பாரிஸ் பட்டணத்தில் ஏற்பட்ட தொழிலாளர்களுடைய வர்க்க ஆட்சியும் நிலையற்றுப் போய்விட்டது. இவ்வித காரணங்களால் முதல் அகில தொழிலாளர் சங்கம் கலைக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு பக்கபலமின்மையால் இந்த முதல் சங்கம் கலைக்க நேரிட்டது என்று சொல்லலாம். ஆனால் பல தேசத்தில் தோன்றிய தொழிலாளர் சங்கங்கள் ஒன்றுக்கொண்டு ஏற்கெனவே உண்டாகிய ஒற்றுமை உணர்ச்சியால் ஒன்றுக்கொண்டு சம்பந்தம் கொண்டாடிவந்தன. தொழிலாளர் உலகம் பல விஷயங்களில் மார்க்ஸ் பெயரால் நன்மை பெற்றுள்ளது. அவைகளில் இரண்டொன்றை மாத்திரம் ஈங்கெடுத்து வரைவோம்.

பொருளாதாரக் கோட்பாட்டை மெஞ்ஞான வழியில் கொண்டு வந்தவர்களில் மார்க்ஸ் முதன்மையானவரென்று சொல்லலாம். இவரது அகன்ற கல்வி கேள்வித் திறமையில் தாறுமாறாகக் கிடந்த தொழிலாளர் இயக்கத்தை உலகில் மதிக்கச்



படிப்பகம்

www.padippakam.com

செய்தவர் இவரே. இவருடைய பொருளாதார சித்தாந்தமே தற்கால ரஷ்ய தேசத்து அரசியலுக்கு ஆதாரமாக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இவருடைய பொருளாதார சித்தாந்தங்களைப் பற்றி பல அறிஞர் கள் ஆயிரக்கணக்கான நூல்களை இயற்றி வந்திருக் கின்றனர். உலகில் இவருடைய சித்தாந்தம் ஓர் அரிய சக்தியைப் பெற்றுள்ளது. அகில தொழிலாளர் களுக்கு இவர் இயற்றியுள்ள "மூலதனம்" என்ற உலகப் பிரசித்திப் பெற்ற நூல் தொழிலாளர் வேதமெனகருதப்படுகின்றது.

உலகிற்கு இவர் அருளிய ஞானமென்ன வெனில் மனிதன் உலகில் தோன்றி பொருளைச் சேர்க்க ஆரம்பித்த முதல் மனிதர் இருவகைப் பட்டடார்கள். "உடையவன்" "இல்லாதவன்" என்ற இருவகைப்பட்ட வர்க்கத்தார் தோன்றினார்கள். இவ்விரு வகையாரும் ஒருவருக்கொருவர் எதிர்த்தே வருகின்றனர். இவர்களுக்குள் ஏற்பட்ட பொரு ளாதார வித்தியாசங்களே ஆதிகாலந் தொடங்கி மனித சரித்திரத்திற்கு ஆதாரமாயிருக்கின்றது. உலகில் பரவி வந்திருக்கும் மதக் கோட்பாடுகளும் தத்துவஞான கோட்பாடுகளும், ஒரு இனத்தார் மேம்படவும், மற்றொரு இனத்தார் தாழ்வடைய வும் உண்டாக்கப்பட்டவை. அரசியல் மார்க்கத் திலும் ஓர் இனத்தார் கொள்கைகளே மேம்பட் டுள்ளன. பல கோடி மாந்தர் தாழ்த்தப்பட்டிருப் பதும் இந்த இன வித்தியாசங்களால்தான்.

பல ஆயிரம் வருஷங்களாக மனிதருடைய சேர்க்கைகள் மனிதனர் எண்ணத்தினால் உண்டாய் வந்ததென நினைக்கப்பட்டு வந்தது. ஆனால் மனிதர் எண்ணங்களுக்கு ஆதாரமாயுள்ள பொரு ளாதார நிலைமையை சிந்தித்தாரில்லை. மார்க்ஸ் அவர்களின் பிரபல நூல் வெளிவந்த பிறகுதான், மனிதர் எண்ணங்களுக்கும் அவைகளால் எழும் செய்கைகளுக்கும் ஆதாரம் பொருளாதார நிலைமை எனக் கண்டு தெளிந்தோம்.

மனித வாழ்விற்கு அத்தியாவசியமாய் உள்ளது உணவு. நாம் படும்பாடுகள் அனைத்தும் இந்த உணவின் நிமித்தமே. எவரிடம் இந்த உணவு அதிகப்பட்டதோ அவர்களே அரசர்களாகவும், மந்திரிகளாகவும், வர்த்தகர்களாகவும், நிலச்சுவான் தார்களாகவும் பொருளுடையோராகவும் ஆனார் கள். இந்த வர்க்கத்தாரே அப்பொருள்கள் தங்க ளிடம் நிலைத்திருக்க வேண்டிய சட்டதிட்டங் களும் மதக் கோட்பாடுகளும் மற்ற தந்திரங்களும் செய்து கொண்டார்கள். இதற்குத் தகுந்த கல்வி கேள்விகளும், இராமாயண பாரதங்களும், புராண இதிகாசங்களும் தேர்த்திருவிழாக்களும், கரும கிரியைகளும், மோட்ச நரகங்களும், கோவில் குளங்களும் உண்டாக்கிக் கொண்டார்கள். பொரு ளைக் கைப்பற்றாதவர்கள் பலரும் அறியாமை யால் பொருளுடையோர்கள் சூழ்ச்சிக்கு உட்பட்டு, அவர்கள் செய்துள்ள சூழ்ச்சிகளுக்கு மயங்கப் பட்டவர்கள் ஆனார்கள். உலக சரித்திரத்தை நன்றாகப் படிக்கையில் இந்த இரு இனத்தா ருடைய போராட்டங்கள் அனைத்தும் பொருளையே ஆதாரமாகக் கொண்டிருத்தல் நன்கு விளங்கும்.

இவர் கூறியுள்ள விஷயங்களில் இன்னொரு விசேஷமும் உண்டு. முதலாளிக்கும் தொழிலாளிக்கு முள்ள சம்பந்தா சம்பந்தத்தை நன்றாக விளக்கி காட் டியுள்ளார். பலகாலமாக முதலாளி அனுபவிக்கவும், தொழிலாளி பாடுபடவும் நேரிட்ட காரணங்களை தலைவிதியால் என்று எண்ணிவந்தார்கள். ஆனால் இவர் நெடுங்காலமாக செய்துவந்த சூழ்ச்சியால் இவ் விரு இனத்தாருக்கு ஏற்பட்டுள்ள வித்தியாசங்கள் பொருளாதார வித்தியாசத்தால் நேர்ந்துள்ளன என தெரிய வந்தது. உயிர் வாழ்வுக்கு வேண்டிய பண்டங் கள் உண்டாக்கும் விதங்களாலும், அப்பொருள்கள் மாறும் விதங்களாலும் முதலாளிக்கும் தொழி லாளிக்குமுள்ள வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளன என கண்டு தெரிவித்தார். இந்த பண்டைக் காலத்து பொருளாதாரத் திட்டங்கள் மாறினால்தான் உலகில் அவர்களுக்குள் ஏற்பட்டுள்ள போராட்டங்கள் ஒழியும் எனவும் காட்டினார்.

மூன்றாவதாக, உழைப்புதான் சகலவித செல்வத்திற்கும் ஆதாரமென்று எடுத்துரைத்தார். வாழ்வுக்கு வேண்டிய பண்டங்கள் யாவும் உழைப் பால் உண்டானவை. தொழிலின்றி பண்டங்கள் உண்டாகா. இந்தத் தொழிலுக்குக் காரணகர்த்தா தொழிலாளியாவான். ஆதலின் தொழிலாளியால் உலகப் பண்டங்கள் உண்டாக்கப்படுகின்றன. எவ்வளவு உழைப்பு செலவிடப்படுகின்றதோ அவ்வளவு பண்டங்கள் உண்டாகின்றன. ஆதலின் பண்டங்கள் விலை அனைத்தும், உழைப்பின் விலை யாகின்றது. எதார்த்தத்தில், பண்டங்களின் விலை உழைப்பின் விலையே. இந்தத் உழைப்பின் விலைக்கு பூரண அதிகாரி தொழிலாளி ஆவான். சுருங்க உரைக்கின், பண்டங்களின் விலை அதைச் செய்த தொழிலாளியைச்சேர்ந்தது. இந்த தெளிவான



படிப்பகம்

www.padippakam.com

ரகசியத்தை உணராது, இது எனது என்றும், அது உனது என்றும் உலகம் வாதாடி வந்தது. மார்க்சினுடைய விசாரணையில் இந்த வாதங்களின் பயனற்ற தன்மை விளங்கியதோடு பண்டங்களின் உண்மையான சொந்தக்காரர்கள் இன்னவர்கள் என்பதும் விளக்கமுற்றது.

பண்டங்களின் முழு விலையும், அதற்கு உரியவனாகிய தொழிலாளி அடையாமல் போவதினால், உலகிலுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வு உண்டாயின என்றும் காட்டினார். உலகில் செய்யப்பட்ட ஏதாவது பொருள் ஒன்றை எடுத்துக்கொள்வோம். அதன்மேல் தொழிலாளியின் கைபடுவதற்கு முந்தி விலையற்ற பொருளாய் இருந்தது. அவன் கைப்பட்ட மாத்திரத்தில் அதற்கு விலை மதிப்பு உண்டாகின்றது. அவன் கைபடப்பட அதன் விலையும் அதிகரித்து வருகிறது. அது முடிந்த பிறகு அதன் முடிந்த விலையும் ஏற்படுகின்றது. அந்த முடிந்த விலையை அதனைச் செய்தோன் அடைகின்றானா? முதலாளி என்ற ஒருவன் தோன்றுகின்றான். விலை இல்லாத பொருளைத் தனது என்று சொல்லிக்கொண்டு, தொழிலாளிகளைக் கொண்டு அப்பொருளுக்கு விலையை உண்டாக்கி, அந்த விலையில் பெரும்பான்மை தனக்கு என்றும், கிஞ்சிற்று தொழிலாளிக்கென்றும் பங்கிடுகின்றான். இந்தப் பிரச்சினையின் விளக்கம் பண்டைக்கால முதல் யாருக்கும் விளங்காமலே இருந்துவந்தது. இதனை மார்க்ஸ் விளக்கமுறச் செய்தார். தற்போது உலகில் இருவகைப்பட்ட வர்க்கத்தார் இருந்து வருகின்றார்கள். இவர்களின் பெயர் முதலாளி ஒருவர், தொழிலாளி மற்றொருவர். முதலாளி சகலத்தையும் கைக்கொண்டிருப்பவன். தொழிலாளி தன்னுடைய தொழிலைத் தவிர யாதுமில்லாதவன். யாதுமில்லாதவனாகையால் தொழிலாளி தன்னுடைய தொழிலை வேண்டியவனுக்கு விற்கின்றான். இந்தத் தொழிலைக் கொண்டு முதலாளி அவனுக்கு வேண்டிய பண்டத்தைச்செய்து முடித்துக் கொள்கின்றான். அந்தப் பண்டம் ஆறு மணி நேரத்தில் செய்து முடிந்ததாக வைத்துக்கொள்வோம். இந்த ஆறு மணி நேரத்தில் தொழிலாளி எவ்வளவு வேலைசெய்து அப்பண்டத்தை முடிக்கின்றானோ அவ்வளவு தொழிலை முடிந்த பொருளின் விலையாகும். இந்த விலை நியாயமாக அதனை உண்டாக்கிய தொழிலாளியைச் சேர்ந்ததாகும். இந்த விலையை தொழிலாளி முதலாளியிடமிருந்து பெறுகின்றான் என்று வைத்துக் கொள்வோம். ஆறு மணி நேரத்தில் செய்த பொருளின் விலையை தொழிலாளி பெறுகின்றவனாகின்றான். இவ்விதம் தொழிலாளிதான் செலவு செய்து தொழிலின் முழு விலையைப் பெறுவது நியாயமே. இவ்விதம் நடைபெறுமாகில் முதலாளி வெறுங் கையாகப் போக வேண்டும். முதலாளி அவ்விதம் நடப்பதில்லை. அவனுக்குத் தக்கவாறு ஒரு முறையை உண்டாக்கிக் கொள்கின்றான். அதாவது தொழிலாளியின் வேலையை ஆறு மணி நேரத்திற்கு மாத்திரம் வாங்கவில்லையாம்! ஒரு நாள் முழுதும் அவன் கொடுக்கும் கூலிக்கு வேலை செய்ய வேண்டுமென்று 7, 8, 9, 10, 11, 12 மணி நேரம் வரை அவனிடம் வேலை வாங்கிக் கொண்டு இந்த 7, 8, 9, 10, 11, 12 மணி நேரம் வரை செய்த வேலையின் பயன் அதாவது விலையைத் தான் கைக்கொள்ளுகின்றான். இந்த அதிக வேலையின் விலையைதான் அடைகின்றான். இதைத்தான் முதலாளியின் லாபமென்று கூறுவது இந்த லாபத்திற்கு உண்மையில் தொழிலாளிதான் பாத்திரமுடையவன். ஆனால் இவனுக்கு இந்த லாபத்தில் யாதொன்றும் கிடைப்பதில்லை. இந்த லாபத்தை முதலாளிகள் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டு, வீடு, வாசல், மனை, மாளிகை முதலிய செல்வங்களை உண்டாக்கிக் கொண்டு சுக புருஷர்களாக வாழ்ந்து வருகின்றார்கள். இந்த செல்வங்கள் உண்மையில் உண்டாக்கிய தொழிலாளி வயிற்றுக்குப் போதாத கூலியைப் பெற்றுக் கொண்டு மிகவும் பட்டினியாயிருந்து வருகின்றான். இதுதான் நமது உலக மடைந்திருக்கின்ற நிலைமை.

ஆதலின், உலகில் இருக்கும் செல்வமனைத்தும் பெரும்பான்மையோருடைய வேலையின் பயனாகும். இந்தப் பயன் முழுமையும் சிலரே அடைகின்றனர். வாஸ்தவத்தில் இந்தப் பயனை பெரும்பான்மையோர் அடைய வேண்டியதே நியாயமாகும். உலகம் இவ்வித அநியாய நிலைமையில் நிற்க, உலகில் நீதியும் நியாயமும் யாவருக்கும் கிடைக்கின்றன என்று முதலாளிகள் வழங்கும் சொல் பொய்யெனப்படுமன்றோ! இவ்விதமாக மார்க்ஸ் பெரியார் உலகம் சிறுபான்மையோரால் பெரும்பான்மையோர் வஞ்சிக்கப்படுவதை எடுத்துக்காட்டி இதற்கு பரிகாரமும் இன்னது எனவும் விளக்கியவர் 1883 வருஷம் மார்ச் மாதம் 14-ம் தேதி இயற்கை எய்தினார்.

★ ★ ★



படிப்பகம்

www.padippakam.com

**சுற்றுப்புறச் சூழல் கேடுகள், சந்தைப் பொருளாதாரத்தின் ஒரு பண்பு; உலகமயமாக்கலின் ஒரு கவிதை. இயற்கை வளர்த்தைப் பேண வேண்டிய அவசியத்தையும் முறைகளையும் ஒரு தாய்மைக் கண்ணோட்டத்தோடு விளக்குகிறார், பேராசிரியர் சக்குபாய். பல பரிமாணங்களிலிருந்து முன்வைக்கப்படும் இக்கருத்துக்கள், சமூகவாதிகளுக்கு அறைகூவலாய் அமைகின்றன.**

**எஸ். சக்குபாய்**

# காடுகளின் மீட்சி: செய்ய வேண்டியது என்ன?

"இயற்கைக்கு எதிராக மனிதன் அடைந்திருக்கும் வெற்றிகளுக்காக நாம் நம்மை அதிகமாகப் பாராட்டிக் கொள்ளக்கூடாது. இப்படிப்பட்ட ஒவ்வொரு வெற்றிக்கும் இயற்கை நம்மைப் பழி வாங்கி விடுகிறது. முதல் கட்டத்தில் ஒவ்வொரு வெற்றியும் நாம் எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பது உண்மையே. ஆனால் 2-வது 3-வது கட்டங்களில் முற்றிலும் மாறுபட்ட - நாம் எதிர்பாராத விளைவுகள் ஏற்படுகின்றன. முதல் கட்டத்தில் ஏற்பட்ட வெற்றியை அவை பெரும்பாலும் நிராகரித்து விடுகின்றன" என்றார் ஏங்கல்ஸ். காடுகள் விஷயத்திலும் அப்படித்தான் நடந்துள்ளது.

தனி மரமாகட்டும், தோப்பாகட்டும், விரிந்து பரந்த கானகமாகட்டும், மனித வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், அவனது சுற்றுச்சூழலை நலம்பட ஆக்கித் தருவதில் காடுகள் ஓய்வின்றிச் செயல்பட்டு வந்திருக்கின்றன. காடுகளுடனான மனிதனின் தொடர்பு எப்போதும் அவனுக்கு நன்மையாகவே இருந்து வந்திருக்கிறது. அவனது நலத்துக்கும், வசதிக்கும், ஆரோக்கியத்திற்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் கூடக் காடுகள் உதவி வந்திருக்கின்றன.

ஆலைத் தொழிலின் வளர்ச்சியால் வெளியேறும் - கரியமிலவாயு உலகத்தின் வெப்ப நிலையை அதிகரிப்பதால் பல கேடுகள் விளைகின்றன. ஆனால் இயற்கையிலேயே கரியமில வாயுவை உணவாகக் கொள்ளக்கூடியவை தாவரங்கள். ஒவ்வொரு க்யூபிக் மீட்டர் அளவு மரமும், அரை டன் கரியமில வாயுவை உட்கொண்டு காற்று மண்டலத்திற்குப் பிராண வாயுவைத் தந்து ஜீவ ராசிகளின் வாழ்வுக்கு உத்தரவாதம் தருகின்றன.

மரங்கள், அளவுக்கதிகமான ஓசையை உள் வாங்கிக் கொண்டு அதனால் மனிதனுக்கு வரும் அபாயத்தை நீக்குவதோடு, கதிர் வீச்சையும் தடுக்கின்றன. காற்று மண்டலத்தைக் காடுகள் திறமையுடன் தூய்மைப் படுத்தும் விதத்தைத் தற்போது ஆராய்ந்து வருகின்றனர். காற்றில் உள்ள தூசி தும்புகளையும், கரைந்திருக்கும் நச்சுப் பொருட்களையும் கைதேர்ந்த துப்புரவுத் தொழிலாளி போலக் காடுகள் சுத்தம் செய்து மனிதன் நலமுடன் வாழ வழி வகை செய்கின்றன. ஒரு ஹெக்டேர் புங்க மரங்கள் வெற்றிடச் சுத்திகரிப்புக் கருவி போல (Vacuum cleaner) 68 டன் தூசியை ஓராண்டில் இழுத்துக் கொள்கிறது. அதே நேரத்தில் காட்டிலுள்ள தாவரங்களிலிருந்து வரும் வேதியல் பொருட்கள் காற்றிலே கலந்து பரவி, நோய் பரப்பும் கிருமிகளை அதே இடத்தில் அழிக்க வல்லவையாக இருக்கின்றன. ஆலமர இலைகள் சீதபேதியை உண்டாக்கும் கிருமிகளைத் தூரத்திலிருந்தபடியே (remote control) தாக்கிக் கொல்லக்கூடிய சக்தி பெற்றவை. அரச மரக்காற்று, கர்ப்பப்பைக் கோளாறுகளை நீக்குவதாகச் சோவியத் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர். வேப்பங்காற்றும், நெல்லி மரக்காற்றும் உடலுக்கு நலம் விளைவிப்பதைப் பன்னெடுங் காலத்துக்கு முன்னரே நம் மூதாதையர் அறிந்து வைத்திருந்தனர்.

பழங்காலத்தில் காடுகள் இப்படிச் சிதறிக் கிடக்கவில்லை. கடல்கள் போல், சமுத்திரம் போல் காடுகளும் உலகக் காடுகளாய் உலகளாவி இருந்து வந்திருக்கின்றன. அவை பூவுலகைப் பின்னிப் பிணைத்துள்ள இணைப்புச் சக்தியாகும். சூரிய சக்தியைப் பிரம்மாண்டமான அளவில் எடுத்துக் கொண்டு ஒளிச் சேர்க்கையின் துணை கொண்டு 90% சூரிய சக்தியைக் காட்டிலே பொதிந்து வைத்துள்ள சக்தி ஸ்தலம் (Power House) அது.



படிப்பகம்

www.padippakam.com

உலகின் நீர்ச்சுத்தைப் பெருமளவில் கைப்பற்றிச் செயல்படுவதால் நீராதாரங்களின் மீது அதன் ஆளுகை மிக முக்கியமானதொன்றாக விளங்கு கிறது.

மரங்களின் மகுடமாக விளங்கும் கிளைகளும் அவற்றில் உள்ள பல்லாயிரக் கணக்கான இலை களும் சூரிய வெளிச்சத்தைத் தாமே எடுத்துக் கொண்டு விடுகின்றன. காடுகளின் உள்ளே சூரியனின் வெப்பக் கதிர்கள் நுழைய முடிவ தில்லை. அப்படியே கொஞ்சம் வெப்பம் உள்ளே சென்றாலும் அது வெளியேறா வண்ணம் தடுக்கப் பட்டு விடுகின்றது. அதே போல் வெளிக் காற்றும் உள்ளே செல்வது பெருமளவுக்குத் தடுக்கப்பட்டு விடுவதால் பகலின் வெப்பம் அதிகரிக்கவும் அதே சமயம் இரவு வெப்பம் குறையாமலும் சமச்சீர் தட்பவெப்பத்தைக் காடுகள் தம்மைச் சுற்றி உரு வாக்கிக் கொள்கின்றன. அதேபோல் மண்ணி லிருந்து உறிஞ்சப்பட்ட நீர் அதன் எண்ணற்ற இலை களின் துளைகள் வழியே நீராவியாக வெளியேற்றப் படும்போது குளிர்ச்சி உண்டாகும். அதே நேரத்தில் அப்பகுதியில் உள்ள மேகங்கள் குளிர்விக்கப்பட்டு மழையாக அந்த நீர் காடுகளுக்கே திரும்பவும் சென்று சேர்ந்து விடுகிறது.

காடுகளற்ற நிலப்பரப்பில் ஏற்படுவது போல திடீர் வெள்ளமோ, வறட்சியோ காடுகள் உள்ள இடங்களில் ஏற்படுவதில்லை. காடுகளை அழித்த இடங்களில், வரவேண்டிய காலத்துக்கு முன்னேயே பனிக்காலம் வந்து விடுவதால் அது தோட்டப் பயிர் களுக்கும் விவசாயப் பயிர்களுக்கும் கெடுதலாகி விடுகிறது. காடுகளில் விழும் பனி இலைச் சருகு கள் மீது படுவதால் மண்ணுடன் அதற்கு நேரடித் தொடர்பில்லாது போகிறது. ஆனால் சம வெளி யிலேயோ கட்டாந்தரை மீதில் பனிவிழுந்து உறை கிறது. வெயில் நேரடியாகப் பனிமீது விழுவதால் பனி உடனே உருகி வெள்ளமாகப் பெருகி மண்ணை யும் அரித்துக் கொண்டு ஓடி வயல் வெளிகளை மூழ்கடித்துப் பயிர்களைச் சேதப்படுத்தி விரைவில் கடலை அடைந்து விடுகிறது. வெள்ளத்தால் அவதிப் பட்டது போதாதென்று திரும்பவும் வறட்சியாலும் அந்தப் பகுதி தவிக்க வேண்டியதாகிறது.

காட்டுப் பகுதியில் பனியின் மீது விழும் வெப்பக் கதிர்கள் குறைவாக இருப்பதால் பனி உருகும் அளவும் குறைவாக இருக்கும். உருகிய நீர் மெல்ல ஓடி வருவதால் பூமி அதை உறிஞ்சிக் கொள்ள அதிக அவகாசம் இருப்பதாலும், காட்டுப் பூமியின் வளமிக்க மண்பரப்பு அதிக நீரை உறிஞ்சிக்கொள்ளும் திறன் படைத்ததாலும் நீர் நிலத்தடிக்குச் செல்வது அதிகரிக்கிறது. அத்துடன் காட்டுப் பகுதியில் உள்ள சில பட்டுப்போன மரங் களின் காய்ந்த வேர்ப்பகுதியினூடே இந்தத் தண்ணீர் மண்ணில் நேராகவும், பக்கவாட்டிலும் எல்லாத் திசைகளிலும் வேகமாக இறங்க முடி கிறது. ஒரு பக்கம் நிலத்தடி நீர் மட்டம் உயரு கிறது. மறுபக்கம் வருகின்ற தண்ணீரின் வேகம் மேலும் குறைக்கப்படுகிறது. அதனால் மேலும் நீர் பூமியில் இறங்க உதவுகிறது.

மரங்களின் அடிப்பாகமும், புல்லும், புதர் களும், இலைச் சருகுகளும் வேகத் தடையாய் விளங்கக், காட்டு நதியின் வேகம் சரிவுகளிலும் கட்டுப்படுத்தப்பட்டு அங்கும் நிலத்தடி நீரின் அளவை அதிகரித்துச் சமவெளிக்கு வந்து சேரு கிறது. பனி பெய்யும் நாடுகளில், பனி மெல்ல மெல்ல உருகுவதாலும், வேகம் தடைப்படு வதாலும் வெள்ளமாக விரைந்தோடாமல் ஆறு நிதானமாக ஓடி வருகிறது. கோடைக் காலத் தில் கூட ஆற்றில் நீர் இருந்து கொண்டே இருக் கிறது. அதனால் ஆற்றுப் பாசனத்தை நம்பி வாழும் விவசாயிகள் தங்கள் பயிர்களைப் பாதுகாக்க முடிகிறது. எனவே நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் அடர்ந்த காடுகளை உருவாக்குவதன் மூலம் வெள்ளமும் அதே சமயம் வறட்சியும் தடுக்கப் படுகிறது. நிலத்தடி நீர் மட்டமும் உயருகிறது. நீர்ப்பிடிப்புப் பகுதியிலிருந்து நீர்த்தேக்கங்களுக்கு ஒழுங்காகவும் நிலையாகவும் நீர்வரத்து இருந்து வருகிறது. அத்துடன் தண்ணீர் குளிர்ச்சியாகவும், சுத்தமாகவும், இனிதாகவும் இருக்கிறது. மண் அரிப்பும் அதனால் நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு குறைதலும் தடுக்கப்படுகிறது.

மழைக்காலத்திலும் காடுகள் மழையின் வேகத்தைத் தன் அடி, முடி இரண்டாலும் தடுத்து நிறுத்துகிறது. மழைத் துளிகள், குடைபிடித்தாற் போன்று கவிந்து கொண்டிருக்கும் இலைகள் மீது விழுந்து வேகம் குறைந்து தரைக்குத் துளித் துளி யாக வந்து சேருகிறது. பாய் விரித்தாற் போல் கிடக்கும் சருகுகள் அவற்றைத் தாங்கிக் கொள்



படிப்பகம்

www.padippakam.com

கின்றன. வேகம் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் மழை நீர் மெல்ல ஓடி முன்போலவே கணிசமான அளவுக்கு நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தியபடி, சரிவுகளில் மெல்லச் சரிந்து நீர்த் தேக்கங்களையும் சமவெளிகளையும் அடைகின்றது மழை நீர் பலவிதத் தடைகளைக் கடந்து வருவதால் வேகம் குறைந்து சமவெளியை வந்தடையக் கொஞ்சகாலம் பிடிக்கிறது. அதனால் மழை நின்ற பின்னரும் கூட நீர்வரத்து ஆற்றிலே இருந்து கொண்டிருக்கிறது. மழை நீரும் காட்டு வழியாக வருவதனால் பெரு மளவுக்குத் தூய்மையாகவே உள்ளது. மிதந்து வரும் சருகுகள் போன்ற பொருட்களைத் தவிர வேறு எந்த மாசும் இருப்பதில்லை. **சுருங்கக் கூறின் காடுகள் ஆறுகளின் அன்னையர் ஆவர். ஆறுகளைப் பெற்றெடுத்து வளர்த்து நதிகளாக்கி மனிதனுக்குத் தரும் அன்புமிக்க அன்னையராகவே காடுகள் செயல்படு கின்றன. ஆனால், இந்த காடுகளோ காலனி ஆட்சிக்காலம் தொடங்கி லாபத்துக்காக அழிக்கப்பட்டு வருகின்றன.**

ஜம்மு-காஷ்மீர் காடுகளிலுள்ள பைன் மரங் களிலிருந்து கிடைக்கும் ரெசின் விலை மிகவும் அதிகமானதென்பதால் எந்த விஞ்ஞான முறையை யும் பயன்படுத்தாமல் மரங்களை வருத்தி ரெசின் எடுத்ததனால் 10 லட்சம் பைன் மரங்கள் அழிந் திருக்கின்றன. மீதமுள்ளவற்றில் 60% மெல்ல அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. உத்தரப் பிரதேசம், இமாச்சல பிரதேசம் காடுகளின் பைன் மரங்களுக்கும் இதே கதிதான்.

கடந்த உலகப் போரின்போது பிரிட்டிஷ் போர் வீரர்களின் தேவைக்காக நீலகிரி மலைச்சரிவுகளி லிருந்து மரங்கள் வெட்டப்பட்டு உருளைச் சாகுபடி செய்யப்பட்டது. மரங்களது வேர்களின் படிமானம் அற்றுப் போனதும் மலைகளின் சரிவுகளில் மண் சரிவு ஏற்பட ஆரம்பித்து விட்டது. மழைக்காலங் களில் உடைப்பெடுத்து வாய்க்கால்களும் பிளவு களும் ஏற்பட்டு மண் அரிப்பும், நிலச்சரிவுகளும் அதிகமாகி வளமிக்க மண், கடலில் சென்று வீணாகிறது.

தேயிலைத் தோட்டங்கள் உருவாக்க காடுகள் அழிக்கப்படுவதால் உடனடியாக விவசாயிக்குப் பண வரவு ஏற்பட்டாலும் நாளடைவில் அது எத் தனை பெரிய இழப்பை உண்டு பண்ணியது என்பது நீலகிரி அனுபவம் தரும் பாடம். மண்ணரிப்பும், வெள்ளமும், மலைச் சரிவும், நிலத்தடி நீர்மட்டம் குறைவதும் போன்ற பல கேடுகள் தாம் நாம் கண்ட பலன்கள்.

இமாச்சலப் பிரதேசத்தின் சம்பல் பள்ளத் தாக்கில் ஆப்பிள் தோப்பை விரிவுபடுத்த ஓக் காடுகளைத் தீக்கிரையாக்கினர். இதேபோல் கன்னியா குமரி மாவட்டத்தில் கிராம்பும், ரப்பரும் பயிரிடக், களக்காட்டின் பின்னாலிருந்த அடர்ந்த காடு களை அரசும் காட்டிலாகா அதிகாரிகளும் சேர்ந்து தீவைத்து அழித்தனர்.

உலகிலேயே அதிக அளவு மழையைப் பெற்றுவந்த சிரபுஞ்சியில் இன்று மக்கள் குடி நீருக்காக நீண்ட தூரம் அலைய நேரிட்டுள்ள, அவலக்கதைதான். அங்கிருந்த காடுகளை அழித்தது தான் இதன் காரணமாகும். காடுகளில் மரங்கள் வெட்டப்பட்டு வருவதால் நாடு, வறட்சியின் மற்றும் வெள்ளத்தின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கிறது. வறட்சி நிவாரணமும், வெள்ள நிவாரணமும் நாட்டின் நடவடிக்கைகளில் தவறாது இடம்பிடித்து விடுகின்றன.

இமயமலைச் சரிவுகளிலிருந்து (தேஹ்ரி - கார்வால் பகுதியில்) மரங்களை வெட்டி, மலையை மொட்டையடித்த பின்னர், வந்த தீங்குகளைப் பார்த்த அப்பகுதி மக்கள் விழித்துக் கொண்டு விட்டனர். பஞ்சாயத்தைக் கூட்டி வசூல் செய்து இரண்டு காவலர்களை நியமித்து எவரும் மலைச்சரி வுகளுக்குப் போக முடியாதபடி தடை செய்தனர். கால்நடைகள் (ஆடு, மாடுகள்) கூட மேய்ச்சலுக் குப் போக அனுமதி மறுக்கப்பட்டதால் காட்டின் புல் தரை, செடி கொடிகள், எஞ்சிய மரங்கள் காப் பாற்றப்பட்டன. அத்தோடு கொஞ்சம் மரக்கன்றுக ளையும் புதிதாக நட்டுவைத்தார்கள். இந்தக் கடும் நடவடிக்கைக்குப் பின்னர் 13 ஆண்டுகள் கழித்து அந்த மலைச்சரிவுகளுக்குப் பசுமை திரும்பி வந்தது. விட்டுச் சென்ற பறவைக் கூட்டங்களும் திரும்பி வந்தன. தண்ணீரும் கிடைத்தது என்று சொல்ல வேண்டியதில்லை. மக்களின் ஒற்றுமையும் அதிரடி நடவடிக்கைகளும் நல்ல பயனைத் தந்தன.

இதே தேஹ்ரி - கார்வாலின் இன்னொரு பகுதி யில் காலியாக்கப்பட்ட மலைச்சரிவு ஒற்றை மனித



படிப்பகம்

www.padippakam.com

னின் இடைவிடாத முயற்சியால் புதுப்பொலிவு பெற்றது. காட்டையும் அதன் பயனாய் ஜீவநீரூற்றை யும் பெற்று மகிழ்ந்தனர் அப்பகுதி மக்கள்.

கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன்னர் தன் அருமைத் தம்பியையும் அன்பு மனைவியையும் விஷ்வேஷ்வர் தத் சக்லானி என்பவர் இழந்து வாடினார். மனைவி நோய்வாய்ப் பட்டிருந்த காலத்தில், ஒக் மர நிழலில் இளைப்பாறும் போது எல்லாம் அவருக்கு நோயின் கடுமை சற்று தணிந் திருக்கும். தன் மனைவியின் மறைவுக்குப் பின் இதை நினைவு கூர்ந்த சக்லானி, காலியாகக் கிடந்த இமய மலைச் சரிவுகளில் ஒக் விதைகளை நட்டு நீர் ஊற்றி மரக்கன்றுகளை வளர்த்தார். விதை நடும் போதும், ஊன்றிய விதை கன்றாகி வளர்ந்தபோது அதை எதுவும் நாசமாக்காமல் பார்த்துக் கொண்ட போதும் அவர் சந்தித்த எதிர்ப்புகள் ஏராளம். ''பைத்தியக்காரன்'' என்று ஊர் மக்கள் ஏளனம் செய்தனர். ஆட்சியாளர்களும் காட்டிலாகா அதிகாரி களும் இவர் ஏதோ அந்த நிலங்களை எல்லாம் எடுத்துக் கொள்வாரோ என்று சந்தேகித்துத் தந்த தொல்லைகளுக்குப் பஞ்சமில்லை. அதுமட்டுமா? எந்த எதிர்ப்பும் அவர் முயற்சியைத் தடுக்க முடிய வில்லை. அவரது தன்னலமற்ற உயர்ந்த குறிக் கோளைப் போல ஒக் மரங்கள் மலைச்சரிவுகளில் தலை நிமிர்ந்து நெடிதுயர்ந்து நிற்கின்றன. அந்த ஒக் மரக்காடு அந்தப் பகுதி மக்களுக்குத் தந்த பரிசாக ஜீவ நீர் ஊற்று ஒன்றுமிருக்கிறது. அவரது பாசமிகுந்த சேவைக்குச் சான்றாக ஆண்டு முழுதும் அந்த ஊர் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்து வருகிறது. 1986-இல் இந்திய அரசு அவ ருக்கு விருக்ஷமித்ரா பரிசு தந்து பாராட்டிக் கௌர வித்தது. அக்கம் பக்கத்து கிராமத்தார் தங்களுக்கும் மரம் நடுவதற்கும், காட்டை உருவாக்கி, நீராதாரங் களைப் பெறுவதற்கும் ஆலோசனை வேண்டி அவரிடம் வருகின்றனர். தற்போது பள்ளிச் சிறுவர் களையும் ஈடுபடுத்தி அவர்களுக்குக் காடு வளர்ப் பதில் ஈடுபாட்டை வளர்த்து வருகிறார்.

மஹாராஷ்டிர மாநிலத்தின் ராலிகன் சித்தி என்ற கிராமத்தில் அன்னா ஹசாரியா என்ற ஓய்வு பெற்ற படைவீரரின் தியாகத்தாலும் இடைவிடாத முயற்சியாலும், மக்களை ஒன்றுபடுத்தி வழிநடத்திச் சென்றதாலும் இன்று அந்தக் கிராமமே சுயதேவை களைப் பூர்த்தி செய்து கொண்டு இந்தியாவின் மாதிரி கிராமமாக மிளிர்கிறது. இத்தனைக்கும் அர சிடமிருந்தும் சரி மற்ற ஏஜென்சிகளிடமிருந்தும் சரி உதவிகளைப் பெறாமலேயே சாதித்திருக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தை பிறந்ததும் அதன் பெற்றோர் ஒரு மரக்கன்றை ஊருக்குச் சொந்தமான இடத்தில் நடுகின்றனர் அதன் பிறகு அந்தக் குழந்தையின் ஒவ்வொரு பிறந்த நாளன்றும் மரக்கன்று நடுதல் தொடர்கின்றது. ஒரு பெரிய காடு அங்கே உருவாகி விட்டது. அதன் பயனால் வெள்ளம் கிடையாது நிலத்தடி நீரும் 30 அடிக்குள் இருந்து வருகிறது. சீரிய முறையில் நீர் சேகரிப்பும் பராமரிப்பும் எல்லா மக்களின் உதவியோடும் நடந்து வருகிறது.

தமிழகத்தின் அரச்சலூரைச் சேர்ந்த விவசாயி நல்லசாமி கீழ்பவானி பாசனக்கரையில் புதர்களை அகற்றிக் கால்வாயின் இரு மருங்கும் 6 கிலோ மீட்டர் தூரத்துக்குத் தன் பணத்தைச் செலவு செய்து மரங்களை நட்டு வளர்த்திருக்கிறார். பெரிதாக வளர்ந்து நிற்கும் மரங்கள் மண் அரிப்பிலிருந்து கால்வாய்க்கரையைக் கெட்டிப்படுத்திக் காத்து வருகிறது.

M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு வனத்துறை மற்றும் அப்பகுதி மக்கள் அனைவரும் சேர்ந்து கடல் அரிப்பைத் தடுப்பதற் காக பிச்சாவரம் பகுதியில் கடந்த 6 ஆண்டுகளாக வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்ததால், இதுவரை 625 ஏக்கர் பரப்பில் கன்றுகள் நடப்பட்டு காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மரங்களை நேசித்த இங்கிலாந்தைச் சேர்ந்த வனத்துறை அறிஞர் ரிச்சார்டு செயின்ட் பார்பே பேக்கர், ஒரு முறை நேருவைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த போது, நேரு இந்தியாவின் பாலை வனங்களை என்ன செய்வது என்று கேட்டார். அதற்கு அவர் ''மரங்களை நடுங்கள்'' என்றார்.

முன்பெல்லாம் திருமணத்தின் போது மரக் கன்று ஒன்றினை நடுவார்கள். தற்போது அது ஒரு சடங்காக மட்டும் மாறிவிட்டது. நடுவதுபோல் பாவனை செய்வதோடு சரி. மரங்களை மதித்த காலம் மலையேறிவிட்டது. தல விருட்சங்களாகக் கோவிலில் மரங்களைக் கௌரவப்படுத்துவதைப் பார்க்கிறோம் அவ்வளவுதான்.

தன் அன்னை நட்டு வளர்த்த புன்னை



படிப்பகம்

www.padippakam.com

மரத்தைத் தன் மூத்த சகோதரியாய் மதித்துக் கொண்டாடிய சங்க காலத்திய மரபு தற்போதில்லை என்றாலும், மரங்களைத் தங்கள் குழந்தைகளாகப் பாவித்து வளர்க்கும் மனிதர்களும் இருக்கிறார்கள். பெங்களூர் அருகில் ஹூலிகல் கிராமத்தில் பிள்ளைப் பேறில்லா ஏழைத் தம்பதியர் சாலையின் இரு மருங்கிலும் ஆலமரங்களை வளர்த்து வந்தனர். அதனால் தங்களுக்குப் பிள்ளைப் பேறு கிட்டும் என்று எதிர்பார்த்து அது கிட்டாதபோது அந்த மரங்களையே பிள்ளைகளாகப் பேணி வளர்த்தனர். சுமார் 240 மரங்களை அந்தத் தம்பதிகள் சேர்ந்து நட்டு வளர்த்தனர். கணவன் இறந்த பின்னரும் தன்னந்தனியாக மனைவி அந்தப் பணியைத் தொடர்ந்து செய்திருக்கிறார். சாலையில் செல்வோர்க்கு நிழல் தந்து கொண்டு அவர்களது சேவையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன அந்த மரங்கள். சிக்கா திம்மக்கா என்ற அந்த மூதாட்டிக்குத் தற்போது பரிசுகளும் பட்டயங்களும் தேடி வருகின்றன. தன் கணவர் இருந்தபோது இவை வரவில்லையே என்று வருந்துகிறார். அவர்கள் நட்ட மரங்களின் நிழலில் ஓய்வெடுக்கும் வழிப்போக்கர்கள் கூட அந்த ஏழைத் தம்பதிக்கு உதவியதில்லை. ஒருவேளை சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்ட நிலையிலும் கூட அவர்கள் இந்த வேலையைத் தொடர்ந்து செய்து வந்துள்ளனர்.

மரங்களுக்காகத் தங்கள் உழைப்பை மட்டுமல்ல உயிரையும் தந்த பிஷ்னாயிஸ் பிரிவினர் கேஜ்டாலி என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்தனர். இயற்கையைப் பாதுகாத்து அத்துடன் இயைந்த வாழ்க்கையை நடத்தி வந்துள்ளனர். ஒரு சமயம் அந்நாட்டு மன்னன் புதிய அரண்மனை ஒன்று கட்டுவதற்காகத் தன் வீரர்களை அனுப்பிக் காட்டிலிருந்து மரங்களை வெட்டிவரச் சொன்னான். கேஜ்டாலி கிராமத்துக்குச் சென்று அருகிருந்த காட்டில் உள்ள மரங்களை அவர்கள் வெட்ட ஆரம்பித்தனர். இதையறிந்த அந்த கிராம மக்கள் ஓடி வந்து மரங்களை வெட்ட வேண்டாம் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டும் அவர்கள் பாட்டுக்கு சரமாரியாக மரங்களை வெட்டிச் சாய்த்துக் கொண்டே இருந்தனர். இதனைக் கண்ணுற்ற அம்ரித்தேவி என்ற பெண் ஓடிச் சென்று ஒரு மரத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அதை வெட்ட வேண்டாம் என்று தடுத்துப் பார்த்தாள். அடுத்த வெட்டில் அந்த மரம் மட்டுமல்ல அவளும் சாய்ந்தாள். இதைக் கண்டு வேதனையுற்று திரண்டிருந்த கிராமத்து மக்கள் ஆளுக்கொரு மரத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அவற்றை வெட்டாமல் தடுக்கப் பார்த்து முடியாது தாங்களும் கொலையுண்டார்கள். மாலைக்குள் 363 மனிதர்களும் மரங்களோடு மாய்ந்தனர். இதைக் கோள்வியுற்ற மன்னன் மிகவும் வருந்தினான். இந்த அரக்கச் செயலுக்காக அம்மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். தனது கொடிய ஆட்களைத் திருப்பி அழைத்துக் கொண்டான். பிஷ்னாயிஸ் மக்களே சிப்கோ இயக்கத்தின் முன்னோடிகள்.

ராஜஸ்தான் பாலைவனத்தில் பிஷ்னாயிஸ் மக்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் வாழும் பகுதிகள் பாலையின் நடுவே சோலைகளாக வளம் கொழிக்கின்றன. தங்கள் கொள்கைக்காக மரணத்தைத் தழுவிய அந்த 363 தியாக தீபங்களையும் கௌரவிப்பதற்காக அவர்கள் ஆண்டுதோறும் கேஜ்டாலி கிராமத்தில் கூடுகின்றனர்.

இவையெல்லாம் காடு காக்க நடைபெற்ற போராட்ட வரலாற்றின் சில பக்கங்கள்தான். ஆனால் காடுகளின் மீட்சிக்கு செய்ய வேண்டியது என்ன? இருக்கும் காடுகளைக் காத்து, புதிய காடுகளை உருவாக்கி அவற்றை விரிவாக்கி இந்தியாவின் நிலப் பரப்பில் 33% காடுகளாக்க வேண்டும். பழங்குடியினரைக் காட்டின் எதிரிகளாகக் கருதாமல், அவர்களைக் காடுகளின் பாதுகாவலர்களாக விளங்கச் செய்து, அவர்கள் காட்டுப் பொருட்களைச் சேகரித்துத் தங்கள் வாழ்க்கைக்காகப் பயன்படுத்த உதவ வேண்டும்.

இந்தியாவில் உள்ள காடுகளின் நிலை இன்னும் திடப்படவில்லை. உலக சராசரியாக ஒரு மனிதனுக்கு 0.64 ஹெக்டேர் காடு உள்ளது. ஐரோப்பாவில் இது 1.3 ஹெக்டேர் ஆகவும் சீனாவில் 0.1 ஹெக்டேர் ஆகவும் உள்ளது. ஆனால், இந்தியாவில் இது 0.06 ஹெக்டேராகவும் உள்ளது.

இந்தநிலையை மாற்ற வேண்டும். மக்களிடம் விழிப்புணர்வை உண்டாக்குதல் மிக மிக அவசியம். ரிசர்வ் காடுகளோடு சமுதாயக் காடுகளையும் வளர்த்தாக வேண்டும்.

★★★



படிப்பகம்

www.padippakam.com

நீரின்றி அமையாது உலகும், வரப்புயர நெல்லுயரும் என்றெல்லாம் ஆன்றோர் கூறியுள்ளனர். ஆனால், நீர்பாசன முறை பற்றிய ஒருங்கிணைந்த திட்டம் அரசிடமில்லை. முன்னர், இடைக்காலத் தில், எவ்வாறு இந்த முயற்சிகள் செயல்பட்டன என்பதை நுணுக்கமான சான்றுகள் மூலம் தெளிவாக வும் ஆழமாகவும் ஆராய்கிறது, இந்தக் கட்டுரை. சென்ற இதழில் வெளியான இவருடைய கட்டுரையின் ஒரு தொடர்ச்சியாக இது அமைகிறது. புதுக்கோட்டை வட்டாரம் ஆய்வுத்தளமாக இருந்தாலும், தமிழகம் முழுக்கப் பொருந்துவதாக ஆய்வின் எல்லை அமைந்துள்ளது.

கி.இரா. சங்கரன்

# புதுக்கோட்டை வட்டாரத்தில் நீர்ப்பாசனமும் சமூகத் தொடர்பும்

சமூகத்திற்கும் இயற்கைச் சூழமைவுக்கும் இடையேயான உறவு என்ற கருத்தின் பின்புலத்தி லேயே வரலாற்றுக்காலப் புதுக்கோட்டை வட்டாரத் தைக் களமாகக் கொண்டு இக்கட்டுரையில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. வெவ்வேறு உள்ளூர் தட்பவெப்பநிலைகளும் (Ecology / Eco-type) நிலப்பரப்பியலும் (Geography) வரலாற்றுக் காலத் தில் வெவ்வேறு வகையான நீர்ப்பாசன முறையை யும் சமூக படிநிலையையும் கொண்டுள்ளன என்பது ஒரு 'மாதிரிப் பாடமாக' சொல்லப்பட்டுள்ளது (hypothetical statement) (பின்னிணைப்பு).

நீர்உரிமை, நீர்மேலாண்மை, நீர்நிலைகளின் பராமரிப்பு ஆகியவற்றுக்கும் சமூகத்திற்கும் இடையே யான தொடர்பு பற்றிய செய்திகள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்துதான் கல்வெட்டுச் சான்றுகளில் கிடைக்கின்றன என்றாலும், நீர்ப்பாசனத் தொழில் நுட்பம் கி.பி. 750 வாக்கிலேயே இங்கு நன்கு வேரூன்றி விட்டதாகத் தெரிகிறது. அத்தொழில் நுட்பத்தை விளக்கும் சான்றுகளாக குளங்களில் இன்றும் பயன்பாட்டில் சில குமிழி / மடைகள் உள்ளன. அவை ஆய்வில் கண்டறியப்பட்டன. அத்தொழில்நுட்ப வளர்ச்சி பற்றிப் பேசுவதை விடவும் அது சமூகத்தில் ஏற்படுத்திய போக்கு பற்றி அறிவது முக்கியமானது.

ஆறுகள், வாய்க்கால்களை விடக் குளங்கள் அதிகமாகப் பயன்பாட்டில் இருப்பது போன்றே குளமுறை நீர்ப்பாசனம் பற்றியே அதிகமான செய்தி கள் கல்வெட்டுகளில் கிடைக்கின்றன. சோழராட் சிக்கு முன்பே இந்நீர்ப்பாசனமுறை நன்கு வளர்ந்து விட்டாலும் அவ்வாட்சியில் இவ்வட்டாரம் வாய்க் கால் முறை நீர்ப்பாசனத்திற்குத் திரும்பிச், சோழர் சரிவோடு மீண்டும் குளமுறை நீர்ப்பாசனத்திற்கு மாறிக்கொண்டது. இதே கருத்து பிற அறிஞராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.[1] ஆனால் காலம் நெடுக குளமுறை நீர்ப்பாசனம் பயன்பாட்டில் இருந்து வருவதற்கு இவ்வட்டார நிலப்பரப்பியலின் தன்மை யும், தவறும் பருவமழையும், எதிர்பாராத மழை வெள்ளமுமே காரணமாயிருப்பதாகத் தெரிகிறது.[2] வெள்ளத்தில் சிதைந்த குளம் கல்வெட்டில் 'உடை குளம்' என்று குறிக்கப்பட்டுள்ளது. உடைகுளம் பற்றிய குறிப்புகளும் அவற்றை விற்பது சீரமைப்பது பற்றிய செய்திகளும் 1150க்குப் பிறகே அதிக மாகக் கிடைக்கின்றன. இக்காலத்திலிருந்தே அதிக எண்ணிக்கையிலான குமிழி / மடைகள் குறிக்கப் படுகின்றன. இக்கால வெள்ளப்போக்கினைச் சோழர் சரிவோடு இணைத்துப் பார்க்கலாம். நிலப்பரப்பின் மேல் கிடைக்கின்ற நீரைக் குளங்களில் சேமித்துச் சிக்கனமாகப் பயன்படுத்த குமிழி / மடைகள் நூதன மாகப் பயன்படுத்தப்பட்டாலும் அத்தொழில் நுட்பம் தண்ணீர்க் கட்டுப்பாட்டிற்கும் சமூகத்தைக் கட்டுப் படுத்தவும் அதிகாரத்திலிருப்பவர்களுக்குப் பயன் பட்டிருக்க வேண்டும். வெவ்வேறு மையங்களி லிருந்த அரையர்கள், அரசுகளின் வளர்ச்சி இதைப் பற்றியே ஏற்பட்டிருக்க வேண்டும்.

## நீர் உரிமை

நிலப் பரிமாற்றம், நீருடன் கூடிய நிலப்பரி மாற்றம் பற்றிப் பேசும் கல்வெட்டுகளிலேயே நீர் உரிமை பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. நீர் உரிமை இரு வகையில் இருந்துள்ளது. (1) குளங் களிலுள்ள நீரின் மேல் பகிர்ந்த உரிமை (Shared right) (2) நிலப்பரிமாற்றத்தின்போது குளங்களையும் சேர்த்து அளிப்பது. இவ்வகையில் குளங்கள் அதன் கூறுகளுடன் சேர்த்து சில கூடுதல் உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன (supplemental rights).

1. James Heitzman, Gifts of Power : Lordship in an Early Indian State, New Delhi, 1997 P. 51.
2. வெள்ளத்தில் சிதைந்த குளம் 'உடைகுளம்' எனப்பட்டுள்ளது (92). 'குளமும் உடைத்து வயலும் பருமரக் காடாக்கி' (345) 'குளமும் வயலும் உடைகுளப்பாழாய் வயலும் வரம்பழிந்து தரிசாய் காடாய் நெடுங்காலம் பயிர் செய்வாரின்றி கிடக்கையில்' (349). 'குளம் உடைகுளமாகையாலும் இந்நிலம் நெடுநாள் பயிரேறாமல் வரம்பழி தரிசாய் கிடக்கையாலும்' (406). 'உடைகுளமாய் கிடக்கையில்' (421) போன்ற கல்வெட்டுக் குறிப்புகள் வெள்ளக்காலங்களிலும் வெள்ளத்தைத் தொடர்ந்து வந்த காலங்களிலும் வேளாண்மை பாதிக்கப்பட்டுள்ளதை விளக்குகிறது.



படிப்பகம்

www.padippakam.com

நில உரிமையைப் பெறுதல் என்பதே நீர் உரிமையைப் பெறுவதையும் கொண்டுள்ளது. பரிவர்த்தனை செய்யப்பட்ட நிலத்துடன் வழங்கப் பட்ட நீர்உரிமையை **நில விழுக்காடு நீர், இந் நிலத்துக்கு நிலபோதியிலே நீர், நிலத்தால் உள்ள நீர் நிலம் பெறு தண்ணீரும்** போன்ற கல்வெட்டுத் தொடர்கள் விளக்குகின்றன.[3] இத் தொடர்கள் ஒவ்வொரு விளை நிலமும் அதனதற்குத் தேவையான அளவு நீர் பெறும் உரிமை கொண்டிருந் தது என்பதைப் புரிய வைக்கிறது. குளங்கள் விற்கப் படும்போது அவற்றுடன் சேர்த்து அதன் கூறுகளும் விற்கப்பட்டுள்ளன என்பதைக் **குளமும் குளப் பரப்பும் குளவாரியும், குளமும் குளவாய்த் தலைகளும், வயலும் குளங்களும்**[4] போன்ற கல்வெட்டுத் தொடர்கள் விளக்குகின்றன.

நீரின் மீதான மேலாண்மையைப் பொதுவாக ஊரார் தவிர வட்டாரத் தலைவர்களான இருக்கு வேள், அதனையூர் நாடாள்வான், நிஷதராஜன், கல்வாயில் நாடாள்வான் போன்றோரும் கொண் டுள்ளார்கள்.

ஊரார்களின் நீர்மேலாண்மை இருவழிகளில் நிகழ்ந்துள்ளது. (1) ஊர்க்குளத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட நேர அளவிற்கு நீரை விடுதல் (2) விற்கப் பட்ட / தானமாக்கப்பட்ட நிலத்திற்குப் போதுமான நீரை ஊர்க்குளத்திலிருந்து வெளியிடுதல். நீர் வெளி யேற்றும் நாழிகை குறிப்பிட்ட நேர அளவினால் குறிக்கப்பட்டுள்ளது. நீர் விடும் இந்நாழிகை நேரங்கள் ஊருக்கு ஊர் வேறுபட்டுள்ளன. (ஒரு நாழிகை என்பது 24 நிமிடங் களாகும்).

**முறை வழக்கம்**

நீர் வழங்குதலில் 'முறை வழக்கம்' பின்பற்றப் பட்டுள்ளது. அது **முன்முறை, முட்டுமுறை, போகுமுறை**[5] என்று பலவாறாக சொல்லப்பட் டுள்ள முறை வழக்கப்படி நீர் விடுதலில் குமிழி / மடைகளின் தொழில்நுட்பம் மிகவும் பிரதான மானது. நீர்ப்பாசன முறையில் குமிழி / மடை களின் தொழில் நுட்பத்தையும் அவற்றின் அறி முகத்தையும் நீர்மேலாண்மைக்குத் துணைபோகும் கண்டுபிடிப்பாகவே கருத வேண்டியுள்ளது.[6] ஏனெனில் இத்தொழில்நுட்ப அறிமுகத்தால் குறிப்பிட்டவர் களுக்குக் குளங்களிலிருந்து நீரை விடவும் / நிறுத்தவும் முடியும். இக்கருத்து இக்கட்டுரையின் இரண்டாம் பகுதியில் மற்றொரு கோணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட கால அள விற்கு நீர்விடுதல் பற்றிய குறிப்புகள் இல்லை யென்றாலும் பரிவர்த்தனைக்குட்பட்ட நிலங் களுக்குப் போதிய அளவுக்கான நீர் வழங்கப்பட்ட தாகவே கல்வெட்டுக் குறிப்புகள் உள்ளன. 'இந் நிலத்திற்கு நில போதியிலே நீர்ப்பாயக்கடவதாக' 'இக்குளத்தில் நிலவிழுக்காடு நீரும்'[7] போன்ற கல்வெட்டுத் தொடர்கள் இதனை விளக்குகின்றன.

குளம் / கிணறுகளிலிருந்து நீர் விற்கப்பட் டுள்ளதைக் குறிக்கக் **குளமிரண்டிலும் ஒன்று**

---

3. IPS; Nos. 285, 405, 283, 866.
4. IPS; Nos. 90, 262, 825.
5. "முன்முறை" என்பதை ஏற்கனவே பயன்பாட்டில் இருந்து வரும் முறை வழக்கத்தை பின்பற்றுவதாகவும் அல்லது முறை வழக்கத்தில் நீர் விடுதலில் குறிப்பிட்டவருக்கு முதன்மை தரப்படுவதை குறிப்பதாகவும் கொள்ளலாம். முட்டு முறை என்பதற்கு R. Tirumalai - T.M. Srinivasan - ஓரளவிற்கு ஒத்த கருத்தினையே கொண்டுள் ளனர் (R. Tirumalai, Studies in the History of Ancient Township of Pudukottai, P. 367; T.M. Srinivasan, Irrigation and Water Supply: South India from 200 BC to 1600 A.D., P. 167, 233). முட்டு முறை எனும் சொல்லின் முட்டு எனும் முன்னொட்டிற்கு **நிறைதல்** எனும் பொருள் உள்ளது. (Tamil Lexicon. 3301). இப்பொருள் விளக்கத்தின் பின்னணியில் முட்டு முறை என்பதை இம்முறை வழக்கத்தில் குறிப்பிட்ட நிலத்திற்கு போதிய அளவு நிறைகிற வரைக்கும் நீர் வழங்கப்படுதலை குறிப்பதாகக் கருதலாம். கள ஆய்வில் உழவர்களிடம் கேட்டபோதும் முறை வைத்து நீர்ப்பாய்ச்சுவதில் 'போதுமான நீர் கிடைக்குமாறு' பார்த்துக் கொள்வதாகவே பதில் கிடைக்கிறது. போகுமுறை என்பதிலுள்ள முன்னொட்டான **போகு** என்பதற்கு **'நிரம்புதல்'** எனும் பொருள் உண்டு. (Tamil Lexicon P. 2959). இப்பொருள் விளக்கப்படி பார்த்தால் முறை வழக்கப்படி நீர் வழங்குதலில் போதுமான அளவிற்கு நீர் வழங்கப்பட்டிருப்பதாகக் கருதலாம்.
6. இதே போன்றதொரு கருத்தை ராஜன் குருக்கள் பாண்டிய நாட்டு நீர்ப்பாசனம் பற்றிய தம் ஆய்வில் கூறியுள் ளார் (Rajan Gurulkkal, 'Aspects of the Reservoir System of Irrigation in Early Pandyan State, Studies in History, No. 2. pp. 156-164).
7. IPS; Nos. 405, 283.



படிப்பகம்

www.padippakam.com

பாதி, கிணற்றில் செம்பாதி குளமிரண்டிலும் S Í ‰ ß Ô¾® J ß Ö £Õv }[8] என்ற தொடர் களால் அறியலாம்.

## வட்டாரத் தலைவர்கள்

ஊரார்களைப் போன்றே நாடாழ்வான், அரையன் போன்ற வட்டாரத் தலைவர்களும் நில பரிவர்த்தனையின் போது நீர் உரிமை வழங்கும் மேலாண்மையையும் பெற்றுள்ளனர். நீரை வழங்குவதற்கு மட்டுமின்றி பெறுகிற உரிமையையும் பெற்றிருந்தனர். 1136-இல் அதளையூர் நாடாழ்வான் ஊர்க்குளம், ஊருணி, ஏம்பல் போன்ற பல நீர்நிலைகளிலும் நீர் பெறும் உரிமை கொண்டுள்ளதாகத் தெரிகிறது.[9] 1263-இல் காங்கேயன் எனும் வட்டாரத் தலைவர் வளத்து வாழ்வித்த நல்லூர் எனும் ஊரைத் தானமாக ஒரு தட்டானுக்கு வழங்கும்போது ஊருணி, கிணறு, செங்கழு நீர்க்குண்டு போன்ற நீர் நிலையையும் சேர்த்தே தந்துள்ளார். இது தவிர பெரியகுளம் எனும் நீர் நிலையிலிருந்து 12 நாழிகை நீரும் வழங்கப்பட்டுள்ளது.[10] 1237-ஆம் ஆண்டு புலிவலத்து மூன்று கூற்று அரையர்கள் மூன்று குளங்களிலிருந்து நீர் பெறும் நிலங்களைக் கோயிலுக்குத் தானமாக வழங்கியுள்ளனர்.[11] இவையெல்லாம் வட்டாரத் தலைவர்கள் பல குளங்களில் நீர் உரிமை பெற்றுள்ளதைத் தெரிவிக்கிறது.

முழுக்குளத்தின் மீதான உரிமை பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள் 1030-1400 வரையிலான காலத்திலேயே கிடைக்கின்றன. பெரும்பாலும் ஊரார்/ நகரத்தாரே அவற்றை விற்பவராய் இருந்துள்ளனர். அவற்றை வாங்கியவர் கோயில்களும் சில தனியாருமாவர்.[12] விற்பனைக்குப்பிறகு அவற்றுள் சில சீரமைக்கப்பட்டிருப்பதும் அப்பணிக்காக ஊராரும் நகரத்தாரும் பிறர் உதவியையும் பெற வேண்டிய தேவை இருந்துள்ளது என்பதும் தெரியவருகிறது. இப்போக்கு நீர்நிலைகளுடன் குடிக்காடுகள் உருவாக்கப்பட்டதைக் காட்டுகின்றன. குளங்கள் அவற்றின் வயல்களுடன் சேர்த்து விற்கப்பட்டுள்ளன. புதிய விளைநிலங்கள் உருவாக்கத்திற்காக நிகழ்ந்ததுபோல் தோன்றுகிறது. இது தனியார்களின் நீர் மேலாண்மைக்கும் வழிவிட்டுள்ளது.

## நீர்நிலைகளின் பராமரிப்பு

கல்வெட்டுகளில் குளம், ஏரி, குண்டு, பள்ளம், ஏம்பல், ஏந்தல் என்று குறிப்பிடப்பட்ட சுமார் 200 குளங்களில் ஒரு சில பெரிய குளங்கள் இன்றும் அதன் வரலாற்றுக் காலப் பெயர்களிலேயே அழைக்கப்படுவதே[13] நீர் நிலைகளின் பராமரிப்பில் ஒரு நெடிய பாரம்பரியம் இவ்வட்டாரத்திற்கு இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. 60 குளங்களில் இதுவரை குமிழி / மடைகள் இருப்பது தெரிய வந்துள்ளன. அவற்றுள் சில இன்றும் இயக்கத்தில் இருப்பது[14] அவற்றின் தொழில் நுட்பம் சிதையாமல் பின்பற்றப்பட்டு வருவதையே காட்டுகிறது. நீர் நிலையின் பராமரிப்பு என்பது அவற்றை உருவாக்கும் வேலையுடன் இணைந்த ஒன்றே. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மக்களின் பயன்பாட்டில் இருந்து வந்த இயற்கையான பள்ளங்கள் கூடக் குளங்களாகப் பண்டை நாட்களில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் குளங்களிலும் குளங்களுக்குள்ளேயும் உள்ள தொல்லியல்

---

8. IPS; Nos. 314, 395.
9. IPS; Nos. 124.
10. IPS; Nos. 424.
11. IPS; Nos. 313.
12. 1013-இல் விக்கிரமகேசரி சதுர்வேதிமங்கலத்துச் சபையார் ஒரு குடிக்காட்டை அதனுடன் சேர்ந்த குளத்துடன் கோயில் பணியாளர்களுக்கு விற்றுள்ளனர். அதே ஆண்டில் தெலிங்ககுல காலபுரத்து நகரத்தார் சில நிலங்களையும் அரங்கனேரியையும் மலைக்கடம்பூர் கோயில் பணியாளர்களுக்கு விற்றுள்ளனர் (90, 91). 1157-இல் சார் என்ற ஊரின் அரையன் ஒரு குடிக்காட்டையும் அதனுடன் சேர்ந்த பெற்றானேரி, பிடாரனேரியையும், புன்னங்குடி ஊராருக்கு விற்றுள்ளார் (135). 1213-இல் அருவிமாநகரத்து வியாபாரி சாத்தனூர் ஊராரிடமிருந்து இரு குளங்களையும் அவற்றின் வயல்களுடன் சேர்த்து வாங்கியுள்ளார் (167).
13. கவிர்குளம் (கவிநாட்டுக் கண்மாய்), வல்லநாட்டுக்குளம், பசும்பிறைக்குளம், பள்ளிக்குளம், பாலையூர்க்குளம், நெரிஞ்சிக்குடிக் குளம், நெய்வாசல் குளம், விசலூர்க் குளம், அருமைக்குளம் (அணிமத ஏரி) போன்றவை மிகவும் குறிப்பிடத்தக்கவை.
14. அருமைக்குளம் / நார்த்தாமலை; நெய்வாசல் குளம் / நெய்வாசல்; பெருஞ்சுனையூர்க்குளம் / பெருஞ்சுனையூர்; தொடையூர் / நார்த்தாமலை ; பெருங்குளம் / கோட்டையூர்; பள்ளிக்குளம் / நார்த்தாமலை - கல்வெட்டுகளில் பேசப்பட்டுள்ள இக்குளங்களில் குமிழி / மடைகள் இன்னும் பயன்பாட்டில் இருப்பது கள ஆய்வில் அறியப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

தடயங்களை காண்பதன் மூலம் அறிய முடிகிறது. சில குளங்கள் மட்டும் திட்டமிடப்பட்டு உருவாக்கப் பட்டுள்ளன. இயற்கையாக அமைந்துள்ள கற்பாறை களை குளங்களின் கரைகளாக இருத்திக்கொண்டு சில குளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இம்முறை நீர்ப்பாசன சமூகத்திற்கு இரு நன்மைகளைத் தந்துள்ளது: 1) குளம் உருவாக்குவதற்கு அதிகமான மனித உழைப்பு தேவைப்பட்டிருக்காது (2) இயற்கை யாக அமைந்த கற்பாறைகள் மழை, வெள்ளக்காலங் களில் குளங்களை சேதமடைய விடாமல் இன்றள வும் காக்கின்றன.[15] இப்படி இயற்கையான பாறை களைக் கரைகளாகத் தெரிவு செய்வதன் மூலம் குளக் கரைகளைப் பராமரிக்கும் பணி எளிதாகிறது. இதை வெட்டி, செய்து, கல்லி, போன்ற கல்வெட்டுச் சொற்கள் விளக்குகின்றன. கி.பி. 850-லேயே குளம் உருவாக்கும் முயற்சிகள் துவங்கிவிட்டன என்றாலும் 12-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே, அதிக அளவில் குளங்கள் உருவாக்கப்பட்டதாகத் தெரி கிறது. அரையன், உடையான், பட்டங்களைப் பெற்ற வர்கள் இவ்வேலைகளைச் செய்துள்ளனர். இவ் வேலைக்கு ஊராரும் ஒத்துழைப்பு தந்துள்ளனர்.[16] பரம்பையூர் உடையான் வயலகத்து ஊரவிடம் நிலம் வாங்கி அந்நிலத்தில் குளம் வெட்டுவித்த தற்காக அக்குளத்திலிருந்து குறித்த நேர அள விற்கு அவருடைய நிலத்துக்குத் தண்ணீர்விட ஒப்புக்கொண்டனர். இவற்றிலிருந்து ஊராரும் மதிப்புறு பட்டப் பெயர்களைக் கொண்டவர்களும் கூட்டாக நீர் உரிமை கொண்டிருந்ததையும் குளங் களை உருவாக்கியதையும் தெரிந்து கொள்ளலாம். மற்றொரு சந்தர்ப்பத்தில் கழனி வாசல் எனும் ஊரின் உடையான் வடமதுரையில் குளம் செய்வித் ததனால் அதனைப் பராமரிக்கும் உரிமையையும் அவருக்கே தந்து அதற்கான நிலமான ஊருணிப் புறத்தையும் வடமதுரை ஊரவர் அவருக்குத் தந்துள்ளனர். குளம் உருவாக்குதலின் மூலம் இவ் வுடையான் இரு வெவ்வேறு ஊர்களில் தம் ஆளுமையைப் பெற்றிருக்கிறான்.

## முதலீட்டு முறை

முதலீட்டு முறையில் குறிப்பிட்ட அளவில் பொன்னோ, நெல்லோ ஊராரிடம் முதலீடு செய்யப் பட்டு அம் முதலீட்டிலிருந்து வரும் **பொலிசை யைக்** குளப் பராமரிப்புக்கு பயன்படுத்தியதாகத் தெரிகிறது. இப்படி முதலீடு செய்தவர்களில் தனி யாரும் ஊராரும் அடங்குவர். நெரிஞ்சிகுடிக் குளத் தில் பருவகாலங்களில் தூர் வாரும் பணிக்காகச் சுமார் 850-ஆம் ஆண்டில் ஒரு தனியார், குறிப் பிட்ட அளவு நெல்லினை நெரிஞ்சிக்குடி ஊரா ரிடம் ஒப்படைத்துள்ளார். அதிலிருந்து பெறும் பொலிசையினை அக்குளத்தின் சீரமைப்புக்குப் பயன்படுத்துவர். அதே ஆண்டு மற்றொரு தனி யார், குறித்த அளவு பொன் முதலீடு செய் துள்ளார்.[17] முனியந்தை ஊரின் அய்நூற்றுவர் பேரேரியின் பராமரிப்புக்காக முனியந்தை ஊரா ரிடம் அய்நூற்றுவர் இரு காசுகளையும் மூன்று தனியார்கள் முறையே மூன்று காசுகளையும் தந்துள்ளனர்.[18]

## குளப்பட்டி

ஒரு குறிப்பிட்ட குளத்தின் பராமரிப்பிற்காகத் தனியாரிடம் விடப்பட்ட ஒரு குறிப்பிட்ட அளவுள்ள நிலம் குளப்பட்டி, ஏரிப்பட்டி, ஊருணிப்புறம்[19] என்ற வாறு குறிக்கப்பட்டுள்ளது. அந்நிலத்தின் மொத்த விளைச்சலில் ஒரு பகுதியினை அக்குளப் பராமரிப் பிற்கு அந்தத் தனியார் தரவேண்டியிருக்கும். சில சந்தர்ப்பங்களில் குளப்பட்டி என்பது அந்நிலப் பகுதிகளிலிருந்து வரும் வருமானத்தை மட்டும்

---

15. அருமைக்குளம் / நார்த்தாமலை; சித்தனவாசல் குளம் / சித்தன்னவாசல்; பெருங்குளம் / மைலாப்பூர்; நெரிஞ்சிக் குடிக் குளம் / நெரிஞ்சிக்குடி; பசும்பிறைக்குளம் / நார்த்தாமலை போன்றவை.
16. வாலிவடுகன் எனும் தனியார் ஒருவர் குளம் செய்வித்த செய்தி ''வாலிவடுகளான கலிமூர்க்க இளவரையன் செய்த குளம் வாலி ஏரி'' என்று சொல்லப்பட்டுள்ளது (17). 1153-இல் கம்பரையன் எனும் பட்டப்பெயர் உடை யவர் திருநலக்குன்றத்தின் கோயில் அலுவலர்களிடம் நிலம் வாங்கி அந்நிலத்தில் குளம் வெட்டியுள்ளார். அது உமை யாண்டி ஊருணி என்றழைக்கப்பட்டுள்ளது (உமையாண்டி ஊருணி என்று பேருமிட்டுக் கல்லி இத்தன்மம் செய்வித் தான் 188). 1253-இல் உடையான் பட்டம் பெற்றவர் 'தன்மமாக வெட்டின அரவத்துடையான் தண்ணீர் ஊருணி' என்ற குறிப்பும் உள்ளது (346). 1300-இல் பரம்பையூரின் உடையான் வயலகத்து ஊரவரிடம் நிலம் வாங்கி குளம் வெட்டியுள்ளார் (இவர் வெட்டி விக்கிற குளத்தில் 490). 1518-இல் கழனிவாசல் எனும் ஊரின் உடையானும் இது போன்ற பணியினைச் செய்துள்ளார் (725).
17. IPS; Nos. 59, 60.
18. IPS; Nos. 61, 71.



படிப்பகம்

www.padippakam.com

குறிக்கிறது.[20] குளப்பட்டி நிலம் நிலஉடைமையிலும், நீர் உரிமையிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதாகத் தெரிகிறது. தமிழகத்தின் பிற வட்டாரங்களில் இருந்தும் தனியார்கள் குளப்பட்டி நிலங்களின் மேல் அக்கறை காட்டியுள்ளனர். 994-ஆம் ஆண்டில் சோணாட்டின் மேற்கிள்ளி மங்கலம் எனும் ஊரில் தனியார் ஒருவர் புதுக்கோட்டை வட்டாரத்தின் தென்கவிர் நாட்டிலுள்ள கவிர்குளத்தில் நீர் ஸ்ரீபெறும் ஒரு குளப்பட்டி நிலத்திற்கான ஆவண ஓலையைத் தென்கவிர் நாட்டு நாட்டாரிடம் ஒப்படைத்துள்ளார்.[21] மற்றொரு ஆண்டு (1232) மலை மண்டலத்திலிருந்து (இன்றைய கேரளம்) வந்த தனியார் ஒருவருக்கு விற்கப்பட்ட குளப்பட்டி நிலத்துக்கு 3 நாழிகை நீரையும் விசலூர் ஊரார் தம் ஊர் குளத்திலிருந்து தந்துள்ளார்.[22] 1295-ஆம் ஆண்டில் செம்பாடு எனும் ஊரின் ஊராரும், புத்தாம்பூர், கைக்குறிச்சி என்ற ஊர்களின் அரையர்களும் சேர்ந்து 'ஆண்டார்கள்' என்பவர்களுக்குச் செம்பாட்டு ஊர்க்குளத்திலிருந்து நீர் பெறும் குளப்பட்டி நிலத்தின் மேல்வாரம் உரிமையைத்தந்துள்ளனர். பதிலாக, ஆண்டார்கள் அவ்வூர்க் குளத்தை ஆழப்படுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டது.[23] குளப்பட்டி நிலத்தின் மேல் அரையர்களின் ஈடுபாடு காலம் செல்லச் செல்ல அதிகமாகியது. இக்கருத்து கட்டுரையின் இரண்டாம் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. குளப்பட்டி நிலம், அதற்கு நீர் விடும் உரிமை அது தொடர்பான ஆவணம் அனைத்தையும் தம்மிடமே தக்கவைத்துக் கொள்வது போன்ற செயற்பாடுகளெல்லாம் குளப்பராமரிப்பில் ஊரார்களுக்கு இருந்த ஆளுமையைக் காட்டுகின்றன. ஆனால் பின்னாட்களில் அரையர்கள் ஊரார்களை விட வலிமை பெற்றவர்களாகும்போது குளப்பட்டியுடன் சேர்ந்து குளச் சுவந்திரமும் அவர்கள் கைக்கு வந்து விடுகிறது.

(ஆ)

**குமிழி / மடைகள்**

32 ஊர்களில் தொல்லியல் தளங்கள் (archaeological sites) நீர் நிலைகளின் அருகிலும் குளங்களின் நீர் வரத்துக்கான வாய்க்கால்கள், வாரிகளிலேயும் கூட உள்ளன; சில, குளங்களின் உட்பகுதியிலேயே உள்ளன.[24] அவற்றுள் 25 ஊர்கள் வரலாற்றுக்கு முந்தைய காலந்தொட்டு இருந்து வருவதாகத் தோன்றுகிறது. அவற்றின் வரலாற்றை எழுத வரலாற்றின் முந்தைய காலத்திற்கு தொல்லியல் சான்றுகள் பயன்படும் என்றால் வரலாற்றுக் காலத்திற்கு அவ்வூரிலுள்ள கோயில் தளங்களும் / குமிழிகளும் அவற்றிலுள்ள கல்வெட்டுகளும் பயன்படுகின்றன. இவை அவ்வூர்களின் தொடர்ச்சியான வரலாற்றை அறிய உதவுகின்றன; அங்குள்ள நீர்

19. டி.எம். சீனிவாசன், குளப்பட்டி என்பதற்கு "Grant of land for the maintenance of tanks" என்றும் (T.M. Srinivasan, op. cit., p. 232), ஆர். திருமலை, குளப்பட்டி என்பதற்கு "Land endowed for maintenance of tanks" என்றும் கூறுவர் (R. Tirumalai, op. cit., 1981. p. 365).
20. வாகவாசல் எனும் ஊரில் உள்ள பூலாங்குளம் எனும் குளத்தருகே நடப்பட்டுள்ள கல்லிலுள்ள கல்வெட்டுச் செய்தி.
21. IPS; No. 28 ஆவண ஓலை அந்நாட்டார் வசமேய் குடுத்து கவிர்க்குளத்துக்கு குளம்பட்டியாக.
22. IPS; No. 301. குளப்பட்டி விலைக்குற விற்க. இந்நிலத்துக்கு பெரிய குமிழியிலே போகு முறையில் மூன்று நாழிகை நீர் விடுவோமாகவும்.
23. IPS; No. 477. செம்பாட்டுக்குளத்துக்கு குளப்பட்டியாக விட்ட ஆண்டார்கள் வேண்டின குடிக்கு அடைச்சு கண்காணிச்சு மேல்வாரம் கொண்டு குளம் வெட்டிவிப்பார்களாகவும். ஆண்டார்கள் என்பதற்கு ஆர். திருமலை "homogeneous group with Identical functions" என்று பொருள் தருகிறார் (R. Tirumalai, Land Grants and Agrarian Reactions in Cola and Pandya Times, 1987 P. 58).
24. தொல்லியல் தளங்களைக் கொண்ட இவ்வனைத்து ஊர்களிலும் மடையுடன் குளங்களும், கோயில்களும் உள்ளன. பெரும்பாலான கோயில்கள் கல்வெட்டுகளை கொண்டுள்ளன. கோயில்களையும் குமிழி / மடைகளையும் கட்டமைக்கும் Granite மீதான தொழில் நுட்பத்தை தச்சரே மேற்கொள்கிறார் என்பதை இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும். சில ஊர்களில் கோயில்களுக்குத் தரப்பட்ட புனிதத்தன்மை குமிழி / மடைகளுக்கும் தரப்பட்டுள்ளது. ஆனால் குமிழி / மடைகளை பெரும்பாலும் ''விளிம்புநிலை'' மக்களே வழிபடுவதை களஆய்வில் அறிய முடிகிறது. **தொல்லியல் தளங்கள், கோயில்கள், மடைகள் அமைந்துள்ள ஊர்கள்:** குளத்தூர், நார்த்தாமலை, நெரிஞ்சிக்குடி, திருநலக்குன்றம், திருக்கட்டளை, பாலையூர் - குளவாய்ப்பட்டி, சுந்தரம், நீர்ப்பழனி, அன்னவாசல், பரம்பையூர், ஒல்லையூர், பெருங்கோளியூர், திருவேள்பூர், வைத்தூர், வெள்ளை நல்லூர், வாழைக்குறிச்சி, புத்தாம்பூர், புலிவலம்.



படிப்பகம்

www.padippakam.com

நிலைகள் காலம் நெடுகத் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்து வருவதை இவை உணர்த்துகின்றன.[25]

குமிழி மடைகளின் வடிவமைப்பு வேலைகள் கி.பி. 750-இன் பிற்பகுதியிலேயே துவங்கிவிட்டன. ஏறத்தாழ 18-ஆம் நூற்றாண்டு வரை அவற்றைப் பற்றிய செய்திகள் கிடைத்தாலும் அவற்றின் வடிவமைப்பில் உருவான வளர்ச்சி நிலை பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள் சுமார் 1076 முதல் 1300 வரையிலான கல்வெட்டுகளிலேயே கிடைக்கின்றன. இச்செய்திகள் பெரும்பாலும் அந்தந்த குமிழி / மடைகளிலேயே கிடைக்கின்றன / வெட்டப்பட்டுள்ளன. மொத்தம் குறிக்கப்பட்டுள்ள 60-இல் 16 மட்டுமே அவை நாட்டப்பட்ட செய்திகளைக் கொண்டுள்ளன. 7 மட்டுமே சீர் செய்யப்பட்டுள்ளன. அதாவது புதுக்கியவை. அதே எண்ணிக்கையில் மறுவடிவமைப்பு செய்யப்பட்டுள்ளன.[26] இவ்வேலைகள் 800களிலேயே துவங்கின. சமூகத்தில் வெவ்வேறு தளங்களில் இருந்தவர்கள் இவ்வேலைகளைச் செய்துள்ளனர். அவர்களுள் 900க்குப் பிறகே அரையன், பேரரையன், உடையான், நாடாழ்வான் பட்டம் பெற்றவர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். பெண்கள் மிகச் சிலரும் தனியாரும் குமிழி / மடை தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ளனர். 1000 - 1300 காலகட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான குமிழி / மடைகள் குறிக்கப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் அதிக எண்ணிக்கையில் பதியப்பட்டுள்ள நீர் நிலைகள், விளைநிலப் பெயர்கள், குடிக்காடுகள் இவற்றுடன் ஒப்புநோக்கத்தக்கது. இதே காலத்தில்தான் வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, எள்ளு, கருணை போன்ற விளை பொருட்கள் அதிகமாகப் பேசப்படுகின்றன. இக்காலகட்டத்தில் 20 நகரங்கள் இருந்துள்ளன என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

குமிழி / மடைகளை புதுக்குதல் மறுவடிவமைத்தல் என்பதை நீர்நிலைகளிலுள்ள நீரைக் கட்டுப்படுத்தி முறை வைத்து குறிப்பிட்டவர்களுக்குத் தண்ணீர் விடவும் நிறுத்தவுமான தொழில்நுட்பத்தோடும் அத்தொழில்நுட்பத்தின் மூலம் மேலதிகாரத்தைப் பெறும் இயக்கத்தோடும் இணைத்துப் பார்க்க வேண்டும்.[27]

25. இக்குளங்களில் ஒரு சில மட்டுமே ஆற்றிலிருந்து நீர் பெறுகின்றன; பெரும்பாலானவை வாரிகளிலிருந்தே பெறுகின்றன. ஆறுகளிலிருந்து குளங்களுக்கு ''நீர் போகுதல்'' என்பதை விடவும் வாரிகளிலிருந்து குளங்களுக்கு நீர் போகுதல் என்பது காலத்தால் முந்தியதாக இருக்கலாம். ஏனெனில் ஆற்றைத் திருப்புவதை விடவும் வாரிகளை குளத்திற்கு திருப்புதல் எளிதாக அமையலாம். இது ஒரு குறிப்பிட்ட ஊர் மக்களுக்கு இடையேயான வேலை. ஆனால் ஆறு பல ஊர்களிடையே இயங்குவதால் அவ்வூர் மக்களை திரட்டும் பணி மிகவும் பிற்காலத்திலேயே ஏற்பட்டிருக்கும்.

26. இச்செய்திகள் கொண்ட கல்வெட்டுகளை கரு. இராசேந்திரன் வெளியிட்டுள்ளார் (ஆவணம், 1-3). அவற்றில் பெறப்பட்ட செய்திகளின் அடிப்படையிலேயே இப்பகுதி அமைந்துள்ளது. சீரமைக்கப்பட்ட, மறுவடிவமைப்பு செய்யப்பட்ட குமிழி / மடைகள் உள்ள ஊர்கள் ஒப்பீட்டளவில் பிற ஊர்களை விட வளம் குறைந்தவை. குமிழி / மடைகள் அமைந்துள்ள ஊர்கள் பெரும்பாலும் கற்பாறைகளை கொண்டுள்ளன. கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள குமிழிகள் கொண்ட ஊர்கள் வளம் குன்றியிருப்பதால் அவற்றையும் இடைக்காலத்தில் வேளாண் பொருளியலுக்கு உட்படுத்தி புதுப்பிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அவ்வூரில் உள்ள மக்கள் புன்பயிர் விளைச்சலிலிருந்து பின்னாட்களில் நன்செய் வேளாண்மைக்கு வந்திருக்கலாம். ஆனால் கள ஆய்வில் சேகரிக்கப்பட்ட உள்ளூர் கதைகளின்படி (Local Legends) துவக்க காலங்களில் காராள வெள்ளாளர்கள் அவ்வூர்களில் வசித்து வந்ததாகவும் பின்னாட்களில் போர்க்குலத்தவரான 'கள்ளரும் மறவரும்' குடியேறியதாகவும் சொல்லப்படுவதை போர்க்குலத்தவர் வேளாண்மைக்கு திரும்பியதாகவே கருத வேண்டியுள்ளது. இக்குடியேற்றத்தை K.R. Venkatarama Ayyar கானாடு கோனாடு சண்டையோடு இணைத்துப் பார்க்கிறார். (K.R. Venkata Rama Ayyar, A Mannual of the Pudukkottai State, Vol. II, Pt. II, 1944). **கல்வெட்டு பொறிக்கப்பட்ட குமிழி / மடைகள் உள்ள ஊர்கள்:** ராசாளிப்பட்டி, திருவேள்பூர், மதியநல்லூர், சித்துப்பட்டி, நார்த்தா மலை, குளத்தூர், கொடும்பாளூர், மேலப்பளையூர், கண்ணனூர், விராலூர், தாயினிப்பட்டி, அரசமலை, சேரனூர், ஒடுக்கூர், கோட்டையூர், நெல்வேலி, பேரையூர், ராசிபுரம், பேயால், வாழைக்குறிச்சி, சேனையக்குடி, அரியூர், பெருஞ்சுனையூர், உப்பிலிக்குடி, வடசேரிப்பட்டி, சத்தியமங்கலம்.

27. புதுக்கோட்டை வட்டாரத்தில் பிராமண கருத்தியலின் அடிப்படையில் அமைந்த கட்டுமானக் கோயில்கள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பே கற்குமிழிகள் அறிமுகப்படுத்தப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. இராசாளிப்பட்டி, திருவேள்பூர், மதியநல்லூர் இம்மூன்று இடங்களிலும் சுமார் 750 வாக்கில் குமிழிகள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் அங்குள்ள பிராமணக் கருத்தியலின் அடிப்படையில் அமைந்த கோயிலின் காலம் பிந்தியது.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)



படிப்பகம்

www.padippakam.com

இக்காலகட்டத்தில்தான் குறிப்பிட்ட நேர அளவிற்குத் தண்ணீர் விடும் முறை அதிகமாகப் பேசப்பட்டுள்ளது (பார்க்க: அட்டவணை - 2).

## குடி

ஊர், நிலஉடைமை கொண்ட வெள்ளாளர்களின் வாழிடம் என்பது பொதுவாக நிறுவப்பட்ட கருத்தாகும். 'வெள்ளாளன்வகை' ஊர்களின் நிலவுடைமை வெள்ளார்களே நாட்டார்களாகவும் இருந்துள்ளார்கள் என்ற கருத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.[28] இவ்வகை ஊரிலுள்ளவர்கள் சமூகத்தின் முதல் தளத்தில் இருந்துள்ளார்கள் என்பதும் அவ்வூர்களிலுள்ள குளங்களில் நீர் பெறும் முதல் உரிமை அவர்களுக்கே இருந்துள்ளது என்பதும் பொய்யில்லை. குடி என்பது பொதுவாகக் குத்தகை உரிமையையும் அவ்வுரிமையுடைய நபர் அல்லது அவ்வுரிமையுடைய குடும்பத்தையோ மக்களையோ குறிக்கும் என்றும் கருதப்படுகிறது.[29] இக்கருத்தின் பின்னணியில் குடி என்பதை ஊர்களுக்கு அடுத்த நிலையில் இருந்ததாகக் கருதலாம். ஆனால் புதுக்கோட்டை வட்டாரத்தில் குடி, குறிச்சி என்றழைக்கப்பட்டவையும் கூட ஊர் என்றும் அவற்றின் ஆட்சியாளர்கள் ஊரார் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். எ.கா. நெரிஞ்சிக்குடி - நெரிஞ்சிக்குடி ஊரார்; கற்குறிச்சி - கற்குறிச்சி ஊரார்.[30] அந்த ஊர்களின் குளங்கள் அந்தந்த ஊர்களின் பெயராலேயே அழைக்கப்பட்டுள்ளன. இவ்வூர் மக்கள் முன்சொல்லப்பட்டது போன்று குத்தகை நபர்களாகவோ, நிலஉடைமையாளர்களாகவோ இருந்திருக்க வேண்டும். ஆனால் குடி என்று அழைக்கப்பட்ட எல்லாம் ஊர் அந்தஸ்திற்கு இயங்கியதாகத் தெரியவில்லை. குடி என்று அழைக்கப்பட்ட பல ஊர்கள் அதனதற்குத் தனித் தனிக் குளங்களைப் பெற்றன என்று தெரிகிறது.[31] குடிகளில் உள்ள குளங்கள் அந்தந்த குடிகளின் பெயர்களை முன்னொட்டாகப் பெற்று வந்துள்ளன. 1000 - 1300 கால இடைவெளியிலேயே 'குடிக் குளங்கள்' அதிகமாக குறிக்கப்பட்டுள்ளன. இப்போக்கை (trend) முன் சொல்லப்பட்ட 'குமிழிகள்' அதிகமாக அறிமுகப்படுத்தப்பட்ட கருத்தோடு ஒப்பு நோக்க வேண்டும். இக்காலப் பின்னணியில் குடிகள் இரண்டாந்தர ஊர்களாக இருந்திருக்க வாய்ப்புண்டு என்று சொல்வதற்கு சில காரணங்களை சொல்ல முடியும். 'குடிக்குளம்' என்று சொல்லப்பட்ட நீர் நிலைகளில் குமிழிகள் / மடைகள் இருந்ததற்கான கல்வெட்டுக் குறிப்புகள் பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம். அக்குளங்கள் அளவில் சிறியதாக இருந்திருக்க வாய்ப்புள்ளது.[32] மேற்குடி என்பதைக் குடிகளுக்கிடையேயான மேல்நிலையையும் வெளியங்குடி கீழ்நிலையையும் புறநிலையையும் குறிப்பதாகக் கொள்ளலாம்.

---

இப்போக்கு கோயிலின் முக்கியத்துவத்தை விடவும் குளத்தின் முக்கியத்துவம் அதிகமாக இருந்ததை உணர்த்தும். இது வேளாண் பெருக்கத்திற்கு பிராமணர்களுக்கு தானம் வழங்குவதும் கோயில் கட்டுவதும் மட்டும் காரணமாகாது என்பதைச் சொல்லும் அதே வேளையில் வேளாண் பெருக்கத்திற்கு பாசன அறிவுடன் நீரைப் பயன்படுத்தும் முறையும் நீர் மேலாண்மையின் தன்மைகளும் முக்கியமானவை என்று சொல்லும். ராஜன் குருக்களின் கருத்தினை இங்கே தொடர்புப்படுத்திப் பார்க்க வேண்டும் (Rajan Gurukkal, op cit., 1986) வறட்சியின் காரணமாகவே இவ்வட்டாரத்தில் பிரம்மதேயங்களின் எண்ணிக்கை குறைவாய் உள்ளன என்று R. Tirumalai சொல்வதையும் கருத்தில் கொள்ள வேண்டும். (R. Tirumalai, Studies in the History of Ancient Towenship of Pudukottai, 1981. 138).

28. Y. Subbarayalu, Political Geography of the Chola Country, 1973. P. 34 ff; R. Tirumalai ஊரார் என்பதை "collective body of residents in an agricultural township" என்கிறார் (R. Tirumalai, 1981. 378).

29. R. Tirumalai-யின் குடி பற்றிய கருத்து : holder of land with occupying right; occupant tenant; tenant household; cultivating tenant (R. Tirumalai, Studies in the History of Ancient Township of Pudukottai, 1981. p. 365). Noboru Karashima குடி என்பதற்கு "Kudi may mean a cultivator, a family or just a people" என்று பொருள் தருகிறார் (Noboru Karashima, South Indian History and Society: Studies from Inscriptions A.D. 850 - 1800, 1984. 47).

30. IPS; No. 59, 60, 81.

31. 72 / 943 / நெரிஞ்சிக்குடிக்குளம்; 135 / 1157 / கேரளாந்தகக்குடிக்குளம்; 314 / 11237 / கடம்பக்குடிக்குளம்; 315 / 1237 / எறாந்தக்குடிக்குளம்; 331 / 1250 / வண்டாங்குடிக்குளம்; 351 / 1263. 482 / 1300 / அழிசிகுடிக்குளம். அழிசிநச்சாத்தனார் எனும் பெயரில் சங்ககால புலவர் ஒருவர் இருந்துள்ளார். அழிசி எனும் சொல்லுக்கு அழிப்பவன் என்று மொ.அ. துரை அரங்கசாமி பொருள் தருகிறார். அப்படியென்றால் அழிசிகுடிக்குளம் என்பது காடு அழிக்கப்பட்டு புதிதாக உருவாக்கப்பட்டது என்று பொருள் கொள்ள இடம் தருகிறது (மொ.அ. துரை அரங்கசாமி, சங்ககாலச் சிறப்புப் பெயர்கள். 1980. P. 294).

32. ஒரேயொரு கல்வெட்டில் சிற்றாத்தக்குடி எனும் ஊரில் குமுமி இருந்துள்ளதை 'சிற்றாத்தக் குடிக்குமுமி' என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது (442).



படிப்பகம்

www.padippakam.com

ஒரு குறிப்பிட்ட இனம் / சாதி எனும் பொருளிலான குடி எனும் சொல் மக்கள் கூட்டத்தையும் புலம்பெயர்ந்த மக்கள் கூட்டத்தையும் குறிப்பதாகக் கொள்ளலாம். அவர்கள் குடிப்பெயர்களிலும் வயல்கள் இருந்துள்ளனவாகத் தெரிகிறது. வெள்ளாக்குடி வயல், மலையாளங்குடி வயல்[33] போன்றவை இதனை உறுதி செய்யும். சாதியின் பெயரால் நிலங்கள் இருந்துள்ளன என்பதற்கும் சான்றுகள் உண்டு. எ.கா. குசவன்செய் / வலையன் வயல்[34] கி.பி. 941 ஆம் ஆண்டிலிருந்து 1650-ஆம் ஆண்டு வரை ஊரின் பெயரால் வயல்கள் குறிக்கப்பட, குடியின் பெயரால் கி.பி. 1175-ஆம் ஆண்டு தொடக்கம் 1525 வரையிலேயே கல்வெட்டில் வயல்கள் குறிக்கப் பெற்றுள்ளன.[35] இப்போக்கை சமூகத்தில் ஏற்பட்ட ஒரு மாற்றமாக கருதலாம். ஆனால் இதனை விளக்க மேலதிகச் சான்றுகள் தேவை. அழிசிகுடி, மேற்குடி என்ற பெயர்களில் குளங்களும் வயல்களும் அழைக்கப்படுவது மிகவும் கவனிக்கத்தக்க ஒன்றாகும். (அழிசிகுடி - அழிசிகுடிக்குளம் / வயல்; மேற்குடி - மேற்குடிக்குளம் / வயல்)

**குடிக்காடு**

குடி போன்றே குடிக்காடுகளும் இடைக்காலப் புதுக்கோட்டை வரலாற்றின் நீர்ப்பாசன / வேளாண் பெருக்க வரலாற்றின் வெளிப்பாடாக வந்தவையாகும்.[36] குடிக்காடு புதிதாக காடுகள் அழிக்கப்பட்டு உருவாக்கப்பட்டது என்பதை 1013-ஆம் ஆண்டின் கல்வெட்டு விளக்கும். குடிக்காடுகள் தவிர பெருங்காட்டுப்பகுதிகள் கூட நாடுகளாக மாற்றப்பட்டிருக்கலாம். என்பதைச்சில நாட்டுப் பெயர்கள் உணர்த்தும். - கானாடு, வடபனங்காட்டுநாடு, தென்பனங்காட்டு நாடு, செங்காட்டுநாடு[37] வேளாண் பெருக்கத்திற்குப் புதிய வாழிடங்களும் புதிய விளைநிலப்பகுதிகளும் தேவைப்படவே இவை உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். குடிக்காடுகளுடன் நீர்நிலைகளும் சேர்ந்தே இருந்துள்ளன என்பதை 'குடிக்காடு குளமுளாக', 'குடிகாடு குளமும் வயலும்' போன்ற கல்வெட்டுத் தொடரால் அறியலாம்.[38] 1000-1400 கால இடைவெளியில் அதிகமான குடிக்காடுகள் உருவாகியுள்ளனவாகத் தெரிகிறது. குடிக்காடுகள் குளங்களுடன் சேர்த்து உருவாக்கப்படுவதற்குப் பெருமளவிலான கூட்டுழைப்பு தேவைப்பட்டிருக்கும். இதற்காக மக்கள் சாதியையும் / இனத்தையும் மையப்படுத்தித் திரண்டிருக்கலாம். சில குடிக்காடுகள் சாதியின் பெயரால் சுட்டப்பட்டுள்ளதை[39] அவற்றின் மீதான சாதியக் கூட்டுடமையைக் காட்டுவதாகக் கருதலாம். அரையன், பேரையன், நாடாழ்வான் பட்டம் கொண்டிருந்தவர்களும் தனித்தனிக் குடிக்காடுகளைப் பெற்றிருந்தது வேளாண் பெருக்கமும் நீர்ப்பாசன வளர்ச்சியும் தனியார் நில உடைமைக்கும் வழிகாட்டியதாகச் சொல்லலாம். இதைத் தவிர சாதாரண தனியாரின் பெயராலும் குடிக்காடுகள் இருந்துள்ளன. பாசனவசதி இல்லாமல் எந்தக் குடிக்காடும் இல்லையென்பதை அவற்றின் பெயரோடு வரும் குளம் என்ற பின்னொட்டு விளக்கும்.[40] முறை

33. மலையாளங்குடியின் ஆட்சியாளர் "மலையாளங்குடி அரசுமக்கள்" என்றழைக்கப்பட்டுள்ளனர் (403).
34. செய் என்பதும் வயல் என்பதும் நீர் நிலத்தையே குறிப்பன (Tamil Lexicon, P. 1594). 89 / 1012 / குசவன் செய்; 872 / 1669 / வலையன் வயல்.
35. 169 / 1213 / மாங்குடி வயல் ; 140 / 1175 / மருதங்குடி வயல்; 403 / 1290 / மலையாளங்குடி வயல் ; 485 / 1300 / பனங்குடி வயல்; 472 / 1300 / அழிசிகுடி வயல்; 488 / 1300 / செங்காக்குடி வயல்; 494 / 1300 / ஆலங்குடி வயல்; 546 / 1300 / மோசகுடி வயல், சுனையக்குடி வயல், வீரைக்குடி வயல்; 702 / 1431 / மேற்குடி வயல் ; 715 / 1477 / வெள்ளாகுடி வயல்; 745 / 1530 / களங்குடி வயல் ; 849 / 1525 / கண்டாகுடி வயல்.
36. குடிக்காடு என்பதற்கு R. Tirumalai "Occupied arable land or Occupyable Land" என்று விளக்கம் சொல்கிறார் (R. Tirumalai, supra. 1981. P. 365).
37. IPS; Nos. 89, 90, 184, 476, 425.
38. IPS; Nos. 90, 281, 349, 360, 361, 383, 403, 541.
39. IPS; Nos. 100 / 1038 / சிவபிராமணர் குடிக்காடு; 331 / 1250 / வலையர் குடிக்காடு; 383 / 1271 / தட்டான் குடிக்காடு புதுக்கோட்டையை பொறுத்தவரை 13-ஆம் நூற்றாண்டு வரையிலும் பிரதான ஊர்களைச் சுற்றியுள்ள புறநிலப்பரப்புகளும் குறைவான உற்பத்தித்திறன் கொண்டவையாக இருந்தாலும் கூட வேளாண்மைக்கு கொண்டு வரப்பட்டன. (R. Tirumalai, Land Grants and Agrarian Reactions in Cola and Pandya Times, 1987, P. 8).
40. 90 / 1013 / நூற்று வேலி என்று பேர்கூவப்படுங் குடிகாட்டுக்குளம்; 281 / 1228 / பட்டாண்டி குடிகாட்டுக்குளம் / சமையவல்லவர் குடிக்காட்டுக்குளம் / கூனன் குடிகாட்டுக்குளம் / மணவாண்டார் குடிகாட்டுக்குளம்; 325 / 1231 / அருள் பெற்றார் குடிக்காட்டுக்குளம்; 361 / 1259 / பாண்டிமான் குடிக்காட்டுக்குளம் ; 360 / 1259 / கண்டாண்டி குடிக்காட்டுக்குளம்; 383 / 1271 / தட்டான்குடிகாட்டுக்குளம்; 403 / 1290 / கோட்டையூர் நாடாழ்வான் குடிக் காட்டுக்குளம் / நாஞ்சிக்குடிக்காட்டுக்குளம்; 403 / 1290 / மலைசயராசன் குடிக்காட்டுக் குளம்; 541 / 1303 / சேரவேளார் குடிக்காட்டுக்குளம் : 444 / 1330 / பகைச்சவர் காலப்பேரையர் குடிக்காட்டுக்குளம்; 681 / 1334 / மதிப்பர் குடிக்காட்டுக்குளம் / கீழைக்குடிக்காட்டுக்குளம்.



படிப்பகம்

www.padippakam.com

வைத்து நிலங்களுக்கு தண்ணீர் வழங்கும் வழக்கம் குடிகாடுகளுக்கும் பின்பற்றப்பட்டுள்ளது. நீருடன் வழங்கப்படும் நிலப்பரிவர்த்தனையில் குடிக்காடுகள் பிரதான இடத்தை வகித்தன; ஊர்ப்பொதுவாக இருந்துள்ளன. ஊராரால் நீருடன் சேர்ந்து தனியாருக்கு விற்கப்பட்டுள்ளன. குடிக்காடுகளின் பரிமாற்றத்தில் நாடு அளவிலான அரையர்கள் தலையீடும் நிகழ்ந்துள்ளன.[41] அரையர்களின் காணி உடைமையாக (எங்கள் காணி) இருந்து வந்த சேரவேளார் குடிக்காடு இரண்டு வெவ்வேறு குளங்களிலிருந்து போதுமான நீருடன் ஒரு கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது.[42] குளங்களுடன் சேர்ந்து குடிக்காடுகளின் பரிவர்த்தனை பெரும்பாலும் ஊரார், அரையர், நகரத்தார், நாடாழ்வான் பட்டம் கொண்டவர்களிடையே மட்டும் நிகழ்ந்துள்ளது.[43] காலப்போக்கில் இந்தப் பரிவர்த்தனை பாடிகாவலர்கள் நீரின் மேல் தங்கள் அதிகாரத்தை நிறுவுவதற்கு வழிவிடுவதாக ஆகிவிட்டது. பின்னாட்களில் 'பாடிகாவல் சுவந்திரம்' 'அரசுசுவந்திரம்' 'குளச்சுவந்திரம்' போன்ற உரிமைகளையும் பாடி காவலர்களுக்குத் தாரை வார்த்தது. தொடர்ந்து வந்த காலங்களில் எழுந்த அரசுகள் பெரிய குளங்களைக்கொண்ட ஊர்களை மையமாகக் கொண்டே உருவாகியுள்ளன. வழுத்தூர் அரசு, பெருங்கொளியூர் அரசு, அறந்தாங்கி அரசு, சூரைக்குடி அரசு போன்றவை அவ்வாறே உருவாகியிருக்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட நாடு, அந்நாட்டின் பொதுக் கடவுள் அந்நாட்டின் பாசனக்குளம் இவை மூன்றும் ஒரே பெயர்ச் சொல்லின் அடிப்படையில் குறிக்கப்படுதல் என்பது, ஒரு குறிப்பிட்ட பகுதியில் அரசியலுக்கும், மதத்திற்கும் வேளாண் பொருளியலுக்கும் இடையே நிலவி வந்த உள்ளுறவின் வெளிப்பாடாகும்.[44] கவிர்நாடு - கவிர்க்குளம்; வல்லநாடு - வல்லநாட்டுக்குளம் - வல்லநாட்டு உடையார் ; பாலையூர்நாடு - பாலையூர் நாட்டுக்குளம் - பாலையூர் நாட்டு நயினார் போன்றவை இங்கே குறிப்பிடத்தக்கவை. ஆனால் நாடு எனும் ஆட்சிக் கருத்தியல் மாறி அரசு எனும் ஆட்சியர் கருத்தியல் தழைக்கத் துவங்கிய பிறகு பாலையூர் நாட்டுக்குளம் அறந்தாங்கி அரசின் பரப்பிற்குள்ளும் ஆதனூர்க்குளம் சூரைக்குடி அரசின் பரப்பிற்குள்ளும் வல்ல நாட்டுக்குளம் வழுத்தூர் அரசின் பரப்பிற்குள்ளும் வந்துவிட்டன. இம்மாற்றம் 1400-க்குப் பிறகு நிகழ்கிறது. இது ஒருவித சமூக மாற்றத்தையே காட்டுகிறது. இக்காலகட்டத்தில்தான் அதாவது 1475-க்குப் பிறகு கணக்கு அலுவலர்களின் மதிப்புறு பட்டப்பெயர்களான வெளான், உடையான், மூவேந்தவெளான் போன்ற பட்டங்கள் மறைந்து முனையதரையர், பாண்டியத்தரையர் போன்ற பட்டங்கள் மதிப்புறு பின்னொட்டாக வந்துவிடுகின்றன. ''இது அரசியல், பொருளாதார, சமூகத்தளங்களில் இவ்வட்டாரத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாகும். இப்போக்கு வேளாண்மையை முதன்மையாகக் கொண்ட நிலஉடைமைச் சமூகத்தின் ஆட்சித்தளம் உடைபட்ட படைத்துறைப் பண்பு கொண்ட அரையர்கள் நிலவுடமைச் சமூகமாக மாறிவந்த இயக்கத்தைக் காட்டுகிறது''.[45] அதாவது 1475-க்குப் பிறகு முனையதரையர் எனும் பட்டத்தைக் கொண்டவர்கள் கல்வெட்டுகளில் கையெழுத்திடும் பகுதியில் அதிகமாகக் கையெழுத்திடத் துவங்குகின்றனர். இதை ஆட்சிக் கட்டமைப்பில் அரையர்களின் வருகையாகக் கருதலாம்.

### அரையர்கள்

அரையர்கள், அவர்கள் இருந்த பிராதான ஊர்களின் பெயர்களிலேயே அழைக்கப்பட்டுள்ளனர்.

41. IPS; No. 198.
42. IPS; No. 395.
43. IPS; Nos. 91, 135, 167, 361.
44. கவிர் பால் எனும் நாட்டுப்பிரிவு முதன்முதலில் கி.பி. 873-ஆம் ஆண்டின் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. அதே நாட்டுப் பிரிவு கவிர்நாடு எனும் பெயரில் 992-இல் குறிக்கப்பட்டுள்ளது. இரு ஆண்டுகட்குப் பிறகு (994) அந்நாட்டினுடைய பாசனக்குளம் கவிர்க்குளம் என்றழைக்கப்பட்டுள்ளது. அதே குளம் 1275-இல் தென்கவிர் நாட்டுக்குளம் எனப்பட்டுள்ளது (21, 27, 288, 606). வல்ல நாடு எனும் நாட்டுப்பிரிவும் 873-இல் பேசப்பட்டுள்ளது. ஆனால் அந்நாட்டின் நாட்டுக்கடவுள் 1231-இல் தான் பேசப்பட்டுள்ளது. இந்நாட்டின் பாசனக்குளமான நாட்டுக்குளம் 1531-இல் குறிக்கப்பட்டுள்ளது. அதே குளம் 1542-இல் வல்ல நாட்டார் நாட்டுக்குளம் என்றழைக்கப்பட்டுள்ளது (21, 294, 746, 752). அதே போன்று பாலையூர் நாடு 1229-ஆம் ஆண்டிலேயே குறிக்கப்பட்டிருந்தாலும் அந்நாட்டுக்கடவுள் பற்றிய குறிப்பு 1438-ஆம் ஆண்டில்தான் கிடைக்கிறது. அந்நாட்டின் நாட்டுக்குளம் பற்றிய செய்தி 1525-ஆம் ஆண்டு கிடைக்கிறது. (287, 787, 850).
45. கி.இரா. சங்கரன்; கல்வெட்டில் கணக்கு அலுவலர்கள்; 1999.



படிப்பகம்

www.padippakam.com

அவ்வூர் ஒவ்வொன்றும் பெரிய நீர்ப்பாசன குளங்களைக் கொண்டுள்ளன.[46] போர்க் குலத்தவராக அறியப்படுகின்ற அவர்கள் அரையன் என்று தனித்தும் ஊர் அளவில் ஊர் அரையர்கள் என்றும் நாடு அளவில் நாட்டு அரையர்கள் என்றும் குழுவாகவும் இயங்கியுள்ளனர்.[47] அரையர்கள் பாடிகாவல் உரிமையும் நாடு காக்கும் உரிமையும் பெற்றுள்ளனர். கலிங்குகளைச் சரிசெய்வதிலும், ஆற்று நீரை குளங்களுக்குத் திருப்பிவிடுவதிலும் ஈடுபட்டுள்ளனர். சில சந்தர்ப்பங்களில் பாடகாவல் உரிமை என்ற பெயரில் குளங்களைச் சீரமைக்கும் பணியும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.[48] கீரனூர் அரையர்கள் ஓர் உடன்படிக்கை மூலம் கீரனூரின் சுற்றுவட்டாரத்திலுள்ள குளங்களையும், கிணறுகளையும் ஏற்றங்களையும் அழிக்க காரணமாக வேண்டாமென்று முடிவெடுத்துள்ளது அரையர்களுக்கும் நீர் வளத்திற்கும் இடையேயான முக்கியத்துவத்தை உணர்த்தும்.[49] அரையர்களின் அரசியல் வளர்ச்சி பற்றி மானிடவியலின் பின்னணியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.[50]

---

46. கீரனூர் அரையர்கள் - அக்னியாறு / கூழைக்குளத்தூர் குளம் ; புதுக்கோட்டை அரையர்கள் - கவிர்க்குளம் ; வல்ல நாட்டு அரையர்கள் - வல்ல நாட்டுக்குளம் ; புத்தாம்பூர் அரையர்கள் - புத்தாம்பூர் பெரியகுளம் / செம்பாட்டுக் குளம்; தென்சிறுவாய் நாட்டு அரையர்கள் - சித்தன்னவாசல் குளம் / பனங்குடி குளம்; வாராப்பூர் அரையர்கள் - சிறுவாரிகைக்குளம் / பெருவாரிகைக்குளம் / வாராப்பூர் குளம்; இக்குளங்கள் குமிழி / மடைகளை கொண்டிருப்பவை.

47. கீழைக்குருந்தன்பிறை அரையர்கள், மேலைக்குருந்தன்பிறை அரையர்கள், புதுவயல் அரையர்கள், புலிவலத்து மூன்று கூற்று அரையர்கள், இளஞ்சார் அரையர்கள் (198, 680, 313, 268) வடபனங்காட்டு நாட்டு அரையர்கள், கடலடையா திலங்கை கொண்ட சோழ வளநாட்டு அரையர்கள் (184, 169). அரையர்கள் ஆளும் உரிமை கொண்டிருந்தார்கள் என்பதை 'ஆளும் அரையன்' என்ற சொல் உணர்த்துகிறது (198).

48. IPS; Nos. 395, 341, 123, 478, 681, 801.

49. IPS; No. 198.

50. Nicholas B. Dirks, The Hollow crown : Ethnohistory of an Indian Kingdom, 1987, P. 144 ff.

* அடிக்குறிப்புகளின் நக அடைப்புக்குள் தரப்பட்ட எண்கள் புதுக்கோட்டை கல்வெட்டு தொகுதியில் உள்ள வரிசை எண்கள். சாய்க்கோட்டின் வலப்புறம் தரப்பட்டுள்ளவையும் அத்தொகுதியிலுள்ள எண்களையே குறிக்கும்; இடப்புறம் தரப்பட்டுள்ள எண் கல்வெட்டின் ஆண்டினைக் குறிக்கும்.

## BIBLIOGRAPHY


1. Ayyar, Venkatarama, A Manual of The Pudukkottai State, Vol. 2. pt. 2 Pudukkottai, 1944.
2. Dirks, Nicholas B. The Hollow Crown : Ethnohistory of an Little Kingdom, Cambridge University Press, Madras, 1987.
3. Heitzman, James. Gifts of Power : Lordship in an Early Indian State, OUP. Chennai, 1997.
4. Karashima, Noboru, South Indian History and Society: Studies from Inscriptions A.D. 850-1800, OUP, New Delhi, 1984.
5. Srinivasan, T.M. Irrigation and Water Supply: South India 200 B.C. 1600 A.D. New Era Publications, Madras, 1991.
6. Subbarayalu, Y, Political Geography of the Chola Country, State Dept. of Archaeology, Madras, 1973.
7. Tirumalai, R, Studies in the History of Ancient Township of Pudukkottai, Dept. of State Archaeology, Madras, 1981.
8. ........, Land Grants and Agrarian Reactions in Cola and Pandya Times, University of Madras, Madras, 1987.
9. இராசேந்திரன், கரு. ''புதுக்கோட்டை மாவட்டக் குமிழிக் கல்வெட்டுக்கள்'' ஆவணம், 1. தஞ்சாவூர், 1991.
10. ......... ''திருமயவட்டக் கல்வெட்டுகள்'' ஆவணம். 12. தஞ்சாவூர், 1992.
11. ......... ''புதுக்கோட்டை மாவட்டக் குமிழிக் கல்வெட்டுக்கள்'' ஆவணம். 3. தஞ்சாவூர், 1993.




படிப்பகம்

www.padippakam.com

பின்னிணைப்பு

## நீர்ப்பாசன முறைகளில் வட்டார வேறுபாடும் அவற்றின் சமூகத் தொடர்பும்

| | புதுக்கோட்டை பகுதி | கொங்கு மாண்டலம் | பாண்டி மண்டலம் | தொண்டை மண்டலம் | சோழ மண்டலம் |
|---|---|---|---|---|---|
| **நீர் வளத் தன்மை** | குமிழி, மடைகளுடன் சிறிய, பெரிய குளங்கள் சில பெரிய குளங்கள் ஆற்றிலிருந்து நீர் பெறுகின்றன. பெரும்பாலும் வாரிகளே குளங்களுக்கு நீர் தருவன. | கிணறுகள், தாழ்வான பகுதிகளின் நீர்ப் பரப்பு. இட்டேறி, ஓடைகள், சிறுஅருவிகள். புன்பயிர் விளைச்சல். | ஆறுகள், குமிழி மடைகளுடன் குளங் கள். பெரிய குளங்கள் ஆற்றிலிருந்து நீர் பெறுகின்றன. வாய்க்கால் முறை நீர்ப்பாசனத்திற்கு துணையாக குள முறை நீர்ப்பாசனம் உள்ளது. பருவகால மழை பல்பயிர் விளைச்சல். | குளங்கள்: சிறியன, பெரியன, மடைகளுடன் கூடிய பெருங்குளங்கள் ஆற்றிலிருந்து நீர் பெறுகின்றன. ஒரு குறிப்பிட்ட அளவு வரைக்குமான வாய்க்கால் முறை நீர்ப்பாசனம். பருவகாலத்திற்கேற்ப விளைச்சல். | ஆறுகள் வாய்க்கால்கள். ஒரு குறிப்பிட்ட அளவு வரைக்குமான குளமுறை நீர்ப்பாசனம். மிக நன்கு வளர்ச்சிப் பெற்ற வாய்க்கால் முறை நீர்ப்பாசனம். பல்பயிர் விளைச்சல். |
| **சமூக படி நிலை. கருத்தியல்** | கிடையானது:<br>கள்ளர் / மறவர் - போர்க்குலம் (அரசியல் செல்வாக்குடையவர்; பிராமணர்/ வெள்ளாளர் / வேளாண்மை (அரச பண்பாட்டு நிர்ணயிப்பாளர்). வலையர் (அரசியல் அளவில் பலமற்றவர்). போர்க்குலத்தவருக்கு உட்பட்ட சார்பினம்; அவர்களுக்கு பணி செய்பவர்; பள்ளர் / பறையர் - உழைக்கும் இனத்தினர்; வேளாண் தொழிலிலும் நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்திலும் தேர்ந்தவர். குறைவான அளவே பிராமணியத்தாக்கம் | கிடையானது:<br>பிராமணர், கொங்கு வெள்ளாளர் அ)வெள்ளாளர்-வேளாண்மை செய்யும் இனம். ஆ) வேட்டுவர் - வேட்டையாடும் இனம். பள்ளர் / பறையர் - உழைக்கும் இனம். குறைவான அளவே பிராமணியத் தாக்கம். பண்பாட்டில் உள்ளூர்த்தன்மையின் மேலாதிக்கம். | நெடுக்கானது:<br>1. பிராமணர்<br>2. வெள்ளாளர்<br>3. தேவர்<br>4. கள்ளர்/ மறவர் / கோனார்<br>5. பள்ளர் / பறையர்<br>நகரமையங்களில் பிராமணியப் பண்பாடு. வேளாண் குடியிருப்புகளில் உள்ளூர் பண்பாட்டின் ஆதிக்கம். | நெடுக்கானது:<br>1. பிராமணர்<br>2. வெள்ளாளர் நன்செய் விளைச்சல் மேற்கொண்டிருந்தனர்.<br>3. வன்னியர் / படையாச்சி / கவுண்டர் - புன்செய் விளைச்சலிலும்போரிலும்.<br>4. பரதவர் / மீனவர் மீன் பிடித்தல் உப்பு காய்சுதல்<br>5. பறையர் உழைக்கும் இனம் பல மதங்களின் கருத்தியல்கள் ஜைனம் பௌத்தம் இந்துத்துவம். | நெடுக்கானது:<br>1. பிராமணர்<br>2. சூத்திரர்:<br>அ) சத் - சூத்திரர்<br>1. நிலவுடைமையுள்ள மேட்டுக்குடி வெள்ளாளர்<br>2. வெள்ளாளர் குடி - குத்தகை நிலங்களில் உழைப்பவர்<br>3. கள்ளர்/மூப்பர் படையாச்சி (போர்க்குலத்தார்)<br>4. பள்ளர் / பறையர் ; உழைப்போர் / பணி செய்வோர் ஆழவேர்விட்டுப் படர்ந்த பிராமணியப் பண்பாடு. பிராமணியக் கூறுகளுக்குள் இணைந்த உள்ளூர்ப் பண்பாட்டுத் தன்மைகள். |

(கி.இரா. சங்கரன், 2004).



படிப்பகம்

www.padippakam.com

**''சோவியத் யூனியன் வீழ்ச்சிக்குப் பின்னர் சோசலிசம் பற்றிய விவாதங்கள் ஆரம்பகாலக் குழப்பங்களிலிருந்து விடுபட்டு உயரிய தரத்தில் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன. புதிய நூற்றாண்டில் மனித குலத்துக்கு சோசலிசமே மாற்று என்ற லட்சியம் வலுவாக முன்மொழியப்படுகிறது. இன்றைய சோசலிசம் பற்றிய கருத்தியல் வளர்ச்சி புதிய கட்டத்தை அடைந்துள்ளது. யுர்யோ ரஹகானென் கட்டுரை இந்தப் புதிய கட்டத்தை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது; சோசலிசம் பற்றிய நம்பிக்கையினை அறிவியல்பூர்வமானதாக்குகிறது. Information Bulletin - Feb-2004 இதழிலிருந்து இக்கட்டுரை ஆங்கில வழி தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.**

**யுர்யோ ஹெகானென்**

# இன்றைய சோஷலிசம் – எதிர்நோக்கும் சவால்கள்

உற்பத்தியில் ஏற்பட்டுவரும் தொடர்ச்சியான புரட்சிகர மாற்றம், சமூக நிலைமைகளில் இடையறாது ஏற்பட்டு வரும் கொந்தளிப்பு, எல்லையற்றதாகத் தொடரும் நிச்சயமற்ற நிலைமை மற்றும் கிளர்ச்சி ஆகியவை முதலாளித்துவ சகாப்தத்தை இதற்கு முந்தைய சகாப்தங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுத்திக் காட்டுகிறது, என கார்ல் மார்க்ஸும், பிரடெரிக் ஏங்கல்ஸும் ''கம்யூனிஸ்ட் அறிக்கை'' யில் குறிப்பிட்டனர். உற்பத்திச்சாதனங்கள் தனியார் உடமையாக இருக்கும் நிலையில், உற்பத்தி உறவுகள் வளர்ச்சியடைந்த உற்பத்தி சக்திகளுக்கு மிகக் குறுகியதாக உள்ள நிலைக்கு முதலாளித்துவம் வளர்ச்சியுறும் விதி இருவரும் எதிர்நோக்கினார்கள். மேலும், இவை கூட்டான சமூக நிர்வகிப்பின்கீழ் வருவது என்றுமில்லாத வகையில் தவிர்க்க முடியாதவை என்பதையும் அவர்கள் கண்டார்கள்.

பண்பார்ந்த மனித வாழ்வும், மனித குலத்தின் எதிர்காலமும் மூலதனத்தை அடிப்படையாகக் கொண்டு அமைய முடியாது. மூலதனம் எல்லாவற்றையுமே பண்டமாக மாற்றிவிடுகிறது. மூலதனத்தை மிகைப்படுத்தி அதிகரிக்கச் செய்ய அது அனைத்தையும் கீழ்ப்படிய வைக்கிறது. வல்லான் வகுத்த வாய்க்கால் என்ற வகையில் காட்டுத்தனமான விதி அங்கே கோலோச்சுகிறது. இவையனைத்தும் முன்னெப்போதையும் விட தற்போது மிக வெளிப்படையாகத் தெரிகிறது. உலகில், முன்பு எப்போதைக் காட்டிலும் அதிகமான உணவும், செல்வமும் திரண்டிருந்தாலும் பத்துக் கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். சர்வதேச நிதிச் சந்தையில் பத்தாயிரக்கணக்கான கோடி டாலர் ஒரே நாளில் இடம் மாறுகிறது. நிதி மூலதனம் மற்றும் பன்னாட்டு மூலதன நிறுவனங்களின் நலன்களை, பொருளாதாரத்தின் கட்டாய விளைவு என தாராளவாதக் கோட்பாடு முன்வைக்கிறது. பெரும்பான்மையினரின் உரிமைகளைக் கட்டுப்படுத்துவது இதற்காகத் தேவைப்படுகிறது. போர் வெறியும், உலகு தழுவிய அளவில் ஏற்படும் பருவநிலை மாற்றமும் முதலாளித்துவம் எவ்வாறு மனித குலத்தின் வாழ்க்கைக்கே அச்சுறுத்தலாக மாறி வந்துள்ளது என்பதைக் காட்டுகின்றன.

எவ்வாறாயினும், இதற்கு மாற்றுகள் எதுவும் இல்லை என நவீன தாராளவாதத்தால் முன்வைக்கப்பட்ட தத்துவம் படிப்படியாக அழிந்து வருகிறது. சோவியத் யூனியன் வீழ்ந்தபோது, அந்த வீழ்ச்சி முதலாளித்துவத்தின் வெற்றியாகக் காட்சியளித்தது. ஆனால் அதுவே தற்போது வளர்ந்துவரும் அவநம்பிக்கை, நெருக்கடி ஆகியவற்றின் தோற்றுவாயாக மாறியுள்ளது. போர் எதிர்ப்பு இயக்கம், தொழிலாளி வர்க்கப் போராட்டங்கள், நவீன தாராளவாதத்திற்கெதிரான சமூக இயக்கங்கள் ஆகியவை ஒரு மாறுபட்ட உலகிற்கான விருப்பத்தை முன்வைக்கின்றன. இந்த இயக்கங்களின் வளர்ச்சி ஒரு கட்டத்தை எட்டிவிட்டது. தற்போதைய அமைப்பு முறைக்குள்ளும் மூலதனத்தின் அனைத்துலக ஆளுகையினாலும் ஏற்பட்டுள்ள அநீதிகளுக்குத் தீர்வு காண முயன்றால் போதுமானதா? அல்லது முதலாளித்துவ அமைப்பிற்கும் அப்பால் செல்லக் கூடிய ஒரு மாற்று நமக்குத் தேவையா? என்ற கேள்வி இன்றைய கட்டத்தில் எழுந்துள்ளது.

சோஷலிசம் என்பதன் அர்த்தமே, மனிதனையும், இந்தச் சமூகத்தையும் சுரண்டலிலிருந்தும், ஆதங்கத்திலிருந்தும் விடுவிப்பதற்கான குறிக்கோள்களும் சமூக இயக்கங்களுமேயாகும். ஆனால் அதே வேளையில் பொருளாதாரத்தையும், அதிகாரக் கட்டமைப்பையும் முற்போக்கான வகையில் புதுப்பிக்கவில்லையெனில் சோஷலிசம் உண்மையான மாற்றாக அமையாது. முதலாளித்துவச் சொத்துரிமை, அதிகாரக்கட்டுமானம் ஆகியவற்றை வீழ்த்திவரும், ஜனநாயகம், சமத்துவம், நீதி, சுதந்திரம் ஆகிய புதிய சமூகக் கட்டுமானங்களை உருவாக்குவதற்கான சூழலை உத்திரவாதப்படுத்துவது என்பதே சோஷலிசத்தின் உட்பொருளாகும்.

பெர்ன்ஸ்டெயினின் (Bernstein) சமூக



படிப்பகம்

www.padippakam.com

ஜனநாயகக் கொள்கையோடு ஒத்துப்போனால், சோஷலிசம் என்பது வெறும் நன்னெறியாகவும், சமூக இயக்கமாகவும் சுருங்கிப்போகும். நடைமுறையில் நாம் முதலாளித்துவ உலகமயமாக்கலால் விளைகின்ற ஏற்றத்தாழ்வான கட்டமைப்பை ஏற்றுக் கொள்வதில் போய்முடியும். ஒரு புதிய, மனிதப் பண்பு கொண்ட, தொடர்ச்சியான உயிரின வாழ்வு, அமைதியான நாகரிகம் ஆகியவற்றை உருவாக்குகின்ற திறனற்றவர்களாக ஆகிவிடுவோம்.

பசுமை இயக்கம் மற்றும் குழப்பவாதிகளின் போர்த்தந்திரங்களில் பிரச்சினைகள் இல்லாமல் இல்லை. ஏனெனில் அவர்கள் முதலாளித்துவத் திற்குள்ளேயும், அதன் விளிம்பிலும் தன்னாட்சி உரிமை கொண்ட ஒரு சிறு பகுதியை உருவாக்க முனைகின்றனர். அத்தகைய பொருளாதார அமைப்புக்களும், சமூகங்களும் ஒரு உண்மையை எதிர் கொள்ள வேண்டியிருக்கும். தனி உடைமையை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக ரீதியான உறவுகள்தான் முதலாளித்துவ நிபந்தனைகளை உருவாக்கவும் இறுதியாக தீர்மானிப்பதாகவும் அமைந்துள்ளன என்பதே அந்த உண்மையாகும். பொருளாதாரத்தின் ''கடினமான'' கூறான ஆட்சி அதிகாரத்தையும், சொத்து உறவுகளையும் அவர்கள் மாற்றவில்லையாயின், அவர்கள் எளிதாக ஓரம் கட்டப்படுவார்கள். முதலாளித்துவத்தின் அம்சமான பிரிவுகள், சுரண்டல் ஆகியவற்றைத் தாங்களறியாமலே புதுப்பிப்பார்கள்.

உலகமயமாக்கலும், விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியும், உற்பத்திச் சக்திகளின் சமூகத் தன்மை சார்ந்த வளர்ச்சிக்கும், உற்பத்திக் கருவிகள் தனியுடைமையாக உள்ளதன் அடிப்படையில் அமைந்துள்ள உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாட்டைக் கூர்மைப்படுத்தி வருகின்றன. மக்களின் ஆக்கபூர்வமான உழைப்பு, வேலைப் பிரிவினை, ஒத்துழைப்பு, தகவல் உரிமை, சமூக விருப்பங்கள் ஆகியவற்றை மேலும், மேலும் சார்ந்தே சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி உள்ளது. தொழிலாளர், தொழிலகம் மற்றும் இதர வடிவங்களிலான உற்பத்தி மூலதனம் ஆகியவற்றின் மீது நிதி மூலதனத்தின் ஆதிக்கம் வலுவாக உள்ளது. இந்த ஆதிக்கத்தால் ஏற்படும் பெருமளவான விளைவுகள் லாபம் தேடும் முதலாளித்துவ வாதத்தை மறுக்க வேண்டியதன் அவசியத்தைக் காட்டுகிறது.

உற்பத்திச் சாதனங்கள் தனி உடைமையில் உள்ளதன் அடிப்படையில் உருவாகும் சுரண்டலை முடிவுக்குக் கொண்டுவருவதென்பது சோஷலிச மாற்றின் அடிப்படைப் பிரச்சினையாகத் தொடருகிறது. முழுமையான அரசுடமை என்பதைச் சுமத்துவதோ எல்லாவிதத் தனி உடமைக்கும் முடிவு கட்டுவது என்பதோ அல்ல. ''மூலதனம்'' என்னும் நூலில் காரல்மார்க்ஸ் பின்வருமாறு எழுதினார். ''மூலதனம்' உற்பத்தியாளர்களின் சொத்தாக மாற்றப் படுகிறது; தனிமனிதனான உற்பத்தியாளரின் தனிச் சொத்தாக அது இருப்பதில்லை; ஆனால் அதற்கு மாறாக, கூட்டாக உற்பத்தியில் ஈடுபடுவோரின் சொத்தாக, மொத்தத்தில் சமூகத்தின் சொத்தாக மாறிவிடுகிறது. லெனின் சோஷலிசம் பற்றிக் குறிப்பிடுகையில் ''பண்பு நிறைந்த கூட்டுறவாளர்களின் அமைப்பு'' எனச் சொன்னார்.

சோஷலிசக் கட்டத்தில், உற்பத்திச் சாதனங்களின் சமூக உடமையானது பொருளாதாரத்தையும், சமுதாயத்தையும் ஜனநாயகரீதியாகவும், திட்டமிட்ட வழியிலும் வளர்க்கின்ற மையமான பங்கைக் கட்டாயம் ஆற்றவேண்டும். சோஷலிச அமைப்பில் அரசுடமைச் சொத்திற்கு அடுத்தபடியாகக் கூட்டுறவு மற்றும் நகராண்மை அமைப்பின் சொத்துக்கள், விவசாயக் குடும்பங்கள் சிறுதோட்டங்கள், சிறு தொழில்கள் ஆகிய வடிவங்களைக் கொண்ட சொத்துக்கள் இடம்பெற வாய்ப்புக்கள் உண்டு.

உண்மையான சோஷலிச அமைப்பில், சமூக உடைமை அதிகாரவர்க்க அரசு நிர்வாகத்திற்கு வழிகோலியதைத் தவிர்த்திட, ஒரு புதிய ஜனநாயக முறை தேவைப்படுகிறது. விரிவான தன்னாட்சி அமைப்பின் அடிப்படையில் கீழிலிருந்து மேல் வரையிலான ஜனநாயகம் தேவை. இத்தகைய ஜனநாயகம் முடிவெடுக்கும் ஆதாரத்தை ஸ்தல மட்டத்திற்கு வழங்குவதோடு, ஆதார வளங்களையும் அதற்கு வழங்குகிறது. மேலும், இரண்டு தேர்தல்களுக்கிடையே தங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு கட்டளையிடுவதற்கான வாய்ப்பையும் மக்களுக்கு வழங்குகிறது.

புரட்சியை நடத்துவதென்பது, ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி முந்தைய ஆட்சியாளர்களை அப்புறப்படுத்துவது மட்டுமே அல்ல, ஆட்சியோ அல்லது அரசு நிர்வாக அமைப்போ, மக்களோ தங்களின் அதிகாரத்தைக் கையாளுவதற்கு மாற்றாக அமைந்துவிட முடியாது. எனவே, தனிநபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், தங்களின் பணிகளுக்குத் தாங்களே எஜமானர்கள் என்ற சூழலை அமைக்கும் மக்களுக்கு உத்தரவாதப்படுத்துவதற்கும் ஒரு புதுவிதமான ஜனநாயக அமைப்பு நமக்குத் தேவை. கம்யூனிசத்தை அடைவதற்கான பாதையில் இடைக்கால நிலை பற்றியே நாம் கூறுகிறோம். கம்யூனிச அமைப்பில் ''ஒவ்வொருவரும் சுதந்திரமான வளர்ச்சியைப் பெறுவதே அனைவரது சுதந்திரமான வளர்ச்சிக்கு வழிகாணும் நிபந்தனையாகும்'' (கம்யூனிஸ்ட் அறிக்கை).



படிப்பகம்

www.padippakam.com

உற்பத்தித் திறனின் வளர்ச்சியும், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் முன்னேற்றமும் மனித குலத்தைப் பட்டினி, வறுமை, பல்வேறு வகை நோய்கள் ஆகியவற்றிலிருந்து விடுவிப்பதற்கான பொருளாயத முன் நிபந்தனைகளை உருவாக்கி யுள்ளன. இருப்பினும், முதலாளித்துவ அமைப்பின் கீழ் தொழிலாளரின் அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறன் அனைவரின் நலன் காப்பதற்கான பங்களிப் பிற்கு மாறாக - ஒருபுறம் சின்னஞ்சிறு சிறுபான்மை யினர் செல்வர்களாவது மறுபடியும் வேலை செய்யும் பரந்த அளவிலான பெரும்பான்மையினர் முழுதும் முழுமையாகச் சோர்வடைவதும் நிகழ் கிறது. இதோடு, பெருமளவிலானோர் வேலை யின்றி இருப்பதும், வேலையிலிருந்து நீக்கப்படு வதும் வறுமை வளர்வதுமான நிலை ஏற்படுகிறது. நவீன - தாராளமயம் - தொழிலாளர் சட்டங்கள், உடன்பாடுகள் ஆகியவற்றைச் சின்னாபின்னமாக்கு கிறது. இதோடு, பல்வேறு நாடுகளைச் சார்ந்த தொழிலாளர்கள் அவர்களுக்குள்ளே போட்டி யிட்டுக் கொள்ளவும் பெருமளவில் அவர்களை அயல்நாடுகளில் கொண்டுபோய்க் குவிக்கவும் முதலாளிகளுக்கு வழிசெய்து கொடுக்கிறது.

அத்தகைய ஏற்றத்தாழ்வுக்கு மாற்றாக, சர்வதேச ஒருமைப்பாட்டின் அடிப்படையில் உழைக்கும் மக்களின் போராட்டம் நடைபெற வேண்டும். நோக்கம் தொழிலாளரின் அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறன் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றின் பயன்கள் நேர்மையான முறையில் மறுவினியோகம் செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக, ஊதியத்தைக் குறைக்காமல் வேலை நேரத்தைக் குறைத்தல், தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தைக் குறைந்த அளவிலாவது உயர்த்துவது ஆகிய முக்கிய விஷயங்கள் கண்டிப்பாக கவனத் தில் கொள்ளப்பட வேண்டும். அதே வேளையில், சமூக ரீதியான பயனுள்ள வேலை மற்றும் பொதுச் சேவை ஆகியவற்றின் மதிப்பிற்கு அங்கீகாரம் வழங்குதல், ஆண் பெண் சமத்துவத்தை அடைதல் போன்றவை முக்கியத்துவம் வாய்ந்ததனவாகும். இந்த மாற்றங்கள், தனிநபர், பொதுவாகவும், உலக அளவிலும் விடுவிக்கப்படுவதற்கான சூழலை உருவாக்குவதோடு தொடர்புடையன.

முதலாளித்துவத்தின்கீழ் வளர்ச்சியடைந்த உற்பத்தி சக்திகளை அப்படியே ஏற்றுக்கொண்டு, பலன்களை மேலும் நேர்மையான வகையில், வினியோகிப்பதோடு மட்டும் சோஷலிசம் திருப்தி யடைந்து விடமுடியாது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கான ஒரு மாறுபட்ட முன்மாதிரி தேவை. அந்த முன்மாதிரியானது சமூகத்திற்கும் உயிரின வாழ்க்கைச் சூழலுக்கும் ஊக்கமளிப்பதாக இருத்தல் வேண்டும். மனிதர்களாகிய நாம் இயற்கையோடு குறுக்கிடாமல் வாழ முடியாது. ஆனால், நாம் இயற்கையை ஒரு கருவியாக மட்டுமே அணுகும் மனப்பான்மை கொண்டு, அதன் மதிப்பை பணத் தால் மட்டுமே மதிப்பீடு செய்கிறோம் என இதற்குப் பொருளல்ல. இயற்கையின் உற்பத்தித் திறன் அடிப் படையில் அது தொடர்ந்து கிடைத்திருக்கும் வகை யில் பொருளாதாரம் ஒரு அளவுகோலை ஏற்றாக வேண்டும்.

இன்றைய உலகில், சோஷலிசம் முன்னெப் போதைக் காட்டிலும் நீண்ட சர்வதேச நடைமுறை யைப் பொருத்ததாகும். இருப்பினும், முதலாளித்துவ வளர்ச்சி ஏற்றத் தாழ்வானதாக உள்ளது. அதே போன்று புரட்சியின் முன்னேற்றமும் எல்லா இடங் களிலும் ஒரே வேகத்தில் இல்லை. எனவே, புரட்சிகர மாற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னரே, சர்வதேச அமைப்பை ஜனநாயகப்படுத்துவதும் ராணுவ கட்டமைப்புக்களை கலைப்பதும் முக்கியமான தாகும். இதனால் சோஷலிசம் தனிமைப்படுத்தப் படாமலும், போர் அல்லது ஆயுதக் குவிப்பு ஆகிய வற்றில் மூச்சுத் திணறாமல் இருக்கவுமான சாத்தி யத்தை உருவாக்க முடியும்.

முதலாளித்துவ உலகமயமாக்கலால் உருவாக் கப்பட்டுள்ள பாதுகாப்புப் பிரச்சினைகளை மனித குலத்தின் பெரும்பான்மையினரை ஆழ்ந்த துயரில் ஆழ்த்துவதன் மூலமும், அவர்கள் தங்களைப் பற்றித் தாங்களே தீர்மானித்துக் கொள்கிற உரிமையைப் பறித்துக் கொள்வதன் மூலமும் தீர்க்க முடியாது. ஐரோப்பிய யூனியன், ஆசியா, அல்லது மற்ற பிராந்தியங்களை ராணுவ மயமாக்குவதோ, அமெ ரிக்கப் பாணி வளர்ச்சியோடு போட்டியிடுவதோ தற்போது அமெரிக்காவால் கட்டுப்படுத்தப்படு கின்ற சர்வதேச அமைப்பிற்கு மாற்றாக அமையாது. போர் எதிர்ப்பு நவீன தாராளமயத்துக்கு எதிரான இயக்கத்தின் அங்கமாகும்.

பண்பார்ந்த வாழ்க்கை, இயல்பான தன்மை ஆகியவற்றிற்குப் பொறுப்பானோர் என எண்ணு வோர், போர் மனப்பான்மையையும் மூலதனத்தின் லாபம் தேடும் முதலாளித்துவத்தையும் எதிர்ப்பதில் தங்களது கடமையை ஆற்றிட முன்வரவேண்டும்.

தெரிந்தெடுக்கப்படுவதற்கு நம் முன் இரண்டே வழிகள்தான் உள்ளன. ஒன்று, ஏகாதிபத்திய காட்டு மிராண்டித்தனம். மற்றொன்று, ஏகாதிபத்தியத்திற் கெதிராக, ஒரு புதுவித நாகரிகம், சோஷலிசம் ஆகியவற்றை உருவாக்கவுமான போராட்டம்.

தமிழாக்கம்: **வீ. ராஜ்மோகன்**



படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்புரை

பெ. அரங்க ராமானுஜம்

# அப்துல் கலாமின் புத்தாயிரம் ஆண்டுகளுக்கான ஒரு தொலைநோக்கு

இந்தியா ஒரு வல்லரசாக வேண்டும் என்று கனவு கண்டவர்கள், கனவு காண்பவர்கள் ஏராள மான பேர். இவர்களில் இந்தியா கி.பி. 2020-இல் ஒரு வல்லரசாக வேண்டுமென ஒரு தேதி குறித்துக் கனவு காண்பவர், ஆகிவிடும் என்று உறுதியாக நம்புபவர் இந்தியாவின் இன்றைய குடியரசுத் தலைவர் டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல்கலாம். அவர் குடியரசுத் தலைவர் ஆவார் என்று அவரோ மற்ற வர்களோ கனவில்கூட நினைத்திராத சமயத்தில், இந்தியா வல்லரசாகும் என்று அவர் கண்ட கனவு தான், நம்பிக்கைதான் இந்த நூல். டாக்டர் ய.சு. ராஜனுடன் சேர்ந்து அவர் எழுதிய "இந்தியா 2020"-இன் மூலநூலான ஆங்கிலப் பதிப்பு 1998-இல் வெளிவந்தபோது, அவருடைய கனவையோ, நம்பிக்கையையோ, கற்பனைகளையோ யாரும் பெரிதாக எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் ஒரு வரலாற்று விபத்தாக, வரவேற்கத் தக்க ஒரு வரலாற்றுத் திருப்புமுனையாக, டாக்டர் அப்துல்கலாம் ஜூலை 25, 2002-இல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அவரது கனவு மட்டுமன்றி, அவர் இளம் உள்ளங்களில் மூட்டிவிட விரும்பிய கனல்பொறி, திடீரென்று இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை அனை வருடைய உள்ளங்களையும் 'கப்'பென்று பற்றிக் கொண்டது. எனினும், இந்தியா எப்படி 2020-இல் வல்லரசாகும், அதற்கான வழிமுறைகளும் செயல் திட்டமும் என்ன என்பதைப் பற்றிப் பலருக்கு, குறிப்பாக சாதாரண மக்களுக்குத் தெரிந்திருக்க வில்லை. அத்தகைய வழிமுறைகளையும் செயல் திட்டத்தையும் விரித்துரைப்பதுதான் இந்த நூலின் தலையாய நோக்கம்.

"இந்தியா 2020", பன்னிரண்டு (12) அத்தி யாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மூலநூல் பற்றிய முன்னுரை, மொழிபெயர்ப்பு முன்னுரை, டாக்டர் கலாம் குடியரசு வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பிறகு ஒரு வேட்பாளராக அவர் வெளியிட்ட உறுதி மொழி, குடியரசுத் தலைவரான பிறகு நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தி, குஜராத்தில் நடந்த மத வெறியாட்டத்தின்போது குஜராத் மக்களுக்குக் குடியரசுத் தலைவர் என்கிற முறையில் அவர் விடுத்த செய்தி, இந்நூலின் பிற்சேர்க்கையாகத் தரப் பட்டுள்ள விவரங்கள்; நூல் குறிப்புகள் - எல்லாம் சேர்ந்து (456 + 26) = 482 பக்கங்களில் வெளி வந்துள்ள 2002-இன் பதிப்பான இந்த நூலை நெல்லை சு. முத்து மொழிபெயர்த்துள்ளார். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பத்தாவது அச்சாக இதனை வெளியிட்டுள்ளது. மே 2002-லிருந்து டிசம்பர் 2002-க்குள், 8 மாதங்களில் 9 அச்சுகள் வெளியிடப் பட்டன என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி. எனினும் இரண்டாம் பதிப்பு இன்னும் வெளிவராதது நிச்சயம் ஒரு குறையே. அதுபற்றி இந்த மதிப்புரையின் இறுதியில் சுருக்கமாகச் சொல்லியுள்ளேன்.

முதலில் இந்த நூலின் நிறைகள்: ஏராளமான புள்ளி விவரங்களோடு, ஒப்புநோக்குடன் கூடிய தர்க்க ரீதியிலான சிந்தனையோடு இந்த நூலின் ஆசிரியர்கள் முன்வைக்கும் திட்டங்கள், யோசனை கள், அறிவுரைகள், இந்தியா ஒரு காலத்தில் செல்வம் கொழித்த பேரரசாக, 'வல்லரசாக' வளர்ந்து பின்னர் தாழ்ந்து ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு அடிமைப்பட்டு, பின்பு விடுதலை பெற்று, இப்போது மீண்டும் ஒரு சுதந்திரமான, நவீனமயமான, எல்லாத் துறைகளிலும், வளர்ந்து வளம்பெற்று மீண்டும் ஒரு வல்லரசாகத் திகழ முயன்று கொண் டிருக்கும் வரலாற்றுக் கதையை அங்கங்கே கோடிட்டுச் சொல்லியிருப்பது இந்நூலின் பலம். விஞ்ஞானம், தொழில்நுட்பம், செயல்திறன் இவற் றில் பின்தங்கியதால்தான் இந்தியா தாழ்வுற்றது எனச் சொல்லியிருப்பதும் சரியே. ஆனால் அந்தத்



படிப்பகம்

www.padippakam.com

தாழ்வும், பின்னடைவும் சமூக, பொருளாதார, அரசியல், வரலாற்று ரீதியில் எவ்விதம் நேர்ந்தது என்பது சொல்லாமல் விடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அத்தியாயமும் ஒரு மேற்கோளுடன் தொடங்குகிறது; புத்தகம், ''எண்ணிய எண்ணியாங்கு எய்துப.....'' என்னும் திருக்குறளை மேற்கோள் காட்டித் தொடர்கிறது. வள்ளுவர், புத்தர், பைபிள், பாரதி, குரஜாதா, கபீர், காந்தி, நேரு என்று பல ருடைய கருத்துக்களும் மேற்கோள்களாய்க் காட்டப் பட்டிருப்பது இந்நூலாசிரியர்களின் மனித நேயத்தை, இலக்கிய ஈடுபாட்டை, பழமைக்கும் புதுமைக்கும் உள்ள வரலாற்றுப் பிணைப்பை, பன்முக நோக்கை, நெளிவு, சுளுவைக் கோடிட்டுக் காட்டுவதோடு, இவர்கள் உலகப் பார்வை மனித நேயத்தால் நெறிப்படுத்தப்படுகிறது என்பதையும் தெளிவாக்கியுள்ளது. கலாமும் ராஜனும் சோஷ லிஸ்டுகளோ, கம்யூனிஸ்டுகளோ, மார்க்சிஸ்டு களோ அல்லர். ஆனால் மனித நேயத்திற்கும் மனிதகுல வளர்ச்சிக்கும் அறிவியல் - தொழில் நுட்பம் மூலம் சமூகப் - பொருளாதாரப் பிரச்சினை களுக்குத் தீர்வு காண்பதற்கும் அவர்கள் எதிரிகள் அல்லர். உலகமயமாதல் என்கிற முதலாளித்துவச் சூறாவளி உலகையே உலுக்கிப் பலகோடி மக்களின் வாழ்க்கை வேர்களை ஈவிரக்கமின்றி அறுத் தொழித்துக் கொண்டிருக்கிற வேளையில், ஏழை நாடுகள், வளரும் நாடுகள் தம் சொந்த பலங்களை உணர்ந்து வளர்ந்த நாடுகளின், குறிப்பாக அமெ ரிக்காவின் சுரண்டல் பேரவைகளை, இராணுவத் தாக்குதல்களை, மிரட்டல்களை எதிர்கொள்ளும் விதமாகவேனும் பலம்பெற வேண்டுமென முழக்கம் செய்பவர்கள் எல்லோரும் மக்கள் நலன் கருதியே அவ்விதம் ஓயாமல் கூறிவருகிறார்கள். டாக்டர் கலாமும் டாக்டர் ராஜனும் இந்த நோக்கத் தில்தான் ''இந்தியா 2020''ஐ எழுதியிருக்கிறார்கள்.

முதல் அத்தியாயத்தில், ''இந்தியா ஒரு வளர்ந்த நாடாக முடியுமா?'' என்ற கேள்வியை எழுப்பி, வறுமையை ஒழித்துப் பொருளாதார - தொழில்நுட்ப ரீதியில் இந்தியா வளர்ந்த நாடாக முடியும் என்கிற நம்பிக்கையை ஆசிரியர்கள் ஊட்டி யுள்ளனர். ஆனால் அதற்கான உந்து சக்திகளாக நாட்டுப்பற்று, தேசியப் பாதுகாவல், இலட்சிய எண்ணங்கள் இவற்றையே முன் வைக்கின்றனர். தேசப் பாதுகாவல் என்பது வெறும் 'பாதுகாப்பு' மட்டுமல்ல என்பதை 'security', 'defence' என்கிற ஆங்கில வார்த்தைகளில் பொதிந்துள்ள அர்த்தத்தை இரண்டுக்குமுள்ள வேறுபாட்டைத் தெளிவுபடுத்தி, இந்தியாவின் 'உள்வள வலிமைகளை' வளர்த் தெடுக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்து கின்றன. அந்த வளங்கள் என்னென்ன என்பதை யும் பட்டியல் போட்டுக் காட்டியதோடு, நாம் வள ராமல் போனதற்கு நம் நம்பிக்கை வறட்சி எப்படி ஒரு முக்கியமான காரணம் என்பதையும் காட்டு கின்றனர். உலகமயமாதலின் மையக் கருவே. வளர்ந்த நாடுகள் தம் வலிமைகளை மேலும் வலுப் படுத்தி வளரும் நாடுகளின் பலவீனங்களைப் பயன்படுத்தி வியாபாரப் போட்டியில் அவற்றை வீழ்த்தி எப்படியெல்லாம் வளர்ந்த நாடுகள் வளர்ந்த வண்ணமேயிருக்கின்றன என்கிற எளிய உண்மை வெளியான போதிலும், இந்தியா தன் பலங்களை வெளிப்படுத்த வாய்ப்புக்கள் ஏராளம் என்று நம்பு கின்றனர் கலாமும் ராஜனும்.

அத்தியாயம் 2-இல் புத்தபிரானின் போதனை ஒன்றை மேற்கோள்காட்டி, நம்பிக்கை, அதிலும் தன்னம்பிக்கை மிகுந்த தொலைநோக்கும். சொந்தக் காலில் நின்று எப்படி முன்னேற முடியும் என்கிற சுய அறிவும் எவ்வளவு அவசியம் என்பதைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர். அத்தியாயம் 3-இல் தொழில்நுட்பத் தொலைநோக்கு எப்படி யிருந்தால் இந்தியா 2020-இல் வளர்ந்த நாடாக வர இயலும் என்பதை விவரித்துள்ளனர் ஆசிரியர் கள். அத்தியாயம் 4-இல் இந்தியாவின் உணவுத் தேவைகள், வேளாண்மை வளர்ச்சி பற்றிய விரிவான செய்திகளைத் தொகுத்துக் கொடுத்து விண்வெளி ஆராய்ச்சி எப்படியெல்லாம் இந்திய விவசாயத் துக்கும், சுற்றுப்புறச் சூழலுக்கும் உதவுகிறது, இன்னும் உதவமுடியும் என்பது தெளிவாக்கப் பட்டுள்ளது. அத்தியாயங்கள் 5, 6, 7 இந்த மூன்றும் இந்தியாவின் பல்வேறு வளங்களையும், சரிவர அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள எத்தகைய விஞ்ஞான அறிவும், தொழில்நுட்பமும் தேவை யென்பதும் வரைபடங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. அத்தியாயம் '8' 'சேவையே மக்களின் செல்வம்' என்பதையும், அத்தியாயம் 9 சக்தி சக்தியை எப்படி, ஏன் மதிக்கும் என்பதையும் காட்டுகின்றன. சேவை, சக்தி இரண்டுக்கும் மூலாதாரம் விஞ்ஞான அறிவே என்பது வலியுறுத்தப்படுகிறது. தொழில், கல்வி,



படிப்பகம்

www.padippakam.com

விஞ்ஞானம், இராணுவம் முதலிய துறைகளில் எத்தகைய வியூகங்களும், நீண்டகாலத் திட்டங்களும் தேவை என்பவை விவரிக்கப்பட்டுள்ளன.

அத்தியாயம் 10 'அனைவருக்கும் உடல் நலம் பராமரிப்பு' பற்றியும் அத்தியாயம் 11-இல் உள்கட்டமைப்பு (infrastructure) இந்தியாவின் துரித வளர்ச்சிக்கு எவ்வளவு அவசியம் என்பதையும், அத்தியாயம் 12, தொலைநோக்கு நனவாக தொழில்நுட்ப ரீதியில் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றன. நூலின் இந்தக் கடைசி மூன்று அத்தியாயங்களையும், முதல் அத்தியாயத்தையும் வரிசைப்படுத்தினாலே கலாமின் கனவும், அது நனவாக என்னவெல்லாம் செய்யவேண்டும், அவரும் அவர் நண்பர் ராஜனும் தருகிற செயல் திட்டமும் ஓரளவு எல்லாருக்கும் புரிகிற முறையில் ஒரு தனி நூலாகத் தந்துவிடலாம். அதன் துணை நூலாக இடையிலுள்ள 8 அத்தியாயங்களைத் தரலாம். அதாவது, இந்த ஒரு புத்தகத்தையே இரு புத்தகங்களாகப் பிரித்துவிடலாம். அப்படிப் பிரிப்பதால் புத்தகத்திலுள்ள கருத்துக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்பட்டுவிடாது.

மொழிபெயர்ப்பு, நடை, ஆங்கிலக் கலைச் சொற்களின் தமிழாக்கம். சொற்பிரயோகங்கள், வாக்கிய அமைப்புகள் இவையெல்லாம் இந்தப் புத்தகத்தின் உண்மையான மதிப்பைக் கூட்டுவதற்குப் பதிலாக குறைக்கவே செய்கின்றன. ஒரு நூலை ஆங்கில மூலத்திலிருந்து தமிழில் அல்லது வேறு எந்த இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கும்போதும் நேரடியான, சொல்லுக்குச் சொல்லாக மொழி பெயர்த்தால் நூலின் வடிவம் (form). அதன் உள்ளடக்கம் (Contents) இரண்டுமே சிதைந்து, கோரையாகி விடுகின்றன. இரண்டாக உடைந்த தேங்காய் மூடிகளிலிருந்து பருப்பை ஒரு மொண்ணைக் கத்தியால் ஆறு வயதுக் குழந்தை தன் பிஞ்சுக் கைகளால் சிதைத்துச் சிதைத்து அறுவி அறுவிச் சுவைக்கிற மாதிரிதான். தின்ற திருப்தியோ, சுவைத்த சுவையோ இல்லாமல் போய்விடும். தேங்காய்ப் பருப்பு வாய்க்குள் போனதென்னவோ உண்மைதான்.

மொழிபெயர்ப்பு மொழியாக்கமாக வேண்டும். மொழியாக்கம் ஒரு மொழியிலுள்ள நூலை இன்னொரு மொழியில் இயல்பாகவே எழுதப்பட்ட மாதிரி 'ஆக்கித்' தரவேண்டும். அதற்கு, இரு வேறு மொழிகள் மட்டுமல்ல, உள்ளடக்கமும் கருத்துக் கோவைகளும் மட்டுமல்ல, அதற்கு மேலும் கொஞ்சம் தெரிந்திருக்க வேண்டும். நமக்கு நன்றாகத் தெரிந்த, புரிந்த விஷயங்களைக் கூட, நாம் அவற்றை யாருக்குச் சொல்லுகிறோம் என்பதை உணர்ந்து சுவையாகச் சொல்லவும். எழுதவும் வேண்டும் - அதைத்தான் அவ்வைப் பாட்டி 'நயம்பட உரை' என்றாள். நெல்லை சு. முத்து அவர்கள் இந்த நூலை எவ்வளவோ சிரமங்களுக்கிடையில், எளிமையாக, சுவையாக மொழிபெயர்க்கப் பெரிதும் முயன்றிருக்கிறார். அதற்காக அவரை மனதாரப் பாராட்ட வேண்டும். அதே வேளையில் இந்த மொழிபெயர்ப்பு மொழியாக்கமாக மாறுவதற்கு இன்னும் நிறையவே முயல வேண்டியுள்ளது. இதனை முத்து அவர்களும் கலாம் அவர்களும் ராஜன் அவர்களும் ஒப்புக்கொள்வார்கள் என நம்பலாம்.

கடைசியாக, மார்க்சிய சித்தாந்தத்தின் மீதும், பொதுவுடைமைச் சமுதாயம் ஒரு நாள் நிச்சயம் மலரும் என்கிற மனித குலத்தின் மகோன்னதக் கனவின் மீதும் இன்னும் வற்றாத நம்பிக்கை வைத்துச் செயல்படும் தோழர்களும், முற்போக்கு எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஆர்வத்துடன் உண்மைகளைத் தேடிச் சளைக்காமல், முன்வருகிற ஆர்வலவர்களும், இந்த நூலைப்பற்றியும், இதன் ஆசிரியர்களைப் பற்றியும் எத்தகைய மதிப்பீடுகளைச் செய்ய இயலும் என்பது பற்றியும் சில வார்த்தைகள்:

கலாமும் ராஜனும் அணுசக்தி விஞ்ஞானிகள் மட்டுமல்லர்; அவர்கள் மக்களை நேசிப்பவர்கள். மனிதநேயம் அவர்களது சித்தாந்தம். இன்னும் தெளிவாகச் சொல்வதென்றால் bourgeois humanists முதலாளித்துவ சமூகத்தில் பிறந்து வளர்ந்த ஜனநாயக மரபுகளின் மீது நம்பிக்கை வைத்துள்ள மனித நேயர்கள்; மனிதாபிமானிகள். கம்யூனிஸ்டுகளிடமிருந்து சித்தாந்த ரீதியில், உலகப் பார்வையில், தத்துவார்த்த ரீதியில் வேறுபட்டவர்கள்; மாறுபடுபவர்கள். இந்த வேறுபாடும் மாறுபாடும் அவர்களுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ அவர்களுக்குள்ளே நேர்ந்திருக்கலாம். ஆனால், ஏகாதிபத்திய, முதலாளித்துவப் பேய்கள், புதுமைப்பித்தன் பாணி



படிப்பகம்

www.padippakam.com

யில் சொன்னால் அமெரிக்க-ஐரோப்பிய ஃபாஸிஸ்ட் ஜடாமுனிகள், ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானத் திலும், முன்னர் வியட்நாமிலும், இன்னும் எல்லா ஏழை நாடுகளிலும் வெறும் கண்களுக்குப் புலப் படாமலே ஆவிகளாய் வெறியாட்டம் போட்டு மனித ரத்தத்தையும், மாமிசத்தையும் அடங்காப் பசி யுடன் அள்ளிப் பருகிக் கொண்டும், விழுங்கிக் கொண்டுமிருக்கிற வேளையில், உண்மையான முற்போக்காளர்களும், கம்யூனிஸ்டுகளும் கலாம் களையும் ராஜன்களையும் தம்மோடு சேர்த்துக் கொள்ளவும், அரவணைத்துக் கொள்ளவும் வேண்டும். இது ஏதோ கருணையினால் அல்ல. காலத்தின் கட்டாயத்தால், நீதி தேவனின் கட்டளை யாய் இந்தக் கூட்டணி சேர்ந்தாக வேண்டும். யாரெல்லாம் யார் யாருடனோ கூட்டுச் சேரும் போது, காந்தி, நேரு, புத்தர், இயேசு, வள்ளுவர், பாரதி - இவர்களைப் பற்றியே பேசுகிற கலாம் கம்யூனிஸ்டுகளுக்கு அலர்ஜியாகத் தோன்றினால். முதலில் கம்யூனிஸ்டுகள் தம் இரத்தத்தையும், இதயத் துடிப்பையும், மூளை நலனையும் நன்றாகப் பரிசோதிக்க வேண்டிவரும். ஐன்ஸ்டீனும் விஞ்ஞானிதான். 20-ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த விஞ்ஞானி. ஹிட்லரையும், முசோலினியையும் எதிர்த்து சோசலிஸம் ஏன் அவசியம்? என்கிற கட்டுரையை எழுதிய மகத்தான மனிதநேயம் கொண்ட விஞ்ஞானி. ஆனால் அவர் ஒரு கம்யூ னிஸ்டு அல்ல. இஸ்ரேல் என்கிற தேசம் உரு வாவதை ஆதரித்தார். ஆனால் ஐன்ஸ்டீன் யூத வெறியர் அல்லர். அமெரிக்க ஜனாதிபதிக்கு அணுகுண்டு தயாரிக்க வேண்டியதன் அவசியம் குறித்துக் கடிதம் எழுதினார் - ஹிட்லரின் கொலை வெறியாட்டத்தை எப்படியும் நிறுத்த வேண்டுமே, அவன் அணுகுண்டை முதலில் தயாரித்துவிட்டால் என்ன ஆகுமோ என்ற பதற்றத்தால்; மனித குலத்தைக் காக்க வேண்டுமே என்கிற அக்கறை யால். ஆனால் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் அமெரிக்காவின் அணுகுண்டுகள் விழுந்து பல்லா யிரக்கணக்கான மக்களை அழித்தொழித்தபோது, ''இப்படியாகும் என்று தெரிந்திருந்தால், நான் அமெரிக்க ஜனாதிபதிக்கு அப்படியொரு கடிதத்தை எழுதியே இருக்க மாட்டேன்'' என்று அதே ஐன்ஸ்டீன் புலம்பிக் கண்ணீர் வடித்தார். அவர் கடிதம் எழுதாமலேயிருந்தாலும் அமெரிக்கா அணு குண்டைத் தயாரித்து, ஜப்பானில் இல்லாவிட் டாலும், வியட்நாமிலோ, வேறு ஒரு சோசலிஸ நாட்டிலோ அதனைப் போட்டுப் பரிசோதனை செய்து பார்த்திருக்கும் என்பது வேறு கதை.

இங்கே நாம் மனதில் கொள்ள வேண்டியது இதுதான்: இந்தியாவிலும் பல அணுசக்தி விஞ்ஞானிகள் இருந்தனர்; இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் கலாமைப் போல உலகை யும், பிரபஞ்சத்தையும், நாட்டையும், மக்களையும் ஒருசேர மனித நேயத்தோடு, கரிசனையோடு, ஆத்ம சுத்தியோடு, சுயநலம் கருதாமல் பார்க்கிறார்களா, செயல்படுகிறார்களா? இந்த நூலில், சித்தாந்த ரீதியில் எத்தனையோ கருத்துக்களை, கோட்பாடு களை, விவாதங்களை, விமர்சிக்கலாம், மறுக்கலாம்; ஒதுக்கலாம். ஆனால் ஒதுக்க முடியாதவை, கலாம் ராஜன் இவர்களின் மனிதநேயம். இந்தியாவும் உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்கிற தணியாத (சுதந்திரத்) தாகம்; அப்படி உயர் வதற்கு அவர்கள் காண்கிற சாத்தியக் கூறுகள்.

மனித நேயமே கலாம் என்கிற அற்புதமான மனிதரை அவர் குடியரசுத் தலைவரான பிறகும் வழிநடத்திச் செல்கிறது. குஜராத்தில் மதக் கலவரத் தீ பற்றி எரிந்து கொண்டிருந்த வேளையில் அதி லிருந்து அரசியல் பின்னணியைப் பற்றி எதுவும் பேசாமலே அதற்குக் காரணமாயிருந்தவர்கள், வெட்கித் தலைகுனியும்படி அவர்களை, மக்கள் பட்ட அவலங்களை, சோகங்களை, நேருக்கு நேர் பார்க்கும்படி செய்ததோடு மக்கள் முன்னிலை யிலேயே, மதவெறியர்களின் முகமூடிகளைக் கிழித்து அடையாளங் காட்டியது. அரசியல்வாதி களின் இரட்டை நாக்குகள் ஆயிரம் பேச்சுகள் மூலம் சாதிக்க முடியாததை, மௌனத்தின் துணை கொண்டு ஒரு சோகப் பார்வையால் மன்னிக்கவே முடியாத மத வெறியர்களைக்கூட அவமானம் தாங்காமல் மனிதப் புழுக்களாய் நெளியச் செய்தது கலாம்-ராஜன் இவர்களின் மனிதநேயமே. உலக மயமாதலின் மறுபக்கத்தை, நாடுகளுக்கிடையே நடந்து கொண்டிருக்கும் சமநிலையற்ற போட்டியை, வெற்றி-வெற்றிச் சூழ்நிலை (win-win situation) என்கிற கோஷத்தின் பின்னாலுள்ள மாயாஜாலங் களை, சுகாதார வசதிகளும் குடிக்கத் தூய்மையான தண்ணீர் கூட இல்லாமல் மரணத்தின் பிடியில் சிக்கித் தவிக்கும் கோடிக்கணக்கான மக்களின்



படிப்பகம்

www.padippakam.com

அவலக்குரல்களை, வலிமை பெற்ற வல்லரசுகளின் ஈவிரக்கமற்ற பொருளாதார - இராணுவ வியூகங் களை மறைக்காமல் நமக்குக் காட்டுகிறது. இருந் தாலும், இந்த மனித நேயமும், நேர்மையும், துணிவும் மட்டுமே இந்திய மக்களையும், உலக மக்களையும் அவர்களைத் தினமும் ஓயாமல் வேட்டையாடிக் கொண்டிருக்கிற வறுமை, நோய், பலாத்காரம், பயங்கரவாதம் இவற்றிலிருந்து விடுவித்துவிடுமா? இந்தியா 2020ல் அமெரிக்கா வுக்கு இணையான, அதற்கும் மேலான வல்லரசாக மாறினால் அது அமெரிக்காவைப் போலவோ அல்லது அதனை விடவும் அதிகக் காட்டுமிராண் டித்தனமாகவோ உலக அரங்கில் வெறியாட்டம் போடாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

இந்தக் கேள்விகளுக்குக் கலாம்-ராஜன் பதில் சொல்ல வேண்டும் என்பதல்ல. கம்யூனிஸ்டுகளும், முற்போக்காளர்களும் ஜனநாயகவாதிகள் அனை வரும் சரியான பதிலைத் தேட வேண்டும். கம்யூ னிஸ்டுகளின் பதில் - நல்ல பதில் - இப்படியிருக்கும்: 'மார்க்ஸ் கூறிய எளிய உண்மை என்ன? சுரண் டலின் அடிப்படையில், தனிச் சொத்துரிமையின் அடித்தளத்தில் இலாபம் தேடுவதையே ஒரே நோக்கமாகக் கொண்டுள்ள முதலாளித்துவ உற்பத்தி முறையில் சந்தை, எப்போதுமே ஸ்திரமாக இருக்காது. உரிமையாளர்களும் மாறிக் கொண் டிருப்பார்கள். உலகமயமாதல் என்கிற சந்தைப் பொருளாதாரத்தில், பண மூலதனத்தின் ஆதிக்கத் தில் வளர்ந்த நாடுகள், ஏழை நாடுகளை, வளர்ந்து வரும் நாடுகளைச் சுரண்டுவதும், இராணுவ மிரட் டல்கள், ஆக்கிரமிப்புகள் மூலம் அடக்கி ஆள்வதும் அடிப்படை நியதிகள். ஒவ்வொரு நாட்டிற்குள்ளும் ஆளும் வர்க்கம் உணவுக்கும் மக்களை ஏமாற்றி அல்லது அடித்துத் துவைத்துச் சுரண்டுவது அதே நியதிகளின் தேசிய வடிவங்கள். எனவே, வர்க்க முரண்பாடுகளுக்கு வரலாற்று ரீதியிலான தீர்வு காணாமல் வளரும் நாடுகள் வல்லரசுகளானால் அதனால் இந்த அடிப்படை முரண்பாடுகள் கூர்மை யாகித் தீவிரமாகுமே தவிர மறைந்து போவ தில்லை. எனவே வளர்ந்த நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்குமான இடைவெளிகள், முரண்பாடுகள் ஏற்றத்தாழ்வுகள் முதலியவை வர்க்கப் போராட்டத் தின் நவீன அம்சங்களே தவிர அவை மறைந்து விட்டதற்கான அடையாளங்களல்ல. இதே போராட்டம் தான், முரண்பாடுதான் தேசிய அளவில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதை மூடி மறைப்பதற்குப் பதிலாக வெட்ட வெளிச்சமாக்கி 'இந்தியா ஒளிர் கிறது' என்கிற மாயத் திரைச்சீலையை நீக்கி 'இந்தியா எரிகிறது' என்கிற உண்மையை, இந்தியாவின் மறுபக்கத்தைக் காட்ட வேண்டியது அவசியமும் அவசரமுமாகும். இதுதான் ஒரு மார்க்சியவாதி யின் அணுகுமுறையாக இருக்கும்.

டாக்டர் கலாம் போன்றவர்களின் பதில்கள் வேறுவிதமாக இருக்கலாம். ஆனால் அவர் பட்டியல் போட்டுத் தந்திருக்கிற விவரங்கள், செயல் முறைத் திட்டங்கள் ஒரு சோசலிஸ சமூகத்தில், பொதுவுடைமைப் பொருளாதாரக் கட்டுமானப் பணியில் பெரிதும் ஆக்கப்பூர்வமான பங்காற்றும் விஞ்ஞானிகளின் செயல் திட்டங்கள். எந்த ஒரு அரசியலமைப்பிலும் செயல்படும் அந்தத் திட்டங் களை எந்த நோக்கங்களுக்குப் பயன்படுத்துவது என்பது சமூக விஞ்ஞானிகளின் பார்வையையும் திறனையும் பொறுத்தது. அந்த வகையில் 'இந்தியா 2020' அறிவினால் தீட்டப்பட்ட விஞ்ஞானக் கூர்வாள். அதைக் கையிலேந்தப் போவது முன்னே றத் துடிக்கும் முற்போக்கு சக்திகளா, அல்லது கடைந்தெடுத்த பிற்போக்கு பாஸிஸ்டு சக்திகளா என்பதே கேள்வி... பதில்?

| | | |
|---|---|---|
| **நூல்** | : | **இந்தியா 2020 : புத்தாயிரம் ஆண்டுகளுக்கான ஒரு தொலைநோக்கு** |
| **ஆசிரியர்** | : | **ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் உடன் ய.சு. ராஜன்** |
| **தமிழில்** | : | **நெல்லை சு. முத்து** |
| **வெளியீடு** | : | **நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை** |
| **விலை** | : | **ரூ. 150** |

★★★



படிப்பகம்

www.padippakam.com

**ஏகாதிபத்திய உலகமயவாதிகளால் முன்வைக்கப்படும் "பொருளாதார சீர்திருத்தங்களின்" வரலாற்றுப் பூர்வமான வளர்ச்சிக் கட்டத்தை இக்கட்டுரை விளக்குகிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் கடைப்பிடிக்கப்பட கீன்சியமும், ஃபோர்டிசமும், அதனைச் சார்ந்து தன்னுடைய கருத்தியலை வளர்த்துக் கொண்ட சமூக ஜனநாயகமும் புதிய நிலைகளில் நெருக்கடிக்கு உள்ளானதை கட்டுரை விளக்குகிறது. கீன்சியக் கட்டமைப்புக்கும் திணறும் சமூக ஜனநாயகத்தின் இயலாமையை இக் கட்டுரை அம்பலப்படுத்துகிறது. மூலதனத்திலிருந்து முற்றிலும் முறித்துக் கொள்ளும் வகையிலான மாற்றை முன்மொழிகிறது. Monthly Review - May 2004 இதழிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட இந்த கட்டுரை பொருளாதார வளர்ச்சிக்கும், கருத்தியலுக்குமான தொடர்பை விளக்குகிறது.**

**மைக்கேல் ஏ. லெபோவிட்ஸ்**

# கருத்தியலும் பொருளாதார வளர்ச்சியும்

**பொருளாதாரக் கோட்பாடென்பது** நடுநிலையானதல்ல. ஒரு கோட்பாடு நடைமுறைப்படுத்தப் படும்பொழுது, அதனுள் புதைந்திருக்கும் ஊகங்கள் அதன் வெற்றிக்குப் பெரிதும் காரணமாகின்றன. அத்தகைய ஊகங்கள். குறிப்பிட்ட கருத்தியல்களைப் பிரதிபலிக்கின்றன என்பது **நவீனதாராளமயப் பொருளாதாரக் கொள்கை**களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

''நவீன பொருளிய''லானது தனிச் சொத்து, தன்னலம் ஆகியவற்றிலிருந்து ஆரம்பிக்கிறது. சொத்துரிமையின் கட்டமைப்பு, வினியோகம் ஆகியவை எப்படியிருந்தாலும், சுயநலத்தைப் பூர்த்தி செய்துகொள்ள அது உடைமையாளர்களின் உரிமையைப் பெறுகிறது. சுருங்கச் சொன்னால், இன்றைய சமுதாயத்தின் நலன், மனித ஆற்றல் மேம்பாடு ஆகியவற்றைப் பற்றி நவீன பொருளியல் கவலைப் படவில்லை. தனிநபர்கள் தங்கள் சொத்துக்களைப் பற்றி எடுக்கின்ற முடிவுகளின் விளைவுகளிலேயே அது குறியாக இருக்கிறது. இக்கோட்பாட்டை அலசி ஆராய்வதற்கு அடிப்படை அலகாய் அமைவது தனிமனிதர்தான் என்று கூறுவது மிகப் பொருந்தும்.

சரக்கின் விலையை உயர்த்து. நுகர்வோராக இருக்கும் கணினி, சரக்கைக் குறைவாக வாங்கும்; கூலியை உயர்த்து, முதலாளியாக இருக்கும் கணினி, தொழிலாளர்களுக்குப் பதிலாக இயந்திரங்களை அமைத்துக் கொள்ளும்; வேலையற்றோருக்கான காப்பூதியம் மற்றும் வாழ்க்கை நல உதவிகளை அதிகப்படுத்து, தொழிலாளியாக இருக்கும் கணினி, வேலை செய்வதை நிறுத்திவிடும். அல்லது நீண்ட காலம் வேலையற்றிருக்கும்; லாபத்தின் மீதான வரியை உயர்த்து. முதலாளியாக இருக்கும் கணினி, வேறெங்காவது முதலீடு செய்யும்.

சுகதுக்கங்களை பகுத்தறியும் கணிப்புப் பொறிகளான தனிநபர்கள், ஒவ்வொரு முறையும் ஆதாரக் கூறுகள் மாறுபடும்போது அவற்றை எவ்வாறு எதிர் கொள்கிறார்கள் என்பதுதான் இங்கு நோக்கப்பட வேண்டிய விஷயம். துன்பங்களை அகற்றி இன்புற்றிருப்பதுதான் அவர்கள் நோக்கம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரிகிறது. வேலையின்மையைக் குறைக்க வேண்டுமென்றால், கூலியைக் குறைக்க வேண்டும்; வேலையின்மைக் காப்பூதியம், வாழ்க்கை நல உதவி ஆகியவற்றைக் குறைக்க வேண்டும்; மூலதனத்தின் மீதான வரியைக் குறைக்க வேண்டும் என்பன போன்றவற்றை இந்த கோட்பாட்டிலிருந்து தெளிவாக உய்த்துணர முடிகிறது.

தனிமைப்படுத்தப்பட்ட தனித்தனிப் பகுதிகளின் ஒட்டுமொத்தம்தான் 'முழுமை'; இது இக்கோட்பாட்டின் இன்றியமையாக் கூறாகும். வெவ்வேறு புறத்தூண்டல்களுக்குத் தனிமனிதர்கள் எவ்வாறு எதிர்வினை புரிகிறார்கள் என்பதை அறிந்துகொண்டால், அந்தத் தனி மனிதர்கள் அடங்கிய சமுதாயம் எவ்வாறு எதிர்வினை புரியும் என்று தெரிந்து கொள்ளலாம். (மார்கரெட் தாட்சர் கூற்றுப்படி சமுதாயம் என்று ஒன்றில்லை- எல்லாம் தனி மனிதர்கள்தான்). தனியொருவருக்குப் பொருந்துவது, ஒருங்கமைந்த சமுதாயம் முழுமைக்கும் பொருந்தும். மேலும் ஒவ்வொரு சமுதாயமும் தனி மனிதர்களாகக் கருதப்படுவதால் - கூலியைக் குறைத்து, வேலைப்பளுவை அதிகரித்து, வாழ்க்கை நல உதவிகளை அகற்றி, அதனால் வேலைக்கு அலைபவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அரசின் செலவினங்களைக் குறைத்து, வரிகளைக் குறைத்து தனியொருவர் சர்வதேச அளவில் போட்டியிட்டு வளம்பெற முடியும். அதன் வழி எல்லாச் சமுதாயங்களும் வளம் பெறமுடியும். புதிய பொருளியல் இவ்வாறு உறுதி அளிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

ஆடம்ஸ்மித்தைப் பொறுத்தவரையில், தனி யொருவனின் சுகதுக்கங்களை கணித்தறியும் சக்தி 'இயற்கை' அல்லது இறைவனாகக் கருதப்பட்டது. அவருடைய நெருங்கிய சம கால நண்பர் ஃபிராங் காய்ஸ் கொஸனே என்பவர், அந்த இறைவன் தான் 'பொருளியல் ஒத்திசைவுக் கோட்பாட்டிற்கு மூலதாரணமாக இருக்கிறார் என்றும், 'இந்த மாய வித்தையினால் ஒவ்வொருவரும் தனக்காக வேலை செய்வதாக எண்ணிக்கொண்டு மற்றவர்களுக்காக வேலை செய்கிறார்கள்' என்றும் நம்பினார்.

இந்த மாயவித்தைக்கு இறைவனே மூலவன் என்பதற்குப் பதிலாக இப்போது 'சந்தை' இடம் பெறுகிறது. சந்தையின் கட்டளைகளை எல்லோரும் ஏற்க வேண்டும் அல்லது அதன் சீற்றத்தைச் சந்திக்க வேண்டும். தாராளப் பரிவர்த்தனை மூலம் ஒவ்வொரு வரும் பயனடைவதை இந்தச் சுதந்திரச் சந்தை உறுதி செய்கிறது என்று கூறப்படுகிறது. தனிநபர் தேர்ந் தெடுக்கும் வியாபாரங்கள் மிக நல்ல விளைவு களைக் கொடுக்கும் என்றும் அதேபோல, மிகச் சிறந்த சந்தையில் அரசின் தலையீடு பேரிழப்பை உண்டாக்கும் என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே இத்தகைய தலையீடுகளைக் களைய வேண்டும் என்பதுதான் இத்தகைய சிந்தனையாளர்கள் எடுக்கும் முடிவாகும். 'பேரின்ப நிலையில் இருக்கும்போது பேரின்ப அமைச்சகம் தேவையில்லை' என்பதுதான் மதப்பிரச்சாரங்களின் நிலை என்று ஜான் கென்னத் கால்பிரெய்த் கூறியது இங்கு நினைவுகூரத்தக்கது.

அந்தப் பேரின்ப உலகைக் கொண்டுவர (அதாவது இந்தக் கோட்பாட்டோடு உலகை ஒத்திருக்கச் செய்ய) நிர்ப்பந்தமும், வற்புறுத்தலும் தேவைப்படுமென்றால், அது நீண்டகாலப் பலனுக் கான குறுகிய கால வேதனையாகவே இருக்கும்; 'இடை மாறுபாட்டுக் காலத்தில் சர்வாதிகார முறை இன்றியமையாததாக இருக்கலாம். சமயங்களில் ஒரு நாட்டிற்கு ஏதாவதொரு வகையிலான சர்வாதி கார ஆட்சிமுறை தவிர்க்க முடியாததாக இருக்க லாம்' என்று சிலி நாட்டின் எல்மெர்குரியோவிற்கு (எப். 12, 1981) அளித்த பேட்டியில் ஃபிரடெரிக் வான் ஹெயெக் என்பார் சொன்னார்.

ஆகவே, மூலதன இயக்கத்திற்கெதிரான தடைகள் அனைத்தையும் நீக்க வேண்டும் என்றும் மூலதனத்தைக் கட்டுப்படுத்தும் அரசு அதிகாரங் களைக் குறைக்க வேண்டும் என்றும் அதேசமயம் மூலதனத்திற்கு ஆதரவாகத் துணை நிற்கும் அரசு அதிகாரங்களை அதிகரிக்க வேண்டும் என்றும் இது கூறுகிறது. முடிவாக, நவீன சிறப்புப் பொருளியல் (மற்றும் அது ஆதரிக்கிற நவீன தாராளமயக் கொள்கை) தெரிவிக்கும் எளிய செய்தி 'மூலதனம் சுதந்திரமாக இருக்கட்டும்' என்பதுதான்.

## கீன்ஸின் மாற்று

ஜான் மெய்னாடு கீன்ஸ் (1863-1946) என்பாரின் முதலாளித்துவ மட்டியல் கட்டுப்பாட்டு வாதம். இது கூட்டமைவு பற்றிய தவறான வாதங் களால் எழும் பிரச்சினைகளை மையப்படுத்தியது. அதன் வழி, முழுமையின் முக்கியத்துவத்தைப் பற்றி சிந்திக்க வேண்டிய தேவையை உணர்த்தியது. 1930-களில் மிகப் பெரும் வணிகத் தொய்வு ஏற் பட்ட காலத்தில், கூலியைக் குறைத்தால் வேலை வாய்ப்பு அதிகரிக்கும் என்று பொதுப்படுத்தப்பட்டுக் கூறப்பட்ட நவீன வாதத்தைக் கீன்ஸ் ஏற்கவில்லை. கூலிகளின் கூட்டுச் சார்பு, நுகர்வுச் செலவு, ஒட்டு மொத்தத் தேவை, அதன் வழி பொது அளவிலான உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவற்றை கீன்ஸ் வலியுறுத்தினார். (பகுதியிலிருந்து முழுமை நோக்கிச் செல்கிற நவீன சிறப்பு இயக்கமானது, 'கூலி குறைப்பினால் பாதிக்கப்படாமல் ஒட்டு மொத்த கோரிக்கை, நிலையாக இருக்கிறது' என்னும் ஊகத்தின் அடிப்படையில் செயல்படுகிறது என்று அவர் கூறுகிறார்) தனியொருவர் முடிவிற்கும் ஒட்டு மொத்த முடிவிற்கும் இடையிலான தொடர்பை நவீன சிறப்புக் கோட்பாடு புறக்கணித்துவிட்டது. தனித்தனி மூலதனங்களுக்கிடையிலான செயல் பாட்டு விளைவுகள் எவ்வாறு மிகக் குறைந்த முத லீட்டை ஏற்படுத்துகின்றன என்பதை அது புரிந்து கொள்ளாததனால், இத்தகைய குறிப்பிட்ட சந்தைத் தவறுகளைக் களையும் அரசின் ஆற்றல் வாய்ந்த பங்கையும் அறிந்துகொள்ளத் தவறிவிட்டது.

கூலி உயர்வு, ஒட்டுமொத்தத் தேவையை அதிகரிக்கும், வேலைவாய்ப்பை விரைவுபடுத்தும், புதிய முதலீடுகளைத் தூண்டும் என்று தொழிற்சங்க வாதிகள் முன்வைக்கும் வாதம்தான் கீன்சின் வரை யறையின் தனிச் சிறப்பாகும். அதிக அளவிலான நுகர்வின் முக்கியத்துவம், வளர்ச்சி மற்றும் பேரளவு நுகர்விற்கான 'ஃபார்டிஸ்ட்' (FORDIST) மாதிரி என்று தவறாக கூறப்பட்டதனுடைய மைய நோக்க மாக இருந்தது. அதுவே மிக அதிக உற்பத்திக்கும் தேவை என்று வாதிடப்பட்டது. என்றாலும், இவற் றின் பலன்களை அடைந்திட சந்தை மட்டுமே போதாது. அரசின் கொள்கைகளும், உயர்மேலாண் மையும் தவிர்க்க முடியாதவையாக நோக்கப்படு கின்றன. தேசிய அளவிலமைந்த தொழில்துறை



படிப்பகம்

www.padippakam.com

வளர்ச்சிக்கு, உள்நாட்டுத் தேவையின் முக்கியத் துவமே மிகவும் அடிப்படையானது என்று ஃபார்டிஸ்ட் மாதிரி அழுத்தமாகக் கூறுகிறது. அதுவே உள்கட்டமைப்புக்கொண்ட பொருளாதார வளர்ச்சிக்கும் பொருந்துவதாகும்.

இரண்டாவது உலகப் போர் முடிவுற்றதிலிருந்து 1970-களின் முற்பகுதி வரையுள்ள இடைப்பட்ட காலம் முதலாளித்துவத்தின் பொற்காலம் எனக் கூறப்பட்டது. அது வழக்கத்திற்கு மாறான காலம். தனக்கு நிகரான முதலாளித்துவப் போட்டியில்லாமல், போரிலிருந்து அமெரிக்கா மீண்டெழுந்தது. ஜெர்மன், ஜப்பான் ஆகிய நாடுகளின் பொருளாதாரம் முடங்கிப் போயிற்று. பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாட்டுத் தொழிற்துறைகள், அமெரிக்கத் தொழில் துறையுடன் போட்டியிட முடியவில்லை. மீண்டும் ஒரு பொருளாதாரத் தொய்வு ஏற்படும் என்று பரவலாக அனுமானிக்கப்பட்டாலும், உண்மையில் கனிசமான நுகர்வு மற்றும் முதலீடு உயர்வதற்கான காலநிலை கனிந்திருந்தது. (1930-40களில் தோன்றிய ஏராளமான தொழில்நுட்ப முன்னேற்றங்கள் முதலீட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டன). அதோடு கூட (தொழில்துறை லாபத்திற்கு ஆதரவாக) அதிகமான விநியோகம் காரணமாக முக்கியப் பண்டங்களின் வியாபார நிபந்தனைகள் வீழ்ந்து விட்டன. அமெரிக்காவில் விற்பனையாளர்கள் குறைந்து, சிறு எண்ணிக்கையிலான வணிக அமைப்புக்களே சந்தையைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. அந்த வணிக நிறுவனங்கள் விரும்பிய லாபத்தைப் பெறுவதற்காக, குறிப்பிட்ட விலையை நிர்ணயிக்க முடிந்தது. போட்டியில்லை என்ற தைரியத்தில் கூலியை உயர்த்த முடிந்தது. பிற இடங்களிலும் புதிய முதலீடுகளிலிருந்து எழும் தொழிலமைப்புக்கள் கூலி உயர்வு காரணமாக நுகர்வை அதிகப்படுத்தின.

ஃபார்டிஸ்ட் மாதிரியின் நற்செயல் வட்டாரம் செழிப்பதற்கேற்ற களம் ஏற்பட்டது. வளர்ச்சியுற்ற நாடுகளிலும், முக்கியப் பொருட்களின் ஏற்றுமதியினால் ஏற்படும் நல்வாய்ப்புக்களை நம்பியிருப்பதற்கு மாற்றாக வளர்முக நாடுகளிலும், அதிகப்படுத்தப்பட்ட உற்பத்தி நுகர்வுகளினாலான பயனை இது அதிகப்படுத்தியது. நுகர்வுப் பலன் உற்பத்தியை அதிகப்படுத்தியது. மூலதனத்தின் மிகுதியான குவியல் எப்போது சிக்கலைச் சந்திக்கும் என்பதை உற்பத்தித்திறனின் அதிவேக வளர்ச்சி, முன்னறிகுறியாகக் காட்டியது.

ஏற்கனவே 1950-களின் பிற்பகுதியில் அமெரிக்காவின் பொருளாதாரச் செல்வாக்கிற்குச் சவால் விடும் வகையில் போட்டியாளர்கள் தலையெடுக்கும் அறிகுறிகள் காணப்பட்டன. மேலும் 1960-களின் மத்தியில் (எண்ணெய் முதலாக) முக்கியப் பொருள்களின் வியாபார பேரங்களின் வீழ்ச்சி தடுக்கப்பட்டது. இத்தகைய போட்டிகள் விரைவில் மேல்நோக்கி நகரத் தொடங்கின. அமெரிக்காவிற்கு வெளியிலுள்ள நிறுவனங்கள்தான் அதிக அளவில் வெகுவேகமாக வளரத் தொடங்கின. 1970-களின் முற்பகுதியில், லாபவிகித வீழ்ச்சி பரவத் தொடங்கியபோது, முதலாளித்துவத்தின் 'பொற்காலம்' முடிவிற்கு வந்துவிட்டதாகப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முதலாளித்துவப் போட்டியின் தீவிரம் அதிகரிப்பது இப்போது வெளிப்படையாகவே காணப்பட்டது. அது மூலதனத்தின் மிகுதியான குவியலைப் பிரதிபலித்தது. சில பன்னாட்டு நிறுவனங்கள், குறிப்பிட்ட சில நாடுகளின் சந்தைகளைக் குறிவைத்துத் தொடங்கிய தங்களது (திறமையற்ற) கிளைத் தொழிற்சாலைகள் சிலவற்றை மூடியும், உலக உற்பத்திக் கொள்கைத் திட்டத்தின் ஒரு பகுதியாக சில நிறுவனங்களை ஏற்றுமதி நிறுவனங்களாக்கியும் தமது உற்பத்திச் செலவைக் குறைத்தன. தேசியச் சந்தைகளுக்கான உற்பத்தியும், தொழில்மயமாவதற்கு மாற்றாக இறக்குமதிக் கொள்கைத் திட்டமும் இப்போது நம்பத்தகுந்ததாக இல்லை. ஏனெனில், முதலாளித்துவப் போட்டியில் ஒப்பீட்டு விலைகள்தான் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. பொதுவாக ஃபார்டிஸ்ட் மாதிரியின் நற்செயல் வட்டாரம் தகர்ந்து விட்டது. கூலி மற்றும் முதலீட்டின் மற்ற செலவினங்களைக் குறைப்பதற்கு ஊக்கப் பரிசு அளிக்கப்படுகிறது.

இந்தப் புதிய எதார்த்த நிலையில் கீன்சின் தத்துவம் நிராகரிக்கப்பட்டது. அதிகக் கூலியும் சமூகநலத் திட்டங்களும்தான் இக்கேடுகளுக்கு மூல காரணங்கள் என்று சுட்டிக்காட்டிய நவீன சிறப்பு மெய்யறிவு மீண்டும் தலைதூக்கியது. (சர்வதேச நிதி நிறுவனங்களால் ஆதரிக்கப்பட்ட) நவீன தாராளமயமானது, மூலதனம் விரும்பிக் கைக்கொள்ளும் ஆயுதமாயிற்று. அது சமுதாய நலத் திட்டங்கள், கூலிகள், வளர்ச்சியுற்ற நாடுகளின் பணிப் பாதுகாப்பு நிலைமைகள், வளர்முக நாடுகளிலுள்ள வலுவான அரசு ஆகியவற்றின் மீது பொதுவான தாக்குதல்களைத் தொடுத்தது. அடக்குமுறைக்கு ஏற்றவகையில் தனது பாதையை உறுதி செய்து கொண்டது.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால், கீன்சியன் தத்துவமும் ஃபார்டிஸ்ட் மாதிரியும் ஏன் அவ்வளவு எளிதில் அவநம்பிக் கைக்குள்ளாயின? அடிப்படையில், பரப்பி விடப் பட்ட கீன்சின் தத்துவம் எப்போதுமே மொத்தத் தேவைக்கான தத்துவமாகவே இருந்திருக்கிறது. வினியோகத்திற்கானதாக இல்லை. உற்பத்தி குறிப் பிட்ட சமுதாயத்தின் தேவைக்கேற்பக் கட்டுப் படுத்தப்படுகிறது என்பதுதான் அதன் அடிப்படைக் கூறு. தேவை ஏற்படும்போது மூலதனம் வினி யோகத்தை நிறைவு செய்யும். அரசு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தால், மூலதன மானது நுகர்வு மற்றும் முதலீட்டுத் தேவையை நிறைவு செய்யும் என்று ஊகிக்கப்பட்டதால், அவ் விடங்களில் சமுதாயத்தை ஊக்கப்படுத்த வேண் டியது அரசின் கடமையாயிற்று. இல்லாவிட்டால் தனித்தனி முதலீட்டாளர்கள் தங்களுக்குள் கலந்து பேசிக் குறைந்த முதலீட்டிற்கு வழிவகுத்து விடுவார் கள். சந்தை தோல்வியுறும்போது, முதலீட்டிற் கேற்ற சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டு மென்பதுதான் இந்தத் தத்துவத்திற்கு விதிக்கப் பட்ட கடமையாகும்.

மொத்தத் தேவை அதிகரித்து அதற்கேற்ற வகையில் உள்நாட்டு வினியோகம் ஈடுகொடுக்க முடியாதபோது என்ன நிகழ்ந்தது? பணவீக்கமும் பற்றாக்குறையும் அதிகரித்தன. அதற்கேற்ப, புதிய எதார்த்த நிலையில், அரசு உருவாக்க முயன்ற சாதகச் சூழ்நிலையானது, வேறெங்காவது முதலீடு செய்வதற்குப் பதிலாக அவ்வட்டாரச் சமுதாயத் தில் முதலீடு செய்ய ஊக்குவித்தது. அதன் மூலம் வரிகளையும் கூலிகளையும் குறைப்பதில் அதன் கவனம் மையம்கொண்டது. மொத்தத்தில், நவீன சிறப்புத் தத்துவமும் கீன்சியன் தத்துவமும் மாறாத நிலையில், மகிழ்ச்சியுடன் முதலாளிகள் முதலீடு செய்ய அரசு என்ன செய்ய வேண்டும்? முதலாளித் துவத்தின் தேவைகளை நிறைவு செய்வதுதான் அரசின் முன்னுள்ள மாறாத கடமையாகும்.

### சமூக ஜனநாயகத்தின் தோல்வி

புதிய சூழ்நிலையில் தங்கள் தேவைக்கேற்ற மற்றொரு தத்துவத்திற்காக, முதலாளித்துவம் கீன்சியன் தத்துவத்தைப் புறக்கணித்து விட்டதில் வியப்பொன்றும் இல்லை. ஆனால், தனக்கொரு மாற்றைக் கண்டுபிடிக்க முடியாமல் சமூக ஜன நாயகம் தோல்வியுற்றதை எவ்வாறு விளக்க முடியும்? மூலதனத்தின் தேவைகளை விட மனிதர் களின் தேவைகளுக்கும், ஆற்றலுக்கும்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற அடிப்படை நியாயத்தை முன்வைத்தே சமூக ஜனநாயகம் செயலாற்றுகிறது. மருத்துவம் மற்றும் கல்வி உதவி கள் போன்ற குறைந்தபட்ச நடவடிக்கைகள், வருவாய் பராமரிப்புத் திட்டத்திற்கான வசதிகள், சமூக சேவைகள், ஒவ்வொருவருக்கும் ஏற்புடைய வருவாயுடைய வேலைக்கான உரிமையை ஆத ரித்தல் ஆகியவை, முதலாளித்துவ வளத்தை விட மனிதத் தேவை நிறைவுதான் சிறந்த வளம் என்ற கருத்தை உள்ளடக்கியிருப்பதை உணர்த்துகின்றன.

கோட்பாடு என்ற வகையில் கீன்சியத்தின் தோல்வி, உண்மையிலேயே சமூக ஜனநாயகம் என்ற கருத்தியலின் தோல்வியேயாகும். கீன்சியக் கோட்பாட்டிற்குள் எப்பொழுதுமே ஒரு மாற்று இருந்தது. அதில் சமுதாயக் கட்டமைப்பு பற்றி எதுவுமே கூறப்படவில்லை. அது பணத்தைப் புதைப் பதற்கும் அரசு முதலீட்டிற்கும் இடையில் வேறுபாடு காணுவதில்லை. கீன்ஸைப் பொறுத்தவரையில் வளர்ச்சிக்குச் சரியான மூலாதாரம் முதலாளித்துவ முறையாக இருந்தாலும் கூட, பொருளாதாரத்தைப் பெருக்கும் முயற்சிக்கு அரசு உற்பத்தித் துறையை விரிவாக்கும் கொள்கையே எப்போதும் கோட்பாட்டு விருப்பமாக இருந்திருக்கிறது. 'மூலதனத் தாக்குதல்' என்பது பொருளாதாரத்திற்கு ஏற்படும் நெருக்கடி யாகும். மற்றெல்லாம் சமமாக இருக்கும்போது, இறுதி இழப்பு இல்லாத நிலையில், ஒரு அரசானது மூலதனத்திற்குள் அத்துமீறி தலையிடக் கூடாது. இதுதான் பழைமைப் பற்றுடைய பொருளியலாளர் களின் கருத்தாக எப்போதும் இருந்திருக்கிறது.

இருந்தாலும், இவர்களின் இறுதி முடிவுகள் ஊகங்களிலேயே பொதிந்திருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்வது அவசியம். குறிப்பாக, பிற எல்லாமே சமமானவை என்னும் ஊகம் இங்குப் பொருத்தமுடையதாக இருக்கிறது. வாடகைக் கட்டுப்பாடு, கனிம சிறப்புரிமை ஆகிய இரண்டு சாதாரண உதாரணங்களை எடுத்துக் கொள்வோம். (பயனுள்ள அளவில்) வாடகைக் கட்டுப்பாட் டினால் புகுத்தினால், வாடகை வீடுகளின் எண் ணிக்கை குறைந்து, வீட்டுத் தட்டுப்பாடு ஏற்படும் என்று பழைமைவாதப் பொருளியலாளர்கள் முன் னறிவிக்கின்றனர். அதேபோல, வாடகைகளுக்கு வரி விதிக்க முயன்றால், இந்தத் துறையில் முதலீடும் உற்பத்தியும் குறைந்துபோகும். வேலையின்மை அதிகரிக்கும் என்றும் கூறுவர். இந்த இரண்டு ஆய்வுப் பொருள்களும் அவசியமான முடிவுகளின் அடிப்படையில் முற்றிலும் தவறானவை என்று எளிதில் விளக்கிக் காட்ட முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

பழைமைவாதப் பொருளியலாளரின் வாதத்தின் எல்லையை நாம் அறிந்திருக்க வேண்டும். இருப்பினும், இதனாலெல்லாம் இத்தகைய விவாதங்களை நிராகரிக்க முடியும் என்று அர்த்தமில்லை. மூலதனத்தின் எதிர்வினை கிடைக்கப் பெறாமல் சில பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தலாம் என்று நினைப்பது வெகுளித்தனம் மூலதனத்தின் எதிர்வினையை எதிர்பார்க்காமல், மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது முகத்திலடிக்கும் செயல். மூலதனத்தின் வாதமுறைதான் பழைமை வாதப் பொருளியலாளரின் வாதமுறை. அதனை மதிக்க மறுத்துத் தமது நடைமுறைத் திறத்தில் செயல்படுத்த முனைபவர்கள் தொடர்ந்து மோசமான அதிர்ச்சிகளுக்கும் மற்றும் ஏமாற்றங்களுக்கும் ஆளாவர்கள்.

மூலதனத்தின் எதிர்வினைகளைப் புரிந்து கொள்வதனால், மூலதனத் தாக்குதலை, நெருக்கடி என்பதற்குப்பதிலாக ஒரு வாய்ப்பாகக் கருதலாம். மூலதனத்தின் மீதான சார்புத் தன்மையை நிராகரித்தால் மூலதனத்தின் நியதியானது, மக்களின் தேவைகள் மற்றும் அக்கரை ஆகியவற்றிற்கு மாறானதாக வெளிப்படும். மனிதத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மூலதன நியதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்குப் பதிலாக, சமூக ஜனநாயகமானது நியதியை நடைமுறைப்படுத்த முனைந்துவிட்டது. அதன் விளைவாக கீன்சியன் கோட்பாட்டு நிராகரிக்கப்பட்டுவிட்டது.

வேறுமாற்று எதுவுமில்லை என்னும் புதிய மெய்யறிவு ஏற்பட்டது. நவீன தாராளமயத்திற்கு மாற்றெதுவும் இல்லை. அது, நிதி மூலதனம் மற்றும் ஏகாதிபத்திய சக்தி ஆகியவற்றினால் திணிக்கப்பட்ட நவீன பொருளியல் ஆகும். இருப்பினும், அது 'பொற்காலத்'திற்குப் பிறகு ஏற்பட்டதால், ஏற்கப்பட்ட உண்மைகளை அழிக்கக் கூடிய வலுவான நிலைமைகள் ஏற்பட்டன. வளர்ச்சி குன்றிய நாடுகளில் இது நிகழ்ந்ததுபோல் வேறெங்கும் நடைபெறவில்லை. முற்றிலுமாக மூலதனத்திற்கு அடிபணிவதன் மூலம் ஒவ்வொரு நாடும் வளங்கொழிக்கும் நாடாகும் என்ற தவறான ஊகம் வெளிப்பட்டது. நவீன தாராளமயம் புற உந்துதல்களின் தோல்விகள் மிகுந்ததன் விளைவாக, உள்நாட்டுத் தீர்வில் ஆர்வம், வளர்ச்சித் திட்டங்கள் ஆகியன மீண்டும் மேம்பட்டன. சர்வதேச மூலதனத்தின் ஆற்றல் குறையவில்லை. இந்தச் சூழலில் இத்தகைய தேர்வு எவ்வளவு நம்பகமாக இருக்கும்?

## உள்ளார்ந்த வளர்ச்சிக்கான சாத்தியக் கூறுகள்

நவீனதாராளமயம், பொருளாதார வளர்ச்சிக்குப் போட்ட தடையை அகற்றுவது அவ்வளவு எளிதான காரியமல்ல. உள்ளார்ந்த வளர்ச்சியை உண்மையாகவே மையப்படுத்துவதென்பது, இதற்குமுன் இறக்குமதி முயற்சிகளை மாற்றாகக் கைக்கொண்ட, கட்டுப்படுத்தப்பட்ட சந்தையை ஆற்றுப்படுத்துவதாக இருக்க முடியாது. அதற்குப் பதிலாக, நவீன நாகரீகத்தின் சாதனைகளில் பங்கு பெறுவதினின்றும் விலக்கி வைக்கப்பட்ட பெரும்பகுதியினரை ஒன்று திரட்டி ஈடுபடுத்துவதாகத்தான் இருக்க முடியும். சுருக்கமாக, உண்மையான உள்ளார்ந்த வளர்ச்சி என்றால், ஏழைகளுக்கான உரிமைகளைச் சாதகமாக நடைமுறைப்படுத்துவதாகும். அதாவது, உள்ளார்ந்த வளர்ச்சியை விருப்புடன் வளர்க்க முனைப்பான முயற்சிகள் எடுத்து நவீன தாராளமயமாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க முனையும் எந்த ஒரு நாடும் சர்வதேச மூலதனத்தின் பலவகைப்பட்ட தாக்குதல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். சர்வதேச நிதியம், உலக வங்கி, நீதி மூலதனம் ஏகாதிபத்திய சக்திகள் ஆகியவை வலுவான எதிரிகளாகும். தனது மூலதாரத்தை மட்டுமே கொண்டு இயங்கும் எந்த அரசும் இத்தகைய உள்ளும் புறமுமான எதிரிகளுடன் நிகழ்த்தும் போராட்டத்தில் வெற்றி பெறுவது இயலாது. இத்தகைய அரசு, மக்கள் தேவைகளை நிறைவு செய்யும் கொள்கைகளுக்காதரவாக மக்களை ஒன்று திரட்டத் தயாராக இருக்க வேண்டும். மூலதனத்தின் கருத்தியல் மேலாண்மையிலிருந்து இந்த அரசு தன்னை எந்த அளவு விடுவித்துக் கொண்டுள்ளது என்பதே முக்கியம்.

இவ்வாறு தன்னைத் தகர்த்து மீளுதல் என்பது, மிகப்பெரிய உள்நாட்டுச் சந்தைக்கான பெரும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையிலமைந்த பிரம்மாண்டமான நிலச் சீர்திருத்தங்களோடுகூட, இறக்குமதி சார்ந்த தொழில்மயக் கருத்துக்குத் திரும்புதல் என்பதைவிட உயர்வானதாகும். கீன்சியன் கோட்பாட்டின் புதிய மாதிரிகள் - ஃபார்டிஸ்ட் கோட்பாட்டின் உறுதியான முடிவுகளாக உருமாற்றி அமைத்தாலும் - சதா காலமும் மூலதனத்தின் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் அரசின் உறுதிப்பாட்டை வலுவாக்க முனைப்பான ஆதரவுத் தரும் மக்களைப் பாதிக்காது. உடைமையுரிமையின் அடிப்படையில் வேரூன்றித் தொடரும் கோட்பாடுகள், மூலதன நியதிகளை எதிர்க்கும் வெற்றிகரமான



படிப்பகம்

www.padippakam.com

சவால்களை ஆதரிக்காது. அவை அந்த நியதியின் உறுப்புக்களாகிவிட்டன.

உள்ளார்ந்த வளர்ச்சிக்கான சமூக ஜனநாயகக் கருத்துருக்களில் உள்ள முக்கிய குறைபாடு - அவை மூலதனத்தோடு உள்ள சார்புத் தன்மையை கருத்தியல் ரீதியாகவோ அரசியல் ரீதியாகவோ முறிக்கவில்லை. மாதிரி வெற்றிபெற வேண்டுமென்றால், மனிதவள மேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள ஒரு கோட்பாட்டை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். நவீன சிறப்புக் கோட்பாடுகள், கீன்சியன் கோட்பாடுகள் மற்றும் பிற கோட்பாடுகள் வலியுறுத்தும் நுகர்வைக் காட்டிலும் அதிகமாக மனித ஆற்றலிலும் மனிதவள மேம்பாட்டிலும் முதலீடு செய்வதில் முனைப்புக் காட்ட வேண்டும். அதாவது கல்வி, சுகாதாரம் போன்ற மனித நலத்திற்காகவும் மனித ஆற்றலின் உண்மையான மேம்பாட்டிற்காகவும் செலவிடப்பட வேண்டும். இதுதான் மார்க்ஸ் விவரித்த (சூழ்நிலைகளும் மனித நடவடிக்கையும் ஒருங்கே மாற்றமடைவது அல்லது சுயமாற்றம் என்ற) புரட்சிகர நடைமுறையின் சாரமாகும்.

மனிதர்களை உற்பத்திச் சக்திகளாக இனம் காணுவதில் ஆரம்பிக்கிற வளர்ச்சிக் கோட்பாடு, மூலதனத்தின் பொருளியலைவிட முற்றிலும் வேறான கோணத்தைக் காட்டுகிறது. உணர்வு நிலையில் மக்களிடம் ஏற்படும் தன்னம்பிக்கைக்கு பாரம்பரியக் கோட்பாட்டில் எங்கே இடம் இருக்கிறது? மனித உற்பத்திச் சக்திகளைக் கட்டவிழ்த்து விடுவதால் கிடைக்கும் ஆற்றல் மீதான கவனம் எங்கே? அவ்வாறு கிடைக்கும் ஆக்கத்திறன் மற்றும் ஆழ்ந்த அறிவு ஆகியவை, மூலதனத்தின் கட்டளைகள் மூலம் பெற முடியாது. சமுதாயத்தின் மேலுள்ள அழுத்தமான அக்கறை காரணமாக விளையும் ஒற்றுமை உணர்வின் மூலம், மனிதவளமேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட அரசு முற்போக்கு திசையில் முன்னேற உதவும். இது மூலதனத்தின் தேவையைவிட மனிதவளத் தேவைகளும் ஆற்றலும் பெருகும் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்லும்.

உள்ளார்ந்த வளர்ச்சி சாத்தியமே. எப்போது? அரசு கருத்தியல் ரீதியாகவும் அரசியல்ரீதியாகவும் மூலதனத்திலிருந்து முறித்துக் கொண்டால் மட்டுமே சாத்தியம். மனித ஆற்றலின் அடிப்படையிலான பொருளாதாரக் கோட்பாட்டை அடையும் கருவிகளாக சமுதாய இயக்கங்களை அது உருவாக்கத் தயாரானால் சாத்தியமாகும். அல்லாதபோது, பொருளாதார ரீதியில், தனியார் மூலதனத்திற்குத் தொடர்ந்து செயலூக்கமளிக்க வேண்டிய கட்டாயத்தில்தான் அரசு இருக்கும்.

தமிழாக்கம்: **எஸ். சோமு**

★★★

## அறிவிப்பு

**இந்த இதழோடு சமூக விஞ்ஞானம் ஓராண்டு நிறைவெய்துகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து கொள்கிறோம். சமூக விஞ்ஞான இதழுக்கு எல்லாவகையிலும் ஆதரவளித்த சந்தாதாரர்களுக்கு ஆசிரியர் குழு மற்றும் நிர்வாகத்தினர் சார்பாகவும் நன்றி கூறுகிறோம். சமூக விஞ்ஞானம் ஓர் அறிவுத்துறை பரிசோதனையும், போராட்டமும் ஆகும். தமிழகத்தில் அறிவியல் பூர்வமான சமூகவியல் வளர - சமூக விஞ்ஞானம் தொடர - அனைவரின் ஆதரவை வேண்டுகிறோம். சந்தாதாரர்கள் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகிறோம். புதிய சந்தாதாரரை சேர்த்துப் பலப்படுத்த வேண்டுகிறோம்.**

**ஆண்டு சந்தா : ரூ. 100/-**

**ஆயுள் சந்தா : ரூ. 1000/-**

**இங்ஙனம்**
**ஆசிரியர் குழு**



படிப்பகம்

www.padippakam.com

**மார்க்சியம், பல கோணங்களிலிருந்து மீண்டும் மீண்டும் தந்திரமான தாக்குதல்களுக்கு உட்பட்டு வருவதைக் கடுமையாகச் சாடுகிறது, இந்தக் கட்டுரை. எதிர் விமர்சிகர்கள், நவீனமான பகட்டு ஆடைகளை அணிந்து கொண்டிருப்பதாக நினைத்தாலும், அரசர்கள் ஆடையிழந்து நிற்கும் அபலைகளாகவே இருக்கிறார்கள் என்று சொல்லுகிறது, கட்டுரை.**

மு. இரவிச்சந்திரன்

# தத்துவ உலகின் "ஆடை இழந்த அரசர்கள்"

மார்க்சியமும், மார்க்சியர்களும் சமீபகாலமாக மீண்டும் ஒரு தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர். இந்தத் தாக்குதல் மார்க்சியம் மனித சமுதாயத்தில் ஆற்றுகின்ற செயல்பாட்டைத் திசைதிருப்பி, முடக்க வேண்டும் என்று திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகின்றது. மார்க்சியத்திடம் பகைமை காட்டுவது ஒன்றும் புதியதல்ல. **ஆனால் இம்முறையின் புதுமை என்னவென்றால், இந்த எதிர்ப்பு மார்க்சியத்தின் பெயரால், தம்மை 'மார்க்சிஸ்டுகள்' என்று அழைத்துக் கொள்பவர்களாலும், 'மார்க்சிஸ்டுகள்' என்று அறியப்பட்டவர்களாலும், நடத்தப்பட்டு வருவதுதான்.** இந்தத் தாக்குதல் மார்க்சிஸ்டுகள் கோபாவேசத்தோடு பிரயோகித்த சொற்களைப் பயன்படுத்தி - பின்னைக் காலனிய இலக்கிய உருவாக்கம் (Post-Colonial Literature), பன்முகக் கலாசாரம் (Multi-Culturalism) போன்றவை அரங்கேற்றப்படுகின்றன. இப்படி எதிர்ப்பவர்கள் தமது ஆரம்பகால, சமீபகால எழுத்துகளை மார்க்சியத்தை ஒட்டியே எழுதிவந்தவர்கள். இன்றைக்கும், மார்க்சியத்திற்கும், மார்க்சிஸ்டுகளுக்கும் தாம் கடன்பட்டவர்கள் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். "ஆய்வு உலகமும், கருத்தியல் உலகமும் மார்க்சியத்திற்கு எவ்வளவு கடன்பட்டிருக்கிறது" என்று அங்கு ஒருமுறை, இங்கு ஒரு முறை தமது எழுத்தில் சுட்டிக்காட்டி, செஞ்சோற்றுக் கடன் தீர்க்கிறார்கள்.

இந்த விதமான எதிர்ப்பு, சற்றுப் புதியதுதான். ஆனால் இந்த எதிர்ப்பு, தன்மையிலும், செயல்பாட்டிலும், சர்வதேசத் தன்மை கொண்டுள்ளது. இரண்டாவதாக இந்த எதிர்ப்பு ஒரே வகைப்பட்டதாகவும் உள்ளது: முதலில் அது 'செவ்வியல்' மார்க்சிசத்தில் நல்ல தேர்ச்சி பெற்றுக் கொள்கிறது. சிறிது காலம் சரியான கூச்சல்களைப் போடுகிறது. கொஞ்ச காலம் போன பிறகு இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகள் முதல் பூர்ஷ்வா சமூகம் மிகவும் சிக்கல் மிகுந்ததாக ஆகிவிட்டது என்றும், இச்சிக்கல் பன்முகத் தன்மை கொண்டது என்றும் 'கண்டுபிடிக்கிறது'. **இப்போதுதான், நாம் இதுவரை குதிரைக் குட்டி என்று நினைத்துக் கொண்டிருந்த பிராணிக்கு லேசாக மூக்கு வெளுக்க ஆரம்பிக்கிறது.** இன்னும் சில நாட்கள் போனபின்னால் இந்தப் பன்முகத்தன்மை கொண்ட சிக்கலைப் புரிந்து கொள்ள மார்க்சியம் போதாது என்று நிறையப் படித்த அறிவாளிகளின் கருத்தரங்குகளில் அறிவிக்கிறது. "19-ஆம் நூற்றாண்டு ஆசிய, ஐரோப்பிய வாழ்க்கை, இப்போதைய வாழ்க்கையை விட கலாசார ரீதியில் சிக்கல் நிறைந்தது அல்ல; எனவே அதற்கு மார்க்சியத்தின் நிர்ணய வாதமே (economic determinism) போதுமானதாக இருந்தது. ஆனால் தற்போது மார்க்சியம் போதாது." எனவே 'குறைபாடுடைய' மார்க்சியத்தை (inadequate Marxism) தாண்டி, பின்-மார்க்சியத்திற்கு (Post-Marxism) செல்ல வேண்டிய காலம் வந்து விட்டதாகக் கட்டியம் கூறுகிறது. பின்-மார்க்சிய 'அறிவுத் திரட்டலுக்குப்' பிறகு, காலம் காலமாய் இருந்து வரும் மார்க்சியப் புரிதலும், விளக்கமும் எவ்வளவு "குழந்தைத்தனமாக" இருக்கின்றன என்று 'தெளிவாக' எடுத்துக்காட்டுகிறது!

பின் 'மார்க்சியம், போன தலைமுறை மார்க்சியத்தின் பெரும் 'குறைபாடுகளைப்' பட்டியலிடுகிறது: பொருளாதார நிர்ணய வாதம், பாசிடிவிசம், எம்பிரிசிசம் மற்றும் செயல்பாட்டியம். இந்த நான்கு பெரும் தீங்குகளால் தோற்றுப் போய் விட்ட வரலாற்றுப் பொருள் முதல் வாதத்திற்குப் பதிலாக, இனிமேல் பின்-மார்க்சிசம் தான் வழிகாட்டும் என்று இந்த சிந்தனையாளர்கள் அறிவிக்கும்போது, நமது பிராணிக்கு பின்னங் கால்கள் தத்தத் தொடங்கி விடுகின்றன. நமக்கு "இது குதிரையல்ல; கழுதைதான்" என்ற ஐயத் தெளிவு இப்போது ஏற்பட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

இந்தச் சிந்தனையாளர்கள், வீழ்த்தப்பட்ட வரலாற்றுப் பொருள் முதல்வாதத்திற்கு போஸ்ட்-மார்க்சிசமே சரியான மாற்று என்று பிரகடனம் செய்கிறார்கள். இவர்கள் புதிய பெயர் சூட்டும் வேலையில் இறங்குகிறார்கள். உலகம் இதுகாறும் மார்க்சியம் என்று புரிந்து கொண்டிருப்பது மரபியல் மார்க்சியம் அல்லது செவ்வியல் மார்க்சியம் அல்லது பழமை மார்க்சியம் என்று புதிய பெயர் சூட்டு கிறார்கள்.

ஆரம்ப நாள் மார்க்சிய அறிஞர்களும் திற னாய்வாளர்களும் இவர்களால் எள்ளி நகையாடப் படுகிறார்கள். அறிவுப் புலத்தில் அரும்பணி ஆற்றிய மார்க்சிய அறிஞர்கள் மார்க்சியமே தெரி யாதவர்கள் என்றும், நுனிப்புல் மேய்ந்தவர்கள் என்றும், மேம்போக்காய் இலக்கிய படைப்புகட்கு வர்க்கச் சமனிகளைத் (Class-equivalents) தேடிக் கண்டுபிடித்தே வாழ்நாளை வீணடித்தவர்கள் என்றும், இலக்கியப் படைப்பு என்பது மேல் கட்டு மானத்தில் எத்தனை சிக்கல் வாய்ந்தது என்பதே தெரிந்திராத சென்மங்கள் என்றும் பின் - மார்க் சிஸ்டுகள் 'அடையாளம் காட்டுகிறார்கள்'. மார்க் சியமே குறைபாடுடையது என்று 'உணர்ந்து' கொண்ட பின்பு மார்க்சிஸ்டுகளை ஒதுக்கித் தள்ளுவது ஒன்றும் கடினமான பணியல்ல. "லெனினுக்கு வர்க்க உணர்வற்ற இலக்கியத்தை படித்தறியும் திறன் இல்லை. பிளெக்கானவ் ஒரு கொச்சை மார்க்சிஸ்ட். கிறிஸ்டபர் காட்வெல் மிக எளிமைப்படுத்தியவர்". நமது தமிழ்ப் பின்புலத்தில் "நா.வா. ஒரு நிறுவனம் சார்ந்த கம்யூனிஸ்டு". "கைலாசபதி, பாசிடிவிசத் திற்குக் கட்டப்பட்ட பட்டுக் குஞ்சம்." இந்தப் பட்டி யல் நீளமானது. கடந்த கால மார்க்சிய சாதனை களைக் கொச்சைப்படுத்தி, சிறுமைப்படுத்தி, முடிந்தால் அவர்கள் மார்க்சியர்களே இல்லை என்று சாதித்து, **புரட்சிகர நோக்கத்தோடு மார்க்சிய எண்ணம் தேடி வருபவனைத் மருட்சியடையச் செய்வதே இவர்கள் நோக்கம்.**

பின்னை - மார்க்சியம் எந்தத் துறையிலும் குறிப்பிடத்தக்க எந்த படைப்பையும் அளிக்கவில்லை. ஆனால் புதிய சிந்தனைகள் அமைப்பியல், பின் நவீனத்துவம் ஆகிய இரண்டு குழந்தைகளை ஈன்றுள்ளன. எதிர்காலத்தில் கூடுதல் வீர்யம் உடைய புதிய சிசுக்களை அவை ஜனிக்கலாம். இவையெல்லாம் பழைய அறிவை விஞ்சி நிற்கின் றன என்று பெருமை பேசலாம். ஆனால் ஹாலி வுடின் ஆக்ஷன் படங்களில் வருவது போல், காட்சி கள் மிக விரைவாக மாறி வருகின்றன. மார்க் சியத்தை தாண்டிச் செல்ல முடியாத புதிய கோட் பாடுகள் அதிவேகமாக ரிஷிப் பிண்டங்களாக ராத் தங்காமல் பிறந்து உடனே மாய்ந்து விடுகின்றன. இப்போது அதன் மவுசையும், பவிஷையும் இழந்து விட்டது. ஆனால் அது தோன்றியபோது சர்வரோக நிவாரணியாகப் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் இப்போது மிகவும் கசப்பாகிவிட்டது. எனவே வரலாறு, பொருளாதாரம், முழுமை (totality) மற்றும் வர்க்கப் போராட்டம் போன்ற 'கிழடு-தட்டி விட்ட' விஷயங்கள் எல்லாம் பொய்; அதற்குப் பதிலாக மையக் கட்டுடைப்பு Deconstruction), பொருள் இன்மை, உதிரிகளின் மகோன்னதம், அராஜகவாதம் ஆகியவும் பிறவும் அரங்கின் மையத் திற்குக் கொண்டுவரப்பட்டு, பின் நவீனத்துவம் தான் சரியான தத்துவம் என்று பிரகடனம் செய்யப்ப டுகிறது. **வரலாற்று மறுப்பும், முழுமை மறுப்பும் தாரக மந்திரமாகி ஒட்டு மொத்த சமூகமும் வர்க்கபேதம் அடைந்து, இயங்கியலின் உள்நாதம் உணர்ந்து, பெரும் திரள் அமைப்பு களை உருவாக்கி முன்னெப்போதும் கண் டிராத மூலதனக் குவிப்பை ஆய்ந்து, மக்கள் இயக்கங்களை நடத்தி உழைக்கும் மக்களே ஆட்சி அதிகாரம் பெறும் நிலையை அடைய வேண்டும் என்பது பழங்கதை என்று சத்தியம் செய்யப்படுகிறது.** மாறாகப் பெண்ணியம், சுற்றுப் புறச்சூழல் பராமரிப்பு, அடித்தள ஆய்வு வாசிப்புகள் ஆகியவை வர்க்கப் போராட்டத்துக்கு அப்பாற்பட்டு இம்மூன்று கூறுகளே மூலவர்கள் ஆகிவிட்டனர் என்று சொல்லப்படுகிறது.

இப்படியாக, மனித சமுதாயத்தைக் கூட்டுரு வாக்கம் செய்யும் ஒருங்கிசைவுள்ள தனிக் குழுக் கள் ஒவ்வொன்றையும், தனித் தனியாக முழுமையை விட மேலானவை என்று வாதிடும் பின் நவீனத் துவம், பாட்டாளி வர்க்கத் தலைமையிலான ஒன்று பட்ட வர்க்கப் போராட்டத்தைத் தத்துவார்த்த அளவில் சிதைத்துக் கூறுபோடும் முயற்சிதான். மனித சமுதாயத்தின் நம்பிக்கைகளைக் குழி தோண்டிப் புதைத்து, அதன் மீது முதலாளித்துவம் கட்ட விழையும் பீதியூட்டும் சமாதியின் வடிவம் தான் (Blue Print) பின் நவீனத்துவம். ●

Published by A. Subramanian on behalf of Institute of South Indian Studies, from 17, (142) Jani Jan Khan Road, Royapettah, Chennai - 600 014. Printed by G. DURAIRAJ, at Pavai Printers (P) Ltd., 17 (142) Jani Jan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor Deva. Perinban.



படிப்பகம்

www.padippakam.com

# கட்டுரையாளர்கள்

பூங்குன்றன் - தொல்லியல் மற்றும் கல்வெட்டுத் துறையில் ஆழமான பயிற்சியுடையவர்; தம்முடைய ஆய்வின் மூலம், பரவலான அங்கீகாரம் பெற்றவர். தமிழக அரசின், தொல்லியல் வரலாற்றுத் துறையில் துணை இயக்குநராகப் பணியாற்றி வருகிறார்.

ந. முருகேச பாண்டியன் - சிறு (இலக்கியப்) பத்திரிகைகளில் தொடர்ந்து மதிப்புரைகளும் விமரிசனங் களும் எழுதி வருபவர், எழுத்தாளர்கள் மத்தியில் நன்கறியப்பட்டவர். இலக்கிய மொழிபெயர்ப்புக்கள் பற்றி ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்ற இவர், மேலைச் சிவபுரி செந்தமிழ்க் கல்லூரியில் நூலகராக உள்ளார்.

ஃபிராட் மக்டாஃப் - (Prof. Fred Magdoff) - பர்லிங்சன், வெர்மாண்டு பல்கலைக்கழகத்தில் தாவரவியல், மற்றும் மண்வள அறிவியல் பேராசிரியர். உலகமயமாதலின் நெருக்கடிகள் பற்றித் தொடர்ந்து எழுதி வருபவர்.

தி.சு. நடராசன் - திறனாய்வாளர்; பேராசிரியர், சமூக விஞ்ஞானம் ஆசிரியர்களில் ஒருவர்.

கி.இரா. சங்கரன் - மன்னம்பந்தல் அ.வ.அ. கல்லூரியில் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் வட்டார வரலாறு நீர்ப்பாசனம், வேளாண்மை ஆகியவற்றில் தொடர்ந்து ஆய்வு செய்து வருகின்றவர்.

ம. சிங்காரவேலர் - இந்தியப் பொதுவுடைமை இயக்கம் மற்றும் தொழிற்சங்க இயக்கத்தின் முன்னோடி மார்க்சியச் சிந்தனையாளர்.

இரவிச்சந்திரன் - அரசுக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். தமிழ் மற்றும் ஆங்கில இலக்கியங்களிலும், நவீன கோட்பாடுகளிலும் ஆழ்ந்த பயிற்சியும் கூர்மையான பார்வையும் உடையவர்.

எஸ். சக்குபாய் - முனைவர், பேராசிரியர் சக்குபாய், சென்னைப் பல்கலைக்க கழகத்தின் பாலிமார் - வேதியியல் துறையின் தலைவராக இருந்து ஓய்வு பெற்றுள்ளார். சுற்றுச்சூழல், மாசுக்கட்டுப்பாடு ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டவர்.

யுர்யோ ஹெகானென் - ஃபின்லாந்து நாட்டுப் பொதுவுடைமைக் கட்சியின் தேசியத் தலைவர்.

மைக்கேல் ஏ. லெபோவிட்ஸ் - கனடா - வான்கூவர், ஃபிரேசர் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறைப் பேராசிரியர். "Beyond Capital: Marx's Political Economy of Working Class" என்ற புகழ்பெற்ற நூலின் ஆசிரியர்.

பெ. அரங்க ராமானுஜம் - இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர். மார்க்சியமும் இலக்கியமும் பற்றிய (ஆங்கிலத்தில்) அருமையான நூலொன்றை இயற்றியவர். தமிழிலும், புதிய கோட்பாடுகளிலும் ஈடுபாடு கொண்டு எழுதி வருபவர்.

விட்டகுறை:

சென்ற இதழில் 'பின் நவீனத்துவமும் ரசனையும் - சில குறிப்புகள்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையாளர், திரு. இளங்கோ. பச்சையப்பன் கல்லூரியில் தத்துவ இயலில் எம்.ஃபில் ஆய்வு செய்தவர். தொடர்ந்து புதிய துறைகளில் ஆராய்ச்சி மேற்கொள்ள ஆர்வம் காட்டி வருகிற இளைஞர்.

படிப்பகம்

Samooga Vignanam, Quarterly www.padippakam.com R.DIS. NO. 798/2003. Dt. 15.07.2003.


# சங்க இலக்கியம்

பாட்டும்
தொகையும்

மூலமும்
உரையும்

14 நூல்கள்

8200
பக்கங்கள்

விலை
ரூபாய்
**3000/-**




**நூல்கள் கிடைக்கும் இடம்**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி. சிட்கோ இண்டஸ்டீரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098.
போன் : 26359906, 26251968, 26258410

**கிளைகள் தமிழகமெங்கும் :-**

**Email : ncbhbook@yahoo.co.in**

நெ. 136, அண்ணா சாலை,
சென்னை -2. தொ.பே. 28604563.

நெ. 12, ராஜராஜ சோழன்
ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்
தஞ்சாவூர் - 1. தொ.பே. 231371.

திண்டுக்கல் மெயின்ரோடு,
திண்டுக்கல் -1. தொ.பே. 2432172.

செர்ரிங் ரோடு, ஊட்டி -1.
தொ.பே. 2441743.

மருதீஸ்வரர் கோயில் காம்ப்ளக்ஸ்,
திருவான்மியூர், சென்னை - 41.
தொ.பே. 24404873.

நெ. 42/7, சிங்காரத்தோப்பு,
திருச்சி - 8. தொ.பே. 2700885

நெ. 3 & 4, நேரு ஸ்டேடியம்,
வ.உ.சி. பூங்கா, கோவை - 18.
தொ.பே. 2380554.

நெ. 58, மா.பா. சாரதி மாளிகை,
ஆபீசர்ஸ் லைன், வேலூர் - 1.
தொ.பே. 2234495.

நெ. 79 - 80, மேற்குக்கோபுர வீதி,
மதுரை- 1.
தொ.பே. 2344106, 2350271.

நெ. 165- A, செர்ரி ரோடு,
சேலம் - 1. தொ.பே. 2450817.

9 & 10, முதல் மாடி, சி.பி.ஐ.
ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்,
நெ. 66- கடலூர் ரோடு,
முதலியார் பேட்டை,
பாண்டிச்சேரி - 4.
தொ.பே. 2357403.

நெ. 4, பெரியார் பேருந்து
நிலையம், தெற்கு , பாரதி சிலை
அருகில், திருநெல்வேலி-1.
தொ.பே. 2323990.

பழைய பேருந்து நிலையம்,
செலக்ட் ஓட்டல் அருகில்,
ஓசூர்- 9. தொ.பே. 245726.

நடமாடும் பாரதி புத்தக நிலையம்
பாவை பப்ளிகேஷன்ஸ்
142, ஜானி ஜான்கான் சாலை
ராயப்பேட்டை, சென்னை - 14.
தொ.பே. 28482441, 28482973


படிப்பகம்